# தஞ்சை
# மராட்டிய மன்னர் வளர்த்த தமிழ் இலக்கியம்

பகுதி-3



முதுமுனைவர்

ம.சா. அறிவுடைநம்பி

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர்

# தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த தமிழ் இலக்கியம்

## பகுதி - 3

முதுமுனைவர் ம.சா. அறிவுடைநம்பி

இணைப்பேராசிரியர் -தலைவர்

அரிய கையெழுத்துச்சுவடித்துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - 613 005

ISBN : 81-7090-327-0

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 267

திருவள்ளுவராண்டு 2035, ஆவணி - செப்டம்பர் 2004

| | | |
|---|---|---|
| நூல் | : | தஞ்சை மராட்டியமன்னர் வளர்த்த தமிழ் இலக்கியம் (பகுதி - 3) |
| ஆசிரியர் | : | முதுமுனைவர் ம.சா அறிவுடைநம்பி |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | | இலக்கியம் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு 2004 |
| பக்கம் | : | viii+356= 364 |
| தாள் | | டிஎன் பி எல் மேப்லித்தோ 16 கிலோ |
| அளவு | | டெம்மி 1/8 |
| நூற்கட்டுமானம் | : | சாதாக்கட்டு |
| விலை | | உரூ. 100/- |
| படிகள் | : | 1000 படிகள் |
| அச்சு | | தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர் |

# தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - 613 005 - இந்தியா

முனைவர் இ. சுந்தரமூர்த்தி

துணைவேந்தர்


## அணிந்துரை

தஞ்சை மராட்டிய மன்னர்கள் தங்கள் ஆட்சிக்காலத்தில் பல்வேறு கலைகளை வளர்த்துத் தமிழ் மொழிக்கும், பண்பாட்டிற்கும் வரலாற்றிற்கும் பெருமை சேர்த்தனர். தமிழ்ப் பல்கலைக்கழகம் இம்மன்னர்கள் ஆற்றிய அரும்பணியை ஆய்வுசெய்து தொடர்ந்து பல்வேறு நூல்களை வெளியிட்டு வருகின்றது.

தமிழ்ப் பல்கலைக்கழகம் மராட்டிய மன்னர்கள் தொகுத்த பல்வேறு ஆவணங்களையும் போற்றிப் பாதுகாத்து வருகின்றது. இவ் ஆவணங்களை மகாராட்டிய மாநிலத்திலிருந்து வந்த அறிஞர்கள்குழு அண்மையில் பார்வையிட்டுப் பாராட்டியது. புனே பல்கலைக்கழகமும் தமிழ்ப் பல்கலைக்கழகமும் இணைந்து ஆய்வு செய்யலாம் எனத் தங்கள் விருப்பத்தையும் அக்குழுவினர் தெரிவித்தனர். எனவே இரு பல்கலைக்கழகங்களும் இணைந்து மராட்டிய மன்னர் வரலாற்றினை ஆராய்வதற்கான சூழல் உருவாகியுள்ளது வரவேற்கத்தக்கது.

அரியகையெழுத்துச் சுவடியில் பணியாற்றும் முனைவர் ம.சா. அறிவுடைநம்பி தொடர்ந்து இவ்வாய்வுப் பணியில் ஈடுபட்டு வருவது பாராட்டத்தக்கது. தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த தமிழ் இலக்கியம் (தொகுதி - 3) என்னும் தலைப்பில் அமைந்த இந்நூல் மராட்டியர் ஆட்சிக்காலத்தே தோன்றிய இலக்கியங்களின் சிறப்பை எடுத்துரைக்கின்றது.

சரபோசிமன்னர் அவைக்காலத்தில் புகழ்வாய்ந்த தமிழறிஞர்கள் வீற்றிருந்து தமிழ்ப்பணியாற்றியுள்ளனர். கொட்டையூர் சிவக்கொழுந்துதேசிகர், வேதநாயகர், திருவேங்கடத்தாபிள்ளை, வேலாயுத வாத்தியார், வேங்கடாசலம்பிள்ளை, சுப்பராயக்கவிராயர், அனந்தபாரதி ஐயங்கார் ஆகிய அறிஞர்களின் அரியவரலாற்றுக் குறிப்புகளை இத்தொகுதியுள் காணலாம்.

சரபோசிமன்னரின் அரியபணிகள் இந்நூல் மூலம் நன்கு புலனாகின்றன. மராட்டிய மன்னர் வளர்த்த தமிழ் இலக்கியத்தின் சிறப்புகளையும் அறிந்து கொள்ள இந்நூல் பெரிதும் துணைபுரியும்.

நூலாசிரியர் முனைவர் ம.சா. அறிவுடைநம்பியின் பணி பெரிதும் பாராட்டத்தக்கது.

இந்நூலினை நன்முறையில் வெளியிட்டுதவிய பதிப்புத்துறையினருக்கும் பாராட்டுதல்கள்.

தஞ்சாவூர்
02.09.2004

இ. சுந்தரமூர்த்தி

# முன்னுரை

# முன்னுரை

"தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த தமிழ் இலக்கியம்" என்ற ஆய்வுத் தலைப்பின்கீழ் இரு பகுதிகள் ஏற்கெனவே முடித்தளிக்கப்பட்டுள்ளன. தஞ்சையைத் தலைநகரமாகக் கொண்டும் தஞ்சையிலேயே தங்கியிருந்தும் ஆட்சி செய்த தஞ்சை மராட்டிய மன்னர்கள் வளர்த்த பன்மொழி இலக்கியங்களுள் தமிழ் இலக்கியம் ஆய்வுப் பொருளாக அமைகிறது இம்மன்னர்கள் கி.பி 1676 முதல் 1855 வரை ஆட்சிப்பொறுப்பில் இருந்த காலத்தில் பல்வேறு இலக்கிய வகைகளில் 68 தமிழ் இலக்கியங்கள் வெளிவந்திருப்பதாக முதல் பகுதியில் சுட்டப்பட்டிருந்தது. ஆயின் இரண்டாம் சரபோசி மன்னர் ஆதரவிலும் அவருடன் பயின்ற ஒருசாலை மாணாக்கராகவும் திகழ்ந்த வேதநாயக சாஸ்திரியார் எழுதிய நூல்கள் அப்பட்டியலில் இடம்பெறவில்லை. பல்வேறு ஆவணங்கள் மற்றும் வேதநாயகரின் படைப்புக்கள் மூலம் தஞ்சை அரண்மனையில் சரபோசி மன்னரின் முன்னிலையில் சில நூல்கள் அரங்கேற்றப்பெற்ற செய்திகள் கிடைத்தன. எனவே வேதநாயகரின் படைப்புக்களையும் இந்த ஆய்வுத் தலைப்பின்கீழ்க் கொண்டு வருவது பொறுத்தமுடையதாகத் தோன்றியது. ஆதலின் வேதநாயகரின் நூல்களுள் நான்கு நூல்கள் இப்பகுதியில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

திருநெல்வேலியில் சைவ வேளாளர் மரபில் 07-09-1774ஆம் ஆண்டில் பிறந்த வேதநாயகர் 1785இல் ஸ்வார்ட்ஸ் பாதிரியாரால் தஞ்சாவூருக்கு அழைத்து வரப்பெற்றார். ஐயரின் பாதுகாப்பில் சரபோசியும், வேதநாயகரும் இணைந்தே கல்வி கற்றனர். வேதநாயகர் ஐயரின் இல்லத்திலேயே தங்கியிருந்து கல்வி கற்றார். இருவரில் வேதநாயகர் சரபோசியைவிட மூன்று வயது மூத்தவரானபடியினால் சரபோசி வேதநாயகரை 'அண்ணா' என்றே அன்புடன் அழைத்து வரலானார்.

சரபோசி மன்னர் ஸ்வார்ட்ஸ் பாதிரியாரின் உதவி

யினால் தஞ்சை அரசுப் பொறுப்பை ஏற்றவுடன் தம் அவைக் களப் புலவர்களில் வேதநாயகருக்கும் வாய்ப்பளித்தார்; அரசகவியாக, சமஸ்தான வித்துவானாக நியமித்தார். வேதநாயகருக்குக் குடியிருப்பதற்கு நிலமும் ஆண்டுதோறும் 50 வராகனும் அளித்தார். அரசகவியானதன்பின் திங்கள் தோறும் ரூ 35/- சம்பளமாகக் கொடுப்பதற்கு ஒழுங்கு செய்தார்.

வேதநாயகர் சரபோசியிடம் பெருமதிப்புக் கொண்டிருந்தார். எவ்விதத் தயக்கமுமின்றித் துணிவுடன் தமது கருத்துக்களை அவரிடம் கூறியுள்ளார். மன்னர் முன்னிலையில் நோவாவின் கப்பல் பாட்டை அரங்கேற்றி 100 வராகன் பரிசிலாகப் பெற்றார். அதன்பின்னர் ஜே.சி. கோலேப்பையரின் அனுமதிப்படிப் பெத்லகேம் குறவஞ்சியை இரண்டாம் சரபோசி முன்னிலையில் அவையில் அரங்கேற்றினார். இதற்காக மன்னர் பரிசிலாகப் பணமும், பொருள்களும் கொடுத்துப் பாராட்டியுள்ளார்.

சரபோசி மன்னர் அவைக்களத்தில் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், வேதநாயகர், திருவேங்கடத்தா பிள்ளை, வேலாயுத வாத்தியார், வேங்கடாசலம் பிள்ளை, சுப்பராயக் கவிராயர், அனந்தபாரதி ஐயங்கார் முதலான தமிழ்ப் புலவர்கள் இருந்துள்ளனர். சிவக்கொழுந்து தேசிகர் 'சரபேந்திர பூபாலக் குறவஞ்சி' எனும் நூலைப் பாடினார். மன்னர் வேதநாயகரைப் பிரகதீசுவரர் மீது குறவஞ்சி பாடுமாறு கேட்டார். ஆயின் வேதநாயகர் இயேசு பிரானைத் தவிரப் பிற கடவுளர்மீது நூலியற்ற மாட்டேன் எனத் துணிந்து கூறி மறுத்து விட்டார்.

சரபோசி மன்னர் ஒரத்தநாட்டில் கட்டிய முத்தம்மாள் சத்திரத்தைப் பார்வையிட்ட வேதநாயகர் மன்னரைப் போற்றி ஒரு பாடல் பாடினார். பாடலைக் கேட்டு மகிழ்ந்த மன்னர் அன்பளிப்பாகச் சிறிது நிலம் கொடுப்பதாகச் சொன்னார். ஆனால் வேதநாயகர் நிலத்தை வாங்க மறுத்து விட்டார். அதற்குப் பதிலாக இசைக்கருவி, அகராதி, சில பரிசுப் பொருள் களை மட்டும் பெற்றுக் கொண்டார். மன்னர் வேதநாயகருக்கு வழங்கிய பல பொருள்களுள் பச்சைப் பல்லக்கும் ஒன்றாகும்.

இப்பல்லக்கு இன்றும் வேதநாயகர் இல்லத்தில் பாதுகாக்கப் பட்டு வருகிறது.

அரசவைக் கவிஞராக இருந்த காரணத்தினால் சரபோசியின் அரசகுல வரலாற்றைக் கூறும் 'போன்சலே வம்ச சரித்திரத்'தைப் பாட்டாகப் பாடி மன்னரிடமிருந்து சால்வை ஒன்றைப் பரிசாகப் பெற்றார்.

சரபோசி மன்னரிடம் நெருக்கமாகப் பழகி நட்புடன் திகழ்ந்த வேதநாயகர் இல்லத்தில் உள்ள ஒரு கடிதத்தில் (01-12-1828) மன்னர் தம்மை 1828 வரை நன்கு ஆதரிக்கவில்லை என்றும், தமக்குப் பெரிய அளவில் எந்த உதவிகளும் செய்ய வில்லை என்றும் வருந்திக் கூறியிருப்பதைக் காணமுடிகிறது. ஆனால் நான்காண்டுகள் கழித்துச் சரபோசி மன்னர் அதாவது 1832இல் இறந்த போது வேதநாயகர் உள்ளமுருகிப் பாடிய இரங்கற்பாடலில் நேர்மாறாகப் பாடியுள்ளதைக் காணமுடிகிறது. சரபோசி மன்னருக்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற சிவாசி, தம் அரசவையில் கிறித்தவர் களையும் வேதநாயகரையும் அனுமதிக்க மறுத்து விட்டார். அதன்பிறகு இவருக்குத் தஞ்சை அரண்மனையோடு இருந்த தொடர்பு முற்றிலும் நின்றுவிட்டது.

தஞ்சை மராட்டியர் காலத்தில் நிலவிய கிறித்தவ சமயம் தொடர்பான செய்திகளை அறிவதற்கு வேதநாயகர் படைத்த பனுவல்கள் குறிப்பிடத்தக்க தரவுகளாக, மூலங்களாகத் திகழ்கின்றன.

வேதநாயகர் நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களைப் பாடியுள்ளார். இவர் 1790ஆம் ஆண்டிலிருந்து நூல்களை எழுதத் தொடங்கியுள்ளார். இவர் 91 ஆண்டுகள் தமிழகத்தில் வாழ்ந்து 1864ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார். நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை இவர் பாடியிருந்தாலும் தஞ்சை மராட்டிய மன்னர் ஆதரவின் மூலம் எழுதப்பட்ட நூல்கள் மட்டும் இவண் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வது பொருத்தமுடையதாகும். அந்த வகையில் 1790 முதல் 1855 வரை இவரால் எழுதப்பெற்ற நூல்களில் இந்த மூன்றாவது பகுதியில் ஞான உலா (1820), பெத்லகேம் குறவஞ்சி (1800),

ஞான அந்தாதி (1796), செபமாலை (1810-1855) ஆகிய நான்கு நூல்கள் திறனாய்வு செய்யப்பட்டுள்ளன எஞ்சிய நூல்கள் இனிவரும் பகுதிகளில் இடம்பெறும்.

மேலும் முதலாம் ஏகோசி காலத்தைச் சேர்ந்த 'கணபதி தோத்திரம்', சிவாசி காலத்தைச் சார்ந்த 'பரமானந்தயோகி சரித்திரம்' ஆகிய நூல்களும் இப்பகுதியில் இடம் பெற்றுள்ளன. இரு நூல்களும் அச்சில் வெளிவராத காரணத்தினால் மூலப்பகுதிகளும் உரிய குறிப்புகளுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

பேச்சு வழக்குச் சொற்கள், வடமொழிச் சொற்கள், கிறித்தவ சமயம் தொடர்பான கலைச்சொற்கள், அடுக்குச் சொற்கள், அந்தாதி இலக்கியம் மற்றும் மாலை இலக்கியங் களின் பட்டியல், சொல்லடைவு முதலானவை பின்னிணைப்பு களாகவும் நூலோதியும் இடம்பெற்றுள்ளன.

**நன்றியுரை**

இந்த ஆய்வை மேற்கொள்வதற்கு வித்திட்ட தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர் முதுமுனைவர் **வ.அய். சுப்பிரமணியனார்** அவர்கட்கு என் உளங்கனிந்த நன்றி.

தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த தமிழ் இலக்கியம் என்ற தலைப்பின்கீழ் மூன்றாவது பகுதியாக முடிக்கப்பெற்ற இந்நூலுக்குப் பெரிதும் உறுதுணையாக இருந்த முன்னைத் துணைவேந்தர்கள் முனைவர் **கி. கருணாகரன்** அவர்கட்கும், முனைவர் **கதிர். மகாதேவன்** அவர்கட்கும் என் நன்றி.

இந்த ஆய்வுக்குப் பல்வேறு வகைகளில் உறுதுணை புரிந்த பேராசிரியர் முனைவர் **பா. சுப்பிரமணியன்**, முனைவர் **செ. இராசு** ஆகியோருக்கும், வேதநாயகரின் நூல்களையும் கிறித்தவ சமயம் தொடர்பான கருத்துக்களையும் வழங்கிய அருள்திரு முனைவர் **ஜெ. துரைராஜ்**, அருள்திரு முனைவர் **ஆ. ஜான்துரை**, அருள்திரு முனைவர் **தா. வின்செண்ட்** ஆகியோருக்கும் என் நன்றி.

தமிழ்ப் பல்கலைக்கழக நூலகம், சரசுவதி மகால் நூலகம் மற்றும் இந்நூலகங்களில் பணியாற்றி வருகின்ற அலுவலர்கள்,

நண்பர்கள் அனைவருக்கும் என் நன்றி.

இந்த ஆய்வறிக்கை நூலாக வெளிவருவதற்குப் பரிந்துரை செய்த பேராசிரியர் முனைவர் சி.இ. இராமச்சந்திரன் அவர்கட்கும் என் நன்றி.

நூலாக வெளிவருவதில் ஆர்வம் காட்டி உறுதுணை புரிந்தும் சிறந்ததொரு அணிந்துரை வழங்கிய தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் இ. சுந்தரமூர்த்தி அவர்கட்கு என் நன்றி.

தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறையைச் சார்ந்த நண்பர்கள் அனைவருக்கும் என் நன்றி.

(ம. சா. அறிவுடைநம்பி)

# பிற இலக்கியம்

## கணபதி தோத்திரம்

# கணபதி தோத்திரம்

'கணபதி தோத்திரம்' எனும் நூல் இதுவரை அச்சில் வரவில்லை. இதன் சுவடி தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகத்தில் உள்ளது.[1] இந்நூலை எழுதிய ஆசிரியர் பெயரும், நூல் எழுதப்பட்ட காலமும் தெரியவில்லை.

## நூலமைப்பு

கணபதி தோத்திரம் எனும் நூல் பதினான்கு பாக்களைக் கொண்டது. சில பாக்களில் சில எழுத்துக்கள் காணப்பட வில்லை கணபதியை மட்டும் போற்றிப் பாடுவதாக நூல் அமையவில்லை. இப்பாக்கள் பின்வருமாறு அமைந்துள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | கணபதி | 1-4 பாக்கள் |
| 2. | உமையவள் | 5, 6, 9, 10 பாக்கள் |
| 3. | சிவபெருமான் | 7, 8 பாக்கள் |
| 4. | கலைமகள் | 11, 12 பாக்கள் |
| 5. | வாழ்த்து | 13, 14 பாக்கள் |

## நூலாசிரியரும் காலமும்

இறுதிப் பாடலாக அமைந்த வாழ்த்தில்,

"செய்ய புகழே கோஜி
மகராசன் வாழி"

என்றமைந்துள்ளது. எனவே இந்நூல் முதலாம் ஏகோசியின் காலத்தில் (கி.பி. 1676-1683) எழுதப்பட்டிருக்கலாம். அதே போன்று இப்பாடலிலேயே

"பெருமை முத்துக்
குமரேசர் வாழி நித்தம் வாழி"

---

1. தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகம், சுவடி எண் படியெடுக்கப்பெற்ற தொகுதி எண் 1090 டி. 1003.

என்றும் காணப்படுகிறது இப்பாடல் வரிகளைப் பார்க்கும் பொழுது இந்நூலை எழுதியவர் முத்துக்குமரேசர் என்பவராக இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில் பிற பாக்களில் எந்தவிடத்திலும் யாருடைய பெயரும் காணப்படவில்லை. மேலும் வாழ்த்தாக அமைகின்ற பாக்களிலேயே நூல் எழுதிய ஆசிரியர் பெயரையும், அந்நூல் எழுதக் காரணமாக இருந்து ஆதரித்துப் போற்றிய மன்னர்களையும் குறிப்பிடுவதை அக்காலப் புலவர்கள் மரபாகப் போற்றிய பாங்கைப் பிற இலக்கியங்களில் காணமுடிகின்றன. எனவே இந்நூலைப் பாடியவர் முத்துக்குமரேசர் என்பதும், இவர் முதலாம் ஏகோசி வாழ்ந்த காலத்தைச் சேர்ந்தவர் என்பதும் இப்பாடல் மூலம் அறியமுடிகின்றன.

**இறைவன் பெருமை**

கணபதி, சிவபெருமான், உமையவள், கலைமகள், இலக்குமி, முருகன் போன்றவர்களின் பெருமைகளும், இறைவனை வழிபடும் முறையைப் பற்றியும் இப்பனுவலில் காணமுடிகின்றன.

***கணபதி***

கணபதி, குஞ்சரம், அத்திமுகன், ஐங்கரன், தேவன், வெள்ளைவாரணன், மூசிகவாகனன் ஆகிய பெயர்களால் கணபதி அழைக்கப்பெறுகின்றனன். பதினான்கு பாக்களைக் கொண்ட இப்பனுவலில் முதல் நான்கு பாடல்களில் கணபதியின் பெருமைகளையும், அவனை வழிபடும் முறையையும் எடுத்தியம்புவதனால் 'கணபதி தோத்திரம்' என்ற பெயரை இப்பனுவலுக்குச் சூட்டினர் போலும்! இப்பனுவலில் பொதுவாக இறைவன் பெருமைகள் மட்டுமே பேசப்படுகின்றன.

> "யானை முகத்தை உடையவன்; பார்வதி பெற்ற புதல்வன்; சிவனின் மைந்தன்; முருகனின் தமையன்; பெருச்சாளியை வாகனமாகக் கொண்டவன்; ஐந்து கைகளை உடையவன்; வெள்ளை யானை முகத்தினன்"

என்று இப்பனுவலில் ஆசிரியர் கணபதியைப் பற்றிக்

நறிப்பிடுகின்றார். இவருக்கு விருப்பமானவற்றைப் படைத்து பழிபட்டால் வழிபடுகின்றவர்களைக் காப்பதோடு, அவர்களுக்கு அறிவு, பேச்சாற்றல்களைத் தருவார். தஞ்சாவூர் கரில் விருப்பத்துடன் எழுந்தருளியிருக்கின்றனன்.

**'வபெருமான்**

சிவன், சங்கரன், ஆதி கைலாசர், விமலாசன், இடப ாகனன் போன்ற பெயர்களால் சிவபிரான் அழைக்கப் பெறுகின்றனன்.

> "எருதை வாகனமாகக் கொண்டவன்; திங்களைச் சடையில் அணிந்தவன்; கொன்றை, தும்பை அணிந்தவன்; வீரபத்திரனுக்குக் குருவானவன்; உமையவளைத் தம் இடப்பாகத்தினில் கொண்டவன்; புள்ளிருக்குவேளூரில் குடி கொண்டிருப்பவன்; புலி, ஆடு போன்றவற்றை அணிகலனாக அணிபவன்; மானைக் கையினில் ஏந்தியவன்; வெண்ணிறமான சாம்பலைத் தம் மேனி முழுவதும் அணிந்து விளங்கு பவன்; கம்பை நதியினில் பிறந்து வளர்ந்த தையலை மணந்தவன்; இவ்வுலகினில் கலியுகத் தெய்வமாக . விளங்குபவன்; தஞ்சமென்று வருகின்றவர்களைக் காத்தருள் புரிபவன்; அருளுடையவன்; தன்னைப் போற்றி வழிபடுகின்றவர்களுக்குப் பீடித்திருந்த பேய், பிசாசு போன்றவற்றை விரட்டி அருள் புரிபவன்."

சீர்காழிக்குத் தென்மேற்கில் 6 கி.மீ தொலைவில் நப்புள்ளிருக்குவேளூர் எனும் வைத்தீசுவரன் கோயில் ள்ளது. இக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன் திருப் பயர் வைத்தியநாதராவர். இங்கு முத்துக்குமாரசாமி எனும் ருகன் கோயில் உள்ளது. இறைவன் தீராத நோய்களைத் த்து வைப்பவராதலின் வைத்தியநாதர் என அழைக்கப் பறுகின்றனன்.

**மையவள்**

கன்னி, திரிசூலி, கோதை, காமாட்சி, அங்காளம்மன், தரி, கவுமாரி, தையல், சர்வேசுவரி, சிவகாமி, மாதங்கி,

மகமாயி, சவுந்தரி, உமை, வேதநாயகி, ஆனந்தவல்லி, அபிராமி போன்ற பெயர்களால் அழைக்கப்பெறும் உமையவளைப் பலவிடங்களில் போற்றிப் புகழ்ந்துள்ளமையைக் காண முடிகின்றது.

> "தாமரையில் வீற்றிருப்பவள்; கருணையே வடிவானவள்; கம்பை எனும் ஆற்றினில் வளர்ந்த கன்னி; அழகிய கையினில் சங்குமணியை அணிந்தவள்; ஆண் முடியை அணிகலனாக அணிந்தவள்; தங்கத்தினாலான கூடையை ஒரு கையில் பிடித்து, இப்பூவுலகத்தைக் காத்து வருபவள்; தன்னையே தஞ்சம் என்று நாடி வருகின்றவர்களைக் காத்து அருள் புரியும் அருளுடையவள்; திருமாலின் சகோதரி; சந்தனம், சவ்வாது, கத்தூரி, புனுகு போன்றவற்றை அணிபவள்; சிவகாமி; சர்வேசுவரி; தேவர்களும் தொழும் தாய்; சிவபிரானின் இடப் பக்கத்தில் அமர்ந்திருப்பவள்; அனைவருக்கும் அருள் நல்குபவள்; வந்த பிணிகளையும், கொடிய வினை நோய்களையும் தீர்த்து அருள் நல்குபவள்; ஆகமங்கள், புராணங்கள், சாத்திரங்கள் போற்றும் வேதநாயகி; ஆனந்தவல்லி; அபிராமி; நாகமணி அணிந்த மகமாயி; நெற்கனகரத்தினம் அணிந்து பகுத்தறிவுடன் விளங்கு பவள்; ஏழைகளுக்கிரங்கி வரம் தருபவள்; பதினான்கு உலகங்களுக்கும் சக்கரம் போன்றிருப்பவள்; வேதாந்த வேதி; அனுகூலி; மகா மந்திர வடிவானவள்."

தஞ்சாவூரில் எல்லையம்மன் கோயில் உள்ளது. இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் அம்மன் எல்லம்மாதேவி, இரேணுகாதேவி, மாதங்கி என்ற பெயர்களால் அழைக்கப் பெறுகின்றனள். கிராம தேவதைகளின் பட்டியலில் எல்லம்மா, இரேணுகாதேவி என்ற இரண்டும் வேறுவேறு தெய்வங்களின் பெயர்களாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன. தஞ்சாவூர் மராட்டியர்களின் குலதெய்வமாக இரேணுகா தேவி போற்றி வணங்கப் பெறுகின்றனள். இவளே மாதங்கியு மாவாள். எனவே ஆசிரியர் மாதங்கியை ஒரு பாடலில் குறிப்பிட்டிருக்கின்றமையைக் காணமுடிகிறது.

**கலைமகள்**

கமலராணி, சரசுவதி எனக் கலைமகள் அழைக்கப் பெறுகின்றனள். "வெண்டாமரையில் வீற்றிருப்பவள்; அரசி; உத்தமி; வாணி; இசைத்தமிழை வளர்ப்பவள்" என்று போற்றிப் புகழ்கின்றார். கலைமகள் வழிபாட்டுக்கு என்னென்ன பொருள்களை வைத்து வழிபடவேண்டும் என்பதையும் தமக்குக் கல்வி கற்பித்த ஆசிரியருக்குச் செய்ய வேண்டிய சிறப்பையும் ஆசிரியர் ஒரு பாடலில் எடுத்து மொழிந்துள்ளார்.

ஒரு தட்டில் வெற்றிலை, பாக்கு, துணி போன்றவற்றை வரிசையாக அடுக்கி வைத்து அதனுடன் பொன்னையும் வைத்து ஆசிரியருக்குக் கொடுக்க வேண்டும். அதேநேரத்தில் கலைமகள் வழிபாட்டில் கலந்து கொண்ட படிக்கின்ற சிறுவர் களுக்கு வாழைப்பழம், தேங்காய் போன்றவற்றை அன்புடன் உளமுவந்து கொடுக்க வேண்டும்.

**இலக்குமி**

ஒரேயொரு பாடலில் இலக்குமியின் புகழைப் பாடு கின்றார். இலக்குமியை அட்ட இலக்குமியாகப் போற்றி வழிபடுவதுண்டு. தனலட்சுமி, தானியலட்சுமி, சௌபாக்கிய லட்சுமி, சந்தானலட்சுமி, வீரலட்சுமி, விரையலட்சுமி, செயலட்சுமி போன்ற பெயர்களையுடைய இலட்சுமியைப் போற்றித் துதித்து வழிபடுவதனால் புகழ், கல்வி, வலி, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, துணிவு, நோயின்மை, வாழ்நாள் ஆகிய பதினாறு செல்வங்களையும் பெற்று வளமாக வாழலாம் என்று இப்பாடலில் ஆசிரியர் கூறுகின்றார்.

**முருகன்**

முருகன், ஆறுமுகன், சரவணன், சண்முகன் எனும் பெயர்களால் முருகன் அழைக்கப் பெறுகின்றனன்.

"கணபதியின் தமையன்; தத்துகின்ற மயில்மீதமர்ந்து வருபவன்; அழகிய வடிவினன்; பகைவர்களுக்கும் அருள்பவன்; சங்கரன் புதல்வன்; அரசர் குலத்தை

வேரோடு அழித்தவன்; வேளூரில் குடி கொண்டிருப்பவன்"

என்று முருகன் பெருமை பேசப்படுகிறது.

**ஏனையோர்**

திருமால், நான்முகன், தேவர் போன்றவர்களைப் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன. "மேகநிறத்தை யுடையவன்; அழகிய திருவரங்கத்தில் வீற்றிருப்பவன்" என்று திருமாலைக் கூறிய ஆசிரியர் 'உமையவளின் சகோதரன்' என்ற முறையிலேயே திருமால் கூறப்பெறுகின்றனன். 'தாமரையில் வீற்றிருப்பவன்' என்று நான்முகனும், 'தேவர்களின் தாய்' என்று உமையவள் கூறப்படுமிடத்தில் தேவர்களும் கூறப்பெறுகின்றனர்.

**இறைவனை வழிபடும் முறை**

கணபதி, உமையவள், கலைமகள், இலக்குமி போன்ற கடவுளர்களை வழிபடும் முறைகளையும், வழிபடுவதனால் பெறும் சிறப்புக்களையும் ஆசிரியர் எடுத்துரைக்கின்றார். கணபதிக்குப் படைக்கப்படும் பொருள்களின் பட்டியலை நான்கு பாடல்களில் ஆசிரியர் கூறுகின்றார். அவ்வாறு படைக்கப்படும் பொருள்கள் வருமாறு :

| | |
|---|---|
| அவல் | தேன் |
| அதிரசம் | தோசை |
| அப்பம் | பொரி |
| இளநீர் | பயறு |
| எள்ளுருண்டை | பலாச்சுளை |
| கடலை | பாலமுது |
| கற்கண்டு | பணியாரம் |
| கரும்பு (செங்கரும்பு) | பச்சரிசி |
| கதலி (வாழை) | பெருவள்ளிக்கிழங்கு |
| சர்க்கரை | வடை (புதியவடை) |
| சிறுவள்ளிக்கிழங்கு | வெல்லப்பாகு |
| தேங்காய் | வெண்ணாவல்பழம் |

நாள்தோறும் கணபதியை வழிபடுவதனால் இடர் களைந்து காப்பார். பூங்காவனத் தாயாகிய உமையவளைப் போற்றிப் பணிவதனால் வந்த பிணிகளையும், கொடிய வினைநோய்களையும் தீர்த்து அருள் புரிவாள். வைத்திய நாதனின் திருவடியை நாள்தோறும் துதித்துப் போற்றி வணங்குவோம்! வேளூரில் குடிகொண்டிருக்கிற இறைவன் தீராத நோய்களைத் தீர்த்து வைப்பான். அட்ட இலட்சுமி யைப் போற்றி வழிபடுவதனால் பதினாறு செல்வங்களையும் பெற்று வளமாக வாழலாம்.

**இயற்கை வளம்**

இப்பனுவலில் இயற்கையைத் தனியாகப் போற்றி வளங்களைக் கூறுவனவாக எப்பாடலும் அமையவில்லை. இறைபுகழைப் போற்றிப் பாடுவதை நோக்கமாகக் கொண்ட ஆசிரியர் இறைவனுக்குகந்த பொருள்களாகச் சிலவற்றை எடுத்தியம்புகின்றார்.

கொன்றை, தும்பை, கமலம் ஆகிய மலர்களையும்; கங்கை, கம்பை ஆகிய ஆறுகளையும்; புலி, மான், காளை (கிரிடபம்), பரி, கரி, பெருச்சாளி ஆகிய விலங்குகளையும்; மயில் எனும் பறவையையும்; வாழை, கதலி, பலா, மா, நாவல் ஆகிய பழங்களையும்; மதி, கார் (மேகம்), ஏர், சந்தனம், சவ்வாது, கத்தூரி, புனுகு, தேங்காய், கிரி, சிங்காதனம் போன்ற இயற்கை சார்ந்த பொருள்களையும் இந்நூலில் ஏற்றவிடங் களில் ஆசிரியர் கூறியிருக்கின்றார். மலர்களைச் சூடிக் கொள் வதையும்; விலங்குகளைக் கைகளில் ஏந்தியும், வாகனமாகக் கொண்டும்; பழங்களை வழிபாட்டுக் குரிய பொருள்களாகக் கொண்டும் ஆசிரியர் பயன்படுத்தியிருக்கின்றார்.

**அணிகலன்கள்**

உமையவள் தம் கையினில் சங்குமணியை அணிந்து, தங்கத்தினாலான கூடையை ஒரு கையில் பிடித்திருக்கிறாள். முத்து, இரத்தினங்களாலான அரியணையில் வேளூர்ப் பெருமான் அமர்ந்திருக்கின்றனன். கலைமகள் நாகமணி, இரத்தினம் ஆகியவற்றை அணிந்திருக்கின்றனள்.

**ஊர்கள்**

தஞ்சாவூர் 'அளகை' என அழைக்கப்படுகிறது: தஞ்சாவூர் நகரினில் வெள்ளையானை முகத்தோன் விரும்பி எழுந்தருளியுள்ளான். வேளூரில் வைத்தியநாதரும், முத்துக் குமாரசாமி எனும் முருகனும் எழுந்தருளியுள்ளனர். அழகிய திருவரங்கத்தில் திருமால் வீற்றிருக்கின்றனன்.

**எண்கள்**

பதினான்கு (ஈரேழு), ஆயிரம், ஐந்து, மூன்று, பதினாறு ஆகிய எண்கள் இடம்பெறுகின்றன. இலக்குமியைப் பரி, கரி, தேர் எனும் முப்படையை வைத்து வழிபடவேண்டும் என்று கூறும்பொழுதும், பஞ்சலட்சுமி எனும்பொழுதும், இலக்குமியை வழிபடின் பதினாறு செல்வங்களைப் பெறலாம் என்று கூறும்பொழுதும் மூன்று, ஐந்து, பதினாறு ஆகிய எண்களைப் பயன்படுத்துகின்றார். அதேபோன்று 'ஈரேழு உலகங்களுக்கும் சக்கரம் போன்றிருப்பவள் உமையவளாவள்', 'ஆயிரம் மகமாயியாகவும் திகழ்கின்றாள்' என்று கூறுமிடத்தில் பதினான்கு, ஆயிரம் எனும் எண்கள் கையாளப்பட்டுள்ளன.

**ஏனையவை**

கலைமகளை வாழ்த்துகின்றபொழுது இசைத்தமிழையும், கவிகை (குடை), சிவிகை, தேர் போன்றவற்றையும் ஆசிரியர் கூறியிருக்கின்றார். பேய், பிசாசு, அசுரர் போன்றவர்களையும் கூறக்காணமுடிகின்றன.

**சொற்கள்**

நித்தம், அனுதினம், துப்பட்டி, வாத்தியார், சம்பத்து, இங்கிதம், வெடிச்ச ஆகிய பேச்சுவழக்குச் சொற்களையும்; தயாபரீ, கிறுபாகரீ, நாயகீ எனும் விளிச்சொற்களையும்; மேன்மேலும், எங்கெங்கும் எனும் அடுக்குமொழிச் சொற்களையும்; ரட்சிக்கும், அதிரூப, சரஸ்வதி, சந்தோஷம், பிரியம், இஷ்டம், ரூபி, சௌபாக்கியம் எனும் வடமொழிச் சொற்களையும் இப்பனுவலில் காணமுடிகின்றன.

சில சொற்கள் திரிந்து காணப்படுகின்றன. அவை

வருமாறு :

| | | |
|---|---|---|
| எள்ளுருண்டை | எள்ளுண்டை | (1) |
| வெடித்த | வெடிச்ச | (3) |
| கல்யாணி | கலயாணி | (5) |
| தஞ்சம் | தம்பம் | (6, 8) |
| கிருபாகரி | கிறுபாகரீ | (6, 9) |
| தையல் | தைய்யல் | (8, 9) |
| காசினியில் | காசியினில் | (8) |
| சவ்வாது | சவாது | (9) |
| தவிர்த்தருளும் | தவிர்ந்தருளும் | (9) |
| காக்கும் | காற்கும் | (10) |
| வெற்றிலை | வெள்ளிலை | (11) |
| தெரிசித்து | நெரிசித்து | (12) |
| வாழி | வழி | (14) |
| பலாச்சுளை | பிலாச்சுளை | (3) |
| மகாதேவன் | மகதேவன் | (4) |

இச்சொற்களைப் பார்க்கும்பொழுது திரிந்த சொற்கள் போலத் தெரியவில்லை. எழுத்துப் பிழைகள் இருப்பது போலத் தென்படுகின்றன. ஒருவேளை இதன் மூலச்சுவடி கிடைப்பின் உண்மைநிலை தெரியவரும். சரசுவதி மகால் நூலகத்திலுள்ள இச்சுவடி படியெடுக்கப்பட்ட சுவடியாகும். படி எடுத்தவர் செய்த பிழைகளாகவே இச்சொற்கள் இருப்பதற்கு வாய்ப்புள்ளன. இது மேலும் ஆய்வுக்குரிய ஒன்றாகும்.

❑

# கணபதி தோத்திரம்*

## கணபதி

கடலை பொரியவள் பயறு
கற்கண்டு தேங்காய்
கண்ணியிள நீர்க் கரும்பு
கதலி[1] பலாச் சுளையும்
துடவரிய எள்ளுண்டை[2]
பாலமுது தேனுந்
துய்யவடை பணியாரம்[3]
தோசைப் பச்சரிசி
திடமுடைய அதிரசமும்[4]
மாங்கனி யோடப்பம்
செழும்பாகு பெருவள்ளிச்
சிறுவள்ளிக் கிழங்கும்
குடவயிறு தனிலடைவு
மகா கணபதியே குஞ்சரமே[5]
வந்தென்னை அஞ்சலென்பீரே. (1)

பாகு பொரியவல் கடலை பச்சரிசி
வாழைப்பழ முடனே தேங்காயும் பருத்த மாங்கனியும்
வாகு[6] பெறவே யமுது செய்ய வல்லோனே
வல்லபை[7] யிடத்தனென வந்த கணபதியே

* படியெடுக்கப்பெற்ற தொகுதி எண் 1090 டி. 1003 (காப்பீடு வால்யூம் நம். 1090. டி 1003), சரசுவதி மகால் நூலகத்திலுள்ள சுவடி.

1. கதலி - வாழை.
2. எள்ளுண்டை - எள்ளுருண்டை
3. பணியாரம் - பணிகாரம், அப்பவருக்கம்.
4. அதிரசம் - ஒரு பலகாரம்.
5. குஞ்சரமே - யானைமுகங்கொண்ட கணபதி.
6. வாகு - அழகு.
7. வல்லபை - பிரியநாயகி, ஓரசுரமாது.

ஏகவிடை[8]யேறு சிவனாருடைய முருகா
எண்ணு மெழுத்து மெனக்கு மீன்றருள்வோனே
ஆகமுடன் தெனன. . . நகர்தனில் வாழும்
அத்திமுக[9] வுன்பாரும் நித்தம் தொழுவோமே. (2)

கதலியுடன் சிறுபயறு
தேனு மாங்கனியும்
கற்கண்டு சர்க்கரையும்
கரும்பும் இளநீரும்
விதமுடனே கடலைகளும்
வெடிச்ச[10] பிலாச்சுளையும்[11]
மேலான சுகியனப்பம்[12]
வெண்ணாவல் பழமும்
புதிய வடை குடவயிறு
தனி லடைப்பேன்
புத்தியுடன் வாக்கு மெத்தப்
போத வெனக் கருள்வாய்
மதி சடையி லணியும்
சிவன் மகிழ்ந்த கணபதியே
மலர் பதத்தை[13] அனுதினமும்[14]
மனதில் மறவேனே. (3)

சிறுபயறு சுடலைபொரி
அவலுடன் இளநீர் செங்கரும்பு
கண்டு ரசம்
பிறமாய படைப்பேன்.அ..குடன்
கொன்றை தும்பை அணியு

8. விடை - எருது.
9. அத்திமுக - யானைமுகங்கொண்ட கணபதி.
10. வெடிச்ச - வெடித்த.
11. பிலாச்சுளை - பலாச்சுளை.
12. அப்பம் - சிற்றுண்டி.
13. மலர் பதம் - மலர்ப்பதம்.
14. அனுதினமும் - நாள்தோறும்.

மகதேவற்[15] கன்பான கணபான
கண்மணியே ஆறுமுகா துணைவர்
சிறு குழவி யானடியேன்
புன்சொல் தனைவிரும்பும் தேவனே[16]
மூழிவாக[17] வைங்கரனே[18]
பருவகிரியான நெனதஞ்சைதனில்
வாழும் பராபர வெள்ளை
வாரண முகனே[19] சரணம். (4)

உமையவள்

கங்கை கமலராணி
கருணாகர கலயாணி[20]
கம்பை யாற்றினில் வளரும்
கன்னி[21] திரிசூலி
அங்கை மீதில்
அக்கு[22]வக் காமணி பூண்டு
ஆடாவுகஞ் சூளி[23]
ஆபரணந் தரித்து
தங்கத்தின் தக்கடை
செங்கையில் பிடித்து
தாரணியில் பிறங்குடலை
தயாபரி[24] யம்மா

15. மகதேவன் - மகாதேவன்.
16. தேவனே - கணபதியே.
17 மூழிவாக - மூஷிகவாகனன், எலியை வாகனமாக உடைய கணபதி.
18. ஐங்கரனே - ஐந்து கைகளை உடைய கணபதி.
19 வெள்ளைவாரண முகனே - வெள்ளையானை முகங்கொண்ட கணபதி.
20. கலயாணி - கல்யாணி.
21. கம்பையாற்றினில் வளரும் கன்னி - வேகவதியாற்றில் வளரும் உமையவள், காஞ்சி காமாட்சி.
22. அக்கு - சங்குமணி.
23. சூளி - ஆண்மயிர்.
24. தயாபரி - அருளுடையவள்.

துங்கரன் வீரபத்திரன்[25]
குரு நாதரிடத்தில் கோதையே
பூங்காவனத் தாயைப்
பணிவோமே. (5)

தம்ப[26] மென்றடைந் தோரை
காத்து ரட்சிக்கும்[27]
தயாபரி கிறுபாகரி[28]
ஆன தீயம்மா
கம்பனதியில் வளருங்
கன்னி காமாட்சி
கார்வண்ணன்[29] சகோதரியே
கமலராசன் வைபோகி
தும்பை கொன்றை யணியுங்
குரு னாதரிடத்[30] தமந்த[31]
ஸுந்தரி அங்காளம்மன்
சுந்தரி கவுமாரி
விம்பதன் மாது
பூங்காவனத் தாயை
மேன்மேலும் போற்றி செய்து
மிக வணங்கு வோமே. (6)

சிவபெருமான்

தத்து மயில் மீதில்
வரு சரவணோற் பவனே[32]

25. வீரபத்திரன் - தக்கன் வேள்வியை அழிக்கத் தோன்றியவன்.
26. தம்பம் - தஞ்சம், அடைக்கலம்.
27. ரட்சிக்கும் - மீட்டல்.
28. கிறுபாகரி - கிருபாகரி, கருணை நல்குகிறவளே.
29. கார்வண்ணன் - திருமால்.
30. குருனாதர் - குருநாதர், சிவபிரான்.
31. அமந்த - அமர்ந்த,
32. சரவணோற் பவனே - முருகனை நெற்றிக்கண்ணிலிருந்து பிறப்பிக்கச் செய்த சிவபெருமானே.

சண்முகா அதிரூப[33]
சத்துருப சந்துரு சங்கரா
முத்துருவ ரெத்தின
சிங்காதன[34] வைபோகா
மூர்க்கனே அசுரர் குலம்
வொறுத்த ஆரா
பித்துடன் பேய் பிசாசு
பிறுமமடா சதியைப்
பிடித்தாயே யடித்த போ
முழுக தீரானற்றி செயும்
வேளூர்[35] வைத்தினா தர[36]நன்
பாலா இயல்
முத்துக் குமரய்யா[37]
திருவடியே சரணம். (7)

ஆமபுலி ஆடாவு கொன்றை
யணி. . . . அங்கையில்
மானேந்தும்
ஆதி கைலாசர்
கம்ப நதியிலுதித்த
தைய்யல்[38] மணவாளர்[39]
காசியினில்[40] கலியுகத்
தேவதை வொய்யார
தம்ப[41] மென்றடியாரை
காத்து ரட்சிக்கும்

33 ரூபம் - உருவம்
34. சிங்காதனம் - அரியணை
35 வேளூர் - திருப்புள்ளிருக்குவேளூர்.
36. வைத்தினாதர் - வைத்தியநாதர்.
37. முத்துக்குமரய்யா - முத்துக்குமாரசாமி.
38. தைய்யல் - தையல், உமையவள்.
39 மணவாளர் - சிவபெருமான்.
40. காசியினில் - காசினியில்.
41 தம்பம் - தஞ்சம்

தயாபரா வருரிஷப[42]
வாகன சிங்கார
சொமபதாய வேளூர்
வைத்தி னாதரடி யிணையை
தோத்திரஞ் செய்தென்னாளுந்
தோத்திரஞ் செய்வோமே.

உமையவள்

சந்தனஞ் சவாது[43]
கஸ்தூரி[44] புணுகணியும்[45]
சர்வேஸ்வரி சிவகாமி
சந்தி மாதங்கி[46]
அந்தமுள்ள வேளூர்
வைத்திய நாதரிடப்பாகம்
அமர வந்தருள் கிறுபாகரியே[47]
யமரர் தொழுந் தாயே
வந்தபிணி வல்வினை நோய்
இடர் தவிர்ந்தருளும்[48]
வாணி[49] கல்யாணி
மகமாயி சவுந்தரியே
செந்திரு வரங்கர்[50]
சகோதரி யுமையாள
செண்டலங் காரா
தைய்யல் நாயகீ[51] சரணம். (9)

42 ரிஷபம் - எருது, காளை.
43. சவாது - சவ்வாது, வாசனைத் திரவியம்.
44. கஸ்தூரி - கத்தூரி.
45 புணுகு - புனுகு.
46 மாதங்கி - காளி, துர்க்கை.
47. கிறுபாகரி - கிருபாகரி
48 தவிர்ந்தருளும் - தவிர்த்தருளும்
49 வாணி - கலைமகள்
50. திருவரங்கர் - திருமால்
51 தைய்யல்நாயகீ - தையல்நாயகி, உமையவள்.

ஆகம புராண சாத்திர
வேத நாயகியே
அம்மையே யானந்த
வல்லி யபிராமி
நாகமணி மகமாயி
நாரணி கவுமாரி
நெற்கனக ரெத்தின
வைபோகி
யேகமா யெங்கெங்கும்
நிரந்தரமாய் காற்கும்[52]
யேழையடி யேற்கு வரம்
யிங்கித மாயருள்வாயே
லோக நாயகி[53]
வெண்டாமரை யுமையே
உத்தமி சரஸ்வதியை[54]
யுகந்து பணிவோமே. (10)

கலைமகள்

சரஸ்வதி பூசைக்கு[55]
சந்தோஷமாகத்[56] தட்டில்
வெள்ளிலை[57] பாக்குத்
துப்பட்டி[58] சீராய்
வரிசையுடன் செம்பொன்னும்
வாத்தியார்க்[59] கீந்தேன்
வாசிக்கும் சிறுவருக்கு
வாழைப்பழந் தேங்காய்

52. காற்கும் - காக்கும்.
53. லோகநாயகி - உலகநாயகி, உமையவள்.
54. சரஸ்வதி - கலைமகள்.
55. சரஸ்வதி பூசை - கலைமகள் வழிபாடு
56. சந்தோஷம் - மகிழ்ச்சி.
57. வெள்ளிலை - வெற்றிலை.
58 துப்பட்டி - சேலை.
59. வாத்தியார் - ஆசிரியர்.

பிரியமுடனே[60] நல்கி
பெருமையுடன் அனுப்பீர்
பேரிடப் பொழுதில்லைத்
தாமதங் களன்றி
அரியதொரு சபைதனிலும்
ஆவிகானகந் தனிலும்
அட்ட சம்பத்துடனே[61]
இஷ்டமுடன்[62] அனுப்பீர். (11)

அண்ட[63] பகிரண்ட[64]
மீரேழு லுலகுக்காழி
ஆயிர மகமாயி
ஆகம புராண நாயகியே
வெண்டாள மேனி
விமலாசன் வைபோகி
வேதாந்த வேதி
அனுகூலி அபிராமி
மண்டல மீரேழுலகும்
காத்து ரட்சிக்கும்
மகாமந்திர ரூபியே
வாணி கல்யாணி
தெண்டிரையிலி மிகனாவில்
வாழுஞ் சரஸ்வதியே
நெரிசித்து[65] போற்றி செய்து
செல்வம் பெறுவோமே. (12)

60 பிரியம் - விருப்பம்.
61. சம்பத்து - செல்வப்பெருக்கு.
62. இஷ்டம் - விருப்பம்.
63. அண்டம் - உலகம்.
64. பகிரண்டம் - அண்டத்தின்வெளி
65 நெரிசித்து - தெரிசித்து.

வாழ்த்து

தனதான லட்சுமி[66]யுடன்
        தானிய லட்சுமியும்[67]
சௌபா பாக்கிய லட்சுமி[68]யும்
        சந்தான லட்சுமி[69]யும்
தினமான வீரலட்சுமி[70]
        விரைய லட்சுமியும்[71]
செயலட்சுமி[72] தன்னோடு
        பஞ்ச லட்சுமியும்[73]
கனமான ஆளருமை
        முத்திறமும் படைத்து
கவிகை[74] யோடு சிவிகை[75]
        பரிகரி தேரும் படைப்பீர்
மனமாறச் சிறுபாலர்
        வாழத்துவை. . . . . யினாலே
மைந்தர் பதினாறும்[76]
        பெற்று வளமாக[77] வாழ்க. (13)

சீர்வாழி அளகை[78] வாழி
        தேவர்க்கும் வாழி

66. தனலட்சுமி - செல்வலட்சுமி
67 தானியலட்சுமி - தானியமாகிய செல்வத்துக்குரிய இலக்குமி
68 சௌபாக்கியலட்சுமி - மிகுந்த செல்வத்துக்குரிய இலக்குமி.
69. சந்தானலட்சுமி - மகப்பேற்றை நல்கும் இலக்குமி
70. வீரலட்சுமி - வெற்றிக்குரிய இலக்குமி.
71. விரையலட்சுமி - வித்தைக்குரிய இலக்குமி.
72. செயலட்சுமி - வெற்றிக்குரிய இலக்குமி.
73 பஞ்சலட்சுமி - ஐந்து இலக்குமி.
74. கவிகை - குடை
75. சிவிகை - பல்லக்கு.
76. பதினாறு - புகழ், கல்வி, வலி, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, துணிவு, நோயின்மை, வாழ்நாள்.
77. வளம் - செல்வம்.
78. அளகை - தஞ்சாவூர்

செய்ய புகழேகோஜி
மகராசன்[79] வாழி
அந்தணர்க ளரசர்களும்வாழி
பண்டா வாடைபல
பட்டடையும் வாழி
ஏர்வழி[80] கார்வாழி
காமுமே வாழி
எல்லோருந்தான் வாழி
இசைத்தமிழை வளர்க்கும்
பேரான சரஸ்வதியும்
தாமுமே வாழி
பெருமை முத்துக்
குமரேசர் வாழி நித்தம் வாழி. (14)

*79 ஏகோஜி மகராசன் - தஞ்சாவூரைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்த மராட்டிய மன்னர், முதலாம் ஏகோசி. காலம் கி.பி 1676-1683.*
*80. வழி - வாழி.*

சரித்திர இலக்கியம்

# பரமானந்தயோகி சரித்திரம்

# (7) சரித்திர இலக்கியம்

சரித்திரம் என்பது வரலாறு ஆகும். நாடு, தலம், ஒருவர் வாழ்ந்த வாழ்க்கை போன்றவற்றை விளக்கிக் கூறுவது வரலாறு ஆகும். ஒரு நாடு தோன்றியது முதல் படிப்படியாக வளர்ச்சி பெற்றதையும், ஒரு கோயில் உருவாகிப் பலரால் கட்டப்பெற்றுக் குடமுழுக்கு போன்ற திருப்பணிகள் செய்ததையும், ஒரு மனிதன் பிறந்து வளர்ந்து இவ்வுலகிற்குப் பல நற்பணிகளைச் செய்து மக்கள் மனத்தில் நீங்கா இடம் பெற்று வாழ்ந்த வாழ்க்கையையும் கூறுவனவற்றை வரலாறு எனலாம்.

தஞ்சாவூர் மராட்டிய மன்னர் கடைசி சிவாசி காலத்தில் (1832-1855) வாழ்ந்த பூரணப் பிரம்மானந்தயோகி எனும் முனிவர் மன்னர் வேண்டுகோளுக்கிணங்கத் தம் குருநாதர் பரமானந்தயோகியின் வரலாற்றை எழுதியுள்ளார் உரைநடையில் எழுதப்பெற்ற இந்நூல் 'பரமானந்தயோகி சரித்திரம்' என்ற பெயரில் தஞ்சாவூர் சரசுவதி மகால் நூல்நிலையத்தில்[1] சுவடியாக உள்ளது. 34 ஏடுகளைக் கொண்ட இச்சுவடி பக்கத்திற்கு 4 வரிகள் எழுதப்பட்டுள்ள நிலையில் முழுமை உடையதாக இருக்கிறது தஞ்சாவூர் மராத்தியர் வளர்த்த சிற்றிலக்கியங்களில் இந்த ஒரு நூல் மட்டுமே 'சரித்திரம்' என்ற பெயரில் உள்ளது

# பரமானந்தயோகி சரித்திரம்

'பூரணப் பிரம்மானந்தயோகி கூற்று' என்ற பெயரில் உள்ள இந்நூலில் தஞ்சாவூரை ஆட்சிசெய்த இரண்டாம் சகசி மன்னர் இறந்த பின்னர் அவரது உடலை அடக்கம் செய்து கல்லறை வைக்காமல் எரியூட்டப்பட்டதனால் நாட்டிற்குப் பல கேடுகள் விளைந்தனவாகக் கூறப்படுகிறது. தஞ்சாவூருக்

---

1. தஞ்சைச் சரசுவதி மகால் நூல்நிலையச் சுவடி எண் 540.

கருகில் உள்ள வல்லத்தில் பரப்பிரம்மானந்தயோகியும் அவர்தம் மாணவர் பூரணப் பிரமானந்தயோகியும் வாழ்ந்து வந்தனர். தஞ்சாவூரை ஆட்சி செய்து வந்த இரண்டாம் சகசி மன்னர் (1684-1712) 1712இல் இறைவன் திருவடி நீழலடைந்தார். இச்செய்தியைக் கேள்வியுற்ற குருவும், சீடரும் வல்லத்தில் இருந்து தஞ்சாவூருக்கு வந்து சீதாப்பராவ் என்ற படைத் தலைவரைக் கண்டனர். 'மன்னர் உடலைத் தகனம் செய்யாமல் சமாதியில் வைக்குமாறு' குரு சுவாமி கூறிவிட்டு வல்லத்துக்குச் சென்று விட்டார். ஆனால் மன்னரின் உடலை எரித்துவிட்டனர். இதைக் கேள்விப்பட்ட குரு சுவாமி மீண்டும் தஞ்சாவூருக்கு வந்து அப்படைத்தலைவரிடம், 'சொன்னபடி செய்யாமல் இப்படிச் செய்து விட்டதனால் பெரிய பாவம் நேர்ந்து விட்டதே' என்று கோபித்துக் கொண்டார்.

அதற்கு அப்படைத்தலைவர், தொன்றுதொட்டுப் பரம்பரையாய் நடந்து வருகின்ற வழக்கத்தைத் திடீரென்று மாற்ற முடியாத நிலையில் இருந்தமையினால் தகனம் செய்ய நேர்ந்ததாகக் கூறினார். இவ்வாறு செய்ததனால் நாட்டுக்கும், அரசுக்கும் தீங்கு நேரும் என்று குரு சுவாமி கூறி வருத்தப் பட்டார். இக்குறையைப் போக்குவதற்குரிய வழியையும் சொல்லிக் குரு சுவாமி திருவரங்கத்திற்குச் சென்று விட்டார்.

குரு சுவாமி கூறியதற்கேற்பத் தஞ்சாவூரில் தியான சமாதி ஒன்றை அமைத்து அதில் மாணவராகிய பூரணப் பிரமானந்தயோகி, குருத் தியானம் செய்து வரலானார். இந்நிலையில் சீதாப்பராவ் இறைவனடி சேர்ந்தார். இவர் மகன் வைத்தியோகி என்பவர் தொடர்ந்து இப்பொறுப்பை ஏற்று நடந்து வந்தார். இவ்வாறு இருந்து வரும் வேளையில் தியான சமாதிக்கு இடையூறு நேர்ந்தது. பூரணப் பிரமானந்த யோகியையும் தஞ்சாவூரை விட்டு வெளியேற்றி விட்டனர்.

துக்கோசி மன்னர் மகாதேவப் பட்டணத்திற்குச் சென்று தங்கி விட்டார். வைத்தியப்பாவின் முயற்சியினால் பூரணப் பிரமானந்தயோகி மீண்டும் தஞ்சாவூருக்கு வரவழைக்கப் பட்டார். மல்லார்ஜியப்பனுடன் பூரணப்பிரமானந்த யோகியும் சேர்ந்து மகாதேவப்பட்டணத்திற்குச் சென்று குரு தியானம் செய்தனர். இந்நிலையில் முதலாம் சரபோசி மன்னர்

தஞ்சாவூரில் உடல்நலம் குன்றியிருந்தார். மீண்டும் பூரணப் பிரமானந்தயோகி தஞ்சாவூருக்கு வந்து தியானம் செய்து வரலானார்.

பவானி சங்கரத்தேவன் தனக்கு உதவி செய்ய வேண்டு மென்று சரபோசியிடம் வந்து கேட்டான். அதன்படி அவனுக்கு இளவரசுப் பட்டம் கட்டி உதவி செய்தார்.

காவிரியில் வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. அதனால் திருச்சிராப்பள்ளிக்குச் சென்று மீனாட்சி நாயக்கரைக் கண்டு பேசிக் காவிரியில் அணை அடைத்துத் திருக்காட்டுப்பள்ளிக்குப் பூரணப்பிரமானந்தர் வந்தார். அதன்பிறகு தஞ்சாவூருக்கு வந்து வைத்தியப்பாவைக் கண்டு பதினாறு ஆண்டுகள் முடிந்து விட்டன. இதற்காகச் சில வழிபாடுகள் செய்ய வேண்டும். அரசரிடம் சொல்லிச் செய்து கொள்ளுங்கள் என்று கூறிவிட்டுத் தம் குருவின் ஆணையின் படித் தஞ்சாவூரை விட்டுச் சென்று விட்டார்.

இவைமட்டும்தான் இவ்வரலாற்றில் கூறப்பெறும் செய்திகளாகும்.

பதினாறு ஆண்டுகளில் தஞ்சாவூர் அரசில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் இதில் சுருக்கமாகக் காணப்படுகின்றன. முதலாம் சரபோசிக்கும் அவர் தம்பி முதலாம் துளசா என்ற துக்கோசிக் கும் சண்டை ஏற்பட்டு, துக்கோசி தம் குடும்பத்தினருடன் மகாதேவப்பட்டணத்திற்குச் சென்று வாழ்ந்து வரலானார்.

அதேபோன்று மறவர் நாட்டு மன்னன் பவானி சங்கரத் தேவன் தஞ்சாவூருக்கு வந்து தனக்கு உதவும்படித் துக்கோசி யைக் கேட்டு ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டான். அதன்படித் துக்கோசியும் பவானி சங்கரத் தேவனுக்கு உதவி செய்தார்.

காவிரியில் அணை கட்டுவது தொடர்பாக மதுரை நாயக்க மன்னர்களுக்கும் தஞ்சாவூர் மராட்டிய மன்னர் களுக்கும் இடையே உடன்பாடு ஏற்பட்டது.

இவைபோன்ற வரலாற்றுச் செய்திகள் இச்சரித்திரத்தில் இடம்பெற்றுள்ளமை இவண் குறிக்கத்தகும்.

எளிய நடையில் அமைந்துள்ள இந்நூலில்,

வையுங்கோள், பண்ணின, ராத்திரி, வேணும், இந்தப் படிக்கு போன்ற பேச்சு வழக்குச் சொற்களும்;

சீஷன், சரீரம், தோஷம், வமிசம், சீவசந்து, ரட்சிக்க, சந்தோஷம் போன்ற வடமொழிச் சொற்களும்;

துரை, சீரங்கம், தாகீது போன்ற சொற்களும் இடம் பெற்றுள்ளன.

# மூலம்

## பரமானந்தயோகி சரித்திரம்*

### (பூரணப் பிரம்மானந்தயோகி கூற்று)

பரப்பிரம்மானந்த யோகீசுவரருடைய சீஷன்[1] பூரணப் பிருமானந்த யோகி குருவும் சீஷனும் வல்லத்துக் கோட்டையிலே[2] வாசம்[3] செய்து கொண்டிருந்தார்கள். சகஜிராசீசு பரர்[4] சரீரவாசம்[5] விட்டு தவலோகஞ்[6] சென்ற முன்பாகப் பரப் பிரம்மானந்த யோகீசுபரரும் பூரணப் பிரமானந்த யோகியும் வல்லத்திலேயிருந்து தஞ்சாவூருக்கு வந்த சீதாப்ப ராவு அவல்தாரைக்[7] கண்டு, அவருடனே குரு சுவாமியவர்கள் சொன்ன சேதி.[8]

"சாசிராசீசுபரர்[9] சரீரவாசம் விட்டுத் தவலோகம்

*சரசுவதி மகால் நூலகச் சுவடி எண் 540.

1. சீஷன் = சீடன், மாணாக்கன்.
2. வல்லத்துக் கோட்டை = தஞ்சாவூரிலிருந்து திருச்சிராப்பள்ளி செல்லும் வழியில் 12 கி.மீ. தொலைவில் உள்ளது.
3. வாசம் = இருப்பிடம்
4. சகஜிராசீசுபரர் = இரண்டாம் சகசி மன்னர். ஆட்சி செய்த காலம் 1684-1712 ஆகும்.
5. சரீரவாசம் = உடல் வாழ்க்கை.
6. தவலோகம் = மேல் ஏழு உலகினுள் ஆறாவதாக உள்ள உலகம். மேல் ஏழு உலகம் : பூலோகம், புவலோகம், சிவலோகம், மகலோகம், சனலோகம், தவலோகம், சத்தியலோகம்,
7. அவல்தார் = சிறு படைக்குத் தலைவன்.
8. சேதி = செய்தி.
9. சாசிராசீசுபரர் = இரண்டாம் சகசி.

போனார். அவர் நமக்கு ஆத்துமபந்து.[10] அவர் வாசம் பண்ணின[11] கோயில், மந்திரபிண்ட[12]மானபடியினாலே, அவர் கோயிலான மந்திரபிண்டத்தை, சமாதியிலே[13] வையுங்கோள்.[14] தகனம்[15] பண்ணவேண்டாம்" என்று திருவுளம் பற்றினார்கள்.[16]

"அப்படியே துரை[17]க்குச் சொல்லி, மறுசேதி வந்து சொல்லுகிறோம்" என்று அவல்தார் (சென்று மீண்டு வந்து) உத்தரம்[18] சொன்னார். அப்படியே துரைக்குச் சொன்னோம்; துரையவர்கள் மறுசேதி சொன்னார்கள். சந்து[19] ராத்திரி யிலே,[20] பூருவபட்சத்திலே,[21] உங்கள் தரிசனம் பண்ணிக் கொண்டு,[22] பேசவேண்டிய பேச்சு பேசிக் கொள்ளுவோ[23] மென்று சொன்னார்கள் என்று அவல்தார் வந்து சொன்னார். "எப்படியும் சரீரமான மந்திரபிண்டத்தினைத் தகனம் பண்ணாமல்,[24] சமாதியிலே எழுந்தருளப் பண்ணுங்கள்"[25] என்று குருசுவாமியவர்கள் திருவுளம்பற்றி வல்லத்துக்கு எழுந்தருளினார்கள்.

இதிலே, சதாசிவமான சகஜிராசிசுபரர், சரீரம் விட்டுத் தவலோகம் போனார்கள். மந்திரபிண்டம் தகனமாய்ப் போயிற்று. ஆனபடியினாலே, திரும்பவும் குருசுவாமியவர்கள் தஞ்சாவூருக்கு எழுந்தருளி வந்து, அவல்தாரைக் கண்டு பேசினது. "சொன்னபடி செய்யாமல் இப்படிச் செய்வார்

10 ஆத்துமபந்து = ஆன்மாவின் உறுதிச்சுற்றம்
11 பண்ணின = செய்த.
12. மந்திரபிண்டம் = மந்திரத்தால் பெற்ற உடல்
13. சமாதி = கல்லறை.
14. வையுங்கோள் = (பேச்சுவழக்குச் சொல்).
15. தகனம் = எரித்தல்.
16. திருவுளம் பற்றினார்கள் = கருதுதல்.
17. துரை = தலைவன், ஐரோப்பியன்.
18. உத்தரம் = மறுமொழி, விடை.
19. சந்து = பல வழிகள் கூடுமிடம்.
20. ராத்திரி = (பேச்சுவழக்குச் சொல்) இரவு
21. பூருவபட்சம் = பூருவபக்கம் = வளர்பிறைப்பக்கம்.
22. பண்ணிக்கொண்டு = (பேச்சுவழக்குச் சொல்) செய்துகொண்டு
23. கொள்ளுவோம் = (பேச்சுவழக்குச் சொல்) கொள்வோம்.
24. பண்ணாமல் = (பேச்சுவழக்குச் சொல்) செய்யாமல்.
25. பண்ணுங்கள் = (பேச்சுவழக்குச் சொல்) செய்யுங்கள்.

களா? மகாதோஷம்[26] வந்ததே. இப்படிச் செய்யலாமா?" என்று கோபித்துக் கொண்டார்கள்.

அதற்கு அவல்தார், "சுவாமி! இராசவமிசம்[27] அல்லவா! பரம்பரையாய்[28] நடக்கிய[29] சம்பிரதாயம்[30] எப்படியோ அப்படியே நடக்கவேணும்,[31] இப்போது நூதனமாய்[32] ஒன்று செய்தால் பூர்வீகம்[33] தவறிப் போகும். உலகத்துக்கு நன்றாக இராது. 'புதைத்து விட்டார்கள்' என்று சொல்லுவார்களே! உங்களுடனே துரையவர்கள் 'பேசிக் கொள்ளுகிறோம்' என்று சொன்னர்கள். மறுபடி உங்கள் தரிசனமும் ஆகவில்லை. துரையவர்கள் உத்தாரமும் இல்லையே. ஆனபடியினாலே சம்பிரதாயம் எப்படியோ அப்படியே கருமம்[34] முடித்தார்கள் என்றார்.

"சம்பிரதாயம் பார்த்தீர்களே தவிர, மகிமை[35] அறியாது போனீர்கள். இப்படி வரலாமோ" என்று மிகவும் கலக்கப் பட்டு, "இராசர்வுக்கும், தேசாதிபதிக்கும்,[36] மண்டலாதி பதிக்கும்[37] ஆகிய இவர்களிடத்திலே, 'சிவம்' மாத்திரைப் போது[38] இருக்கும். சகஜிராசீசுபரர், சதாசிவப்பிரம்மம் அவர் வாசம் பண்ணின[39] கோயில், மந்திர பிண்டமான திருக் கோயில். அது, தகனமான தோஷம்[40] பதினாறு வருடம் வருத்துமே! இராசாவுக்கு[41] ஆகாதே, இராச்சியத்துக்கு[42]

26 மகாதோஷம் = பெரிய பாவம்.
27. இராசவமிசம் = அரசகுலம்
28. பரம்பரை = வழிவழியாக வரும் உரிமை
29 நடக்கிய = நடந்து வருகின்ற
30. சம்பிரதாயம் = தொன்றுதொட்ட வழக்கம்.
31. வேணும் = (பேச்சுவழக்குச் சொல்) வேண்டும்.
32. நூதனமாய் = புதுமையாய்
33. பூர்வீகம் = பூர்விகம் = முற்காலம், மூலவரலாறு.
34. கருமம் = செயல், நீத்தார் இறுதிச்சடங்கு.
35. மகிமை = பெருமை, சிறப்பு.
36. தேசாதிபதி = நாடாள்வோன்
37. மண்டலாதிபதி = நாடாள்வோன்.
38. போது = பொழுது
39. பண்ணின = (பேச்சுவழக்குச் சொல்) செய்த.
40. தோஷம் = குற்றம்
41. இராசா = அரசன்.
42. இராச்சியம் = அரசாளும் நாடு.

ஆகாதே. மழை வெள்ளத்துக்கு ஆகாதே. பயிர் பச்சைகளுக்கு ஆகாதே. சகலமான சீவசந்துக்களுக்கும்[43] ஆகாதே. உள் மூலம், பிறமூலம் கூடிவிட்டதே. இது இராச்சியத்தை தகித்து[44] விடுமே. நாலு[45] முகத்திலேயும், இராச்சிய காரியம் நடக்குமே. வெகுசனங்களுக்கும்[46] வெகு ராச்சியங்களுக்கும் உபாதியாய்[47] வந்ததே. விலை குறைந்து போகுமே. தானியம் கொள்ளக் கிடையாதே. வானஞ் சுருங்கத் தானஞ் சுருங்கி உலகம் பேயாய்ப் போகுமே. இப்படி வரலாமா?" என்று குருசாமி யவர்கள் அவல்தாரைக் கடிந்து கொண்டார்கள்.

"தெய்வீகம்[48] இப்படி இருந்தது. விதி பலவந்தமாக வந்து விளையாடியது. நம்மை மிஞ்சின[49] காரியத்துக்கு, சுவாமி யவர்கள் தயவுபண்ணி[50] ரட்சிக்க[51] வேண்டும். இதற்கு உப சாந்தம்[52] எப்படிச் செய்ய வேண்டுமோ அப்படிச் செய்து தயவு செய்து இரட்சிக்க வேண்டும்" என்று சீத்தாப்பராவ் அவல்தார், மிகவும் உபசாரம்[53] எல்லாம் செய்து விண்ணப்பம் செய்தார்.

அப்பொழுது, குருசாமியவர்கள் இரக்கப்பட்டு "நல்லது! நாம் சீரங்க[54]வாசம் போகிறோம். நம்முடைய சீடன் பூரணப் பிரம்மானந்த யோகியை, இங்கேயே வைத்துவிட்டுப் போகிறோம். அவரை உம்முடைய பக்கத்தில் வைத்துக் கொண்டு (தியான சமாதி ஒன்று சமைத்து, அந்த) தியான சமாதிக்கு விக்கினம்[55] வாராமல் நடத்திக் கொண்டு வாரும்.

43 சீவசந்து = சீவசெந்து = உயிருள்ளவை.
44. தகித்து = எரித்து.
45. நாலு = நான்கு
46. வெகுசனங்கள் = (பேச்சுவழக்குச் சொல்) பொதுமக்கள்.
47. உபாதி = இடையூறு
48. தெய்வீகம் = தெய்விகம் = தெய்வச்செயல்
49. மிஞ்சின = (பேச்சுவழக்குச் சொல்)
50 பண்ணி = (பேச்சுவழக்குச் சொல்) செய்து.
51 ரட்சிக்க = காத்தல்.
52 உபசாந்தம் = மனஅமைதி
53. உபசாரம் = மரியாதை.
54. சீரங்கம் = திருவரங்கம்
55. விக்கினம் = இடையூறு, தடை.

பரிகாரம்[56] ஆகும் பதினாறு வருடமும் இப்படியே பட்டணத்தில் இருந்து, உபசாந்தியாய் தியான சமாதி செய்து கொண்டு இருக்கச் சொல்லி, (சீடனாகிய) அடியேனுக்கு உத்தாரம் செய்து அவல்தார்வசம்[57] விடுத்தார்கள்

அப்பொழுது, சீத்தாப்பாராவ் அவல்தார் மிகவும் மகிழ்ச்சியடைந்து குருசாமியவர்களுக்கு சீரங்கவாசத்துக்கு ஏற்றவாறு அனுப்பி வைத்து விட்டு அடியேனைத் (சீடனைத்) தஞ்சாவூரிலே வைத்துக் கொண்டார்.

அன்று முதல் அடியேன் தஞ்சாவூரிலே வாசம் பண்ணி,[58] தியான சமாதி செய்து, குருத்தியானம் செய்து கொண்டு இருக்கும்போது, சீத்தாப்பாராவ் அவல்தாரும் சிவனோடு ஐக்கியமாகிவிட்டார்.[59]

அவரது மகன் வைத்தியோகி அவல்தார் தொடர்ந்து இதனைப் பராமரித்துக்[60] கொண்டு வந்தார். இந்தப்படிக்கு[61] வைத்தியோகி அவல்தார் பாரிசமாக[62] அவர் வீட்டிலேதானே குரு வாக்கியத்தின்படியே,[63] "உள்மூலம், பிறமூலம் கூடின தோஷம் உபசாந்தமாக வேண்டும்; இராசாவினுடைய இராச்சியம் மிகவும் சுகமாய் இருக்க வேண்டும். மழை, வெள்ளம் காலாகாலத்தில்[64] உண்டாகத் தயவு செய்ய வேண்டும்; உலகத்திலுள்ள மக்களைக் காக்க வேண்டும்; இராசீகம், தெய்வீகம் கூடி உக்கிரம்[65] பண்ணாமல் உபசாந்தமாய் நடத்திக் கொள்ள வேண்டும்; தருமம் தழைக்க வேண்டும் சத்தியமே செயமாக[66] வேண்டும்; சரபோசி ராசீசு

56. பரிகாரம் = கழுவாய், கேடு நீங்கக் கூறும் வாழ்த்து.
57. வசம் = (பேச்சுவழக்குச் சொல்) பொறுப்பில்
58 பண்ணி = (பேச்சுவழக்குச் சொல்) வாழ்ந்து வருதல்
59 ஐக்கியமாகுதல் = ஒன்றுபடுதல். இறைவன் திருவடி நீழலடைந்ததைச் 'சிவனோடு ஐக்கியமாகி விட்டார்' என்று கூறப்பட்டுள்ளது.
60. பராமரித்தல் = காத்தல், ஆதரித்தல்
61. இந்தப்படிக்கு = (பேச்சுவழக்குச் சொல்) இவ்வாறு.
62 பாரிசம் = பொறுப்பாக.
63 வாக்கியத்தின்படியே = சொன்னதற்கேற்ப.
64. காலாகாலத்தில் = உரிய சமயத்தில்.
65. உக்கிரம் = சினம், கொடுமை.
66 செயமாக = வெற்றியாக.

பரரும்,[67] துக்கோசி ராசீசுபரரும்[68] சுகமாக இருந்து மனது சந்தோஷமாக[69] இராச்சியம் செய்ய வேண்டும்" என்று தியானம் செய்து கொண்டு தஞ்சாவூர் பட்டணத்திலே இருந்து சுடலை சாந்தி[70] செய்து கொண்டு இருக்குங்காலத்தில் தியான சமாதிக்கு விக்கினம் வந்து சமாதி நின்று போய், அடியேனையும் பட்டணம் விட்டு வெளியே கொண்டு போய் பத்திரம் செய்து விட்டார்கள்.

வைத்தியப்பா அவர்களுக்குத் தெரியப்படுத்தி, அவர் இவ்விக்கினத்தைத் தீர்த்து, அடியேனைத் தஞ்சாவூருக்கு அழைக்க வெகுநாட்களாகிவிட்டன. இதனால் மகாதோஷம் மேலிட்டு, துக்கோஜி ராசீசுபரர், மகாதேவப்பட்டணம் நிர்ணயம் பண்ணி[71] இப்பதிபிட்டு மகாதேவப்பட்டணத்துக்கு எழுந்தருளினார்கள்.[72] வைத்தியப்பா அடியேனை அழைத்ததின் பேரில் அடியேன் தஞ்சாவூருக்கு வந்து வைத்தி யோகி அவல்தாரைக் கண்டு, "தியான சமாதிக்கு விக்கினம் வந்ததே துரையவர்கள் பதி விட்டு வெளியே மகாதேவப் பட்டணத்துக்கு போயிருக்கிறார்களே! மேற்கொண்டு என்ன நடக்குமோ தெய்வீகம்" என்று கவலைப்பட்டு மல்லாரிஜி யப்பன் மகாதேவப்பட்டணத்துக்கு வருகிறபோது அடியேனுங் கூட வந்து, தனியாக இருவரும் ஏகமாய்,[73] ஒரே யிடத்திலிருந்து ராசரீகம்[74] செய்ய வேண்டும் என்று மகா தேவப் பட்டணத்திலேயிருந்து, குருத்தியானம் செய்து கொண்டு இருக்கையில், சரபோசி ராசீசுபரர் சரீர சவுக்கிய

67. சரபோசி ராசீசுபரர் = முதலாம் சரபோசி (1712-1728).

68 துக்கோசி ராசீசுபரர் = முதலாம் துளசா என்ற துக்கோசி (1728-1736).

69. சந்தோஷமாக = மகிழ்ச்சியாக.

70. சுடலை சாந்தி = பிணம் எரிக்கும் மயான அமைதி.

71. நிர்ணயம் பண்ணி = முடிவு செய்து.

72. "சரபோஜிக்கும் துக்கோஜிக்கும் வீட்டுச் சண்டையேற்பட்டது. ஆகவே துக்கோஜி சிறிது ஆட்சிப் பகுதியைப் பெற்றுக் கொண்டு மகாதேவி பட்டணத்தில் தன் குடும்பத்துடன் தங்கியிருந்தார்"
- கே எம். வேங்கடராமையா, தஞ்சை மராட்டிய மன்னர் வரலாறு, ப. 173

73 ஏகமாய் = ஒன்றாய்.

74 ராசரீகம் = அரசாட்சி.

மில்லாமல்[75] இருந்தார்கள்.

ஆனபடியினாலே அடியேன் தஞ்சாவூருக்குப் போய், இருந்து, சரபோசி ராசீசுபரர் சுகமாய் இருந்து இராச்சிய பாரம்[76] பண்ணவேணுமென்று[77] தியானம் செய்து கொண்டு இருந்தேன்

இதிலே பவரினு சங்கரத்தேவன்[78] 'ஆபத்சகாயா'[79] என்று வந்தடைந்தான் அடைந்தாரைக் காக்கவேணு[80]மென்று துக்கோசி ராசீசுபரர், பாளையம் புறப்பட்டார்கள். மகாராச காரியம் வந்து சேர்ந்தது. இது காரியம் 'சுருக்கிலே' பவானு சங்கரத்தேவனுக்குப் பட்டங்கட்டி, துக்கோசி ராசீசுபரர், சுகமாய்ப் பட்டணம் வந்து சேரவேணுமென்று[81] தியான சமாதி பண்ணிக்கொண்டு[82] இருக்கையிலே[83] கங்கையான காவேரியம்மன் தயவு தப்பி உத்தர காவேரிக் கொள்ளிடத்தி லே பார்வையானபடியினாலே அடியேன் உபயகாவேரி மத்தியிலே, கோயிலடியிலே போயிருந்து, காவேரி யம்மாளைப் பிரார்த்தித்துத்[84] தியானம் பண்ணிக்[85] கொண்டிருக்கையில் 'அணை அடைக்க வேண்டாம்' என்று மதுரையார்[86] தடை செய்தார்கள்.

அதனால், திருச்சிராப்பள்ளிக்குப் போய்ச் சமூக மீனாட்சி நாயக்கரைக்[87] கண்டு, விசயரெங்கச் சொக்கநாத

75 சரீர சவுக்கியமில்லாமல் = உடல்நலக்குறைவு இல்லாமல்
76 இராச்சியபாரம் = அரசாளும் பொறுப்பு
77. பண்ணவேணுமென்று = (பேச்சுவழக்குச் சொல்) செய்யவேண்டு மென்று
78 பவரினு சங்கரத்தேவன் = பவானி சங்கரத்தேவன். இவன் மாவீரர் கிழவன் சேதுபதி (1674-1710)யின் காமக்கிழத்தி மகனாவான்
79 ஆபத்சகாயா = துன்பத்தில் உதவுவோன்
80. காக்கவேணும் = காக்க வேண்டும்
81. வேணுமென்று = வேண்டுமென்று.
82 பண்ணிக்கொண்டு = செய்து கொண்டு
83 இருக்கையிலே = இருந்து வரும் வேளையிலே
84 பிரார்த்தித்து = வேண்டிக்கொண்டு.
85 தியானம் பண்ணி = சிந்தனை செய்து
86. மதுரையார் = மதுரை நாயக்க மன்னர்
87. மீனாட்சி நாயக்கர் = விசயரெங்கச் சொக்கநாத நாயக்கரின் மனைவி

நாயக்கருக்குப்[88] பயபக்தி[89] வரத்தக்கதாய்த் தாகீதை[90] செய்து, அணை அடைத்துக் காவேரியம்மன் சோழதேசப் பிரவேசமாக வேண்டும் என்று தியானம் பண்ணிக் கொண்டு[91] இருந்து அணை அடைபட்ட பிறகு தஞ்சாவூருக்கு வரப்பயணமாய்த் திருக்காட்டுப்பள்ளிக்கு வந்தேன்,

இதிலே, இரண்டாவது அணை உடைத்துக் கொண்டு போகுதென்று,[92] ஆடம் வெங்கிபித்திரிய நாயக்கன் தம்பி கோணேட்டி நாயக்கன் வந்து சொன்னான். ஆனபடியினாலே அணைக்கு ஈசானிய[93]மான ஆலந்துறையிலே போயிருந்து தியானம் செய்து கொண்டு காவேரியம்மாளைப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தேன்.

அணை பத்திரமான பிறகு, தஞ்சாவூருக்கு வந்து வைத்தியப்பாவைக் கண்டு பதினாறாம் வருடமாகிறது. தோஷம் கழிவானபடியினாலே இதுக்கு உபசாந்தி தூல மாய்ச்[94] செய்ய வேண்டும். இது காரியம் அரண்மனையிலே சொல்லிச் செய்யும் என்று யாதி[95] எழுதிக் கொடுத்து செய்தியும் சொல்லி நடத்தின விடத்திலே, யாதி அரண்மனை யிலே செல்லாதே போயிற்று. தனி இருவரும் பட்டணம்[96] விட்டு மகாதேவப் பட்டிணத்திற்கு எழுந்தருளினார்கள்.

'இப்படி இருவரும் பட்டணம் விட்டு வெளியிலே புறப்படலாமா' என்று வைத்தியப்பாவுடனே சொல்லிக் கொண்டு, மகாதேவப் பட்டணத்துக்கு வந்து, 'தனியிருவரும் சுகமாய்த் தஞ்சாவூர்ப் பட்டணத்துக்கு வந்து சேர்ந்து, ராச்சியம் செய்யவேணும்'[97] என்று தியானம் செய்து

---

88 விசயரெங்கச் சொக்கநாத நாயக்கர் = ஆட்சி செய்த காலம் 1706-1732 ஆகும்
89 பயபக்தி = ஒடுக்க வணக்கம்
90 தாகீது = தாக்கீது = ஆணை.
91 பண்ணிக்கொண்டு = செய்து கொண்டு
92 போகுதென்று = போகிறதென்று
93 ஈசானியம் = வடகீழ்த்திசை, சனிமூலை
94. தூலமாய் = பொதுமையாய்
95 யாதி = காரணம், ஆழ்ந்த கருத்து
96 பட்டணம் = தஞ்சாவூர்
97 செய்யவேணும் = செய்ய வேண்டும்

கொண்டு இருக்கையில், "மழை வெள்ளம் பக்குவத்துக்கு வராமல், தப்புவித்துக் கொண்டு உலகமெல்லாம் தகித்துக் கொண்டு வருகிறது. ஆனபடியினாலே[98] மிஞ்சின[99] காரிய மாய் இருக்கிறது இப்படிச் செய்வார்களா? உக்கிரம், சாந்தம்[100] பெற வேண்டும். மண்டலத்தில் வருச வருசமாய்[101] வருசிக்க[102] வேண்டும். மழையும் வெள்ளமும் கூடவர வேண்டும் என்று தியானம் செய்து கொண்டு உள்மூலம், பிற மூலத்துக்கு பூரணாகுதி[103] கொடுக்க வேண்டும் என்று அரண்மனைக்கு யாதி எழுதி, சுப்பராவ் பாரிசமாய்க் கொடுத்தேன். அரண்மனைக்கு ஏறவில்லை. இரண்டாவது மாதவராவ் பாரிசமாய் எழுதி அனுப்பினேன். அதுவும் நடவாமல் போய் விட்டது.

மூன்றாவது வீரோசி மூலமாக யாதி எழுதி அனுப்பியும் நடக்கவில்லை. நாலாவது மக்கரசி நாயக்கர் பாரிசமாய் எழுதிக் கொடுத்தேன். அந்த யாதியும் நடக்கவில்லை. தீவட்டி லிங்கோசி நாயக்கன் மூலமாக ஒன்று அனுப்பினேன். அந்த யாதியும் அரண்மனையாருக்குத் தெரியவில்லை. அடியேனுக் கும் குரு உத்தாரம்[104] பதினாறு வருடத்துக்கு மேல் நான்கு மாதம் நிறைந்து ஐந்தாவது மாதமும் நடக்கிறது.[105]

ஆனதால், அடியேன் தானே வெளியே புறப்பட்டு யாதியுங் குடுத்து அனுப்பி அரமனையிலே உத்தாரம் வாங்கிக் கொண்டு தபசுலே[106] யிருக்கவேணு[107]மென்று வந்தேன்.

சுவாமியவர்கள் தயவுபண்ணி உத்தாரங் கொடுத்துச் சந்தோஷகரமாய் நடப்பிச்சுக்[108] கொள்ளக் கட்டளையிடவும்.

98. ஆனபடியினாலே = எனவே, ஆகவே.
99 மிஞ்சின = மிகுதியாதல்.
100 சாந்தம் = அமைதி
101 வருச வருசமாய் = ஆண்டுதோறும்
102 வருசிக்க = மழை பொழிதல்.
103. பூரணாகுதி = வேள்வி முடிவுச் சடங்கு
104. உத்தாரம் = மறுமொழி, அனுமதி.
105 1728 ஆண்டு
106 தபசு = தவம், பற்று நீங்கிய வழிபாடு
107 இருக்கவேணும் = இருக்க வேண்டும்.
108. நடப்பிச்சு = நடந்து

# உலா இலக்கியம்

## ஞான உலா

# ஞான உலா

வேதநாயகர் கிறித்துவின் புகழையும் கொள்கைகளையும் போற்றிப் பாடுமுகத்தான் 1820இல் இவ்வுலாவைப் பாடியுள்ளார். இதனை,

"என்றனுக்கு
நெல்லைப்பதிவேத நாயகனென்றே நிருபித்
தல்லலனைத்தும கற்றிவிட்டாய் கல்விநூல்
பாடவரந்தந்தாய் பல்லூ ழிகாலமுனை
நாடவரந்தந்தாய் நலந்தந்தாய் நீடிவளர்
தஞ்சைச்சுவார்ச்சையர் தன்சீடனென்றெவர்க்கு
மிஞ்சக்கதித்தெனக்கு மேன்மைசெய்தாய் தஞ்சையினி
<u>ஆயிரத்தெண்ணூற்றிருப தாண்டிலிந்தஞானவுலாப்</u>
பாயிரத்திற்பாடப் பலன்தந்தாய் நாயகமே" (660-664)

என்று இந்நூலின் 'நன்றியறிதலி'ல் அவர் குறிப்பிட்டுள்ளார். ஆயின் இந்நூல் 1885இல்தான் அச்சு வடிவம் பெற்றது.[1] இந்த ஞானவுலாப் பாடி இரவும் பகலும் இயேசுபிரானை ஏத்து வதற்கு வரம் தரவேண்டுமென்று (651) முதலில் வேண்டு கின்றார். பாட்டியல் நூலில் உலாவிற்குக் கூறப்பெற்ற கலி வெண்பாட்டிலேயே வேதநாயகர் பாடியுள்ளார். ஆயின் இந் நூலைப் பதிப்பித்தவர்கள் தனிச்சொல் இன்றிக் கலிவெண் பாட்டுப் போல் இல்லாமல் பதிப்பித்துள்ளனர். 27 உள் தலைப்புகள் கொடுக்கப் பெற்றுப் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

**நூலமைப்பு**

இந்நூல் 676 கண்ணிகளை உடையது. இதன் அமைப்பு வருமாறு :

---

1. The Religious Tract and Book Society, vepery, Madras.

| | | கண்ணிகள் |
|---|---|---|
| 1 | காப்பு | |
| 2 | கடவுள் வாழ்த்து | - 48 |
| 3 | வேதலட்சணம் | - 24 |
| 4 | தசாங்கம் | - 11 |
| 5 | கேசாதிபாதம் | - 25 |
| 6 | கிறிஸ்துவினாமதேயம் | - 51 |
| 7 | பிரஸ்தாபம் | - 4 |
| 8 | சதுர்ப்பாசம் | - 11 |
| 9 | அஃறிணைப்பாற் புகழ்ச்சி | - 65 |
| 10 | உயர்திணைப்பாற் புகழ்ச்சி | - 16 |
| 11 | பொதுத்திணைப்பாற் புகழ்ச்சி | - 21 |
| 12 | கிரித்தியசாரம் | - 16 |
| 13 | ஆயுதசாரம் | - 8 |
| 14 | மகத்துவம், முடுகு | - 18 |
| 15 | உவமான சங்கற்பம் | - 26 |
| 16 | திருச்சபையினாமதேயம் | - 37 |
| 17 | சிஷ்டி - திதி - சங்காரம் | - 45 |
| 18 | திருவிளையாட்டு | - 50 |
| 19 | கிருபைப் பிரவாகம் | - 71 |
| 20 | கிறிஸ்துவினுத்ரவாதம் | - 10 |
| 21 | அநித்தியம் | - 19 |
| 22 | சுதந்தர ஞாயம் | - 31 |
| 23 | விண்ணப்பம் | - 36 |
| 24 | ஞானவுலாவைப்பற்றிய மன்றாட்டு | - 10 |
| 25 | பொது மன்றாட்டு | - 3 |
| 26 | நன்றியறிதல் | - 10 |
| 27 | மகுடம் முடுகு | - 12 |

காப்புச் செய்யுள் நீங்கலாக இருப்த்தாறு உட்பிரிவு

களைக் கொண்ட இந்நூலில் முன்னெழுநிலை மட்டுமே உள்ளது பேதை முதல் பேரிளம்பெண் ஈறாக உள்ள பின்னெழுநிலைப் பகுதி முற்றிலும் இடம்பெறவில்லை மேலும் இயேசு பெருமான் உலா வருவதாகவோ, உலா வரும் தலைவன் உலா வருவதற்கென மேற்கொள்ளும் செயல்களோ இவ்வுலாவில் காணப்படவில்லை மேலும் சிற்றின்ப உணர்வி லிருந்து விடுபட்டு, மெய்யுணர்வுக் கருத்துக்களைத் தாங்கி நிற்கும் இந்நூலில் எழுபருவப் பெண்கள் பற்றிய செய்திகள் இடம்பெறவில்லை பாட்டுடைத் தலைவனான இயேசு பெருமானின் புகழை உள்ளீடாக வைத்து வேதநாயகர் பாடி யுள்ளார் எனவே இந்நூலைப் புறப்பொருள் துறையைச் சார்ந்த பாடாண்திணையில் அடக்கிக் கூறுவது பொருத்த முடையதாகும்

உலா இலக்கியங்களுள் அளவில் பெரிய நூலாகத் திகழும் இந்நூல் ‘பூதலம்’ (உலகம்) எனும் மங்கலச் சொல்லால் தொடங்கப்பெற்று, ஈற்றடி சிந்தடியாய் அமைந்து ‘மலர்’ வாய்பாட்டிறுதியைப் பெற்றுள்ளது

**நூல் நுதலிய பொருள்**

இயேசு பெருமானின் இயல்பை இயல்மொழி வாழ்த்தாக முதலில் ஆசிரியர் கூறுகின்றார். இயேசுபிரான் தம் வாழ்க்கையில் நிகழ்த்திய பல அற்புதச் செயல்கள், இயேசுவின் தன்மைகள், தசாங்கம், கேசாதிபாதம், திருப் பெயர்கள், முத்தொழில், திருச்சபையின் பெயர்கள், இறைவனது செயல்கள், அடியவர்களுக்கு அருள் செய்த திறம், தம்மை நம்பி நாடி வந்தவர்களின் இடுக்கண்களைக் களைந்தமை, நிலையாமை முதலானவற்றை விரித்துரைக் கின்றார். கிறித்தவ சமயத்தின் கொள்கைகளையும், பைபிளில் காணப்பெறும் பல்வேறு நிகழ்ச்சிகளையும் இப்பனுவலில் ஆசிரியர் விளக்கிச் செல்கின்றார்

வேதநாயகர் இந்நூலில் தன்னையே பருவமகளிராக உருவகித்துக் கொண்டு ஒவ்வொரு பருவநிலைக்கேற்பப் புதிய உத்தி முறையில் பாடுகின்றார். பேதை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் ஆகிய பருவ மகளிரின்

இயல்புகளுக்கேற்ப இயேசு பெருமானின் புகழை எடுத்தியம்பு கின்றார்.

**பாட்டுடைத்தலைவன்**

இந்நூலின் பாட்டுடைத்தலைவர் இயேசு பெருமானின் பெருமைகள் நூல் முழுவதும் பரந்துபட்டுக் காணப்படு கின்றன 'இயேசு' என்பதற்குக் காப்பவர் என்று பொருள். இதனை,

"யேசுவென்ற நாமத்துக்கர்த்தமே தென்றறிய
வாசையெனக் குண்டறிவிப்பா யேசுவென்றா
லிரட்சக ரென்றர்த்தமே" (587–588)

எனவரும் கண்ணிகளில் வேதநாயகர் குறிப்பிடுகின்றார்.

**வரலாறு**

யூதாவின் கோத்திரத்தில் பிறந்த இயேசு பெருமானின் வரலாற்றைச் சுருங்கிய அளவில் 16 கண்ணிகளில் வேதநாயகர் கூறியமை வருமாறு :-

"இவ்வுலகில் தாவீது மன்னனின் குலத்தோன்றல் கன்னி மரியாளின் வயிற்றில் கருவாகி, பெத்லகேம் ஊரில் வந்துதித்தவன். இவர் பிறந்தபொழுது பலரும் போற்றித் துதித்துப் பாடினர். வானோர் பர மண்டலத்திலிருந்து ஆடினர். சாஸ்திரிகள் தேடி வந்து காணிக்கை தந்து இறைஞ்சி நின்றனர். சீமியோன் எனும் பெரியவர் வாழ்த்தினார். வளர்ந்து ஓவிய ஞானத்தின் நிறைவுற்றுத் தேவகிருபை தங்கி நிற்க, பன்னிரண்டாம் வயதில் போதகர் நடுவில் பிதாவின் வீட்டைத் தமக்குத் தெரிந்து கொண்டு, முப்பதாம் ஆண்டில் நற்கருத்தாய் யோவானிடம் 'ஞானதீட்சை' (திருமுழுக்கு) பெற்று, பரிசுத்த ஆவியினால் நிறையப்பட்டவர் காடுகளில் சென்று பல சோதனைகளை வென்று, சீடர்களைத் தேர்ந் தெடுத்து, உலகிற்கு உபதேசம் செய்து, பாவிகளுக் காகப் பாடுபட்டுச் சிலுவையில் அறையப்பட்டு

ஒடுங்கி உயிரைப் போக்கினார். மூன்று நாட்கள் கழித்து ஓவியமாக உயிர்த்தெழுந்தார். இப்பூவுலகில் நாற்பது நாட்கள் இருந்து நல்லவர்களுக்குக் காட்சி தந்தார். புகழ்ந்து பேசி மறை சாற்றி வானுலகிற்குச் சென்று வீற்றிருந்தார். ஞானத்தரூபியையும் உருவ மில்லாததாய் அருள் செய்தார்; ஊழி முடிவில் வந்து நல்லவர்களுக்கு மோட்சம் நல்கி, மனந்திரும்பாத பாவிகளுக்கு நரகமும் தந்தார்" (408-434).

கற்புடைய தாய்க்குத் தலைமகனாகவும், தந்தையில்லாத பாலகனாகவும், அன்னைமரி கர்ப்பத்தில் உதித்த மைந்த னாகவும் (286), மலையருகினில் பிறந்த மன்னனாகவும் (281) இயேசு திகழ்கின்றார் (255-256).

"இவ்வுலகில் ஏழையாய் மனிதப்பிறவி எடுத்து முப்பத்து மூன்று ஆண்டுகள் மனிதர்களுடன் வாழ்ந்தவன். உலகம் முழுவதும் சுற்றி மறைகளைச் சொல்லி வந்தவன். நேசமற்ற வஞ்சகர்களால் பெரிய அளவில் வேதனை அடைந்தவன். வஞ்சகர்களால் கள்ளனைப் போல் கல்தூணில் கட்டி அடிக்கப்பட்டவன். தலையில் முள்ளினாலான முடி சூட்டப்பட்டவன். மூர்க்கமுடன் தள்ளிப் 'பரிகாசராசன்' எனச் சொல்லி நகைக்கப்பட்டவன். இரண்டு கொடிய பாதகர் காணுமாறு முகத்தில் அறையப்பட்டும் காறி உமிழ்ந்தும் பல கொடுமைகளைப் பாவிகளுக்காகச் செய்தவன்" (546-551).

முன்பகுதியில் சுருக்கமாகக் கூறிய வேதநாயகர் நூலின் இறுதிப் பகுதியில் இயேசுவின் வரலாற்றின் இறுதிக்காலத்தில் நிகழ்ந்த சில துயர நிகழ்ச்சிகளையும் கூறுகின்றார்.

**திருப்பெயர்கள்**

விவிலியத்தில் காணப்பட்டவாறு இயேசுவின் திருப் பெயர்கள் இவ்வுலாவில் பலவிடங்களில் வேதநாயகரால் பாடப்பட்டுள்ளன. அவற்றுள் ஒருசில வருமாறு :- ஆபிரகாம் வித்து நபி, ஞாயாதிபதி, சேனாதிபதி, அந்தமிலாப்பிதா, இசரவேலின் பரிசுத்த ரிசறாத கிறிஸ்து, தேவன், தூதன்,

தாவீதின் குமாரன், பராபரன், பரமன், மனுடகுமாரன், தனவான், மீட்பன், தலைவன், தேவாதிதேவன், கர்த்தன், இராசாதிராசன், போதகன், நல்லாயன், ஆண்டவன், இயேசு (108-155). வேதநாயகர், சீயோனின் நாயகன், யூதர்களின் தலைவன், சீயோனின் பாவை மணாளன், வேதமறையோன், மானிடத்தில் தோன்றிய அவதார புருடன்.

### இயல்புகள்

இயேசுபெருமானின் இயல்புகளை இயல்மொழி வாழ்த்தாக வேதநாயகர் பின்வருமாறு கூறுகின்றார். உலகம் போற்ற மெய்யான வேதத்தை விரித்துரைத்த வித்தகன், நீதியுடையவன், கொடையாளன், சச்சிதானந்தன், கருணையே வடிவானவன், பரமேசுரன் (27-36).

### தன்மைகள்

ஒப்பொன்றில்லாத உயர்ந்த மகிமை உடையவன், தப்பொன்றில்லாத சருவேசன், சடமில்லான், தாய் தந்தை தாரம் சுற்றம் இடமிலானோரிடத்தில்லான், எங்குமிருப்பான், இருதயத்துள்ளும் தரிப்பான், எவ்வுயிர்க்கும் தாயாய் இருப்பான், எளியவர்களுக்கு இரங்கும் தன்மையன், இன்ன வடிவினை உடையவன் என்று கூற இயலாதவன், சத்தியவான், ஞானப்பிரகாசன் என்று புகழத்தக்க பெருமை உடையவன். வானில் தவழும் சந்திரனோ, சூரியனோ, விண்மீனோ, சுந்தரமோ, மலையோ, உலகமோ, கடலோ அல்லது பர வெளியோ, வாரணமோ, எல்லையில்லாத் தற்பரமோ, சித்துருவோ, சத்தியமோ, சற்குருவோ, சிற்பரமானந்தத் திருவடிவோ, எண்குணமுடையவனோ என்றிவ்வாறு ஐம் பெரும் பூதங்களின் சேர்க்கை பற்றியும், அவற்றின் இயல்பை யும் கூறி இயேசுபிரானின் தன்மைகளாகக் கூறுகின்றார் (50-72).

### தசாங்கம்

இயேசுபிரானைத் தசாங்கத்தின் உறுப்பாகக் கண்டு அதன் மேல் ஆசிரியர் ஏற்றிக் கூறுகின்றார். பரதேவனாகிய இயேசுபிரான் சீயோன் மலையை உடையவன்; பாவத்தைப்

போக்கப் பளிங்கைப் போல் பாய்ந்தோடும் பரம சீவாற்றினை உடையவன்; பொற்பரமக் கானான் நாட்டை உடையவன்; எருசலேம் நகரத்தை உடையவன்; ஞான செபமாலையினான்; அந்தரத்தில் தோன்றி அகில சங்காரம் புரியும் சுந்தர வெண் மேகம் எனும் குதிரையை உடையவன்; பரமண்டலத்துக் கேருபின் எனும் யானையை உடையவன்; உலகெங்கும் தொனிப்பதற்காக மணி முரசினை உடையவன்; கிறித்தவர்கள் கொஞ்சும் சிலுவை எனும் கொடியினை உடையவன்; விண்ணவரும் மன்னவரும் மற்றும் பலரும் போற்றத்தக்க செங்கோலினை உடையவன் (73-82).

**கேசாதிபாதம்**

இயேசுபிரானின் திருவுருவத்தைத் தலை முதல் பாதம் வரை 'கேசாதிபாத'மாக வருணிக்கின்றார். வெண்மையும் சிவப்பும் கலந்த மேனியை உடையவன்; மேகம் போன்றதும் கரிய காக்கை போன்றதுமான முடியை உடையவன்; மதி போன்ற முகத்தை உடையவன்; கண்கள் சூரியனின் ஒளி போன்று திகழ்கின்றன; இதழ்கள் முள் முருக்கம்பூப் போன்றும் பவளம் போன்றும் வில்லி மலர் போன்றும் உள்ளன; இரத்தினத்தைத் தங்கத்திலே இழைத்துச் செய்யப்பட்டது போன்று கைகள் திகழ்கின்றன; தங்கத்தைப் பதித்தது போன்ற பாதங்களை உடையவன்; எந்தக் குறையும் இல்லாதவன்; எவ்விதக் குற்றமும் இல்லாதவன்; அருள் நோக்குடையவன்; தாவீதின் பொன் திறவுகோலுடையவன்; கோவேந்தர் போற்றும் கொடியினை உடையவன்; வெள்ளங்கி தரித்து ஆணிப்பொன் கச்சைதனை மார்பில் அணிந்த தார் வேந்தனாக உத்தமர்கள் பலர் புடைசூழத் தொல்லுலகமும், வானமும் கடலும் நடுகின்ற வசனங்களைச் சொல்லும் வீரனாக, பார்த்தோர் அனைவரும் தலைவணங்கும் தோற்றமுடையவராக, அனைவரும் பணிந்து தொழும் ஆனந்தமுள்ள பத்தர் குழாம் பணிந்துவர உலாப் போகின்றார் (83-107).

**இறைபுகழ்**

நூலின் பல்வேறிடங்களில் இயேசுவின் புகழ் ஆசிரிய

*ரால் போற்றி உரைக்கப்படுகிறது. சத்திய விசுவாசன், அக்கினி யின் கண்ணன், விண்ணவர்களின் தலைவன், பாவிகளைக் காப்பவன், அரசர்களின் தலைவன், சத்தியத்தின் தலைவன் என்று போற்றியதோடு (163-170),*

**"ஞானமே ஞானநதியே நவநிதியே**
**வானமே வற்றாச் சமுத்திரமே மோனப்**
**பரமே மகத்துவ பரத்துவமே தேவ**
**திரமே யொருத்துவ திரித்துவமே யுரமே" (173–174)**

*என்று அஃறிணைப் பொருள்களால் ஆண்டவனை அழைக் கின்றார். பகல் இரவை விளக்கும் சூரியனாகவும், முத்தாகவும், இரத்தினமாகவும், அழியாத திரவியமாகவும், அலையாகவும், ஞானமலையாகவும், விண்மீனாகவும், ஞானபாத்திரமாகவும், மலையுச்சியில் எழும் தங்கமாகவும், நாவலர்க்கு நற்பொருளாக வும், ஞானிகளுக்கு நற்றவமாகவும், பாவிகளுக்காக மன்றாடி வேண்டும் மணிவாயாகவும், பரிசுத்த வடிவமாகவும், வெளிச்ச மாகவும், வெள்ளியாகவும், மின்னலாகவும், மெய்ஞ்ஞான விளக்கொளியாகவும், மாணிக்கமாகவும், இரத்தினமாகவும், மரகதமாகவும், நதியாகவும், வானாகவும், இனிய மதுரமாக வும், இரசமாகவும், தேனாகவும், திகட்டாத செங்கரும்பாகவும், பூவாகவும், வெம்பி அழும் ஏழையர்க்கு வீடாகவும், எளியோர்க்கு மெய்ப்பொருளாகவும், தோழருக்குத் தங்கித் தரிக்கின்ற இடமாகவும், எப்பொழுதும் உயிர் வாழ்க்கை யாகவும், தேவருக்கும் எட்டாத தெரிசனமாகவும், மக்க ளெல்லாம் தேடும் திரவியமாகவும் இயேசுபிரானைப் போற்று கின்றார் (173-237).*

*அடுத்து, உயர்திணைப் பொருள்களாக இறைவனை உருவகித்துப் போற்றுவதையும் (238-251) காணமுடிகிறது. அடியும் நடுவும் முடிவும் ஆனவன்; வெற்றிக் கொடிச் சின்னம் கொண்டருளும் தலைவன்; கடவுள்; சீயோனின் பாவை மணவாளன்; கர்த்தன்; ஞானக்கணவன்; மெய்த்தேவன்; முக்கால நிகழ்ச்சியை உணர்பவன்; செங்கோல் முடிவேந்தன்; அனைவருக்கும் ஆசாரியன்; மார்க்கமுள்ள ஆடுகளை மேய்க்க அலைந்தோடும் காணாத ஓராட்டைத் தேடி வரும்*

மாயன்; பெருமை பெற்ற சந்திரனைப் பாதமதில் சத்தியுடன் மிதித்த சுந்தரத் திருச்சபையின் தோன்றல்; ஆயன்; நேயன்; இவ்வுலகின் முதல் புதல்வன்; தேவபரிசேயன்; தலைவன்; வீரன்; வெற்றி விருந்தோன்; மானிடத்தில் அவதரித்த தீரன்; வற்றாத வேதமறையோன்; முற்றும் பரிசுத்தமுள்ள பராபரன்; எல்லாப் பொருள்களுக்கும் தலைவன்; நல்லோன்; கல்லாத மூடருக்கும் கல்வி தரும் தந்தை; பொல்லாதோர் பாவம் பொறுப்போன்; தந்தை; பிதா; எப்பொருட்கும் மாதா; சுற்றி எழும் பேய்க் கூட்டத்தின் சோதனைகளை வென்று அன்பர் களின் குற்றங்குறைகளைக் கொன்றவன்; தற்செயலாய் வந்த தயாபரன்.

இயேசு பெருமானைப் பொதுத்திணை மூலமாகவும் புகழ்ந்துரைப்பதைக் காணமுடிகிறது. குருவாகவும், கொற்றவ னாகவும், குழந்தையாகவும், அருவுருவாகவும், ஒப்பில்லாத பொருளாகவும், நோய்க்கு மருந்தாகவும், பேய்க்குணத்துக் கெட்டோர்க்கு இரங்கும் அருளுடையவராகவும், பாவலர்க்கு நேசனாகவும், அன்பாகவும், தக்க நேரத்தில் உண்மை நண்பனாகவும், உற்ற உறவாகவும், தாயாகவும், பராமரிக்கும் தந்தையாகவும், மெய்ஞ்ஞான மருத்துவனாகவும், சீயோன் மகளின் கணவனாகவும், தெய்வ உருவாகவும், அமுதமாகவும், தேனாகவும், பாகாகவும், சீமானாகவும், மக்களின் குறை தீர்க்கச் சிலுவையைச் சுமந்தருளும் தலைவனாகவும், செம்மரியின் குட்டியாகவும், பூ மானாகவும், மெய்ப்பொருளாகவும், அனைவர்க்கும் படி அளக்கும் அப்பனாகவும், நல்லோர்கள் கூட்டமாகவும், பாவலர் கொண்டாடும் பாட்டாகவும், ஆதி அந்தம் இல்லாதிருக்கும் இறையோனாகவும், கொற்றவனாக வும், முத்தாகவும், மணிமுடியாகவும், தனிமைக் காட்சியாகவும், எப்பொருட்கும் தலைவனாகவும், படைத்தலைவனாகவும், கடலில் வழிகாட்டும் தலைவனாகவும், மக்களின் பசி தீர்க்கும் தந்தையாகவும் இறைவனைக் காண்கின்றார் (254-274).

"ஒன்றுமில்லாத காலத்தில் உலகத்தைப் படைத்தவன்;
எப்பொழுதும் ஒரே சீராக இருப்பவன்; உத்தமன்;
ஆதாம் ஏவாளுக்கு அருள் செய்தவன்; இவ்வுலகைக்
காப்பதற்காக அவதரித்தவன்; குலதேவன்;

> ஆபிரகாமின் பலனானவன்; யாக்கோபின் ஆண்டவன்; ஏபிரேயர் சாதிக்குச் சூரியன் போன்றவன்; தீவிரமாய் முள் மரங்களில் நடுவிலிருந்து எழுந்து மோசேக்கு அருள் புரிந்த வள்ளல்"

என்று போற்றுகின்றார் *(275-290)*.

> "நன்றான ஆறுதலும் நீயே! அடைக்கலமும் ஆதரவும் தேறுதலும் நீயே! திடம் நீயே! பேறுதவும் அன்னையும் நீ! தந்தையும் நீ! அன்பான நேசனும் நீ! என்னைப் படைத்த இறைவனும் நீ! பொன்னுலகுக்கு ஏணியும் நீ! தோணியும் நீ! ஏவலும் நீ! காவலும் நீ! காணியும் நீ! என்னுடைய கல்வியும் நீ! வாணிபம் நீ! முத்தியும் நீ! சித்தியும் நீ! மோட்சமும் நீ! சூட்சமும் நீ! புத்தியும் நீ! மெய்ஞ்ஞான போதமும் நீ! பத்தியும் நீ! பாடும் படிப்பு நீ! பாக்கியம் நீ! வாக்கியம் நீ! தேடும் இருபொருளும் செல்வமும் நீ! வீடு நீ! கட்டும் அரண்மனையும் கல் பதித்த பொன் தூணும் மட்டுப் படாத கொலு மண்டபமும் திட்டவட்டமான படையும் செல்வங்களும் தானம் தருமம் சகலமும் நீ! ஞானமும் நீ! உறவு மக்கள் கூட்டமும் பெயரும் புகழும் வந்த கணமும் மகிமையும் நீ! எம் தேவனே! எல்லாம் நீயாய் இருக்கின்றாய்"

என்று இயேசுவைப் புகழ்ந்துரைக்கின்றார் வேதநாயகர் *(566-574)*.

### திருச்சபையின் பெயர்கள்

'உன் மனைவியின் பெருமை சற்றே யியம்பக்கேள்' *(343)* என்று வேதநாயகர் 'திருச்சபையினாமதேயம்' என்ற தலைப்பில் 37 கண்ணிகளில் திருச்சபையை இயேசுவின் மனைவியாக உருவகம் செய்து எடுத்துரைக்கின்றார் *(343-379)*. இப்பகுதியில் வேதநாயகர் கூறியதன் கருத்துக்கள் வருமாறு :

> " 'பொன்' எனும் நகரத்தில் அத்திமரம் கேதரழ காடாட்டுக்குட்டி, உத்தம குணம் வாய்ந்த பெண்; அழகிற் சிறந்தவள். எருசலேம் மக்களால் அருமையாக

உரிமையுடன் அழைக்கப்பட்ட இராசகுமாரத்தி. பராபரனின் பட்டணம், தேவாலயம், மனைவி, மணவாளி, சீயோனில் வாழ்பவர், மனோன்மணி; தாமரையிலிருந்து முளைத்தெழுந்த லில்லி மலர் விண்மீன் வான உலகமே மெய்ச்சீயோன்; பராபரனைப் பின்பற்றுகின்றவர்கள், பராபரனுக்குப் பயந்தோர், பராபரனால் மீட்கப்பட்டவர்கள், மிகவும் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள், மன்னர் அரண்மனையில் உள்ளவர்கள், நற்கிரியைகளுக்குரியவர்கள், கிறித்துவுடன் நடக்கின்றவர்கள், குற்றமற்றவர்கள், கர்த்தருடைய பங்கு தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், தெய்வ தூதர்கள், பரிசுத்த எருசலேமில் சேர்க்கப்பட்டவர்கள், தேவ ஆட்டுக்குட்டி திருமனைவி, தேவ அர்ச்சனை செய்வோர், எருசலேமில் சீயோனானப்பட்ட பெண்களுக்குக் கணவன்".

## முத்தொழில்

படைத்தல் காத்தல் அழித்தல் எனும் முத்தொழிலையும் வேதாகமத்தின்படிச் செம்மையாகச் செய்வதற்காக உலகத்தையும் ஐம்பூதங்களையும் உண்டாக்கினவன். இயேசுபிரான் ஆறு நாட்களில் உயிரினங்களைப் படைத்ததைக் கூறுகின்றார். முதல் நாள் வெளிச்சத்தையும், அண்டகோளத்தின் விரிவையும் உண்டாக்கினார்; இரண்டு மூன்று நான்காம் நாட்களில் கடல், புல் பூண்டு முதலானவற்றையும், சந்திரன் சூரியன் விண்மீன்களையும் வானவெளியில் உண்டாக்கினார்; ஐந்தாம் நாளில் நீரில் நீந்துகின்ற உயிரினங்களையும் வானில் பறந்து செல்கின்ற பறவைகளையும் படைத்தார்; ஆறாம் நாளில் விலங்குகள், காட்டு விலங்குகள், ஊர்வன முதலானவற்றைப் படைப்பித்தார். அதன்பின்னர் மண்ணினால் மனிதனை உண்டாக்கி அவன் மூக்கில் ஊதி அதற்கு உயிர் கொடுத்தார். அம்மனிதனின் விலா எலும்பில் ஒன்றை எடுத்து அதிலிருந்து பெண்ணைப் படைத்தார். அதன்பின்னர் இருவரும் மகிழ்ந்திருக்கும்பொருட்டு அழகிய ஏதன் வனத்தில் அவர்களை வாழவிட்டார். இவ்வனத்திலுள்ள மரக்கனியை உண்டு வாழ்ந்து வரும் நாளில் இறைவனால் விலக்கி வைத்து

எச்சரிக்கப்பட்ட மரத்திலுள்ள கனியைப் பாம்பு வடிவில் வந்த சாத்தானின் பேச்சைக் கேட்டு அக்கனியைப் பறித்து விருப்ப முடன் இருவரும் உண்டனர். அதனால் இருவரும் பல்வேறு துன்பத்திற்கு ஆளாகினர். மனம் தடுமாறி வினைவசத்தால் கொலை முதலியனவற்றைச் செய்தனர். அதன்பின்னர், துயரக் கடலில் வீழ்ந்தவர்களை முற்றும் அழிந்துவிடாமல் காத்தற் பொருட்டும் இவ்வுலகம் உய்யும் பொருட்டும் இயேசுபிரான் இவ்வுலகில் அவதாரமெடுத்தார் (380-407).

**அருள் வெள்ளம்**

இயேசுபிரான் பல்வேறு அருள் நிகழ்ச்சிகளைச் செய்துள்ளார். அவற்றுள் சிலவற்றை வேதநாயகர் தம் பனுவலில் 'கிருபைப் பிரவாகம்' என்ற தலைப்பில் கூறியுள்ளார்.

இவ்வுலகில் அவதரித்துப் பன்னிரண்டாண்டுகள் மக்களுக்கு அறிவுரைகள் கூறியபோதும் பாவிகள் கேட்க வில்லை. தண்ணீரால் இவ்வுலகம் அல்லல் பட்டபோது பரிவுடன் தீர்த்தருளினாய். சோதோமை அக்கினியால் சுட்டெரித்த பொழுது அவர்கள்மீது கருணை மழை பொழிந்தாய். அந்நாளில் எகிப்தில் அடிமையாக்கப்பட்டுச் சிறையிலிருந்த யூதர்களை விடுதலை பெறச் செய்தாய். சுற்றறிந்து மானம் இல்லாமல் ஆயிரம் பெண் வைத்து அகந்தை செய்தவனை ஞான சலமோன் எனவும் நாட்டினாய்.

ஏனமுறக் குற்றமற்றவர்களையும் கொன்று எருசலேமை முழுவதும் பாழாக்கிக் கர்த்தருடைய ஆலயத்தை விக்கிரகத் தால் நிரப்பி, சோலைகளை உண்டாக்கித் தொழுது கொண்டு, வானத்தின் சேனைகட்கெல்லாம் வல்லுருக்கள் செய்வித்து ஈனமுள்ள பசாசுகளை ஏற்றியே ஞானத்தின் ஆளான தீர்க்கன் எலியாவை மரவாளால் அறுத்து வதைப்படுத்தி மீண்டும் மக்களைத் தீ மிதிக்க வைத்த மனாசேயை மிக்கப்பிலோன் சிறைக்குள் விட்டாய். அந்நேரத்தில் செய்யப்படும் செபத்தால் பாவியை முந்தைய அரசு செய்கின்ற ஊரில் வரச் செய்தாய்!

அண்ணலே! ஏசையா புத்தகத்தில் ஈன்ற தாய் தன் குழந்தையை நேசித்து இரங்க நினையாளோ! நேசத்தை மறப்பாளோ!

ஆலில் ஒருத்தி சோரம் போய்க் கெட்டலைந்தாள். அந்தோ! பிறருக்கு மனைவியானால் உரிமையுடையவன் அவளைச் சேர்ப்பானோ? வேசித்தனம் செய்த நீ திரும்பி வந்தால் ஏற்போம் நாம் என்று சொல்லவில்லையோ?

தையலருக்கு ஆகாசத் தோட்டத்தை உண்டாக்கி அதிலிருந்து மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர். அப்பொழுது ஆகாத்திய நேழகாத்நேச்சார் தன் நெஞ்சிற்குள் கர்வமுறப் பாபிலோன் செங்கோலைப் பறித்தகற்றிச் சாபமாய் மாட்டைப் போல் புல்லருந்தி வான்பனியினால் நனைந்து காட்டில் திரிந்து கருத்தழிய மேட்டிமைக்குத் தக்கபடி நீதியைச் சரிக்கட்டி ஏழாண்டுகள் ஆட்சி செய்தனர். அதன் பின்னர் முடி சூட்டினர். அக்காலத்தில் பெரிய குற்றங்களைச் செய்த மகாநினிவேயம்பதிக்கு மிகப் பொறுமையாயிருந்தது ஏன்?

வானோனே! எத்தனை கோடி இரக்கம் உனக்குண்டு. எல்லாம் விரிவாக்கக் கூடாத வெள்ளமே! மத்தே தான் சுங்கத்தால் அன்றோ சுவிசேட வேதப்பிரசங்கத்தான் என்று நிலைநாட்டினாய். அங்கொருநாள் மாயப்பரிசேயன் மன்றாட்டுக்குப் பரியாதாயக்காரன் செபம் அர்ச்சித்தாய்.

நட்பு மிகுதியினால் பாவிகளுடன் உணவு உண்டாய். அதனால் உன்னை இகழ்ந்த கோயில் பரிசேயர் கூட்டத்தில் பெலன் உள்ளோர்க்கு, 'பிணியாளருக்கே, வலிமை வயித்தியன் றேவை யுலகத்தி, னீதியரைத் தேடாம னீதியற்ற சண்டாளப், பாதகரைத் தேடிப் பரிந்து வந்தோம் பாதகர்க்கு, நானே பிணையாளி நானே பரியாரி, நானே மத்தியஸ்தன்' (518-520) என்று நிலைநிறுத்தினாய். ஆனாலும் கானான்விஸ்திரீதான் உரக்க அழைக்கும்பொழுது ஏனோதானோ என்று இகழ்ந்தாற் போல் போனாலும் இல்லையென்று தள்ளிவிடாது ஏழை மகட்கு இரக்கங் கொண்டாய். துன்பத்தைப் போக்கி அவளைக் காத்தாய்.

### அற்புத நிகழ்வுகள்

இயேசு பெருமான் தம் வாழ்நாளில் பல அற்புதச் செயல்களை நிகழ்த்தியுள்ளார். வேதநாயகர் சிலவற்றை இப்

பனுவலில் ஏற்றவிடங்களில் இயேசுபிரானின் புகழைப் போற்றுமுகத்தான் எடுத்தாண்டுள்ளார். அவை வருமாறு :-

1) *குத்திரமிகும், சாமித்துரோகர்தமைச் சங்கரித்*
*தாக்கிரமித்த*
*சீமசோனென் றரண் சிம்மமே வீமவறச்*
*சிங்கங் கரடிகளைச் சேர்ந்து போர் செய்தழித்த*
*துங்கன் றவிதுக்கிரா சூரனே (284-285).*

2) *பொங்கு,*
*மரவின்றலை மிதித்த வற்புதனே (286).*

3) *எகிப்பதிற் சிறைப்பட்டிருந்த கிளையைச்*
*சுகிக்க வருள்புரிந்த சொல்லே மகத்துவ*
*வாரோன் றுளிர்த்தவருங் கோலே யன்பர்பெற்ற*
*பேறே மோசேயின் பிரம்பணியே வீறாய்நின்*
*றாலித்தறுநூ றடையலரைக்கொல் சமுகார்*
*காலிக்கோலுக் கோர்க்குக் குருவே*
*மேலொருபெண்*
*சீசராவினெரியிற் சேர்த்திட்ட வாணிக்குந்*
*தூசிபட வடித்த சுத்தியற்கும் பூசலிட்ட*
*மீதியானித்தார் மிரளுந் தீவட்டிக்குஞ்*
*சாதி முறிந்தோடவிட்ட தாரைக்கும்*
*வேதனைப்பட்*
*டஞ்சப் பெலிஸ்தர்களி லாயிரம்பேரைச் சிம்சோ*
*னெஞ்சடித்ததாடை யெலும்புக்குமிஞ்சு*
*மருங்கோலியாத்தரக்க னாண்மையடக்கிக்*
*கரும்பனைபோல் வீழ்த்த கவண்டிற்கு*
*முருண்டசிறு*
*கல்லுக்குஞ்சார காலத்திற் பாவிகளைக்*
*கொல்லப்போம் வாட்குங் கொடுங்கூரே (291-298).*

4) *காட்டில் தீது என்று ஒதுக்கி வைக்கப்பட்ட கனியை ஆதாம் ஏவாள் தின்றனர் (317-318).*

5) *சிம்சோன் காம மயக்கத்தினாலே கண் கெட்டான். சாமுவேல் தேவனை அழைத்த நோக்கம் அறியா திருந்தான் (331-332).*

6) *சக்கரவர்த்தி தாவீது வஞ்சனையால் கொலை*

செய்தான் (333).

7) சாலமோன் நாரியர்களுக்காகக் கர்த்தரை விட்டு ஈனவடிவை எடுத்தான் (334).

8) எலியா தீவிலிருந்து இறங்கி விழச்செய்து நூறு பேரைக் கொன்றான் (335).

9) எலிசா சபித்ததனால் ஆறு இளைஞர்கள் கரடியால் கடியுண்டு இறந்தனர் (336).

10) தானியேல் பெல்தேஷாத்சார் என்ற பொய்த் தேவர்க்கான பெயரால் அழைக்கப்பட்டான் (338).

11) ஊழிப்பெருவெள்ளம் வந்து இவ்வுலகை அழித்த பின்பு உலகை மீண்டும் படைத்தாய். ஆபிரகாமை அழைத்து அவனுடன் பேசி அவன்மீது அன்பு வைத்தவனை வாழ்த்தினாய் (427-428).

12) தேவியுடன் கல்தேயர் நாட்டைக் கடத்திக் கானான் தேசத் தொல்லையில் சேர்த்து நூறாண்டுகளாய்ச் செல்வன் இலது மலடாயிருந் தவனுக்கு வலது செய்து மண்நீளுக்கு ஒப்ப நில அயர்ந்த வானத்தின் விண்மீன்களாகத் தங்கி மேன்மைப்படுத்தி னாய் (430-433).

13) நின் வித்துக்குத் தானத்திற்கு ஏனியன், கெனிசியன், கிர்காசியன், பூசியன், கத்மோனியன், கானானியன், மோரியன் இவர்களோடு ஏனத்திரப்பாவியன் பெரிசியனேத்தியன் பதுமர்க்கு ஒப்பான நாட்டைத் தப்பாமல் தந்தாய் (434-435).

14) ஒருநாளில் அந்த ஒரு மகனைக் கட்டி இருமலை மோரியாவில் போய்ப் பரிவாகத் தகனப்பலியிடு எனச் சொன்னதற்கேற்ப அகமகிழ்ந்து பீடத்தை உண்டாக்கி அதன் மேல் கட்டைகளை அடுக்கி அதில் மகனைக் கிடத்திக் கொடிய வாள் எடுத்து ஓங்கிக் கழுத்தை அறுக்கப் போகும்பொழுது கூவி அதனைத் தடுத்த மகாதேவன் (437-441).

15) ஆபிரகாம் மகனுக்குப் பெண் தேடுவதற்குத் தீவிரமாக நாகோரின் சீர்மைக்குத் தாபமுடன் வந்த

எலியேசர் மனத்தில் நினைத்தபடித் தந்தாய் (441-442).

16) ஏசாவுக்கு அஞ்சி யாக்கோபு காறானூர்க்கு ஏசார் வாயோடி யிலாபானைக் கூசாது இருப தாண்டுகள் வலியற்றுப் பணிந்து மருவி இரு மகளைக் கட்டித் திரளான மந்தையுடனும் சொத்துக்களுடனும் மக்களுடனும் திரும்பி வந்ததும் உன் மகிமையாலன்றோ? (443-445).

17) சொந்தத் தமையர் வணிகர்க்கு விற்கத் தயங்கி அமையும் எகிப்பத்தடைந்த சமயத்தில் போத்திப் பார். பெண்டீர் புகன்ற பருவத்துக்கு இதமித்து ஏற்று நடவாதிருந்தால் சேர்த்த விலங்குண்டு. நொந்து மெலிந்த யோசேப்பை நலம் கொண்டு உயர்ந்து நடத்திப் பலங்கொண்டு திட்டமுடன் எகிப்து நாட்டின் மதி மந்திரியாய் வைத்தாய் (446-449).

18) பெட்டியில் வைத்து ஆற்றில் கிடந்த அழகிய குழந்தையைத் தூக்கி அதற்கு 'மோசே' எனப் பெயரிட்டு அரவணைத்துப் போற்றினாய்.

19) பார்வோன் மன்னனின் மகள் வளர்ந்துவரும் நாளில் உன்னி வந்த சோதனையின் ஓடவே அந்நேர அஞ்சிப் போகிறாள். மீதியான் தேசத்து ஆசாரியனின் மெய்ப்பாவையைத் திருமணம் செய்து இப்பால் ஆடுகளை மேய்த்து வருவதற்கு முட்செடியில் அற்புதமாய்க் காட்சி அளித்தாய். 30 இலட்சம் மக்களைக் காத்தாய்.

20) உந்தன் மக்களை ஒடுக்கி நொறுக்கிப் பந்தப்படுத்தி அப்பார்வோனைச் சிந்தையில் தள்ளி அமிழ்த்தி அழித்து வந்தவற்றை ஒழித்து மக்களை மீட்டாய்! கீதையோனுக்கு அருள் செய்து அழைத்துச் சென்று எஞ்சியவர்களை வென்று அழித்தாய்.

21) சாமுவேல் கதை கேட்டால் எனக்கு நன்மை சொல்ல இன்னுமொரு நாக்கு இல்லை.

22) புன்மைக் கழுதையைத் தேடிக் கவலை பிடித்து

வழியிலே நின்று மயங்கி எழுசவுலை முந்தின வேந்தாக்கி முழுவதும் இசரேலர் வந்தனை செய்ய மனம் வைத்தாய்.

23) அந்தரத்தில் ஆட்டுத் தலைவன் தாவீதை அர்ச்சித்து உயர்ந்த கானா நாட்டுத் தலைவனாக நிலைநாட்டினாய்.

24) பெரியோனே! காட்டிலே ஏர் இழுத்து நின்ற எலிசாவைத் தீர்க்கன் எனப் பெயரெடுக்கச் செய்தாய்.

25) ஐயா! பாரி எலியாவுக்கு உணவு ஈவதற்காகக் காக்கைக் கல்லவோ அழுத்தினாய்.

26) வலிதான பஞ்சத்தவனைப் பராமரிக்கச் சற்பாத் தூர்த் தஞ்சமற்ற கைமைக்கோ சாற்றினாய்! எஞ்சி வந்த சூரியரை ஓடத்துரத்திச் சமாரியா வூடுறைந்த பஞ்சத்தை ஒருநாளில் வீரியமாய்த் தீர்த்தி சறலேர்க்கு வெற்றி தந்து உலகமெங்கும் புகழ் கொண்டாய்.

27) வஞ்சகர்களால் சிங்கக் குகையில் இட்ட தானி யேற்றீர்க்கனையும் குறைவின்றிச் செய்து அருள் நல்கினாய்!

28) மங்கையர்க்குள் எஸ்தர்தனை உயர்த்துமே ஏகாந்தத் தை வரைந்த புத்தகத்தைக் கண்டாலும் போதுமே! கஸ்தி அனுபவித்த யோபுக்கு அனேக பலனை அனுபவிக்கத் தந்தாய்.

29) மீன் பிடிக்கின்ற தொழிலைச் செய்கின்ற பன்னிரண்டு பேரைச் சீடர்களாக்கினாய்.

30) கோரமுடன் தியானத் திருச்சபையைத் துன்பப் படுத்தினதோடு மிஸ்தேவானைக் கல்லெறிந்து தமஸ்குவுக்கு வந்து சவுலைப் பவுலாய்த் தாபித்தாய்.

31) வேதப் பொருளே! நூற்றுக்கதிபன் என வித்தார்க் கீர்த்தி மிகுத்திட்ட பத்திக்கொரு நேலியுவைக் குணப்படுத்தினாய்.

32)இரட்சகனைக் கூறாக்கினாய்.

33)திமிர் வாதரோகியின் இடரைப் போக்கினாய்.

34)குட்டரோகிகள் பலரைக் குணப்படுத்தினாய்; முடவர் செவிடர் மூங்கையரைத் தீர்த்தாய்; கடலை அதட்டினாய்; ஐந்து அப்பத்தைக் கொண்டு ஐயாயிரம் பேருக்கு உணவளித்து அவர்களின் பசியைப் போக்கினாய்; மாண்டவனை உயிர்ப்பித்தாய்.

இவற்றில் இவ்வுலகில் அவதரித்த இயேசுபிரானின் புகழைப் போற்றும் நோக்கமே காணப்படுகின்றன.

**பைபிள் கதைகள்**

கிறித்தவ வேதாகமத்தில் கதைகள் ஏராளமாக உள்ளன. அவற்றில் சில கதைகளையும் இந்நூலில் ஆசிரியர் பயன் படுத்தியுள்ளார். அவை வருமாறு :-

1) சிம்சோன் மீது கர்த்தருடைய ஆவி இறங்கி, சிங்கத்தை ஆட்டுக்குட்டியைக் கிழித்துப் போடுவது போலப் போடச் செய்தார்; இதே சிம்சோன் காம மயக்கத்தினால் கண் கெட்டு இறுதியில் அழிந்தான்.

2) கோலியாத் எனும் கொடிய அரக்கனைத் தாவீது இளைய வயதினனாக இருந்தபொழுது கூழாங் கற்களைக் கொண்டு கவணில் வைத்து எறிந்து அவனைக் கொன்றான்; சக்கரவர்த்தியாக ஆன தாவீது உரியாவை வஞ்சனையால் கொலை செய்தான்.

3) காட்டில் தீது என்று ஒதுக்கி வைக்கப்பட்ட கனியை ஆதாமும் ஏவாளும் தின்றனர்.

4) ஆபிரகாமின் மகன் ஈசாக்கைத் தகனப்பலியிடு வதற்காக அகமகிழ்ந்து பலிபீடத்தை உண்டாக்கி அதன் மேல் கட்டைகளை அடுக்கி அதில் மகனைக் கிடத்திக் கொடிய வாளை எடுத்து ஓங்கிக் கழுத்தை அறுக்கப் போகும்பொழுது கூவி

அதனைத் தடுத்து நிறுத்திய மகாதேவன்.

5) சாலமோன் நாரியர்களுக்காகக் கர்த்தரை விட்டு ஈன வடிவை எடுத்தான்.

6) எலியா, தீவிலிருந்து இறங்கி விழச் செய்து நூறு பேரைக் கொன்றான்.

7) எலிசா, சபித்ததனால் ஆறு இளைஞர்கள் கரடியால் கடியுண்டு இறந்தனர். காட்டிலே ஏர் இழுத்து நின்ற எலிசாவைத் தீர்க்கன் எனப் பெயரெடுக்கச் செய்தான்.

8) தானியேல் பெல்தேஷாத்சார் என்ற பொய்த் தேவர்க்கான பெயரால் அழைக்கப்பட்டான்.

9) (ஈசாக்கின் மூத்த மகன்) ஏசாவுக்கு அஞ்சி அவன் சகோதரன் யாக்கோபு தன் சொந்த ஊரை விட்டுக் காறானூர்க்குச் சென்று விட்டான். அங்கு இருபதாண்டுகள் மனைவி மக்களுடனும் திரளான மந்தைகள் மற்றும் சொத்துக்களுடனும் வாழ்ந்து வந்தான்.

10) காணாமல் போன கழுதைகளைத் தேடிச் சென்ற சவுல் என்பவனை அரசனாக்கி இசரேலை ஆட்சி செய்ய வைத்தான்.

**தன்னிலை**

வேதநாயகர் ஞானவுலாவில தன்னைப் பற்றியும், தன் நிலையைப் பற்றியும் பல்வேறிடங்களில் கூறிச் செல்கின்றார்.

தொடக்கத்திலேயே 'ஞானவுலா'வைச் சொல்லுதற்கு இயேசுபிரானிடம் தமக்கு அருள் புரிய வேண்டுகின்றார். இவ்வுலகோர் போற்றவும், மலர்ச்சேவடியை வணங்கவும், துதிக்கவும் அருள் செய்வாய். நன்மை செய்வாய். என் கவி கெட்டோடத் தயை செய்வாய். நல்வாக்குத் தந்தே தயை எனக்குச் செய்வாய். நீ என் துயரம் தீர்ப்பாய். நின்னை அன்றி வேறு யார் எனக்கு இரக்கம் காட்டுவர்? ஐயாவே! நல்லறிவை எனக்குப் போதிப்பாய். நாள்தோறும் உன்னை அல்லால் வேறு துணை எனக்கு யாருமில்லை. இவ்வுலகத் துன்பத்தி

*விருந்து விடுவித்து என்னைக் காப்பாய். என் உயிர்தான் போனாலும் உடம்பு மடிந்து போனாலும் உன்னைவிட்டுப் போனாலும் திடமிழந்து போவேனேயானாலும் பாவத்திலே பிறந்த பாவி நான். பாவத்தைப் போக்க அருள் புரிவாய்! ஐயனே! (37-49).*

*எனக்குக் கோடி நாக்குக் கொடுத்தாலும் கோடி நாட்கள் இவ்வுலகத்தில் வாழ்ந்து பணிந்து தொழுதேத்தின் உன்றன் பெரும்புகழை என் சொல்வேன்? உன்னைக் காண்பது அரிது; உன் பாதத்தின் அழகையும், உன் திருமேனியையும் தீண்டுதல் அரிது; உன்னுடைய பெருமை பெற்ற அங்கியைத் தீண்டுதல் அரிது; உன் பேரன்பை யான் அடைதலும் அரிது; உன் பேராற்றலை அடைதலும் அரிது (158-161).*

*பொய்ச்சமய வேடத்தை அகற்றி என்னை வேறோர் உருப்படுத்தித் தோடமெல்லாம் நீங்கத் துடைத்தவன். தேடி நிற்கும் வேளைக்கு உதவும் வினோதன். என் மரணத் தறுவாயில் எனக்கு உதவி அருள் நல்குவோன் (252-253).*

*கொற்றவனே! என் பாவத்தைத் தீர்த்தவனே! உன்னை யான் பாடாதிருப்பது பெரும் பாவமாகும் என்று எண்ணினேன். உன்னருளை எண்ணினேன் என்று புலம்பிய வேதநாயகர்,*

**"நின்புகழைக்**
**கோடியிலோர் பங்குரைக்கக் கூடாதே பாடியுனை**
**யென்னவிதமா யியம்புவே னென்றறியேன்**
**பின்னையுஞ் சும்மா பிதற்றினேன்" (315-316)**

*என்றுரைக்கின்றார்.*

*மற்றோரிடத்தில் இயேசுவுக்கு இணை வேறு எவருமிலர் என்பதை,*

**"ஐயனுனக்கிணை நீயன்றி வேறில்லையென**
**வையகத்திற் கண்டேன் மனமகிழ்ந்தேன் மெய்யனே" (342)**

*என்கின்றார்.*

'கிருபைப் பிரவாகம்' எனுந் தலைப்பில் இயேசுபிரானின் அருள் வெள்ளத்தை வெளிப்படுத்திய வேதநாயகர் இப்பகுதியின் இறுதியிலுள்ள 23 கண்ணிகளிலும் (523-545) 'கிறிஸ்துவினுத்தரவாதம்' எனுந் தலைப்பிலுள்ள 10 கண்ணிகளிலும் (546-555) தனக்கும் அருள் நல்க வேண்டும் என்கின்றார்.

புல்லத்தனமே புரிந்த விபசாரி மதலேனாள் மனமே பணிந்து வணங்கிக் கனிவாகப் பாதங்களைக் கண்ணீரால் கழுவி ஐம்பாலால் போதத்துடைத்தாள். அதனால் அவளுக்கு அருள் நல்கினீர்! எனவே அரசே! எனக்கும் பரிந்து அருளும் ஐயாவே! உலகமறியக் கையும் களவுமாய்க் கண்டுபிடிக்கப் பாவம் செய்தவளுக்கும் அருள் செய்தாயே! ஐயாவே! மிகுந்த மோசடிகளைச் செய்தவர்களை வைத்துக் கணவனற்ற சாமாரிக்கும் தயை செய்தாய்.

சீமானே! காணாமல் போன மகன் காதையை நான் கேட்டறிந்து வீணாகப் பரிதாக்க வேண்டுமோ? காணாதான் இன்னமும் தூரத்தே இருக்க எதிர்கொண்டோடி அன்னவனைத் தந்தை அணைத்து ஆற்றலையோ?

மன்னவனே! ஆயன் மூன்றாக, கனி அற்ற அத்தி மரம் ஓய்ந்து நிற்கத் திருவுளம் வைத்தாயே!

போயலைந்து காணாமற்போன ஆட்டைக் கண்டு பற்றித் தோள்களின் மேல் நாணாமல் கொண்டு வந்த நல்ல தலைவனே! காணாமல் போன உனைப் பொல்லாத மகனைத் தேடாமல் போனால் உனக்கும் புகழுண்டோ?

தலைவனே! சலியாமல் வீதியினால் சந்தியில் கண்டோரைக் கலியாண வீட்டுக்கு அழைத்ததிலையோ? மிகுந்த விருப்பமுடன் பெரும் பாரம் தாங்கும் வறியோரெல்லாம் வருவீர்! என்பால் திறம் தருவேன். என்னுடைய நுகத்தடியை ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் வந்து படியும் மனப்பணிவாய்ச் சிந்தைதனில் மெத்தனமாய் மேவியிருக்கின்றேன். உம் உயிர்க்கும் முற்றும் உசிப்பாறுதல் கிடைக்கும்.

ஊழிவரைக்கும் எட்டாப் பதினாயிரம் தாலந்து ஈகை

கடன் பட்டோனையும் கடைக்கண் பார்த்தாயே! முட்ட அநீதியாகப் பண்டகசாலை அமைத்த செயலை நனீதம் என்று சொல்லவில்லையோ?

நாதா! மனோமடிவாய்ச் சிந்திற பரதபித்த சீடர்களைக் கண்ணோக்கி வந்த கொடிய கொந்தளிப்பை மாற்ற வில்லையோ? பிந்திப் பதினோராம் தாசில் வந்த பாவிகளை முன்னோர்க்கு எதனால் சரி என்று இசைத்தாய்?

அரிய துயர் செய்த கொடூரச் செருசலைக்கு நாற்பது ஆண்டுகள் உய்யக் கொடுத்தாய்! ஐயாவே!

ஆகமங்கள் அனைத்திலும் உன்னுடைய அன்பு வெள்ளம்தான் வெளிப்படுகின்றன. சித்தம் வைத்து என்னை ஆட்கொள்ள வேண்டும்.

ஐயனே! நான் பட்ட கடன் தீருவதற்குத் தேவரீர் அருள் செய்ய வேண்டும். இவ்வுலகில் பிறந்து அல்லல்பட்டுத் தேவரீர் பட்ட பாடுகளில் எட்டில் ஒருபங்காகிலும் நான் பட்டிருப்பேனா? விருப்பமுடன் பட்ட பாடுகள் எல்லாம் என் பாவமன்றி உன்றனக்காய்ப் பட்டதுண்டோ? சொல்வாய்! படைப்பவனே!

> "என் துயரத்தை என்றைக்கு நீ தீர்ப்பாய்? என்றைக்கு இந்த ஏழைக்கு இரங்குவாய்? என்றைக்கு என் மனக் கவலைகளை எல்லாம் மாற்றி வழிகாட்டுவாய்? உன்றன் பாதாரவிந்தம் அல்லாமல் பாதகனுக்கு யார் உதவி? ஆதரவாக எனக்கு யார் இருப்பார்? தந்தை, தாய், மனைவி, மகள், மகன், உறவினர்கள், உடன் பிறந்தார்கள், நண்பர்கள் போன்றவர்கள் யாரும் உதவி செய்யப் போவதில்லை. நாள்தோறும் தேடிய செல்வம், மாடமாளிகைகள், தோட்டம், வயல், நிலம், தேடி வைத்த சொத்துக்கள், கற்ற பல வித்தைகள், கல்வி, சாஸ்திரம், பெற்ற பரிசுகள், வாணிகம், அரசர், இரத்தின இருக்கை, யானை, குதிரை, தேர், காலாள், சிவிகை, படைகள் போன்ற இவற்றாலும் எவ்வித நன்மையும் கிடைக்கப் போவதில்லை. இவை அனைத்தும் நிலையாமை உடையவை"

என்று வேதநாயகர் கூறித் தனக்கு அருள் புரிய வேண்டு கின்றார் (556-565).

"உன் போல் இன்னும் ஒருத்தர் இருந்தால் உன்னிடத்தில் என்ன மதியால் யான்வர எண்ணுவேன்? என்னைத் தள்ளி விட்டுவிட நீ விரும்பினால் என்னை ஏன் படைத்தாய்? படைப்போனே! பிதா! விருப்பமுடன் மரத்தை வைத்தவன் தண்ணீர் இறையானோ? சித்தம் வைத்து என் பாடலைக் கேட்டு என் துயரங்களைப் போக்குவாய்! நான் சொன்ன மொழிகளைக் காதாரக் கேட்டு என் துயரைத் தவிர்க்கக் கூடாதோ? என்ன உன்றன் கையில் ஒன்றும் இல்லையோ?"

"காப்பவனே! நீயானால் என்னைக் காப்பாற்றாமல் இருப்பது நீதியோ? என் நெஞ்சைக் கண்டால் இரங்கும் உன்றன் நெஞ்சம் மெத்தக் கல் நெஞ்சாய் இருக்கக் கண்டேன். கவடோ? கல் நெஞ்சு வஞ்சகன் நான். என்றன் மனத்தைப் போல ஆச்சுது உன்றன் நெஞ்சம் என்று பேதை நினைப்பேனோ என் செய்வேன்? அப்பா! நின் பாதமலர்க்கு ஆசை கொண்டேன். அத்தனையும் தப்பா? உண்மையா?"

"தயைக்கடலே! மெய்ப்பான ஆயனே! நீயானால் ஆடு உனக்கு, நான் ஆனால் தாயில்லாத குழந்தை போல் தவிப்பேனோ? நேயா அறியாயோ? நான் ஏழை அல்லவோ? நெஞ்சில் குறியாதது என்னவிதம் தலைவனே! சிறியவனாகிய என்னுள்ளத்தை அறிவாய்; உழைப்பை அறிவாய்; அந்தரங்கக் கள்ளத்தை அறிவாய்; கவட்டை அறிவாய்; பிள்ளை என்று தானும் அறிவாய்; என் தந்திரமெல்லாவற்றையும் அறிவாய். உனக்கு அன்பன் என்று எண்ணிக்கொள். உன்னைவிட்டுப் போனால் நான் எங்கே பிழைப்பேன்? எனக்கு உன்னையன்றி வேறு யார் அடைக்கலம் தருவார்? நான் உன்னை அடைந்தும் உனது அடிமை என்றிருந்தும் என்னை மனத்துயரம் ஏன் பிடிக்கும்? அன்னை வயிற்றில் அன்று முதல் இன்று வரை யான் படும் பாடு

> *அத்தனையும் ஒன்றும் அறியாயோ? உரிமையுடன் எத்தனை பேருக்கு அன்பு செய்தாய். மெய்யாகவே உன் பாதத்தை விரும்பும் அடியேனை இகழ்ந்து புறம் பார்க்காதே. ஆறுதலாய் எனக்கு இயம்புவாய்" (575-605).*

*என் வறுமை அனைத்தையும் நீக்கிவிட்டால் உன் இரு பாதங்களை இறைஞ்சேனோ? என் தேக வினையைத் தீர்ப்பாய். கருணைக் கடலே! காவலனே! உலகத்தில் உன்னை விட்டு அகன்றுவிடச் செய்து விடாதே. மெய்ப்பொருள் ஒன்றை விரும்ப அருள் செய்வாய்! என் பாவத்தை எல்லாம் எண்ணி என் மேல் இரக்கம் கொண்டு கருணை செய்வாய்! இனி யான் மண்ணானபோது உலக வாழ்வு எனக்கு ஏன்? புண்ணாகி அப்பி துரும்பாய் அலையாது அருள் புரிவாய்! ஒப்பற்ற தேவனே! உனக்கு அபயம்!*

*வீணாக என்னை வெறுத்து ஒதுக்கி விடாமல் கலங்கிப் புலம்பும் என்றன் சத்தத்தைச் சற்றே தயவாய்க் கேட்பாயாக! என் பிழையை நீக்கி என்னைக் காத்தருள்வாய் என் பரனே! (606-627).*

இயேசுபிரானிடம் தன்னிலையைப் பலவிடங்களில் கூறித் தனக்கு அருள் நல்கவேண்டும் என்று கேட்ட வேத நாயகர் இறுதியில் 'நன்றியறிதல்' எனும் பகுதியில்,

> *"அக்கியான மார்க்கத்து அழியாது என்னைப் பிடித்து மிக்கான சத்தியவேதத்தில் வைத்தாய். தொலையாத என் கவலை எல்லாவற்றையும் தொலைத்தாய். அதனால் நான் சுகப்பட்டேன். அல்லல் அற்றேன். செல்வமுள்ளவன் ஆனேன். பராபரனின் பிள்ளை என்று தீர்க்கமுடன் சொல்லும் திடம் பெற்றேன். பேய்க்கூட்டத்தைத் தேவன் என்று முன்னாளில் சேவித்து அலைந்த மகாபாவியாகிய என்னை மெத்தப் பரிசளித்து ஆவலுடன் தீட்சை கொடுத்துச் சிறப்பித்துச் சீவனுடன் மோட்சவழி திறந்து முன் வைத்தாய். காட்சி நலம் தந்து மிகுந்த தயவினால் என்னுடைய உற்றார் உறவினர்களுக்கும் பெருமை*

> செய்தாய். என் அல்லல் அனைத்தையும் அகற்றி விட்டாய். கல்வி நூல் பாட வரம் தந்தாய். பல்லூழிக் காலம் உனை நாட வரம் தந்தாய். நலம் தந்தாய். தஞ்சைச் சுவார்ட்சு பாதிரியாரின் சீடனாக எனக்கு மேன்மை செய்தாய்" (655-664)

என்று தனக்கு அருள் செய்தமைக்கு நன்றி கூறுகின்றார்.

வேதநாயகர் தம்மை ஏழையேன், பாவி, சாஸ்திரி என்று பல இடங்களில் கூறுகின்றார்.

**ஆதி உலா - ஞான உலா : ஒப்பீடு**

சேரமான் பெருமாள் நாயனார் பாடிய 'ஆதி உலா' எனும் 'திருக்கைலாய ஞானவுலா' நூலே முதல் உலா நூலாகும். இந்நூலுக்கும் வேதநாயகர் பாடிய ஞானவுலாவுக்கும் சிற்சில ஒற்றுமைகளும், வேற்றுமைகளும் காணப்படுகின்றன. அவற்றை இப்பகுதி ஆராய்கிறது.

1) ஆதி உலாவில் 'பெண்ணீர்மை' எனத் தொடங்கும் நேரிசை வெண்பா ஈற்றில் உள்ளது, ஞானவுலாவில் 'பூதலத்தில்' எனத் தொடங்கும் நேரிசை வெண்பா முதலில் காப்புச் செய்யுளாக உள்ளது. இருவருமே மங்கலச் சொற்களாகிய 'திரு' என்றும் 'சீர்' என்றும் தொடங்கியுள்ளனர்.

2) ஆதி உலாவில் சிவபிரானது இலக்கணத்தை வாழ்த்துகின்றார். ஞானவுலாவில் இயேசுவாகிய இறைவனின் இலக்கணத்தையும் இயல்பையும் வாழ்த்தும் முறையிலேயே கூறியிருக்கின்றார்.

3) ஆதி உலாவில் அப்பர் திருத்தாண்டகம், பொன் வண்ணத்தந்தாதி, சிவபுரத்தில் இறைவனை அமரர் நெருங்கியது போன்ற செய்திகள் கூறப்படுகின்றன. ஞானவுலாவில் இறைவனின் இருப்பிடம், வாய்மை முதலியன சுட்டிச் சொல்லப்படுகின்றன.

4) ஆதி உலாவில் இறைவன் உலாவின் காரணமாகத் திருக்கோலப்புனைவு கூறப்படுகிறது. ஞானவுலாவில் இயேசுவைப் பஞ்சபூதவடிவக் கோலத்திலும்,

கருணையின் திருவுருவாகவும், காட்சிக்கு எளியவனாகவும் அவனது திருக்கோலப்புனைவு காணப்படுகிறது

5) ஆதி உலாவில் தேவர், முனிவர் குழாங்கள் திருப்பணி செய்ய இறைவன் இடப வாகனத்தில் ஊர்ந்து உலா வருவதாகக் கூறப்பட்டுள்ளது. ஞானவுலாவில் மலை, ஆறு, நாடு, ஊர், மாலை, குதிரை, யானை, முரசு, கொடி ஆகிய தசாங்க உறுப்புக்களைக் கூறிச் சிலுவைக்கொடி பிடித்து அகில சங்காரம் புரியும் சுந்தரவெண்மேகமாம் குதிரையில் ஏறி உலாச் சென்று பரமண்டலங் களுக்கே செல்லும் இறைவனாகச் சுட்டிக் காட்டி யுள்ளார்.

6) ஆதி உலாவில் இறைவனோடு சிவகுமாரர்களும் ஏனையோரும் உடன்போதல் கூறப்படுகிறது. ஞான உலாவில் இயேசுபிரானுடைய தலை முதல் திருவடி வரை கேசாதிபாதமாக ஒவ்வோர் உறுப்பையும் உருவகித்து வெள்ளங்கி தரித்து ஆணிப்பொன் கச்சைதனை மார்பில் அணிந்த தார் வேந்தனாக உத்தமர்கள் பலர் சூழத் தொல் லுலகமும், அம்பரமும், வாருதிகளே நடுகின்ற வசனங்களைச் சொல்லும் வீரனாக, பார்த்தோர் அனைவரும் தலைவணங்கும் தோற்றமுடையவ ராக, அனைவரும் பணிந்து தொழும் ஆனந்த முள்ள பக்தர் குழாம் பணிந்துவர உலாப் போவ தாகக் காட்டப்படுகிறது.

7) ஆதி உலாவில் சிவபிரான் எடுத்தியம்பும் வாக்கியங்களாகக் கூறப்படுகின்றன. ஞானவுலா வில் கிறித்துவின் பல்வேறு திருப்பெயர்களைக் கூறுவதோடு அவருடைய அற்புதச் செயற்பாடு களை இயம்பும் வாக்கியங்கள் கூறப்படுகின்றன.

8) ஆதி உலாவில் தூய்மையானவர்கள் இறைவனை வாழ்த்தும் வாழ்த்துக்கள் கூறப்படுகின்றன. ஞான வுலாவில் நீதியின் பரிதி நீடிய சாந்தம் நிறைந்தவ

னாகிய இயேசு பெருமான் பீடுலகச் சாதிகளால் பட்ட பாட்டையும், இயேசுபிரானை வணங்கும் முறையும் கூறப்படுகின்றன.

9) ஆதி உலாவில் பேதை முதல் பேரிளம்பெண் ஈறாக உள்ள எழுபருவ மகளிரும் ஒருங்கு கூடிச் சிவ பிரானின் உலாவைக் கண்டு தங்கள் தங்கள் வயதுக்கேற்றவாறு காதலுற்ற செய்திகள் பொது வகையாகக் கூறப்படுகின்றன. ஞானவுலாவில் அனைத்துலக மக்களும் அவரவரது இயல்புகளுக் கேற்ப இயேசு பிரான்மீது பேரன்பு கொண்ட செய்தி கூறப்படுகிறது.

10) ஆதி உலாவில் காம உணர்வு என்பது இன்னதென அறியாத பேதைப் பருவ மகளிரின் செயல் களெல்லாம் அப்பருவத்து இணையற்ற நாயகி ஒருத்திபால் வைத்து மிக அழகாகப் புனைந் துரைக்கப்படுகிறது. ஞானவுலாவில் 'பிரஸ்தாபம்' என்ற தலைப்பில் வேதநாயகர் தன்னைப் பேதைப் பருவத்துப் பெண்ணாக உருவகித்து இயேசு பிரானை உலா வரும் தலைவனாகக் கற்பித்து உள்ளுறைப் பொருளாகக் கூறுகின்றார்.

11) ஆதி உலாவில் காம உணர்வு அறியத் தொடங்கும் பெதும்பைப் பருவத்துத் தலைவி ஒருத்திபால் வைத்து அப்பருவ மகளிரின் இயல்புகளெல்லாம் கூறப்படுகின்றன. ஞானவுலாவில் 'சதுர்பாசம்' என்ற தலைப்பின்கீழ்த் தன்னைப் பெதும்பைப் பருவ மகளாக உருவகித்து உள்ளுறை பொருளாக ஆசிரியர் பாடப்படும் செய்தி காணப்படுகிறது.

12) ஆதி உலாவில் மங்கைப் பருவப்பெண் தன்னைப் பல்வேறு ஆடை அணிகலன்களால் அழகு செய்து கொண்டு உலா வரும் இறைவனின் தோளில் அணிந்திருந்த மாலையையும், அவருடைய எண் வகை உறுப்புநலன்களையும் தன் உறுப்புக்களோடு ஒப்புநோக்கி வேட்கை நோய் மிகுதிப்படுமாறு பெருமூச்சு விடுகின்ற செய்திகள் கூறப்படுகின்றன.

ஞானவுலாவில் 'அஃறிணைப்பாற் புகழ்ச்சி' எனுந் தலைப்பின்கீழ்த் தன்னை மங்கைப் பருவப் பெண்ணாகக் கற்பித்துத் தன் காதல் வேட்கையை வெளிப்படுத்துகின்றார் வேதநாயகர்.

13) ஆதி உலாவில் மடந்தைப் பருவப்பெண் காமநோய் மிகுந்து புலம்பும் காட்சிகளைச் சேரமான் பெருமாள் நாயனார் கூறுகின்றார். ஞானவுலா வில் 'உயர்திணைப்பாற் புகழ்ச்சி' எனுந் தலைப்பின்கீழ் மடந்தைப் பருவப் பெண்ணாகத் தன்னை உருவகித்து ஆசிரியர் பாடுகின்றார்.

14) ஆதி உலாவில் தமிழின் இனிமையை மடந்தைப் பருவப்பெண்ணின் சாயலுக்குக் கூறியிருப்பதில் பழமையால் முதிர்ந்தும், முதிர்ந்து கனியாத செவ்வியை உடைய தீந்தமிழின் பெருமை பாராட்டப்படுகிறது. தீந்தமிழின் தெய்வ வடிவாள் திருந்திய சீர் வாய்ந்த மடந்தைப் பருவத்தாள் என்று பருவ இயல்புகளைச் சேரமான் குறிப்பிடுகிறார். வேதநாயகர் ஞான வுலாவில் கற்பனை மடந்தையை உருவாக்கிச் சுந்தர திருச்சபையை மடந்தைப் பருவத்தாளாக்கி மடந்தைக்கு முன் தோன்றிய நேர்மைமிகு இயேசுபிரான் சற்றேனும் பேதங்கள் சாராமல் அடியும் நடுவும் முடிவுமாகத் திகழ்ந்து வெற்றிக் கொடியாம் விருது கொண்டு உயிர்களாகிய மடந்தையர்களுக்கு அருளுகின்ற தலைவனாக, பர்த்தாவாக, பாவையின் கணவனாக, ஞானக் கணவனாகத் திகழ்கின்றார்; ஆன்மாக்களாகிய ஆடுகளை மேய்ப்பனாகத் திகழ்கின்றார். மன அலைகளால் அலைந்து ஓடுகின்ற யாராலும் கண்டு கொள்ள முடியாத ஆன்மாக்களாகிய பல ஆடுகளின் மடந்தையாகின்ற ஓர் ஆடு தனை தேடி வருகின்ற ஆயரோ என்று மடந்தைப் பருவத்தின் இயல்பிற்கேற்ப விளித்துப் பேசுகிறார். உலா வருகின்ற பரிசுத்தமுள்ள பராபரன் எல்லா ஆன்மாக்களையும் காத்தருளவேண்டி, மனத்தைக்

கெடுக்கின்ற மும்மலங்களாகிய பேய்க் கூட்டங்களின் சோதனைகளையெல்லாம் வென்றவர். தன்னைப் பார்த்துப் பாராமுகமாகச் செல்லும் காட்சியைப் பார்த்துப் 'பாவி தரிசிக்கக் கூடாத தேவே' என்றும் பல்லாயிரம் கோடிப் பல்லுயிர்க்கும் மேலானவனாக இருக்கின்ற இறைவன் எல்லாப் பொருள்களிலும் தங்கி இயக்கி வருகின்ற தலைவனாகத் திகழ்கின்றார். மடந்தைப் பருவத்தின் சிற்றின்ப நிலையைப் பேரின்பநிலையாக இறைவன் மாற்றுகிறார் என்று தன்னை மடந்தையாகப் பாவித்துப் பாடுகின்றார்

**உவமைநலம்**

வேதநாயகர் இந்நூலில் பல உவமைகளைக் கையாண்டுள்ளார். ஒப்பு, ஒத்த, போல எனும் உவம உருபுகளைப் பயன்படுத்தியிருப்பினும் 'போல' எனும் உருபையே பெரும்பாலான கண்ணிகளில் காணமுடிகின்றது. இயேசுவின் பெருமைகளையும், தன் நிலையைப் பற்றியும் கூறுகின்ற இடங்களில் உவமைகளை ஆசிரியர் கையாண்டிருப்பதைக் காணமுடிகின்றன.

காட்டிலிருந்த யோனாவுக்கு ஒப்பெனலாம் யோனா ரப்பனை விட்டுப் போகான் (339) என்பதில் 'ஒப்பு' என்ற உருபையும், 'ஊழிக்காலத்தில் வெள்ளம் ஒத்த மக்களை மீட்டுக் காப்பாற்றிய வள்ளல் இயேசு' (456) என்பதில் 'ஒத்த' என்ற உருபையும் பயன்படுத்தியுள்ளார்.

போல, போல், போன்ற என்ற உருபுகள் பல்வேறு கண்ணிகளில் இடம்பெற்றுள்ளன.

பாபிலோன் செங்கோலைப் பறித்து அகற்றிச், சாபமாய் மாட்டைப் போலப் புல் அருந்தி, வான் பனியினால் நனைந்து, காட்டில் திரிந்து, கருத்தழிய மேட்டிமைக்குத் தக்கபடி நீதியைச் சரிக்கட்டி ஏழாண்டுகள் ஆட்சி செய்த பின்னர் முக்கியமதாக்கி முடி சூட்டினர் (510-511)

கானான் நாட்டைச் சேர்ந்த விஸ்திரீ உரக்க அழைத்த

பொழுது ஏனோதானோ என்று இகழ்ந்தாற் போல் போனாலும் இல்லை என்று தள்ளி விடாமல் ஏழைப் பெண்ணுக்கு இரங்கி அவள் துயரத்தைப் போக்கினவன் இறைவன் ஆவன் (521-522).

இயேசுவை வஞ்சகர்கள் கள்ளனைப் போல் கல்தூணில் கட்டி அடித்தனர் (549).

வேதநாயகர் தன்னைப் பற்றிக் கூறுமிடங்களில் உவமை யாக இயம்புவதைப் பின்வருமாறு காணலாம்.

"கல் நெஞ்சு போன்ற வஞ்சகனாகிய என் மனத்தைப் போல இயேசுவின் நெஞ்சமும் ஆயிற்று (590); தாய் இல்லாத குழந்தை போல நான் தவிக்கின்றேன் (592); என் உள்ளம் அனலில் வைக்கப்பட்ட மெழுகு போலத் துயரமுறுகிறது (597)"

"வெள்ளத்தில் கல் போட்டால் தண்ணீர் கலங்கும். அதுபோல நான் ஞானவுலாச் சொல்லும்பொழுது உன் நெஞ்சம் துணுக்குறும் (604)"

> "நீர்க்குமிழி போன்ற நிலையிலா வாழ்வை நற்றிப்
> பார்க்குளுனை விட்டகலப் பண்ணாதே" **(613)**

என்று நிலையில்லாத இவ்வுலக வாழ்வு இருப்பதாகக் கூறுகின்றார்.

என் பாவத்தை எல்லாம் மலை போலக் காட்டி ஏற்றாதே (616); ஒப்பற்ற தேவனே! உனக்கு அபயம். துப்பற்றுக் காற்றடித்த நாணலைப் போல் கும்மும் உபத்திரத்தின் காற்றடிக்க நான் படும் என் துயரத்தைப் பார் (619); அக்கினியில் அன்று மூவருக்கு அன்பு செய்தது போல எனக்கும் தக்கபடி அன்பு செய்தால் உனக்கு நலமுண்டு (628); துக்கமுற்ற பேதுருவின் மேல் இரங்கிப் பின் திரும்பிப் பார்த்தாற் போல் பாதகனாகிய என்னையும் பரிந்து பார்த்து அருள் செய்வாய் (629); இறைவனே! நத்தானுவேலை நயந்தது போல என்னையும் உளமுவந்து அடிமையாக்குவாய் (631); முதிய திமிர்வாதம் கொண்ட குட்டரோகியின் இடரைத்

*தீர்த்தது போல ஏழையேனாகிய எனக்கு உற்ற இடரையும் தவிர்ப்பாய் (634).*

*ஓவியத்திலிருக்கின்ற உயர்ந்த பனை மேவு பரதேசி துக்கப்படுவோர் புறாவே உரிமையோரே! (375) என்றும் ஓவிய ஞானத்தில் நிறைவுற்றுத் தேவகிருபை தங்கி நிற்கிறது (413) என்றும் ஓவியமாக உயிர்த்தெழுந்த இறைவன் (420) என்றும் ஓவியத்துடன் ஒப்புமைப்படுத்தி வேதநாயகர் பாடியுள்ளார்.*

**தமிழின் பெருமை**

*வேதநாயகர்,*

**'கோடித் தமிழுரைத்துங் கொற்றவனே நின்புகழை' (315)**

*என்று இயேசுபிரானின் புகழைப் போற்றிக் கூறுமுகத்தான் தமிழைப் பற்றிக் கூறியுள்ளார்.*

**ஏனையோர்**

*ஞானவுலாவில் இடம்பெறுவோர் வருமாறு :*

| | |
|---|---|
| *தாவீது* | *கோலியாத்* |
| *இசராவேல்* | *ஈசாக்கோ* |
| *இசரேலர்* | *யோசேப்பு* |
| *ஆதாம்* | *சீம்சோன்* |
| *ஏவாள்* | *சாமுவேல்* |
| *ஆபிரகாம்* | *சாலமோன்* |
| *ஆபேல்* | *தானியேல்* |
| *எலியா* | *யோனா* |
| *எலிசா* | *எலியேசர்* |
| *எலியேசர்* | *சீமியோன்* |
| *ஏபிரேயர்* | *சல்மோன்* |
| *யாக்கோபு* | *பிலிப்பு* |
| *மோசே* | *சவுல்* |

*இவர்களுள் யாக்கோபும், பிலிப்பும் இயேசுபிரானின் பன்னிரு சீடர்களுள் இருவராவர்.*

**சொற்கள்**

*தெண்டனிட்டு, சோலி, சும்மா, வேசி, சண்டாளன், ஏனோதானோ, கையும் களவுமாய், பண்ணி, கூட்டாளி, சிலது, செப்பி முதலான பேச்சுவழக்குச் சொற்கள் காணப்படுகின்றன.*[2]

*அடிமை என்பது அடுமை (484, 557) என்றும், பாவம் என்பது பவம் (489) என்றும், புகழுண்டோ என்பது புகளுண்டோ (532) என்றும், எதனால் என்பது எதினால் (542) என்றும், பெயர் என்பது பேர் (573) என்றும் சொற்களில் எழுத்துக்கள் குறைந்தும், மாற்றியும் காணப்படுகின்றன.*

*ஆடிப்பாடி (156), இரவும் பகலும் (651), உன்னியுன்னி (471), தில்லுமுல்லு (623), வந்து வந்து (621) என்றும் சொற்கள் காணப்படுகின்றன.*

*அஸ்திவாரம், ஆஸ்தி, கிறிஸ்து, கன்னியாஸ்திரீ, குஷ்டரோகம், சாஸ்திரம், சிஷ்டி, சொஸ்தம், சரீரம், சிம்மாசனம், கிருபாகடாட்சம், தமஸ்கு, தாஷ்டீகம், நேத்திரம், பாஷா, பொக்கிஷம், பொஸ்தகம், புருஷன், பவுசு, மத்தியஸ்தன், மணவாளி, மோக்கிஷம், ரட்சிக்க, ராச்சியம், ரூபவதி, வஸ்திரம், வஸ்து, வங்கிஷம், விசுவாசம், விவாகம், விஸ்தரிக்க, ஸ்திரி முதலான வடமொழிச் சொற்களும் காணப்படுகின்றன.*[3] *இவற்றுள் சலம், மனுடன், புருடன், வெண்குட்டம், இட்டம் (விருப்பம்), சனம், சீவன், செபம், சிட்டிகனே, பிரதாபித்து முதலான சொற்கள் தமிழ் ஒலிக்கேற்ப வடவெழுத்துக்களுக்குப் பதிலாகத் தமிழ் எழுத்துக்கள் எழுதப்பட்டும் காணப்படுகின்றன. கிறித்தவர்களின் வேதாகம நூலின் கருத்துக்களைத் தமிழில் பாடிய வேதநாயகர் காலச்சூழலுக்கேற்ப வடமொழிச் சொற்கள் பலவற்றைத் தம் நூலில் கையாண்டமை தவிர்க்க இயலாததாயிற்று. ஏராளமான கண்ணிகளில் வடமொழிச் சொற்களைக் கலந்து பாடியமை அக்காலத்தின் மொழிப் பயன்பாட்டை அறிவதற்கு உறுதுணை புரிகின்றன.*

❑

*2 காண்க : பின்னிணைப்பு எண் 1*

*3 காண்க : பின்னிணைப்பு எண் 2*

# குறவஞ்சி இலக்கியம்

# பெத்லகேங் குறவஞ்சி

# பெத்லகேங் குறவஞ்சி

வேதநாயகரால் 1800ஆம் ஆண்டில் பாடப்பெற்ற இக்குறவஞ்சி நூல் 1820ஆம் ஆண்டில் அரங்கேற்றப்பட்டதாகத் தெரிய வருகிறது.[1] சென்னை, கிறித்தவ இலக்கியச் சங்கத்தார் இந்நூலைப் பதிப்பித்துள்ளனர்.[2]

> "சங். குரு J.C. கோலேப் ஐயரின் அனுமதிப்படி 'பெத்லகேங் குறவஞ்சி' தமிழில் இசைக்கப்பட்டு மகா ராசேந்திர சரபோஜி மஹாராஜ சபையில் அரங் கேற்றப்பட்டது"[3]

என்ற கூற்றுப்படி இந்நூல் தஞ்சாவூர் அரண்மனையிலும் அரங்கேற்றப்பட்ட செய்தியை அறியமுடிகிறது.

தேவசகாயனின் மகனாகிய வேதநாயகன் (2) பாடிய இக்குறவஞ்சி நூல் கிறித்தவ சமயத்தைச் சார்ந்ததாகும். இந்நூலின் பாட்டுடைத் தலைவனாகிய இயேசுபிரான் பிறந்த ஊர் பெத்லகேம் ஆகும். எனவே இந்நூலுக்குப் 'பெத்லகேங் குறவஞ்சி' என்ற பெயர் ஆசிரியரால் சூட்டப்பெற்றது. நூலின் இறுதியில் சிங்கன் - சிங்கி ஆகியோர் உரையாடல் இடம் பெறுகின்ற பகுதியில்,

> "வேதத்திலுள்ள கருத்தையெடுத்து
> வினோதமாய்ச் சொன்னதார் சிங்கி?சதுர்ப்
> போதக சாஸ்திரி யென்றபெயர்பெற்ற
> வேதநாயகன்காண் சிங்கா
> இத்தனை பாவினம் பாடினசெய்கைக்கு

---

1. பெத்லகேங் குறவஞ்சி, முகவுரை, பக் vi-vii.
2. பெத்லகேங் குறவஞ்சி, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், சென்னை, இரண்டாம் பதிப்பு 1964, பக். 1-159
3 சி.வி. சவரிமுத்து (உ.ஆ.), வேதநாயக சாஸ்திரியாரின் ஜெபமாலை விரிவுரையும் திறனாய்வும், கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், சென்னை, 1987, ப. xxviii.

மென்ன பரிசடி சிங்கி?வந்த
பெத்தலேகர்பரி செத்தனை சொல்லநான்
நித்திய காணியாட்சி சிங்கா"[4]

என்று வருகின்றன. வேதநாயகர் தாம் இயற்றியதை நூலின் அகச்சான்றுகளாகத் தந்திருப்பது இவண் குறிக்கத்தகும்.

வேதநாயகர் பல நூல்களை இயற்றியிருந்தாலும் இக் குறவஞ்சியை எழுதியதன் பின்னர்தான் இவர் புலமையும், பெருமையும் தமிழக மக்களால் போற்றப்பட்டதாக இந் நூலின் முகவுரையில்,

"இதைச் செய்தவன் இதற்குமுன் அனேகம் நூல்களை உண்டுபண்ணினாலும் அவனை யொருவரும் நினைத்ததுமில்லை, எண்ணினதுமில்லை. ஆனதினாலே சகல சபையுந் தன்னைச் சினேகித்து நன்மை செய்கிறதற்காக வேண்டி, மகாபிரயாசத்துடன் இந்தப் பெத்லகேங் குறவஞ்சியை உண்டுபண்ணிச் சபைகடோறு மரங்கேற்றினான்.

அது முதல் அவனை வேதசிரோமணியா ரென்றுஞ் சுவிசேட கவிராயரென்றும், ஞானதீபக்கவிராயரென்றும், வேதசாஸ்திரியா ரென்றும், தஞ்சாவூர் தரங்கன்பாடி, சென்னப் பட்டணம், திருச்சிராப்பள்ளியின் சபைகள் அழைக்கத் துவக்கிற்று.

இப்படியாக, திருநெல்வேலி தேவசகாயம் பிள்ளை குமாரனும், சங் : சுவார்ச்சையரவர்கள் சீஷனுமாகிய வேதநாயக சாஸ்திரி, 1800ஆம் வருடம் தஞ்சை நகரத்தில், சங். கோலோப்பைய ரவர்கள் அதிகாரத்திலே இந்தப் பெத்லகேங் குறவஞ்சியை உண்டுபண்ணி, 1820ஆம் வருடம் அதைத் திருத்திச் சகல திருச்சபையினுடைய சந்தோஷத்துக் கென்றும் காணிக்கையாக வைத்தான்"[5]

4. பெத்லகேங் குறவஞ்சி, ப.157, பா. 33-34.
5. மேலது, முகவுரை, பக். vi-vii.

என்று ஆசிரியர் கூறுகின்றார்.

சென்னையில் இக்குறவஞ்சி அரங்கேற்றப்பட்ட பொழுது வேப்பேரி திருச்சபையினர் அறுபது வராகன் விலையுள்ள பல்லக்கும், நாற்பது பேர் கையொப்பமிட்ட நற்சான்றிதழ்களும், 'ஞானதீபக் கவிராயர்' என்ற பட்டமும் கொடுத்துச் சிறப்புச் செய்ததாக அவர் வரலாற்றால் தெரிய முடிகின்றது.[6]

இரண்டாம் சரபோசி மன்னரின் அவைக்களத்தில் இருந்த பல புலவர்களுள் இவரும் ஒருவர். சுவார்ட்சு பாதிரியாரிடம் கல்வி பயின்றவர்களுள் இரண்டாம் சரபோசியும், வேதநாயகரும் ஒருசாலை மாணாக்கர்களாக விளங்கினர். தஞ்சாவூர் அரண்மனையில் இருந்த அரசவைப் புலவர்களில் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் மிகவும் குறிப்பிடத் தக்கவராவார். 'சரபேந்திர பூபாலக் குறவஞ்சி' எனும் பனுவலைச் சிவக்கொழுந்து தேசிகர் சரபோசி மன்னரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடியுள்ளார். குறவஞ்சி இலக்கியங்களில் சிறந்து விளங்கும் நூல்களுள் ஒன்றாகிய திரிகூடராசப்பக் கவிராயரின் 'திருக்குற்றாலக் குறவஞ்சி'யும் மக்களால் பெரிதும் போற்றி வரவேற்கப் பட்டது. இரு குறவஞ்சியையும் படித்துச் சுவைத்த வேத நாயகர் 'பெத்லகேம் குறவஞ்சி'யைப் பாடினார். கிறித்தவத் திருமறைச் செய்திகளைக் கூறவும், பாமர மக்களிடையே கிறித்தவ நற்செய்தியைப் பரப்பவும் ஏற்புடையதாகக் குறவஞ்சியின் அமைப்புமுறை காணப்பட்டமையினால், கிறித்துவையும் கிறித்தவத் திருச்சபையையும் உருவகமாய்க் கொண்டு இப்பனுவலை இயற்றினார். வேதநாயகர் இக் குறவஞ்சிக்கு எழுதிய முகவுரையில்,

> "இதைத் திருநெல்வேலி இராச்சியத்திற் பிரதான பள்ளிக்கூடங்களிற் படிக்கிறதும், அவ்விடத்துக் கணியார் தேசத்திலெங்கும் நாட்டியமாடுகிறதுமான குற்றாலக் குறவஞ்சிக்கு எதிராய்ப் பாடிற்று"[7]

6. தா.வி. தேவநேசன், தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், சென்னை, இரண்டாம் பதிப்பு 1956, ப 27.
7. பெத்லகேம் குறவஞ்சி, ப. v.

எனக் கூறியுள்ளார்.

> "'எதிராய்ப் பாடியது' என்றது அதற்குச் சமமாய்ப் பாடியது என்னும் பொருள் தருவதாகும். குற்றாலக் குறவஞ்சியின் பதிவுகளைப் பெத்தலகேம் குறவஞ்சி யில் காண வாய்ப்புகள் உள்ளன என்னும் கருத்தினை இம்முன்னுரை உணர்த்துகின்றது"[8]

என்று கூறுவதும் இவண் ஆய்வுக்குரியது.

திருஞானசம்பந்தர் பாடிய பதிகங்களின் ஈற்றுப்பாடல் தோறும் தம்மை 'நற்றமிழ் ஞானசம்பந்தன்', 'நான்மறைவல்ல ஞானசம்பந்தன்'[9] என்று கூறுவது போன்றே வேதநாயகரும் தம்மை 'மகாஞான கவிச்சக்கரவர்த்தி' (12) என்று கூறுவதும் இவண் ஒப்பிடத்தகும்.

**நூலமைப்பு**

கிறித்தவ இலக்கியமான இக்குறவஞ்சியில் கடவுள் வாழ்த்து இயேசு கிறித்துவின்மீது பாடப்பெற்றதாக அமைந்துள்ளது. அத்துடன் இயேசுபிரானின் புகழ் பாடி வேண்டுகின்ற சரணத்தருவும், பரன் சுதன் மனுவேலர் பரிசுத்த ரூபியாகிய முதல்வர் பதம் துணை நிற்கவேண்டுகின்ற தோடையமும், மங்களமும் இயேசுபிரானைத் துதிக்கின்ற தோத்திரத் தருவும் அமைந்துள்ளன.

இந்நூல் 72 தலைப்புக்களில் மிக அதிகமான பாக்களைக் கொண்டு அமைந்துள்ளது. 'கவனிப்பு' எனும் பகுதி மட்டுமே உரைநடையில் உள்ளது. கட்டியக்காரன் மேடையில் தோன்றியது முதல் உலா வந்த தலைவனைக் கண்டு காதல் கொண்ட தலைவி புலம்பியது வரை உள்ளனவற்றை முதல் பகுதியாகவும்; குறவஞ்சி தோன்றித் தன் நாடு சாதி முதலான வளங்களையும் கூறித் தலைவிக்குக் குறி சொல்லியது வரை உள்ளனவற்றை இரண்டாவது பகுதியாகவும்; சிங்கனும் அவன் நண்பனும் பறவைகளைப் பிடித்துத் தன் துணைவி

8. ப.ச. ஏசுதாசன், தமிழ்க் கிறித்தவ இலக்கியத்தில் சைவ வைணவ இலக்கியத் தாக்கம், சுதா பதிப்பகம், திருச்சி, 1991, ப.75.
9. சம்பந்தர் தேவாரம் 1.39.11, 3.1.11

குறவஞ்சியைக் காணாது புலம்புதலும் இறுதியில் இருவரும் ஒன்று சேருவது வரை உள்ளனவற்றை மூன்றாவது பகுதியாகவும் வேதநாயகரே பிரித்திருப்பதை 'முகவுரை'யில் காண முடிகிறது.

இசை நாட்டிய நாடக மரபுக்குரிய இசைப் பாக்களும் அமைந்துள்ளன. நாடகம் பார்க்கின்றவர்களுக்கு இயற்கையாகத் தோன்றுமாறு எளிய தமிழில் அக்காலப் பேச்சு வழக்கும் கலந்து இயேசுபிரானின் புகழைப் போற்றுமுகமாக ஆசிரியர் அமைத்துள்ளார்.

**யாப்பு**

இந்நூல், விருத்தம், தாழிசை, கழிநெடில், வெண்பா, அகவல், கலிப்பா, கலித்துறை, கட்டளைக் கலிப்பா, சிந்து, 64 அடிச் சிந்து ஆகிய இயற்றமிழ்ச் செய்யுள்களால் அமைகிறது.

**நூல் நுதலிய பொருள்**

எருசலை நகரில் இறைவன் இயேசுபிரான் 'கேரூபின்' எனும் வான்தூதர் மேல் கோவேறு கழுதை வாகனத்தில் உலா வருகின்றார். தேவர்கள், தேவ தூதர்கள், பன்னிரண்டு சீடர்கள், நகரிலுள்ள பெருமக்கள், மறைவல்லுநர்கள், வான நூலறிஞர்கள், பாவேந்தர்கள், மூவேந்தர்கள், மேய்ப்பர்கள் முதலானோர் சூழ்ந்து இன்னிசை பாடி வாழ்த்துகின்றனர்.

உலா வரும் தலைவனைக் காண மகளிர் தாம் செய்யும் பணிகளை அப்படியப்படியே விடுத்து வீதிக்கு வருகின்றனர். மங்கைப் பருவ வயதுடைய தேவமோகினி பந்தடித்து விளையாடிக் கொண்டே வீதிக்கு உலா வந்த பரமனைக் கண்டு காதல் நோய் கொள்கிறாள். இத்தலைவனுக்கு ஏற்ற தலைவி 'தானே' என்று பெருமை கொண்டு வெண்ணிலா, தென்றல், மன்மதன் ஆகியவற்றை வெறுத்துப் புலம்புகிறாள். மன்மதன் பழைய ஆதாமாக உருவகிக்கப்பெற்றுப் பழித்துரைக்கப் படுகிறான்.

இந்நிலையில் 'விசுவாச'க் குறவஞ்சி வருகிறாள். தேவ மோகினியின் வேண்டுதலுக்கேற்ப குறவஞ்சி தன்னைப்

பற்றியும், தன் நாடு, மலை, தலம் போன்றவற்றின் வளங்களையும் கூறுகின்றாள். தேசவளம், சாதிவளம், இயேசுபிரானின் பெருமைகள் முதலானவற்றைக் கூறியதன் பின்னர், தேவமோகினிக்குக் குறி சொல்கிறாள். குறி சொல்லும்பொழுது பாட்டுடைத் தலைவனின் குணநலன்களையும் அவர்தம் வாழ்வில் நிகழ்ந்த வியத்தகு நிகழ்ச்சிகளையும் கூறுகிறாள். முடிவில் தேவமோகினி பெத்தலகேம் நாதரை மணம் செய்து கொள்வாள் என்று குறவஞ்சி சொல்கிறாள். இதைக் கேட்டு மகிழ்ந்த தேவமோகினி பல பரிசுகளைக் கொடுக்கிறாள்.

மனிதர்களாகிய பறவைகளைப் பிடிப்பதற்கு ஞானமாகிய வலைக் கண்ணிகளைக் கொண்டு சிங்கன் வருகின்றான். இவனுக்கு உறுதுணையாக நூவனும் உடன் வருகின்றான். இருவரும் சேர்ந்து பறவைகளைப் பிடிக்கின்றனர். சிங்கன், தன்னைப் பற்றியும் தனக்குத் தெரிந்த பல்வேறு மந்திரங்கள், மூலிகைகளைப் பற்றியும் கூறுகிறான். சிங்கன் பறவைகளைப் பிடித்தாலும் சிங்கியைத் தேடுவதிலேயே கருத்தாக இருக்கிறான். நூவனிடம் சிங்கியின் அடையாளத்தைக் கூறுகிறான். அதன் பின்னர்ச் சிங்கன் சிங்கியைக் கண்டு கொள்கிறான். சிங்கி அணிந்துள்ள அணிவகைகளைக் கண்டு அவற்றை ஒவ்வொன்றாகச் சிங்கன் வினவுகிறான். இறுதியில் இயேசுநாதரின் சிறப்புக்களை எல்லாம் விளக்கிக் கூறி வாழ்த்துவதுடன் நூல் முடிகிறது.

**பாத்திரப் படைப்புகள்**

இயேசுபிரான், தேவமோகினி, குறவஞ்சி ஆகிய மூவரும் முதன்மைப் பாத்திரங்களாகவும் சிங்கன், நூவன் ஆகிய இருவரும் துணைமைப் பாத்திரங்களாகவும் இடம்பெறுகின்றனர். கட்டியக்காரன் மற்றும் பலர் கிறித்தவ சமயத்தைப் பரப்பும் நோக்கத்திற்காக ஆசிரியரால் படைக்கப் பட்டுள்ளனர்.

**இயேசுபிரான்**

இந்நூலின் பாட்டுடைத் தலைவராக எருசலை நகரிலுள்ள பெத்தலகேமில் பிறந்த இயேசுநாதர் கூறப்படுகின்றார். இயேசுபிரான் இப்பனுவலில் தலைவராக இருக்கின்றமை

யினால் அவருக்குரிய பல்வேறு பெயர்களைப் பாக்களில் வேதநாயகர் பயன்படுத்தி இருக்கின்றார். இயேசு, ஏசுநாதர், ஏசுராசன், கிறிஸ்தேசுநாதர் முதலான பெயர்களால் அழைக்கப்பெறுவதனைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. 'இறைவன்' என அழைத்தல்[10]
2. 'தலைவன்' என அழைத்தல்[11]
3. தாம் செய்த அற்புதச் செயல்களால் அழைத்தல்[12]
4. ஊர்ப்பெயரால் அழைத்தல்[13]
5. நாட்டினால் அழைத்தல்[14]
6. உடலுறுப்பால் அழைத்தல்[15]

மேலும் 'ஈசன்' (74), 'பரமன்' (3, 28, 146), 'மனுவேல்' (21, 157) என்றும் அழைக்கின்றார். 'கர்த்தர்' என்பதைப் பலவிடங்களில் வேதநாயகர் அழைத்திருப்பதையும் காணமுடிகின்றன. தேவமோகினி, குறவஞ்சி, குளுவன் போன்ற பாத்திரங்களின் கூற்றாகவும் ஆசிரியர்தம் கூற்றாகவும் இயேசுபிரானின் பெருமைகள், வரலாற்றுச் செய்திகளைக் காணமுடிகின்றன.

**பிறப்பும் வரலாறும்**

பெத்லகேம் நகரில் தாவீது அரசனின் கோத்திரத்தில்[16] கன்னிமரியின் குழந்தையாக மாட்டுக் கொட்டிலில் இயேசு நாதர் பிறந்தார். இதனை,

**'கன்னிமரி மகன்' (36)**
**'கன்னிமரி சேயன்' (8)**
**'கருணை மரியம்மையுட புத்திரன்' (66)**
**'மாட்டுக் கொட்டிலுக்குளற்புதாய்' (20)**

---

10. பெத்லகேங் குறவஞ்சி, பக். 4, 8, 44, 49, 68, 69.
11. மேலது, பக். 3, 6, 7, 17, 20, 69, 88, 113, 124, 135.
12. மேலது, பக். 3, 4, 18, 141.
13. மேலது, பக். 1, 2, 7, 8, 12, 17, 57, 86, 87, 90, 92, 107, 109, 111, 119, 136, 140, 143, 144, 147, 148, 157.
14. மேலது, பக். 6, 8.
15. மேலது, ப. 6.
16. மேலது, ப. 3.

'மாட்டுக் குடிலிலேயே னாட்டுத்துரை பிறந்து' (41)
'மாட்டுக் குடிலிற் பிறந்தோன்' (80)

என்ற பாடல் வரிகள் புலப்படுத்தும். 'சத்திய கிறிஸ்து' என்பது பெயர் (20). பல பாடல்களில் தாவீது அரசனின் குலத்தில் தலைவனாக எருசலையில் பிறந்தவன் என்றும் நாற்பது ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்தவர் (23) என்றும் கூறுகின்றார். சீனா மலையினில் இருந்தவ(23, 45)ராகிய இயேசுபிரானின் வரலாற்றைப் பல பாடல்களில் ஆசிரியர் கூறுவதனைப் பின்வருமாறு காணலாம்.

"இடையர்கள் பணிந்து வேண்டியதற்கிணங்க அவர்களின் குடிலில் கன்னி மரியாள் சூசை மனைவியின் வயிற்றில் விருப்பமுடன் பிறந்தார். வானவெளியில் இவர் பிறந்த நாளன்று வால்மீன் தோன்றி உலகிலுள்ளவர்களுக்குக் காட்டியது (24). இவர் பிறந்ததை வானவரும் மற்றவர்களும்,

"தாளத்தொனி கீதத்திசை சாயற்றிறமாக
மேளப்பலவீணைப்படி மேவிப்புகழ்பாடி

ஆதி வந்தனர் சோதி வந்தனர்
அமலர் வந்தனர் விமலர் வந்தனர்" (ப. 52)

என்று போற்றிப் பாடித் துதித்தனர்.

பன்னிரண்டு சீடர்களைத் தம் வாழ்க்கையில் பெற்ற இயேசுநாதர், யூதாசு என்ற சீடரால் 30 வெள்ளிக்கு யூதர்களிடம் காட்டிக் கொடுக்கப்பெற்றுத் (141) தலையினில் முள்முடி அணிவிக்கப்பெற்றது (105) முதலான பல இன்னல் களுக்கு ஆட்பட்டு இறுதியில் சேலை இல்லாமல் சிலுவை யைச் சுமந்து தம் உயிரைப் போக்கினார் (77, 80). வெள்ளிக் கிழமையன்று எள்ளளவும் இரக்கமில்லாமல் கபாலமலைக் குத் தள்ளிக்கொண்டு சென்று சிலுவையில் அறைந்தனர். இவரின் வலப்புறத்தில் அறையப்பட்ட கள்ளனையும் 'நினையும்' என்று சொல்லித் தம் உயிரைப் போக்கினார் (118). மலையிலுள்ள குழிக்குள் சென்று மூன்றாம்நாள் அக்குழியி லிருந்து உயிர்த்தெழுந்து இவ்வுலகத்தவருக்கு நல்லுரைகளை வழங்கினார் (28-29).

"உலகத்தைத் தோற்றுவித்த பின்பு 4,000 ஆண்டிற்கு முன்பு பன்னிரண்டு வயது நிரம்பிய பால பருவத்தை உடைய இருதுவாகாத கன்னிப்பெண் மைந்தனாக மானிட உருவம் கொண்டு பிறந்தார்" (16)

என்று கூறிய வேதநாயகர், அவர் பிறந்ததன் நோக்கத்தை,

"மனித உருவத்தை எடுத்துப் பெத்லகேம் எனும்
நன்னாட்டினில் பூமியில் இன்னமும் விழித்துக் காம
மயக்கம் கொண்டவர்கள் மனமும் குணப்படப்
போதிப்பதற்காகத் தானே வந்து பிறந்தான்" (24, 96)

என்றும்;

"ஏவாளை முன்பொருநாள் ஆதிசற்பம் எத்தினதால்
உண்டான பாவத்தைப் போக்குவதற்காக வந்
துதித்த பாத்திபன்" (151)

என்றும் கூறுகின்றார். மேலும் இயேசுபிரான் திருமுழுக்கு (தீக்கை) பெற்றதை,

"மட்டுடனாண்டு முப்பதும் விட்டுடன் மீண்டு, தீட்சை,
மார்க்கமும் பெற்றான் சீடர்க்குத் தீர்க்கமு முற்றான்" (24)

என்பதனால் அறியமுடிகிறது.

**திரியேகம்**

"கிறித்தவ சமயத்தில் இறைவன் பிதாவாகவும், குமாரனாகவும், பரிசுத்த ஆவியாகவும் இருக்கின்ற தன்மையைத் திரித்துவம், திரியேகம் (Trinity) என்று கூறுவர்."[17]

வேதநாயகர், 'திரியேகநாதன்' (8), 'திரியேக பராபரன்' (68, 69) என்று இயேசுபிரானின் திரியேகத் தன்மையைப் போற்றியுள்ளார்.

17. ப.ச.ஏசுதாசன், இரட்சணிய யாத்திரிகத்தில் கிறித்தவக் கோட்பாடுகள், சுதா பதிப்பகம், திருச்சி, 1981, ப.75.

**தசாங்கம்**

வேதநாயகர் இந்நூலின் பாட்டுடைத் தலைவனின் பத்து உறுப்புக்களாக மலை, ஆறு, நாடு, நகர், யானை, குதிரை, கொடி, மாலை, முரசு, செங்கோல் ஆகியவற்றை 104 கண்ணிகளில் கூறுகின்றார் (44-54). பொதுவாகக் குறவஞ்சி நூல்களில் குறத்தியின் வருகை கூறுமிடத்து, அவள் பாட்டுடைத் தலைவனின் தசாங்கங்களைப் பாடிக் கொண்டு வருவதாகக் காட்டுவது மரபு. வேதநாயகர் பாடியுள்ள இக்குறவஞ்சியிலும் குறத்தி வருகைப் பகுதியில் காணப்படுவது இவண் சுட்டத்தகும்.

பெத்தலேகம் நாதருக்குச் சீனாமலை, யோர்தான் ஆறு, கானான் எனும் கலிலேயா நாடு, நாசரேத் எனும் நகர், நீசவாகனமாகிய கழுதை என்ற வலிமை மிக்க யானை, மேகம் எனும் குதிரை, சிலுவைக் கொடி, தோத்திர ஞானச்சுப செபமாலை, ஏழு தூதர்கள் பூவுலகைச் சூழவே வானில் ஒலிக்கும் ஏழ்முரசு, மண்ணுள்ளோரையும் விண்ணுள்ளோரையும் மற்றும் உலகத்தவரையும் திண்ணமாய்ப் போற்றச் செலுத்தும் ஆணையாகிய செங்கோல் ஆகியவற்றை உடையவராகக் காட்டப்படுகின்றார்.

**இறைவன் குணங்கள்**

வேதநாயகர் 'மங்களம்' பாடும் பகுதியில் 'பத்திலட்சணத் தனுக்குச் சுத்தனுக்கு மங்களம்' (9) என்று போற்றுகின்றார். இவர் பாடிய 'செபமாலை' (ப. 196)யில் பத்து இலட்சணங்களாக ஆதியந்தமில்லாதவர், மாறாதவர், சருவத்துக்கும் வல்லவர், எல்லாவற்றையும் அறிந்திருக்கிறவர், அளவற்ற ஞானமுள்ளவர், எங்கும் நிறைந்திருக்கிறவர், சத்தியமுள்ளவர், பரிசுத்தமுள்ளவர், நீதியுள்ளவர், நன்மையும் கிருபையுமுள்ளவர் என்று கூறுவதையும் இவண் நினைக்கத்தகும்.

**பெருமைகள்**

நூலின் பலவிடங்களில் இயேசுபிரானின் பெருமைகள் போற்றப்படுகின்றன. அவை வருமாறு : -

துன்பம் செய்கின்றவர்களின் வஞ்சகச் செயல்

களை அழித்து வெற்றியைத் தந்து மனுவைக் காத்தவர் (12)

ஒட்டகத்தோலினை உடுத்தவர் (12)

யூதர்களின் தலைவர் (12)

நீசவாகனத்தை உடையவர் (16, 74, 91)

அனைத்துத் திசைகளையும் காத்தவர் (21)

உண்மையானவர்களுக்கு உண்மையானவர், அறிவுடையவர், விண்ணுலகில் தேவர்களுக்குத் தலைவர், மண்ணுலகில் அனைவருக்கும் பெரியவர் (21)

பன்னிரண்டு சீடர்களுக்குத் தலைவர், சுத்த வெண்மையான சந்திரனுக்குத் தலைவர் (22)

எளியவர்களின் துன்பங்களைப் போக்கியவர் (24)

தேவர்களுக்குத் தலைவர் (25, 72)

உலகமனைத்தும் புகழ்பவர் (33)

பன்னிரண்டு சீடர்கள் பரிவுடன் சூழக் கன்னி மரியாள் கருணையின் புதல்வர் (47)

நல்லவர்களுக்கு மோட்சம் தந்து ஆற்றுபவர் (51)

கருணை வடிவானவர் (62)

கனமுடைய யூதர்களின் அரசனாகிய இவர் இனிமையுள்ள சீடர்களின் குருவாக இருந்தும் அவர்களின் கால்களையும் கழுவினவர் (67)

அழகிய வெண்ணிற ஆடையை அணிந்தவர் (77)

அரிய மன்ன போன்ற பாதங்களை உடையவர் (6)

அந்தமும் ஆதியும் இல்லாதவர் (99)

தந்தை இல்லாத திருமகன், தந்தைக்கு ஒரு மகன், கலைமகன், முள்முடியைச் சகித்தவன், ஆதாமுக்குத் தலைவன், பெண் குலத்திற்குக் குழந்தை வடிவானவன், நேயனாய் உள்ளவன், வேதமறை சொன்னவன், உலகத்தின் முன்னவன், துன்பத்தை வென்ற மன்னவன் (158).

தேவமோகினிக்குக் குறி சொல்லவந்த குறவஞ்சி தெய்வத்தை வணங்கிக் குறி சொல்லும் பொழுது இயேசு பிரானின் பெருமைகள் பலவற்றை அடுக்கிக் கொண்டே சொல்கின்றாள். அவள் கூறியதன் சுருக்கம் வருமாறு :-

"பொன்னகர்க்குத் தலைவன், உலகத்தைக் காப்பவன், மன்னர் குலத்தில் வந்தவன், வானவர்களுக்கு உரியவன், ஆறு அழகு உடையவன், எட்டுக் குணங் களை உடையவன், மாறிலாத வரமுடையவன், மணி முடி அணிந்தவன், மந்திரத்திற்கடங்காதவன், குற்ற மில்லாதவன், மடிந்து பின்பு உயிர்த்தெழுந்தவன், அடியவர்களுக்கு உறவானவன், ஏகன், முப்பொரு ளானவன், பெண்களைப் படைப்பவன், பாத கமலங்களை உடையவன், அனைவர்க்கும் உணவு படைப்பவன், சிந்தனையைக் கடந்தவன்" (88-89)

பெத்தலகேம் நகரின் தலைவனாகிய இயேசுபிரானின் பெருமைகளைப் பாடலுடன் ஆடிக்கொண்டே, சுவிசேடச் சபை நடுவினில் பத்திக்கு வித்தாய் முளைத்த பராபரன் பாதத்தைப் பாடிக் கொண்டாடியே வருகின்றான் சிங்கன்; வானவர்கள் போற்றிய ஏகசக்கரவர்த்தி மாமறையைப் புகலிட மாக வைத்துக் கொண்டு நடமிட்டு வருகின்றான் (93-94).

**"அனையில்லா வனையுமில்லா ளப்பனுமில் லானுத்த,**
**மனையில்லான் மனையுமில்லான் மற்றொரு வஸ்துமில்லான்,**
**றனையில்லான் றனையனில்லான் சார்ந்தபெத் லேகர்நாட்டில்,**
**வினையில்லான்" (126)**

எனும் பாடலில் இறைவனின் பெருமைகளும்,

"தொடக்கமும் முடிவும் இல்லாதவனின் கிளையிலும் அன்னை இல்லை தந்தை இல்லை யாரும் இல்லை சாதி என்ற பெயரும் இல்லை ஊரும் இல்லை மக்களும் இல்லை இனமும் இல்லை தனயும் இல்லை பெண் களுடைய மயக்கம் இல்லை ஆசை இல்லை மைத்துனன்மார் மாமன் என்ற வகையும் இல்லை சொல்வதற்குத் தங்கை இல்லை தம்பி இல்லை" (68)

என்று குறவஞ்சி தலைவியிடம் கூறுவதிலும் அவனது அளவி லாற்றல் உடைய தன்மையையும் வேதநாயகர் கூறியுள்ளார்.

மறையோர் எழுதி வைத்த வார்த்தைகளின்படிக் கோவேறு கழுதை வாகனத்தின் மேலே ஏறி (90) இயேசு பிரான் உலா வந்த காட்சியை வேதநாயகர், "இயேசுபிரான் பொன்னினாலான கச்சைகளாகிய அங்கியை அணிந்து, வெண்ணிறமாகிய முடியைப் புனைந்து" வருவதாகக் கூறுகின்றார் (16). மேலும்,

> **"போதநாயகன் வந்தனன்ஐந்து, பூதநாயகன் வந்தன**
> **னாதநாயகன் வந்தனனெம, தாதிநாயகன் வந்தனன்**
> **றூதர்நாயகன் வந்தனன்றேவ, சோதிநாயகன் வந்தனன்**
> **வேதநாயகன் வந்தனனெ, வீதமாய் முரசொலிக்கவே" (17)**

என்றும் கூறுகின்றார்.

அடியவர்கள் மனத்தில் கொண்ட துன்பங்கள் பலவற்றை அகலுவதற்கு அருள் புரியும் கருணை வள்ளல் (18); என்றென்றைக்கும் அழியாத பொருளாய்த் திகழ்கிறார் (33); ஏழு விளக்குத் தண்டினான், எட்டு இலக்கணப் பெருக்கத்தான் (122).

**தேவமோகினி**

இந்நூலின் தலைவி. பாட்டுடைத் தலைவனாகிய இயேசுபிரான் ஒட்டகத்தோலுடுத்துக் கோவேறு கழுதை வாகனத்தில் திருவீதி உலா வந்ததை எருசலேம் நகரில் வாழும் பெண்கள் கண்டு அவனழகில் மயங்கிப் பலவாறு புலம்பு கின்றனர். அதன் பிறகே இந்நூலின் பாட்டுடைத் தலைவி அறிமுகமாகிறாள். 'தேவமோகினி' என்பதற்குத் 'தெய்வத்தை மோகிக்கிறவள் அல்லது அவரை விரும்புகின்றவள்' என்பது பொருளாகும். சிட்டசபை (சுவிசேட சபை) எனும் சீயோனின் மகளாவாள். இதனைச் 'சீயோன்குமரி' (41), 'சீயோன் மகள்',[18] 'சீயோன் றிருமகள்' (44) போன்ற தொடர்களாலும் 'சுவிசேடப் பெண்' (92) என்பதனாலும் அறியலாம்.

18 பெத்லகேம் குறவஞ்சி, பக் 27, 30, 33, 57, 58, 61, 68, 92, 138.

சாராள், ரேபக்காள் முதலான பெண்கள் தலைமையில் சீயோன் மகளாகிய தேவமோகினி மேடையில் தோன்று கிறாள். கானான் தேசத்தில் பிறந்தாள். எருசலையிலுள்ள சீயோன் மலையில் வாழ்ந்தாள். தாவீது வேந்தன் ஆட்சியில் மகிழ்ச்சியுடன் இருந்தாள். சீடர்கள் கூறும் நற்செய்திகளைக் கேட்டாள் (27). இவள் உடம்பு புடம் வைத்த பொன் போன்றுள்ளது. குணத்தில் ஞானி, வேதம் உணர்ந்த நெஞ்சினிலும் செபவிஞ்சை மறைகள் சொல்வதில் சிறந்தவள், கிளி அழகு எனும் சுபமேனியை உடையவள் (28).

'நாட்டியத்தரு' எனும் பகுதியில்,

**"சித்திரகூடச் செருச லைப்பதியி னுச்சித**
**சீயோன்மகள் வளம்பகர்வனே" (30)**

என்று தொடங்கித் தேவமோகினியின் பெருமைகளை வேத நாயகர் பின்வருமாறு கூறுகின்றார் (30-33).

"பெத்லகேம் நாட்டில் எருசலை நகரில் உறுதியுட னிருக்கும் பெண்ணாவாள். கல்வியில் வானோர்களுக்கும் மிஞ்சித் தலைசிறந்து பெற்ற வரத்தினை உடையவள். கர்மேல், விந்தையான மலை போலப் பொன்னாலான தலையினை உடைய அபரஞ்சியவள். மேகம் உலவும் காகத்தின் சாயல் போன்ற சிறந்த கொண்டையினை உடையவள். அழகிய மாடப்புறாவின் கண்கள் போன்ற பரந்த விழிகளை உடைய கெண்டைமீன் போன்றவள். தாமரைத் தண்டிலிருந்து வந்து லில்லி மலரின் சுத்தத்தின் வாசனை கொண்ட இதழ்களை உடையவள். குற்றமில்லாத 'பொன்' எனும் பட்டம் தரித்த நெற்றியை உடையவள். செஞ்சொற்களைப் பேசும் பெண் களும் புகழ்ந்து பாராட்டும் பருவத்தினை உடையவள். மங்கைப் பருவம் உடையவள்.

வில் போன்ற புருவம் கொண்டவள். முத்துப் போன்ற பற்களை உடையவள். வேத மேன்மை அனைத்தையும் கற்று ஞானம் அனைத்தையும் பெற்ற சொல்லினாள் உயர் லீபனோன் மூக்கினாள். எருசலை நகரின் அன்னத்தினாள். பெரிய தளையின் கனி வெடிப்பில் விளையும் உச்சியின் இருகன்னத்தினை உடையவள். தொல்லை தரும் உயிர்மரத்

தோட்டத் தலத்தின் முக்கிய சுகத்தினாள். தேவஒளிப் பிரபை தங்கும் நீதி அருள் பொங்கும் முகத்தினை உடையவள்.

தாவீது மன்னன் தந்த பொன் உருவம் போன்ற தந்தக் கழுத்தினை உடையவள். சீனாமலையில் அறைந்த இரண்டு பலகை நிறைந்த ஓவிய எழுத்தை உடையவள். பொன்னில் பதித்து மின்னும் தற்சீசின் இரத்தினம் போன்ற சிவந்த கைகளை உடையவள். மயக்கத்தை உண்டுபண்ணும் மான் கன்று என்று ஊன்று முந்திரிகைக் குலைக் கொங்கையாள். நினைக்கும் லில்லி மலர் சிறந்த கோதுமைப் பெருங்குவியல் போன்ற வயிற்றை உடையவள். கிறிஸ்துவின் உள்ளத்தைக் கட்டிக் கொண்ட கழுத்தைக் கிட்டக் கண்ட கண்டியாள். சின்னப்பதிதர் மனம் குன்னச் சுழிக்கும் உந்திச் சுழியினாள். எஸ்ப்போன் தேசப் பதராபீமின் வாசல் குளம் வளைந்த விழியினை உடையவள்.

தந்துச் சூத்திரக்காரன் விந்தை அணிகலம் என்ற இடையினை உடையவள். பார்வோன் மன்னனின் இரதத்தில் பூட்டப்பட்ட குதிரைப் படை போன்ற நடையினை உடையவள். அபரஞ்சிப் பொன் போன்ற ஆதாரத்தூணின் தொடையினாள். சந்தனம் மணக்கும் சித்திரத் தையல் உடையினாள். பழமையுடைய தந்தத்தில் நீலக்கல் பதித்த மேனியினை உடையவள். தேவசுருதி மறை அனைத்தையும் கற்ற அவதானியாள். நட்புடன் விளங்கும் லீபனோனின் பச்சைக் கர்ப்பூரத்திலிருந்து எழும் வாசனையின் சாயலை உடையவள்.

குற்றமில்லாத சங்கீத நேசத்து இலங்கும் செபமாலை யினாள். சால்மோன் செய்த ஆலயத்தில் எய்த கற்பனைப் பெட்டிப் பொற்பினாள். வேதம் முழுவதும் அறிந்து மோட்ச வழியும் தெரிந்த ஞானக்கலையினாள். தானத்து ஏசு சுதன் மானத்து அருள்நீதி எனும் ஆடையினாள். பல சாத்திரங்களில் சிறந்தவர்களைச் சூத்திரத்தினில் பிணிக்கும் சாடையினாள். மோனத் தேவ அனுபானத்துளி இறங்கும் தொண்டையினாள். கஸ்தூரி வாசனை உடையவள். மீன் போன்றவள்.”

இப்பகுதியில் ஞானம், தேவவாக்கு, நிதிக்கிருபை

போன்ற கிறித்தவச் சொற்களை வேதநாயகர் பயன்படுத்தியுள்ளார் திருச்சபையைத் தேவமோகினியாக உருவகித்து ஏனைய குறவஞ்சி நூல்களில் தலைவியின் கேசாதிபாத வருணனை காணப்படுவதைப் போல இதில் தலைவியின் கேசாதிபாத வருணனை மரபில் பாடியிருப்பது தெரிய வருகிறது.

நீச வாகனத்திலேறி உலா வந்த தலைவனைக் கண்ட தேவமோகினி அவன்மீது காதல் கொள்கின்றாள் அவன் பெருமைகளைக் கூறி அவனுக்குச் சரிநிகர் சமானமாகத் தான் விளங்குவதாகச் சத்தியசபை முன்பு பத்தியுடன் மந்திரம் ஓதிப் பண்புடன் சொல்கின்றாள். அவள் கூறியவை வருமாறு :-

> "ஒன்றுமில்லாத காலத்தில் நன்றாய்ப் பொருள் அனைத்தும் உண்டு செய்தவன் மேல் காதல் கொண்டேன். அன்று தாவீது அரசன் வாழும் எருசலை நாட்டின் சீயோன் பெற்ற மகளாகிய நான், என்றைக்கும் அறியாத பொருளாய் நின்ற பரம கிறிஸ்து ஏசுநாதருக்கு உகந்த குற்றமில்லாதவள் யான். வாசனை கமழும் கற்புக்கு அணிகலனாகத் திகழும் மரியாளைத் தாயாகக் கொண்டவருக்குப் பெரிய கனிக்கு இசைந்த தேவமோகினி நானே! ஏவாளின் மக்களும், லோத்தின் மனைவியும் பெண்களும், தேப்போறாள், இராகாப்பு முதலானோர் நெறி தவறிக் குற்றம் இழைத்தனர். ஆனால் யான் கற்போடு இருந்தேன்" (33-34).

கிறித்தவ வேதாகமத்தில் இடம்பெறும் பலரது வாழ்க்கை நிகழ்ச்சிகளில் குறிப்பாகப் பெண்கள் கற்புநெறியிலிருந்து மாறுபட்டு மனம் போன போக்கில் வாழ்க்கை நடத்தியதை வேதநாயகர் தலைவியின் கூற்றாக வைத்துப் பன்னிரண்டு பாடல்களில் கூறிச் செல்கின்றார். ஒவ்வொரு பாடல் முடிந்ததும் பைபிளில் உள்ள பகுதியை "1 மோ. 3:5; 19:26; 19:31-38" என்று மேற்கோள் காட்டியுள்ளார். தவறிழைத்த பெண்களைச் சுட்டிக்காட்டித் தான் அவர்களைப் போல எவ்விதத் தவறும் செய்யாமல் கற்புடைய பெண்ணாக இருப்பதாகவும் கூறித் தலைவன் தன்னை மணம் செய்து

கொள்ள வேண்டும் என்று கூறுவதாக இப்பகுதி அமைந்துள்ளது.

காதல் கொண்ட தேவமோகினி,

"பெண்களுக்குள் நான் ஒரு பெண்; மங்களமாகிய சீயோன் மகள் நான்; எனவே என்னைச் சுட்டு எரிக்க வேண்டாம்" (37)

என்று நிலவைப் பார்த்துப் புலம்புகிறாள். 'கருவம் கொண்டதனால் தேய்ந்து குறைந்து போனாய்' (37) என்று கூறி 'நீ பூமியோடு அழிந்து போவாய்' (38) என்று நிலவைப் பார்த்துச் சாபம் இடுகிறாள்.

உலகமாயையாகச் சந்திரனை உருவகித்து வேதநாயகர் பாடியுள்ளார். தேவமோகினி விரக வேதனையில் நிலவைப் பழித்ததோடு அதை அவள் தன் காலின்கீழே போட்டு மிதிக்கவும் செய்கிறாள்.

அடுத்துத் தனக்குத் துன்பத்தைத் தரும் தென்றலைப் பழித்துக் கூறுகிறாள்.

"தென்றலே! முக்காலத்தையும் உணர்ந்த முனிவர்களுக்குத் துன்பம் செய்தாய். நீ தீயினில் மூவரைப் போட்டுக் கொளுத்தினாய். நீ தானியேலைச் சிங்கக்குகையினில் பட்டு உருளச் செய்தும் அவன் அதிலிருந்து மீண்டான். அதேபோன்று மார்க் கெரேமியாவைக் கேணியில் தள்ளியும் அவன் மாய்ந்து விடாமல் தற்காக்கப்பட்டான். மேலும் போர் நடந்த போது யோசபாத்து தற்காக்கப்பட்டான். தென்றலே! கேணியில் யோசேப்பைப் போட்டதும், ஆணவம் கொண்டு இசரேலரின் பாலரைத் தண்ணீரில் அமிழ்த்திக் கொன்றதும், பல சீடர்களைக் கொன்றதும், வீணாக மாய்ந்தவர் கோடியில் கோடியே" (38-39).

தென்றலை உபத்திரவங்களாகிய காற்றாக உருவகப் படுத்தித் தேவமோகினி நாணலைப் போல் சாய்ந்து போவதில்லை என்கின்றாள்!

தேவமோகினி இறுதியில் தனக்குத் துன்பத்தைத் தருகின்ற மன்மதனைப் பழித்துரைக்கிறாள். வேதநாயகர் பழைய ஆதாமை மன்மதனாக உருவகித்துப் பழித்துரைப்ப தாகப் பாடியுள்ளார் இந்தப் பழைய ஆதாமிற்கு இவள் இடம் கொடுப்பதில்லை என்றும்,

> "சிறிது கருவம் கொண்டு பகைவனாகிய பேயுடன் உறவு கொண்டு சாத்தானின் பேச்சைக் கேட்ட தனால் கெட்டு அழிந்தாய். நஞ்சேறிய உனது முடியைத் தகர்த்து உடைக்க தேவன் வந்ததனால் நீ பெரிதும் துன்பத்திற்கு ஆளாவாய். கடவுள் தந்த வரங்களை இழந்து போவதற்குரிய செயல்களில் ஈடுபட்டதனால் உனக்கு அழிவு வந்தது. தாவீதின் துணையினாலும் மாட்டுக்குடிலில் பிறந்த துரையி னாலும் உன் கேட்டைத் தொலைப்பேன்" (39-41)

என்றும் வேதநாயகர் கூறுகின்றார்.

பிற குறவஞ்சி நூல்களில் தலைவன் உலா வரும் வேளையில் தலைவி பந்தடித்து விளையாடுவதாகக் காணப் படுகிறது. ஆயின், இக்குறவஞ்சியில் தலைவன் உலாவைக் கண்ட தலைவி 'அத்தலைவனுக்கு ஏற்ற தலைவி தானே' என்று மொழிவதும், நிலா தென்றல் மன்மதன் ஆகியவற்றை வெறுத்துப் புலம்புவதும் முடித்த பின்னர்ப் பந்தடிப்பதாக வேதநாயகர் மாறுபட்டு அமைத்துள்ளார் இப்பகுதியில் பந்துகளைப் புவன உருண்டை, வான உருண்டைகளாக உருவகம் செய்து வானியல் செய்திகளை ஆசிரியர் கூறிச் செல்கின்றார்

இந்நிலையில் குறவஞ்சி தோன்றி இயேசுபெருமானின் தசாங்கத்தையும், பெத்லகேம் நகரின் வளம், தன் பெருமைகள், மலைவளம், நாட்டுவளம், தலவளம், மனுடகுமாரன் குல வளம், கிறித்தவரின் மகிமை, வாசல்வளம், தேசவளம் போன்ற வற்றைக் கூறுகின்றாள். தேவமோகினியைக் கண்ட குறவஞ்சி அவள் விரும்பிய தலைவனின் பெருமைகள், ஊர், பெயர், அடையாளம் போன்றவற்றைக் கூறித் தலைவன் உன்னைத் திருமணம் செய்து கொள்வான் என்று கூறிப் பரிசுகள்

பலவற்றைத் தலைவியிடமிருந்து பெற்றுச் செல்கின்றாள்.

"விண்மீனைத் தலையில் அணிந்து, சந்திரனைக் காலில் அணிந்து, தயை சேர்ந்த ஞானச்சூரியனை ஆடையாக இடையில் அணிந்த சீயோனின் தோகை நல்லாள்" (77) என்றும், 'அறிவு பெற்ற சீயோன் மகளே' (79) என்றும், 'பன்னிரண்டு விண்மீன்கள் பூண்ட மனிதகுலப்பெண்' (81) என்றும், 'அறிவுள்ள கன்னிப் பெண்களுக்குள் திறமை பெற்றவள்' (83) என்றும், 'வான மண்டலம் போற்றும் வல்லவர் பெத்லேகர் மலையில் ஞானம் மிஞ்சும் சீயோனின் மகள்' (86) என்றும், 'யூதர் கோத்திரத்தில் தோன்றிய கன்னிப்பெண்' (90) என்றும் குறவஞ்சி தலைவியைப் போற்றிக் கூறுகின்றாள். மேலும் இவள் தலைவியின் கையைப் பார்த்துக் குறி சொல்லும்போது தேவமோகினியின் பெருமைகளாகக் கூறுவனவற்றைப் பின்வருமாறு கூறலாம்.

> "அள்ளியள்ளித் தருமம் செய்பவள்; கற்றவர்களுக்குப் பணிவிடைகள் செய்பவள்; தெள்ளுதமிழ்ப் பாவலர் களுக்குப் பரிசளிப்பவள்; இல்லாதவர்களுக்குக் கேட்டவற்றை எல்லாம் கொடுப்பவள்; ஏழைகளை ஆதரித்துப் போற்றுபவள்; நல்லவர்களைக் கண்டவுடன் தோத்திரம் சொல்லுபவள்; பாவி களுக்குச் சாபமிடுபவள்" (87).

### குறவஞ்சி

குறவஞ்சி,[19] குறத்தி (56), சிங்கி[20] என அழைக்கப்பெறும் குறவஞ்சியை வேதநாயகர் 'விசுவாசம்' என்பதற்கு உருவகப் படுத்திக் கூறுகின்றார். எனவே 'விசுவாசக் குறவஞ்சி' (55, 69), 'விசுவாசச் சிங்கி',[21] 'விசுவாசத்தின் சுந்தரி' (146) எனவும் அழைக்கப் பெறுவதைக் காணமுடிகின்றது. உலகம் போற்றும் குறப்பெண்ணாகத் (83) தன்னை அவளே கூறிக் கொள்கிறாள்.

---

19. பெத்லகேங் குறவஞ்சி, பக்.1, 2, 6, 29, 55, 57, 79, 83, 91.
20 மேலது, பக் 99, 101, 125, 132, 133, 138, 143, 144, 146, 147, 148, 150, 151, 153, 154, 155 156, 157.
21. மேலது, பக். 92, 131, 134, 144, 146, 147, 149

குறவஞ்சி நூல்களில் தலைவனிடம் தூது சென்ற தோழி திரும்பி வந்து குறத்தியின் வருகையைத் தலைவிக்குக் கூறுவதாக இடம்பெறுகின்றன ஆயின் இந்நூலில் குறத்தியின் வருகையை ஆசிரியர் நேரடியாகவே குறிப்பிட்டு விடுகிறார்.

சீயோன் பெண் துன்பப்படும் வேளையில் மணிக்கூடை, மாத்திரைக் கோல் கையில் வாங்கிச் சுத்தம் மிகும் சத்தியசபை பெத்தலேம் குறவஞ்சி தோன்றியதாக (44) ஆசிரியர் குறிப்பிடுகின்றார். இவள் மலை, ஆறு, நாடு, நகர், யானை, குதிரை, கொடி, மாலை, முரசு, செங்கோல், பெத்தலகேம் வளம் ஆகியவற்றைக் கூறி வருகின்றாள்.

> "வெண்மை நிறமுடைய ஆடையை அணிந்துள்ளாள். நீண்ட கூந்தலை அள்ளி முடித்துள்ளாள். நெற்றியில் பட்டம் கட்டியுள்ளாள். உடலில் பச்சை குத்தி நெற்றியில் வட்டமாகத் திலகமிட்டுள்ளாள். பல வண்ணம் கொண்ட பாசியை அணிந்துள்ளாள். பொன்னாலாகிய கச்சையை அழகிய முலைகளின் மேல் அணிந்துள்ளான். விழிகளில் மை தீட்டிக் கைகளில் வளையல் அணிந்துள்ளாள். காதினில் இரத்தினத்தினாலான ஒலை அணிந்துள்ளாள். சங்கு பாசிகளும் தனிக்குன்றிவடமும் புங்கவெண்முத்தும் அழகுற அணிந்துள்ளாள். இடுப்பில் கூடையைச் சுமந்து வலக்கையில் மாத்திரைக்கோலைப் பிடித்து வருகின்றாள். பார்க்கின்ற அனைவரும் 'தெய்வப் பெண்ணோ' என்று அதிசயிக்கும்வண்ணம் வீதியில் நடந்து வருகின்றாள்" (54).

தலைவன் ஏசுநாதர் மீது காதல் கொண்ட சீயோன் மகளுக்கு நல்ல குறிகள் சொல்வதற்காக,

> "நீதியினாடை யதணிந்து, ஞானாபரண
> வேதசெப மாலைபுனைந்து, மெஞ்ஞானமுட
> னாதிய மலனைப்பணிந்து, சத்தியமறை
> யோதுநெறி யாலைதுணிந்து, வெகுவிதமாய்க்
> காதினிற் பணிகளிட்டுக், கர்த்தனின் சபைக்குட்பட்டுச்
> சாதியின் மதத்தைவிட்டுச், சற்குரு பதத்தைத்தொட்டு" (57)

குறவஞ்சி வருகின்றாள். இவள் இருக்கும் மலையின் வளத்தை முதலில் கூறுகின்றாள்.

"வானவர்கள் கூடிவந்து தோத்திரங்கள் படிப்பார்,
வண்மையுள்ள சித்தரெல்லா மருந்தவங்கள் பிடிப்பார்,
ஞானமுடன் முல்லைநிலத் தலைவர்வந்து தொழுவார்,
நட்சேத்திரச் சாஸ்திரிகள் காணிக்கைகள் தருவார்,
தானதர்ம மேழைகட்கு யாவர்களுங் கொடுப்பார்,
சண்டாளப் பாவமெல்லா மண்டாது தடுப்பா,
ரீனமுள்ள பேய்க்கணங்கள் மயங்கியங்கே துடிப்பா,
ரேகன்மனு வானவெல்லை யெங்கள் மலையம்மே" (58)

இயேசுபிரான் ஏதன்மலை, ஒலிவமலை, பெத்லகேம் மலை, சீனாமலை, சீயோன்மலை ஆகிய மலைகளில் நிகழ்த்திய அற்புதச் செயல்கள், மலைப்பொழிவுகள் போன்றவற்றைக் கூறிய குறவஞ்சி, "தீட்சை பெற்றவர்களுக்குத்தான் எங்கள் பெண்ணையும் பிற தேசத்திலுள்ள மலைகளையும் சீதனமாய்க் கொடுப்போம்" (61) என்று கூறுகிறாள்.

இவள் வாழும் பெத்லகேம் நாட்டில் நீதிநெறி தவறாமல் மன்னர் ஆட்சி செய்து வருகின்றார்; நாவலரும் பாவலரும் ஞானியர்களும் பெருமையுடன் வாழ்கின்றனர்; எளிமையுள்ளவர்களும் நித்திய வாழ்க்கையை உடையவர்களாகத் திகழ்கின்றனர்; தானதர்மங்களும் அறங்களும் செழித்தோங்குகின்றன (62-63). இத்தலத்தில் பால்நதியும் தேன்நதியும் ஓடும்; தீர்க்கதரிசிகளும் முனிவர்களும் சித்தர்களும் பொருள் உரைத்த பெருமை உடையது; இத்தலத்திலேயே இறைவன் பாடுபட்டு மரித்து உயிர்த்தெழுந்தார் (64).

கானான், இசரேல், யூதேயா முதலான பல்வேறு தேசங்களின் வளத்தைக் (75-76) கூறிய குறவஞ்சியிடம் தேவமோகினி சில விடுகதைகளைக் கூறி அதற்கு விடை பகரும்படிச் சொல்கிறாள். இச்சோதனையில் குறவஞ்சி வெற்றி பெற்ற பின்னரே அவள் கற்ற வித்தையைக் கூறுமாறு தலைவி கேட்கிறாள். அதன் பிறகு குறவஞ்சி தாம் கற்ற தந்திர வித்தை, மந்திர வித்தை, வினோத வித்தை முதலான பல வித்தைகளையும் (79-81), தான் பல நாடுகளுக்குச் சென்று பலருக்கும் குறி சொல்லிப்

பெற்ற பரிசுகளையும் (81-82) கூறுகின்றாள். இறுதியில் தேவமோகினியைப் பார்த்துக் குறி சொல்கின்றாள். 'தான் சொல்லும் குறி பொய்க்காது' (87) என்று கூறி, தேவமோகினி விரும்பிய தலைவனைப் பற்றியும், அவன் பெருமைகளைப் பற்றியும், அவன் வந்து மணமுடிப்பதைப் பற்றியும் குறி சொல்லித் தலைவியிடமிருந்து வேண்டிய பொருள்களைப் பரிசாகப் பெறுகிறாள் (90-93).

சிங்கியைக் காணாமல் சிங்கன் அவளைப் பலவிடங்களிலும் அலைந்து தேடித் திரிகிறான். பறவைகளைப் பிடிக்கும் சிங்கன் நினைவெல்லாம் சிங்கியின் மேலேயே இருக்கிறது. பெண், பெண் நல்லாள், பேதை, கன்னி, கட்டழகிச் சிங்கி, விசுவாசச்சிங்கி, தேவி (132-134) என்று சிங்கன், சிங்கியைப் பற்றிக் கூறுகிறான். மாடப்புறா, குயில், அன்னப்பேடை முதலான பல பறவைகளின் சாயலில் சிங்கி இருப்பதாகவும் இப்பறவைகளை எல்லாம் பார்க்கும் பொழுது சிங்கனுக்கு அவள் நினைவே திரும்பத் திரும்ப வருவதாகவும் புலம்புகிறான். ஏசுபிரான் மீது விசுவாசமும் மயக்கமும் கொண்டவளாகச் சிங்கியைப் பற்றிச் சிங்கன் கூறுகிறான். 'எங்கே எங்கே பார்த்தாலும் அவளைப் போல் கண்ணுக்குள் இருக்கிறு' (147) என்று கூறிய சிங்கனிடம், 'சிங்கி அடையாளம் என்ன' என்று அவன் நண்பன் கேட்கிறான். அதற்குச் சிங்கன், "சுத்த மயில் அழகி, பெத்தலேகநாதர் அருள் விஸ்தரித்த மாது, கூடை கையிலே மாத்திரைக்கோல் ஒன்று உய்யவே பிடித்திருப்பள், பையவே நடப்பள், விசுவாச மாது" (147-148) என்று கூறி அவளைக் கண்டுபிடித்துத் தருபவர்களுக்குப் பலவகையான மருந்துகளையும் வித்தைகளையும் தருவதாகச் சொல்கிறான் (149-150). இறுதியில், "நாலாவினோதக்காரியும் சந்திரன் முகத்தைக் கொண்டவளுமான அவள் என்னை மறந்துவிட்டு யாரைத் தேடிப் போனாளோ? கண்ட கண்ட இடமெல்லாம் கத்திக் கத்திக் குறி சொல்லிச் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறாளோ?" (150) என்று புலம்புகிறான்.

இறுதியில் சிங்கியைக் கண்ட சிங்கன் பெருமகிழ்ச்சி கொண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிகிறான். பின்னர் இருவரும் உரையாடி மகிழ்கின்றனர். பெத்தலேகநகரில்

வாழும் சீயோன் குமாரிக்குக் குறி சொல்வதற்குச் சென்றதாகச் சிங்கி அவனிடம் கூறுகிறாள். அவள் அணிந்துள்ள அணிகலன்கள் ஒவ்வொன்றைப் பற்றியும் வினவுகிறான். இறுதியில் இருவரும் பெத்லேகநாதரைப் பாடிப் பணிந்து வணங்குகின்றனர்.

**சிங்கன்**

குழுவன் (101, 151), குறப்பயல் (94), சிங்கன்[22] ஆகிய பெயர்களால் அழைக்கப்படுகிறான். நூலின் பிற்பகுதியில் இவன் வருகிறான்.

ஏசுவின் புகழைப் போற்றித் தாளத்துடனே பாடி ஆடிச் சபை நடுவில் ஞானச்சிங்கன் வருகின்றான். ஆகமத்தின் பயனை எல்லாம் உணர்ந்து அறிந்து பெத்லேக மலையில் சிங்கன் வாழ்கின்றான்.[23] பலவகை மந்திரங்களைக் கற்றுத் தேர்ந்தும் மூலிகைகளின் பெருமைதனைத் தெரிந்த சிங்கன் வலையைக் கையினில் பிடித்துக் கொண்டு தன் நண்பன் நூவனுடன் வருகின்றான். இருவரும் சேர்ந்து பல நாடுகளிலிருந்து வந்த மாடப்புறா, மயில், சாகாக்குருவி, வானம்பாடி, வல்லூறு, இராசாளி முதலான பல பறவைகளைக் காண்கின்றனர்; அவற்றை வலை வீசிப் பிடிக்கின்றனர். இவர்கள் விரித்த சுவிசேட வலைக்குள் மெய்ஞ்ஞானப் பறவைகள் அனைத்தும் சிக்கியதை,

> "பெத்தலேம்பதி
> வித்தகன்சுவி சேடவலைக்குள்ளே,
> செழித்த மெஞ்ஞானப் பட்சிகள் முச்சூடுஞ்
> சேரவந்துபட்டுக் கிட்டுக் கத்திக்கத்தி" (126)

விழித்ததாகப் பாடுகின்றார் ஆசிரியர்.

இவ்வாறு பறவைகளைப் பிடித்துக் கொண்டிருக்கும் பொழுது விசுவாசச் சிங்கியின் நினைவு வந்து சிங்கன் அவளைத் தேடத் தொடங்குகிறான். அவள் உருவம்,

22 பெத்லகேம் குறவஞ்சி, பக். 93, 99, 100, 105, 121, 131, 146, 153.

23. மேலது, ப 98.

அணிந்துள்ள அணிகலன்கள் முதலானவற்றை நினைந்து நினைந்து பறவைகளைப் பார்த்துப் புலம்புகிறான். பல திசைகளுக்கும் பறந்து சென்று திரியும் பறவைகளே எங்கேயாவது என் கட்டழகிச் சிங்கியைக் கண்டதுண்டா? எனக் கேட்கிறான். இதுநாள்வரைக்கும் தன்னை விட்டுப் பிரியாதிருந்த அவள் பிரிந்து சென்றதை நினைத்த சிங்கன்,

> "அன்னப் புறாவுக்குக் கண்ணியை வைத்துநான்
> வன்ன மயிலுக்குப் போனேன்
>
> வன்ன மயிலுங் குயிலும் படுத்துதுதன்
> பொன்னான சிங்கியைக் காணேன்
>
> தின்னச் சிறகிக்குக் கண்ணியை வைத்துநான்
> சின்னக் குருகுக்குப் போனேன்
>
> சின்னக் குருகுங் கிளியும் படுத்துதென்
> கன்னிகைச் சிங்கியைக் காணேன்" (143)

எனப் புலம்புகிறான்.

இறுதியில் சிங்கன், சிங்கியைக் கண்டு அளவிலா ஆனந்தம் கொண்டு அவளுடன் உரையாடி மகிழ்கிறான். அவள் பலவிடங்களுக்கும் சென்று குறி சொல்லிப் பரிசுகள் பெற்றதை ஒவ்வொன்றாக விவரித்துச் சொல்கிறாள். இருவரும் கூடிக் குலாவி உலாவிப் பெத்லேகரைக் கும்பிடுகின்றனர்.

**நூவன்**

நூவன்,[24] மறைப்புலி நூவன்[25] என்றழைக்கப்பெறும் நூவன், சிங்கனின் நண்பனாக வருகின்றான். மனுவைப் பிடிக்கும் வலையைத் தூக்கிச் செபமாலை கணக்க மார்பிலணிந்து வருகின்றான்; இவன் சுற்றும் பிசாசுக்குப் பகைவன்; சிங்கனுக்குத் தோழனைப் போலச் சிங்கிக்கும் தோழன்; உபதேசி; சிங்கனுடன் சேர்ந்து கிறித்துவைப் போற்றித் துதிக்கிறான்; குழுவன் பறவைகளைப் பிடிக்கும்பொழுது

24. பெத்லகேங் குறவஞ்சி, பக்.98,123,129,131.
25. மேலது, பக் 98,100,105,121.

கூடவே நின்று கணக்கைக் குறித்திடுகிறான்; பல நாடுகளிலிருந்து பெத்லேகர் நாட்டிற்கு வருகின்ற பறவைகளைப் பற்றிச் சிங்கனிடம் கூறுகிறான். இப்பறவைகளைப் பிடிப்பதற்குக் 'கண்ணி' கொண்டு வருகிறான். தேவசுதனைப் பணிந்து வணங்கிப் பறவைகளைப் பிடிக்குமாறு சிங்கனிடம் கூறுகிறான். பிடித்த பறவைகளை எல்லாம் கணக்கிட்டு ஏசு சீடர்களுக்கெல்லாம் பங்கு போட்டுக் கொடுக்கும்படியும், சுவிசேடத்தை வாசித்துப் படிக்கும்படியும், சாத்தானை அடிக்கும்படியும் சிங்கனிடம் (125-126) கூறுகிறான். சிங்கியைக் காணாமல் தன்னிடம் புலம்பும் சிங்கனுக்கு ஆறுதல் கூறுகிறான்.

நூவன், சிங்கனுக்கேற்ற உற்ற நண்பனாக, துணைவனாக இடம் பெறுகிறான்.

**ஏனையோர்**

நாடகத்தைத் தொடங்கி வைப்பதற்குக் 'கட்டியக்காரன்' வருவது குறவஞ்சி நாடக மரபாகும். இந்நாடகத்தில் இடம் பெறும் கட்டியக்காரன் 'யோவான் முனிவ'ராவர். 'அருளப்பன்' எனும் இக் குருமுனி யோவான் (15),

> "இவ்வுலகில் வாழ்கின்றவர்களுக்கு ஞானதீக்கை கொடுத்து, சுவிசேட நெறிகளைக் கூறி, நல்லனவற்றைத் தரும் கனி கொடுக்கும் மரத்தை நட்டு, கனி நல்காத மரத்தை வெட்டி முனிவர்கள் எழுதும்படி ஏசுநாதர் வரவிருக்கின்றார்"

என்று கட்டியம் கூறுகின்றார். அதன் பின்னர், அனைத்துத் திசைகளையும் காத்த ஏசுபிரான் தெய்வீக உலா வந்த காட்சியைக் குறித்து அனைவரும் அறியும்பொருட்டுச் சொற்பொழிவு செய்கின்றார். இப்பொழிவில் இயேசு பிரானின் பிறப்பு, வரலாறு, பிறப்பின் நோக்கம், பெருமைகள் முதலானவற்றை எடுத்துரைக்கின்றார் (21-24).

அதேபோன்று நாடகத்தை அறிமுகம் செய்து விளக்கம் கொடுத்து நாடகத்தை நடத்துகின்ற 'சூத்திரதாரன்' எனும் பாத்திரமும் இடம்பெறவில்லை. பொதுவாகக் குறவஞ்சி

நாடகங்களில் இடம்பெறும் இப்பாத்திரத்தை ஆசிரியரே ஏற்றுச் செய்வதும் மரபாக இருந்து வருகிறது. நாடகத்தில் வருகின்ற பாத்திரங்களையும், கதை நிகழ்ச்சிகளையும் நடத்திச் செல்வதாக அமையும் இப்பாத்திரம் உரைநடையில் பெரும்பாலும் அமைந்திருக்கும் வேதநாயகர் 'சூத்திரதாரன்' என்ற தனியொரு பாத்திரத்தை உருவாக்கவில்லை. அதற்கு மாறாகப் பாத்திரங்களையும், கதை நிகழ்ச்சிகளையும் சொல்லும் பகுதியாக 'விருத்தம்', 'கலிப்பா' ஆகியவற்றை அமைத்துக் கூறிவிடுகிறார். இப்பகுதி முழுவதும் பாடல் வடிவிலேயே உள்ளதும் குறிப்பிடத்தகும்.

இயேசுபிரானின் பெருமைகளைக் கூறவந்த நூலாதலின் அவர்தம் வாழ்வோடு இணைந்த அற்புதச் செயல்களில் இடம்பெற்ற ஆபிரகாம், இசராவேல், இம்மானுவேல், ஈசாக், எலியா, சாமுவேல், தாவீது, யாக்கோபு முதலானோரைப் பற்றியும் பலவிடங்களில் கூறியுள்ளார்.[26]

'கன்னிமரியாளின் மகனாக இயேசுபிரான் உதித்தார்' என்பதைக் கூறுகின்ற இடங்களில் கன்னி மரியாள் இடம் பெறுகின்றார். ஒரேயொரு இடத்தில் மட்டும் (24) சூசை மனைவி கன்னி மரியாள் என்கின்றார். அதேபோன்று பல ஆண்டுகள் தங்கள் மகனைக் காணாமல் சூசையும் (44), கன்னி மரியாளும் (36) தேடி அலைகின்றனர்.

நூலின் பாயிரப் பகுதியில் தமக்கு ஆசிரியராகவும், குருவாகவும் இருந்த சுவார்ச்சையரையும், கோலோப்பையரையும் வேதநாயகர் நன்றி உணர்வுடன் கூறியிருக்கின்றார்.

## இன்னிசை நாட்டியப் பனுவல்

இக்குறவஞ்சிப் பாடல்கள் 'எந்த இராகத்தில், எந்தத் தாளத்தில் பாடவேண்டும்' என்பதனை நூலாசிரியரே வகுத்துக் கூறுகின்றார். இசைப்பா வகையான 'சிந்து' என்பதில் 25 பாடல்களும், இசைப்பாட்டு வகையான 'தரு' என்பதில் 20 பாடல்களும் பாடப்பெறுகின்றன. ஒரேயொரு

26. காண்க : பின்னிணைப்பு எண் 3.

*பாடலில் மட்டும் 'இராகம் - சுருட்டி' (40) என்று காணப்படுகிறது. சில பாடல்களில் தொடங்கும்பொழுது காணப்படும் 'சுரக்குறிப்பு' வருமாறு :*

1) **நன்னனா நன்ன நானன்ன நானன்ன**
**நானன்னா நன்ன நானன நான** **(61)**

2) **நானநன்னநன்ன – நானநன்ன** **(72)**

3) **நானநன்னநானநன்ன – நானநன்ன** **(72)**

4) **நன்னநன்ன நானநன்ன நானநன்ன நானநன்னநானா,**
**நன்ன, நானன நானன நானன நானன நானன நானன**
**நானன நானன நானா** **(77)**

5) **நானநன்ன நன்னநான நன்னநன்ன,**
**நானநன்ன நானநன்ன நானநன்ன** **(85)**

6) **நன்னன நானானா நனநன, நன்னன நானானா,**
**நன்னன நனானா நனநன, நன்னன நானானா** **(131)**

7) **நன்னன நானன நானன நானன நானா, நன்ன,**
**நானன நானன நானன நானன நானா** **(134)**

*சிறந்தொரு இசை நூலாகப் படைத்த ஆசிரியர் மேடையில் இசையுடன் பாடி நாட்டியமாக நடிப்பதற்கேற்ற முறையிலும் உரிய சுரதாளக் குறிப்புகளுடன் இயற்றியிருப்பதையும் காணமுடிகிறது.*

*தேவமோகினி பந்தடித்து விளையாடிய திறத்தைச் சொல்லவந்த வேதநாயகர்,*

> **"தினதினானத் தினதினானத் தினதினானத் தினதினா,**
> **தென்னா தெந்தினத் தென்னா தெந்தினத் தென்னா**
> **தெந்தின தினதினா"** **(41)**

*என்ற தாளக் குறிப்பைக் கொடுக்கின்றார். 'நாட்டியத்தரு' என்ற தலைப்பில் சீயோன் மகளின் வளத்தையும், 'சிங்க நடனச்சிந்து' என்ற தலைப்பில் பெத்லேக மலையில் வாழும் குறவஞ்சியின் வருகையையும் கூறுகின்றார்.*

*குறவஞ்சி வாழும் மலையின் வளத்தைக் கூறவந்த*

வேதநாயகர் 'குறத்தரு' எனும் பகுதியில்,

"தினதேந்தினத் தினதேந்தினத் தினதேந்தினத் தினனா,
தெந்தேந்தினத் தெந்தேந்தினத் தெந்தேந்தினத் தினனா" (58)

என்ற தாளக் குறிப்பைத் தருகின்றார்.

இவைபோன்று பிற இடங்களில் இடம்பெறும் தாளக் குறிப்புகள் வருமாறு :

1) தினதேந்தினத் தினதேந்தினத் தினதேந்தினத் தினனா
தெந்தேந்தினத் தெந்தேந்தினத் தெந்தேந்தினத் தினனா
(64, 66, 69)

2) தானானே தானானே தானாதந்தனத் தானானே (75)

3) தெந்தினா தினாதின்னா தென்னா தெந்தினா, தின
தெந்தினா தினாதின்னா தென்னா தெந்தினா (83)

4) தினதேந்தினத் தினதேந்தினத் தினதேந்தினத் தினனா
தினதேந்தினத் தினதேந்தினத் தினதேந்தினத் தினனா (87)

5) தெந்தினா தினாதினனா தெனனா தெந்தினா, தின
தெந்தினா தினாதினனா தெனனா தெந்தினா (90)

6) தினதினா னத்தினதினானத் தினதினானத்தினதினா,
தென்னா தெந்தினத் தென்னாதெந்தினத் தென்னா
தெந்தினத் தினதினா (121)

7) தானாதந்தனத் தனத்தனாதன தானாதந்தனத் தனத்தனா
தானாதந்தனத் தனத்தனாதன தானாதந்தனத் தனத்தனா
(123)

8) தந்தனத்தான தனாதன தந்தனத் தானாதன
தந்தனத்தான தனாதன தந்தனத் தானா (138)

நூவன் "தாதித்திமி தோதித்திகு, தானத்தன தாளத் தொனி ராகத்தியல் சாதித்து" (98) வருகின்றான்.

குறவஞ்சி, "காண்பவர் உள்ளம் மகிழும்படியாகப் பல நடனம் செய்து" (45) வருகின்றாள். "வேத மங்கள கீதம் முழங்கிட, அன்பு சொரிந்து துன்பம் அகலப் பல பெண்கள்

நடனமிட்டுச் சதிரொடு கொஞ்சி இருபுறமும் நடந்துவரக்'' குறவஞ்சி வருகின்றாள் (55).

தேவமோகினி இசை ஞானப் பதங்கள் பல பாடிப் பரமன் சபையை நாடி வருகிறாள் (28). அதேபோன்று சிங்கியும் சத்திய சபையை நாடிக் கிறித்துவின் பரிசுத்த மொழியுடன் கூடிச் சங்கீதம் சொல்லிப் பத்தியுடன் பதம் பாடி வருகிறாள் (58).

வானவர்கள் ஆடியும் கீர்த்தனங்கள் பாடியும் இயேசு பிரானைப் போற்றுகின்றனர் (8, 52).

> ''சங்கீதம் சொல்லும் பாட்டகரின் சபை நிறைந்த வாசலிது. தாளங்களும் சித்திர நரம்பிசைக் கருவிகளும் பெரும் எக்காளங்களும் முழங்கும் வாசலிது. மங்களம் சேர் கவிராயர் மகிழ்ந்திருக்கும் வாசலிது. பேரிகையும் முழங்கப் பூரிகையும் விளங்கப் பெண்கள் நடனம் செய்யும் வாசலிது. வாசனை கொண்ட பெண்கள் நடமாடி வரும் வாசலிது. வாத்தியங்களும் சங்கீர்த்தனங்களும் நித்திய தோத்திரங்களும் பெருகும் வாசலிது'' (73)

என்று குறவஞ்சி கூறும் வாசல் வளத்தில் இசை, நடனக் குறிப்புகளைக் காணமுடிகின்றன.

குளுவன் பறவைகளை வலைவீசிப் பிடிக்கும்பொழுது,

> ''இயேசுபிரானின் பெருமைகளை அடித்துப் பறையடா; வேதநாயகனைப் போற்றடா; அவர் மேலே பதங்களைச் சாற்றடா; ஞானப்பதங்களைச் சொல்லி மூட்டடா; கர்த்தரின் செபத்தை ஓதடா; தூதர் காளத்தை வாங்கிக் கொண்டு ஊதடா'' (123-124)

என்று தன் நண்பன் நூவனிடம் கூறுகின்றான்.

எக்காளம் (73, 124), நரப்பிசைக் கருவியான கின்னரம் (73), முல்லை நிலத்திற்குரிய பம்பை (47), பறை (12, 23, 26), பேரிகை (73), முரசு (17), வீணை (52) ஆகிய இசைக் கருவிகளை வேதநாயகர் ஏற்றவிடங்களில் பயன்படுத்தியுள்ளார்.

**நாடக நூல்**

இந்நாடகத்தின் முடிவு மகிழ்ச்சியில் முடிவதனால் 'இன்பியல் நாடக'மாக இக்குறவஞ்சியைக் கூறுவது பொருந்தும். கட்டியக்காரன், தேவமோகினி, குறவஞ்சி, சிங்கன், நூவன் ஆகியோரையும் தலைவன் உலா வருகின்ற காட்சியையும் ஆசிரியரே அறிமுகப்படுத்துகின்றார். தலைவியை அறிமுகப்படுத்தும் பகுதி மட்டும் கழிநெடிலிலும் ஏனையவை விருத்தத்திலும் அமைகின்றன. தன் கூற்றிலும் பிறர் கூற்றிலும் அவ் அறிமுகப்பகுதி அமைகிறது. குறவஞ்சி, சிங்கன், நூவன் ஆகியோர் தாங்களே பேசுவதாகப் பாக்கள் அமைகின்றன. குறவஞ்சியைப் பிரிந்து வாடும் சிங்கன் தனியே புலம்புகின்ற தனிமொழிப் பாடல்களும் இடம்பெறுகின்றன.

பெத்லகேம் நாட்டில் எருசலை நகரில் இயேசு பெருமான் கோவேறு கழுதை வாகனத்தில் வீதியுலா வந்ததைக் கண்ட தேவமோகினி, அவர் மேல் காதல் கொள்கிறாள். அவள் உள்ளத்தில் காதலால் எழுந்த இச் சிக்கலிலிருந்தே கதை தொடங்குகிறது.

தலைவன்மீது காதல் கொண்ட தலைவி, விரக வேதனையைத் தாங்க இயலாமல் வெண்ணிலா, தென்றல், பழைய ஆதாமென்ற மன்மதன் ஆகியவற்றைப் பழித்துரைக்கிறாள். இங்ஙனம் காதலின் வளர்ச்சிநிலை படிப்படியாகத் தேவமோகினி புலம்புவதன் மூலம் விளக்கப்படுகிறது. விசுவாசக் குறவஞ்சி வந்து தன்னைப் பற்றியும், பல வளங்களையும் கூறத் தொடங்கித் தலைவியின் மனக்குறை தீரும் வகையில் அவளுக்கு ஆறுதல் கூறுகிறாள். இதுவே காதலின் வளர்ச்சி நிலையில் உச்சநிலையாகும். பல வளங்களைக் கூறிய குறவஞ்சி, தலைவியின் உள்ளத்தைக் கவர்ந்த தலைவனின் குணநலன்கள் போன்றவற்றைக் கூறுகிறாள். குறத்தி வந்து நற்பலன்களைச் சொல்லத் தொடங்கிய உடனேயே இந்நாடகம் இன்ப முடிவை நோக்கி வீழ்ச்சி அடையத் தொடங்குகிறது.

கதைக் கோப்பின் சிக்கல் தீர்க்கப்பெறுவது முடிவுநிலையாகும். தலைவனை மணம் செய்து கொள்வாள் என்று குறத்தி சொல்லியதைக் கேட்ட தேவமோகினி உளமுவந்து பல பரிசு

களைக் கொடுக்கிறாள். இவ்வாறு இந்நாடகத்தில் காதலில் தோன்றிய சிக்கல் நீங்குவதாகக் காட்டப்பெறுகிறது.

இந்நாடகத்தில் அறிமுகம், வளர்ச்சி, உச்சம், வீழ்ச்சி, முடிவு ஆகிய ஐந்து பகுதிகளும் அமைகின்றன. மேலும் நாடகத்திற்குத் தேவையான கதைப் பாத்திரங்களாக இயேசு பிரான், தேவமோகினி, குறவஞ்சி, சிங்கன், நூவன் போன்றோரும் இடம்பெறுகின்றனர்.

தேவமோகினி - குறவஞ்சி; சிங்கன் - சிங்கி ஆகியோர் பேசுகின்ற உரையாடல்களும் இடம்பெறுகின்றன. 'விடுகதை' என்ற தலைப்பில் தேவமோகினியும், குறவஞ்சியும் கேள்வி - பதில் அமைப்பில் தலைவனின் இயல்புகளையும், கிறித்தவ சமயத்தின் கொள்கைகளையும் உரையாடல் பாங்கில் வேதநாயகர் பாடியிருக்கின்றார்.

பிற குறவஞ்சி நாடகங்களைப் போல இக்குறவஞ்சியும் மேடையில் 'இசை நாட்டிய நாடக'மாக அரங்கேற்றம் செய்யப்பட்டு நடிக்கப்பெற்று வருகிறது.

**கிறித்தவ சமயக் கருத்துக்கள்**

"வேதநாயகர் வேதத்திலுள்ள கருத்துக்களை எடுத்து வினோதமாகச் சொன்னார்'' (157) என்று சிங்கன் - சிங்கி கூற்றாக ஆசிரியர் நூலின் இறுதியில் கூறியுள்ளார். இந்நூலில் இடம்பெறும் பாத்திரங்களின் கூற்றுக்களிலும் ஏனைய இடங்களிலும் வேதநாயகர் தாம் சார்ந்த கிறித்தவ சமயக் கருத்துக்களைக் கூறியதைக் காணமுடிகின்றன.

கர்த்தருடைய தூதனாகிய அருளப்பன் என்ற ஸ்நாதக யோவான் சொற்பொழிவு (பிரசங்க) ஆராதனை செய்கிறார்; ஞானத்தீக்கை கொடுக்கிறார்; செபங்கள் செய்கிறார்; பாவ மன்னிப்புக் கொடுக்கிறார்; சுவிசேட நெறிகளைக் கூறுகின்றார்; 'ஓசன்னா' கூறுகிறார் (13-15). அதேபோன்று இவர் கட்டியம் கூறிச் சொற்பொழிவு மனஉறுதி பெறச் சொல்கின்றார் (108). இயேசுபிரான் பிறந்து வளர்ந்து இவ்வுலகில் புரிந்த அற்புதச் செயல்களைப் பொழிவின் மூலம் மக்களுக்கு எடுத்துரைக்கின்றார் (21-24).

*சுவிசேடசபை முன்பு கதைத் தலைவி தேவமோகினி வந்து சீடர்கள் கூறும் நற்செய்திகளைக் கேட்கிறாள் (27); உலகை வெற்றி கொண்டு சிலுவைக் கொடியை நாட்டுகிறாள் (32); சத்திய சபை முன் தன் மேன்மைகளைப் பத்தியுடன் மந்திரம் ஓதிப் பணிவுடன் சொல்கிறாள் (33).*

*சுத்தம் மிகும் சத்தியசபை முன் குறவஞ்சி தோன்றும் பொழுது (44), மனிதர்கள் இரு கைகளைக் குவித்து அர்ச்சித்துச் செபம் செய்கின்றனர் (45). ஞான மிகும் நற்செய்திக் கிறித்தவர்களின் பெருமைகளைத் தேவமோகினி யிடம் குறவஞ்சி பின்வருமாறு கூறுகிறாள்.*

*பெருமை மிகுந்த சத்திய மறையை உடையவர்கள்; வேதம் எல்லாம் உணர்ந்து அறிந்தவர்கள்; நன்னெறியுடன் நடப்பவர்கள்; மாறுபாடில்லாத நட்புடையவர்கள்; மந்திர செபமுறை தப்பாதவர்கள்; சொன்ன சொல் தவறாதவர்கள்; சத்திய வேதத்தில் சிறந்தவர்கள்; மூன்றாசைகளையும் கடந்தவர்கள்; அகந்தை பேசாதவர்கள்; தேசமெங்கும் பெயரெடுத்தவர்கள்; தீக்கை பெற்றவர்கள்; துயரங்கள் சூழ்ந்தாலும் கலங்காத உறுதி கொண்டவர்கள்; புறணி பேசாதவர்கள்; ஆசை எல்லாம் விட்டொழித்தவர்கள்; வெள்ளைநிற ஆடை அணிந்தவர்கள்; மனிதர்களை வணங் காதவர்கள்; சொல்வதற்கரிய வண்மையுள்ளவர்கள்; துன்பங்கள் அற்று வாழ்ந்திருப்பவர்கள்; நன்றி அறிந்தே நடப்பவர்கள்; வெற்றி தரும் பரன் சிலுவை உடையவர்கள்; வித்தகம் சேர் செபமாலை உடையவர்கள்; பதறாத மன முடையவர்கள் (69-72).*

*'கேட்பதற்குக் காது உள்ளோன் கேட்கக் கடவன்' என்று சொன்னதற்காகக் காதில் அணியும் முத்துச்சவடியைச் சிங்கி பரிசாகப் பெறுகிறாள் (154); இயேசுபிரானின் விலாவிலே பாய்ந்த குருதியினால் சிங்கியின் உதடு செக்கச் சிவந்து அழகாக மாறுகிறது (154).*

*குறவஞ்சி தலைவிக்குக் குறிப்பலன் சொல்கின்றபொழுது கிறித்தவ சமயத்திற்குரிய தூய வெண்ணிற ஆடை, செப மாலை, ஞானாபரணப்பெட்டி, சத்திய சிலுவை முத்திரை மோதிரம் வரும் (92) என்று கூறுகிறாள்.*

கிறித்தவர்களின் மறைநூலாகத் திகழும் பைபிளை,

உண்மை வேதத்தைத் தரும் நூல் (79),
கதிரவனுக்கு ஒளியாய் நின்ற பரம வேதாகமம் (83),
செப புத்தகம் (122),
சுத்த சுவிசேடம் எனும் புத்தகம் (146)

என்றும் கூறுகின்றார்.

மேலும் சுவிசேடத்தை வாசித்துப் படிக்க வேண்டும் (126) என்றும் கூறுகின்றார்.

> "மெய்ஞானப் புத்தகம் ஒன்று தருகிறேன். வேறு தங்கமுலாம் பூசியதையும் தருகிறேன். அஞ்ஞானத்தை அகற்றும் உரையாடல் ஞானத்தையும் சுவிசேடத்தையும் தருகிறேன். பொய்ஞானம் நீக்கும் வழிபாடு செல்வம் பூங்காவனமும் செபப்புத்தகத்தோடு முஞ்ஞாலம் போற்றும் பழைய ஏற்பாட்டு ஆகமம் எல்லாவற்றிலும் ஒருசோடு தருகிறேன். விண்ணுலகம் தரும் நகரைக் கை மேலே தருகிறேன். முன்னே ஞானாபரணப் பெட்டியும் தருகிறேன்" (129-130)

என்று பறவைகளைப் பிடிக்கும் நூவன் கூறுகின்ற பகுதியில் கிறித்தவ சமயக் கருத்துக்கள் காணப்படுகின்றன

திருவேதப் பொருளைப் போதித்து மக்களை நினைக்க வைப்பதற்காக வருகின்ற நூவன் (98), வேதமறையினில் வகுத்த ஞான மூலிகை வகைகள் எல்லாவற்றையும் முழுவதும் அறிந்தவனாகக் (102) காட்டப்படுகிறான். இவன் புதிய ஏற்பாட்டின் காலத்தில் தண்டமிழ் சேர்ந்த சுவிசேடத்தின் பாதையில் அழகிய பறவைகள் அனைத்தையும் காண்கிறான் (105).

கிறித்தவ சமயத்திற்குரிய 'செபம்' பலவிடங்களில் வேத நாயகரால் கூறப்படுகிறது. பரமண்டலச் செபம், உணவுசெய் செபம், பின் செபம், தீட்சைவிதிச் செபம், பாலர் படிக்கின்ற கூடத்துமுன் செபம், பண்பானபின் செபம், ஆலயத்தின் தொடக்கச் செபம், பிற்செபம் (96) என்றிவ்வாறு பல செபங்

களைக் கூறிய வேதநாயகர், 'எந்த வேளையிலேயும் விழித்துச் செபம் செய்ய வேண்டும்' (141) என்கின்றார்.

இடைவிடாமல் செபித்ததனால் முழுவதும் கறுத்து முழங்கால் தடித்தது என்று சிங்கி சிங்கனிடம் கூறுகிறாள் (153). இதனால் முழங்கால்களை மண்டியிட்டுச் செபம் செய்வதை அறியமுடிகிறது. நூரவன் தன் கழுத்தில் தோத்திரம் செய்யும் செபமாலை அணிந்து (98, 1213) செபம் செய்கிறான் (100).

கொடுமைகளைச் செய்யும் ஆதிப் பாம்பாகிய சாத்தான் (83); கெட்ட பாம்புக்குப் பிசாசு என்று பெயர் (78); பாம்பின் உருவம் கொண்டு மனிதர்களுக்குத் தீமைகள் செய்யும் (78); கெடுதல் செய்யும் பாம்பு (84) என்று சாத்தானின் வேலைகளைப் பற்றிக் கூறுகின்றார் வேதநாயகர். 'இப்பாம்புக்காரப் பயல்களை அடியடா' (126) என்று சிங்கன் கூறுகிறான்.

நூலின் பல்வேறிடங்களில் காணப்படும் கிறித்தவ சமயக் கருத்துக்கள் வருமாறு :

1. மனிதர்கள் சாபத்தினால் தேவ கோபத்தின் மூழ்கிய ஆபத்தில் புலம்பியபொழுது தேவதூதன் தோன்றுவதுண்டு (77).
2 அல்லேலூயா, ஓசன்னா என்று தேவகுமாரனைப் போற்றித் துதித்தல் வேண்டும் (78).
3. நல்லவர்களைக் கண்டவுடன் தோத்திரம் சொல்ல வேண்டும் (87)
4. ஏசுதேவன் மேல் விசுவாசமாய் இருப்பவர்களுக்குத் துன்பங்கள் நீங்கும் (84).
5. விசுவாச மந்திரத்தை உண்மையாகச் சொல்ல வேண்டும்; மனமெனும் வீட்டைப் பரிசுத்தமாய்க் கூட்டியே சிங்காரித்து வைக்க வேண்டும்; ஏசு தற்பரன் சொன்ன செபத்தை எப்போதும் உச்சரிக்க வேண்டும் (85).
6. கை, நெற்றி, மார்பு போன்ற உறுப்புகளில் கர்த்தரின் சிலுவையை வரைய வேண்டும் (85).

7. கோயிலில் தேவாராதனை நடைபெறுவதுண்டு (110).
8. கோயிலில் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெறும் (142).
9. செபவீட்டில் பேரின்பம் கிட்டும் (124).
10. கர்த்தர் சொல்லிய பத்து மந்திரங்களையும் சொல்ல வேண்டும் (121, 124).

இயேசுநாதர் சொல்லிய பத்துக் கட்டளைகளையே[27] இங்கு வேதநாயகர் பத்து மந்திரங்கள் என்று சொல்கின்றார். அவை வருமாறு :

1. உன் தேவனாகிய கர்த்தர் நானே. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.
2. கர்த்தரிடத்தில் அன்பு கூர்ந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள்.
3. உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக.
4. ஓய்வு நாளைப் பரிசுத்தமாய்க் கைக்கொள்ள நினைப்பாயாக.
5. உன் தகப்பனையும் தாயையும் பெருமைப்படுத்துவாயாக.
6. கொலை செய்யாதிருப்பாயாக.
7. விபசாரம் செய்யாதிருப்பாயாக.
8. களவு செய்யாதிருப்பாயாக.
9. பிறனுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக.
10. பிறனுடைய வீட்டை விரும்பாதிருப்பாயாக.

இந்நூலில் இடம்பெற்ற கிறித்தவ சமயம் தொடர்பான கலைச்சொற்கள் பின்னிணைப்பில் தரப்பெற்றுள்ளன.[28]

27 யாத்திராகமம் 20:1-17 உபாகமம் 5:6-21.

28. காண்க : பின்னிணைப்பு எண் 4

### அற்புத நிகழ்வுகள்

இயேசுபிரான் தம் வாழ்க்கையில் பல அற்புதச் செயல்களை இவ்வுலகத்தவர்க்காக நிகழ்த்திக் காட்டியுள்ளார். அவற்றுள் ஒருசிலவற்றை வேதநாயகர் கூறியதைக் காண முடிகின்றன. அச்செயல்கள் வருமாறு :

1. கடலைத் திடமுடன் பிரித்து அக்கடலின்மீது நடந்தார் (23, 97).
2. நஞ்சு ஏறிய முடியைத் தகர்த்து உடைத்தெறிந்தார் (40).
3. சப்பாணிகளை மான்கள் போல் துள்ளி ஓடச் செய்தார் (65).
4. நடக்க முடியாமல் இருந்த நொண்டியை நிமிர்ந்து நடக்கச் செய்தார் (65).
5. குட்டரோகிகள், பேய் பிடித்தவர்களை நலம் அடையச் செய்தார் (65).
6. கண் தெரியாத குருடர்கள் பார்வை பெறச் செய்தார் (65, 105).
7. வாய் பேசாத ஊமையர்களை வாய் திறந்து பாடச் செய்தார் (65).
8. முற்றிலும் காது கேளாதோர்களைக் கேள்வி ஞானம் பெறச் செய்தார் (65).
9. காமத்தை உடைய பெண்களை உத்தமிகளாக்கினார் (65).
10. கள்ளர்களையும் விண்ணுலகடையச் செய்தார் (65).
11. ஐந்து அப்பங்களைக் கொண்டு ஐந்தாயிரம் பேர் உணவு உண்ணச் செய்தார் (97, 114).
12. உயிர் துறந்த இலாசரை நான்கே நாட்களில் மீண்டும் அவரை உயிர்த்தெழச் செய்தார் (97, 115).
13. பன்னிரண்டு ஆண்டுகளாகப் பெரும் நோய் கொண்ட பெரும் மூதாட்டி நம்பிக்கையுடன்

இயேசுபிரானின் ஆடையைத் தொட்டவுடன் அவள் நோயை நீக்கச் செய்தார் (116).

14. பாம்பின் ஆலநஞ்சை அகற்றினார் (153).

15. வாலிபனான பிறவிக் குருடன் ஒருவனைத் தரையினில் துப்பிய உமிழ்நீரில் சேற்றை உண்டாக்கி அச்சேற்றைக் குருடனின் கண்களில் அப்பி அவனைச் சீலோகமாம் குளத்தில் கழுவச் செய்து அவனுக்குப் பார்வையை உண்டாக்கச் செய்தார் (128).

**பைபிள் கதைகள்**

கிறித்தவ வேதாகம நூலாகத் திகழும் பைபிளில் இயேசுபிரான் பெருமைகளைப் போற்றும் விதத்திலும், கிறித்தவ சமயக் கருத்துக்களைப் பரப்பும் நோக்கத்திலும் பல்வேறு கதைகள், வரலாற்று நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன. வேதநாயகர் தாம் சார்ந்த கிறித்தவ சமயத்தை மக்களிடம் பரப்பும் நோக்கத்தில் இக்குறவஞ்சியில் இயேசு பிரானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடியுள்ள காரணத்தினால் பைபிளில் இடம்பெற்ற கதைகள் பலவற்றுள் ஒருசிலவற்றை ஏற்றவிடங்களில் போற்றிப் புகழ்ந்துரைத்துள்ளார். அக்கதைகள் வருமாறு[29] :

**1) ஆதாம் - ஏவாள்**

உலகத்தை ஆளவேண்டி அழகிய ஏதன் தோட்டத்தை உண்டாக்கினான். களிமண்ணால் ஆதாம் என்ற முதல் மனிதனைப் படைத்தான். அவன் விலா எலும்பிலிருந்து ஏவாள் என்ற பெண்ணையும் படைத்தான். ஏதன் தோட்டத்தில் அடர்ந்த மரங்களையும் கனி தரும் மரங்களையும் மங்காத சீவமரத்தையும் உண்டாக்கி வைத்தான். ஆதாம் சிறிது கர்வம் கொண்டு பகைவனாகிய சாத்தானுடன் உறவு கொண்டத

29. வேதநாயகர் பெத்லகேம் குறவஞ்சியில் பல்வேறிடங்களில் கூறியவை மட்டும் இப்பகுதியில் ஆராயப்படுகின்றன. சிலவிடங்களில் பைபிளிலிருந்து எடுத்த பகுதியை ஆசிரியரே பாடலின் இறுதியில் "I மோ. 3:5; 19:20; 19:31-38" என்று கூறியுள்ளார்.

னால் பல துன்பங்களுக்கு உள்ளானான். உயிர்களைத் தரும் மரத்தின் பழங்களை ஆதாமும் ஏவாளும் பங்கு வைத்து உண்டு மகிழ்ந்தனர். - அதனால் கெட்டு அழிந்தனர். இவர்கள் வழி வந்த மக்கள் சாதி கெட்டுத் தன் அண்ணன்களுக்குப் பிள்ளை களைப் பெற்றனர்.[30]

2) தாவீது

சக்கரவர்த்தியாகத் திகழ்ந்த தாவீது எருசலை நாட்டை ஆட்சி செய்து வந்தான். இவன் கோத்திரத்திலேயே இயேசு நாதர் பெத்லகேம் எனும் ஊரில் பிறந்தார். உலகமெல்லா வற்றையும் ஒரு குடையின்கீழ் செங்கோல் செலுத்தி ஆண்டு வந்தார். வலிமையுடையவனாகத் திகழ்ந்த இவன் மிகுந்த அன்புடன் இசரேல் சாதிகளை எல்லாம் ஆட்சி செய்து வந்தான். உரியா எனும் பெண் தன் கணவனுக்குத் தெரியாமல் தாவீதோடு உறவு கொண்டாள். இப்பெண்ணை இவனே கொலையும் செய்தான். இவன் ஆட்சியிலேயே தேவமோகினி மகிழ்ச்சியுடன் இருந்தாள்.[31]

3) சாலமோன்

இவனும் ஓர் அரசனாவான். இவன் ஆட்சி செய்த ஊரில் பல ஆலயங்களைக் கட்டி வைத்தான். தீமையான வழி சிலவற்றை நடத்தினான்.[32]

4) நோவா

இவனும் ஒரு மன்னன். 120 ஆண்டுகளாக இவன் சொன்ன குறி கேட்டுத் தவம் செய்யாத பாவிகள் தண்ணீரில் மாண்டனர். அவர்களுள் எட்டுப்பேர் மட்டும் தப்பிப் பிழைத்தனர். இவன் பெட்டிக்குள் சோடாகப் பல பறவைகள் வந்து புகுந்து கொண்டன.[33]

5) தானியேல்

அன்புடன் நேபுகாத் நேசர் என்ற அண்ணல் உலகத்தை

30. பெத்லகேம் குறவஞ்சி, பக். 34, 39, 113, 126.
31. மேலது, பக். 26, 27, 34, 35, 64, 66, 76, 94.
32. மேலது, பக். 25, 26, 64.
33 மேலது, பக். 82, 108, 112, 119.

ஆட்சி செய்து வரும் நாளில் வலிமையாகச் சாஸ்திரிமார்கள் சொன்ன மாறாட்டக் குறி மெத்தப் போராட்டமென்று வலிமையுடன் அவர்களை வெட்ட அந்தச் செய்தியைக் கேட்டுத் தானியேல் தீர்க்கன் நட்புடன் உண்மைக்குறி சொல்லி இரத்தின சரப்பளியைக் குறத்தி பரிசாகப் பெறுகிறாள். சிக்கிக் கொண்ட குகையினில் சிங்கத்தின் வாயைச் சித்திரமாய்த் தானியேல் கட்டினான்.[34]

**6) மோசேசு**

மோசே முனிவர் கடல் திரண்டு வந்த பொழுது அக்கடலை இரண்டாகப் பிரித்தார். பின்பு 'என்னைப் போல் ஒரு தீர்க்கதரிசி தோன்றுவான்' என்று சொன்னதற்கேற்பத் தாவீது அரசனின் பெருமை பெற்ற குடியில் ஏசுநாதர் பிறந்தார்.[35]

**7) எலிசா**

பேத்தேலுக்குச் செல்லும் எலிசாவைக் கண்டு அங்குப் பிள்ளைகள் 'மொட்டைத்தலையன்' என்று சொன்ன எதிர்மொழியைப் பொறுக்காமல் அவர்களைச் சினந்து உக்கிரமாக நோக்கிக் கர்த்தரின் பெயரால் சபித்துச் சிதைத்தான். காட்டுக் கரடிகள் இரண்டு வந்தபொழுது அவற்றையும் அழித்தான். சூனேமில் வாழ்கின்ற மலடி எலிசாவுக்குச் சிறிய அறை வீட்டைச் செய்து கொடுத்தான். எலிசாவின் அருளினால் அம்மலடி குழந்தை பெற்றாள். பிறந்த குழந்தை இறந்தது, இறந்ததைப் பின்னும் உயிர்ப்பித்துக் கொடுத்தான். நாலைந்து அப்பத்தால் பசியோடு வந்த நூறு பேருக்கு உணவைப் படைத்தான்.[36]

**8) எலியா**

எலியாசுத் தீர்க்கன் உலகில் கடும் பஞ்சம் உண்டான போது மிகுந்த கவலையுடன் காட்டில் சுள்ளி விறகு ஒடிக்க

34. பெத்லகேம் குறவஞ்சி, பக் 38, 81, 97.
35. மேலது, பக். 59, 62, 96.
36. மேலது, பக். 27, 35, 103.

வந்த கைம்பெண்ணிடம் சென்று, 'மலைக்காதே! எண்ணெயும் மாவும் இனி வற்றாது' என்று மறுமொழி சொன்னான். அப்பெண்ணும் பலகாரம் தோசைகள் சுட்டு அவனுக்குப் படைத்தாள். அதேபோன்று ஆசாரி மகளும் எலியாவுக்கு அப்பம் தந்தாள். பின்பொரு சமயம் மூன்றரை ஆண்டுகளாய் மழை பெய்யாமல் இருந்தபொழுது எலியா மழை பொழியச் செய்தான். ஒருமுறை அப்பத்தைக் காக்கை கொண்டு சென்று எலியாவுக்குக் கொடுத்தது.[37]

சூரைச் செடியில் ஏசபேலுக்கு அஞ்சிப் படுத்திருந் தவனை எழுப்பி ஒரு பாத்திரத்தில் தண்ணீரும், சுட்ட அடை ஒன்றையும் கொடுத்து அதை அவனை உண்ணச் செய்தான் எலியா. அதைச் சாப்பிட்டதனால் நாற்பது நாள் வரை யோரேப் எனும் மலைக்கே இரவும் பகலும் ஓயாமல் அவன் ஓடினான் (103).

தீர்க்கதெரிசியின் மகன் பெண்சாதியுடன் சேர்ந்து எலியாவினை நேர்ந்து, உலகத்தில் என் இரண்டு மகன்களைத் தொண்டு செய்வதற்கு வந்தான் அதனால் கடன் தொல்லை அதிகமாகி விட்டது என்று சொன்னாள். அதைக் கேட்ட எலியா ஒரு பாத்திரத்தை வாங்கி அதில் சிறிய குடத்து எண்ணெயை வார்க்க வார்க்க அது பல்கிப் பெருகி ஆறாக ஓடியது. இதைக் கொண்டு அக்கடனை அடை என்று கூறினான் (103-104).

தான் அணிந்திருந்த சால்வையை வீசி எழுந்த எலியா வின் சீடன் ஒருவன் யோர்தான் நதியைக் கடந்து எரிகோவிற்கு வருகிறான். ஒரு புதுத்தோண்டியில் உலுப்பினை[38] உண்டாக்கி நீரூற்றில் வணங்கிப் போட்டான். அந்நீரை நன்னீராக்கி என்றென்றைக்கும் மாறாமல் மகாநலமாகச் செய்தான் (103).

**9) ஆபிரகாம்**

குலம் யாவற்றையும் காத்தவன். நல்ல மேன்மை நெறியில்

---

37 பெத்லகேம் குறவஞ்சி, பக். 35, 81-82, 97, 119.

38 உலுப்பு = பெரியவர்களுக்கு அனுப்பும் ஊன்பண்டம்.

திகழச் செய்தவன். மோரியாவின் மலையில் ஈசாக்கைப் பலி கொடுத்தான். ஆபிரகாம் கர்த்தருளியவரை ஆசையுடன் காண்பதற்குப் பெத்லகேம் தவம் இருந்தது.[39]

**10) சாராள்**

எகிப்தில் அவதூறாகப் பார்வோன் வீட்டில் தங்கி இருந்தாள். வெறுப்புடன் குழந்தையாக யாக்கோபையும், அடுத்து ரேபெக்காவையும் தந்தாள் (34).

**11) ஈசாக்கு**

ஆபிரகாமின் கட்டளைப்படி எலியேசர் புறப்பட்டு மேசோப் பொத்தாமியாவினைச் சேர்ந்த நாகோருவின் ஊருக்கு வந்தார். அங்கு நாகோர் மில்க்காள் பெற்ற மகன் பேத்துவேலின் பற்றினால் சிலம்பு அணிந்துள்ள பத்தினி ரேபெக்காளை ஈசாக்கு மணம் செய்து கொண்டான். இவர்களுக்கு ஏசா, யாக்கோபு என்ற இரு மகன்கள் பிறந்தனர். இவர்களுள் யாக்கோபு நீதிமானாகத் திகழ்ந்தான். இவன் வானத்தில் ஏணியினை உறக்கத்தில் கண்டு மகிழ்ந்தான். வேட்டைக்குத் தன் அண்ணன் ஏசா சென்றபொழுது தன் தந்தையிடம் ஆசீர்வாதம் பெற்ற யாக்கோபு, ஏசாவுக்குப் பயந்து தனியாக மேசோப் பொத்தாமியாவுக்கு ஓடி வந்து தனியாக நாட்டை உருவாக்கி ஆட்சி செய்யத் தொடங்கினான்.[40]

**12) யோசேப்**

எகிப்து நாட்டை ஆட்சி செய்த பார்வோன் என்ற மன்னனிடத்தில் மந்திரியாக இருந்தவன். அசனாத்து என்ற பெண்ணை மணம் செய்து கொண்டான். இவர்களுக்கு மனாசே எப்பிராம் பிறந்தனர்.[41]

**13) பிற கதைகள்**

பைபிளில் இடம்பெற்ற கதைகளுள் ஒருசில வரிகளில்

39. பெத்லகேம் குறவஞ்சி, பக். 22, 59, 64.
40. மேலது, பக். 64, 109, 116, 120, 152.
41. மேலது, பக். 25, 35, 81.

அல்லது பெயர்களில் வேதநாயகர் சிலவற்றைக் கூறுகின்றார். அவை வருமாறு :

1. நேசம் மிகுந்த சாமுவேல் தெரிசி (25).
2. பெண்களுடன் மயக்கம் கொண்டு விழி கெட்ட சீமசோன் (25).
3. விருப்பத்துடன் குழந்தையைச் சிமியோன் ஏந்தி உரை பகர்ந்தான் (64).
4. யோபு தானத்தில் சிறந்து விளங்கினான் (26).
5. லோத்தின் மனைவி சோதோம் நகரத்தைத் திரும்பிப் பார்த்தாள். மாது லோத்தின் பெண்களும் நெறி தவறிக் குற்றம் செய்தனர் (34, 115).
6. மோசேயின் தங்கை தானாமீரி வெண்குட்டம் கொண்டாள் (34).
7. தேப்போறாள் ஓலாத்தோத்தைத் திருமணம் செய்து கொண்டாள் (34).
8. யாகேல் தன்னைப் பரிவாக அடைந்த சீசேராவை ஆணியால் கொன்று போட்டான் (35); யாகேப், சீசேராவைச் சுத்தியால் கொன்றான் (79).
9. மார்க் கெ ரேமியாவைத் தென்றல் கேணியில் தள்ளியது (38).
10. போருக்குள் அகப்பட்ட யோசபாத்து இறந்து விடாமல் தற்காக்கப்படுகிறான் (38).
11. இசரேலரின் பாலரை ஆற்றுத் தண்ணீரில் தென்றல் அமிழ்த்திக் கொன்றது (39).
12. இராக்காப் பொறுமையில்லாத ஆட்களைக் காத்தான் (79).
13. எஸ்தர், ஆமோனைத் தூக்கில் போடச் செய்தாள் (79).
14. நல்ல மனம் கொண்ட தாமார் என்பவள் யூதாவை ஏமாற்றினாள் (79).
15. இசறாவேல் என்பவளும் யூதா என்பவளும் இளைய குடியாள் ஒருத்தி மூத்தவள் தான் ஒருத்தி

உண்மையாக இருவரும் விபசாரம் செய்து முழு விலைமகளாய்ப் போயினர் (68).

16. தன் தலைவனைத் தப்பவிட்டு ஆட்டுத்தோலை மஞ்சம் கூட்டியவள் (80).
17. அகந்தையுடன் சூசன் என்பவளின் கற்பு காக்கப் பட்டது (80).
18. தருமன் ஆபேல் நேயனைக் கனிந்தான் (22, 25).
19. வெட்டுக்கிளியை யோவான் தின்று போட்டான், இவ்வெட்டுக்கிளி மீது யோவானுக்கு மெத்த மெத்தப் பிரியம் (120, 138).

**தமிழின் பெருமை**

தமிழ், தண்டமிழ், தெள்ளுதமிழ், தோணித்தமிழ் என்று வேதநாயகர் கூறுவதோடு 'மெய்த்தமிழுக்கு உதவும் தூயன்' (20) எனத் தம்மையும் குறிப்பிடுகின்றார். நூலின் பலவிடங்களில் தமிழின் பெருமையைப் போற்றிக் கூறுகின்றார்.

'தெள்ளுதமிழ்ப் பாவலர்களுக்குப் பரிசளிக்கும் கை' (87) என்று குறவஞ்சி கூற்றிலும், 'தமிழுக்குள் மிக முக்கிய கவி கட்டி நடமிட்டு சதுரிட்டு'ச் சிங்கன் சபைக்கு வருவதாகவும் (94) கூறுகின்றார்.

'பலகோடித் தமிழ் செப்பும் வளமை பெறும் வாசல்' (73) என்று குறவஞ்சி வாசல் வளத்தைக் கூறுகிறாள்.

புதிய ஏற்பாட்டின் காலத்தில் தண்டமிழ் சேர்ந்த சுவிசேடத்தின் பாதையில் அழகிய பறவைகள் வருவதைச் சிங்கன் காண்கிறான் (105).

பாட்டுடைத் தலைவனாகிய இயேசுபிரான் தமிழிசைக்கு வருவதாகவும் (159) குறிப்பிடுகின்றார்.

**அறிவியல் கருத்துக்கள்**

தேவமோகினி உலா வந்த தலைவனைக் கண்டு காதல் கொண்டு விரகவேதனைப்பட்டு நிலவைப் பழித்துரைக்கும்

பொழுது,

> "கடவுள் பூமிக்குச் சந்திரன் ஒன்று. வியாழனுக்கு 4 சந்திரன். நல்வாழ்வான சனிக்கு 8 சந்திரன். திங்களுக்கு 6 சந்திரன். யூராணிஸ்க்கு 4 சந்திரன். கடலுக்கு ஒன்று. உபக்கிரகம் இருபத்து நான்கு ஆக்கினான்" (37)

என்று கூறுகின்றாள்.

அதேபோன்று தலைவி பந்தடிக்கும்பொழுது பந்துகளைப் புவன உருண்டை, வான உருண்டைகளாக எண்ணி அடிக்கிறாள். ஆகாயத்தின் அந்தரவெளியில் விளங்கிய பரமண்டலங்களை வியந்து நின்று தேவமோகினி பந்து அடிப்பதாக வேதநாயகர் கூறுகின்ற பாடல்கள் அறிவியல் கருத்துக்களாக மிளிர்கின்றன.

சூரியன் பூமி 13,04,080 தோற்றமானது. 462ன் மேலதே விரிகின்ற சந்திரன் மகன் 15 ஒன்று. வெள்ளி 8ல் 9. சந்திரன் 49ல் ஒன்றது அறிவன் ஏழொன்றே. உரிய அந்தணன் 1281. உற்ற சனி 995. பெரிய திங்கள் 80½.

சூரியன் சமசக்கரத்தில் 25 நாட்கள் உருளும். புதன் 14 மணி 8 நொடிகளிலும், விரிவெள்ளி 23 மணி 21 நொடி களிலும், (வுபுலந்தா) பூமி 23 மணி 56 நொடிகளிலும், சந்திரன் 27 நாளுடன் 7 மணியாய் 55 நொடிகளிலும் உருள்கின்றன. ஒரு நாளில் இரத்தம் 39 நொடிகளில் ஓடும். குறையிலாது 22 நிறையிலாடும் அறியவே. அரசன் 9 மணி 55 நொடிகளில் நொடிவது 33 ஆகும். பிறகு சனி 10 மணியுடன் 17 நொடியது மானதே. உற்ற வளையம் 10 மணி 3226ன் 15 நொடி. தெரி வுறாது சமசக்கரத்தில் சந்திரன் உருளும்.

சக்கர ஆண்டுக்கு ஒவ்வொரு மணியும் கிரகங்கள் நடக்கிற தகுதி ஆங்கிலேய நாழிகை சௌமிய 1,00,000 மிக்க 11,256 ஆகும். வெள்ளி 81,398. இக்கட்பூ 75,222 எழில்மதி 2,335. தக்க சேய் 56,212. தாராபதி (திங்கள், வியாழன்) 30,358. சொக்கு சனி 22,351. தோற்றும் வளையம் அப்படிக் கொள் சோதியாகிய திங்களோ முக்கிய 15,846.

*சக்கர ஓட்டக் காலவரிசை சூரியனைச் சுற்றிப் புதன் 87 நாள் 23 மணிக்கு 14 நொடி 33 வள்ளி 238 நாள் 16 மணியோடு 41 நொடியும் மக்கள் நொடியும், 27 மாநிலம் ஓராண்டும், மறுத்து 5 மணி 48 நொடியுமானதே. சந்திரன் 27 நாளும் 7 மணியுமாய் 43 நொடியும் ஐந்தானது. உருத்திரன், சனி, செவ்வாய் 1 ஆண்டு 321 வாவுமாய், 22 மணியும் 18இன் மேல் தொக்கு 27 நொடியானது. சுரகுரு 11 சமை தோற்றும் நான் 315 ஏற்றம் 14 மணியுமாய், தக்க நொடி 39 தகும் இருநொடி சனியும்தான், சாற்ற ஆண்டு 29. 160 சதுத்தினம், ஒக்கு 7 மணி 21 வினாடியும் நொடி 50. சனியின் வளையம் அப்படி ஓங்கிய திங்களோ எனில் பிக்கில்லாத ஆண்டு 83 நாளுமே பெருகிய 207 மணி 8 வினாடியும், பக்கிஷமாக 39 ஆகும்.*

*மத்திம தூரம் சூரியனிலிருந்து ஆங்கில மைல், புதன் 3 கோடியே 62 இலட்சத்தோடு இத்தொகை 73,282; எரி வெள்ளி 6 கோடியே 90 இலட்சத்து 88,000 ஒத்துமை 240 உலகம் 9 கோடி 55 இலட்சம் 13,794 அத்தகை சந்திரன் எனக் கொள்ள வேண்டும். செவ்வாய் 14 கோடியே 55 இலட்சம் 33,667. வியாழன் 49 கோடியோடு 67 தொகை இலட்சம் 65,281. பத்துச்சனி 91 கோடியே 11 இலட்சம் பாங்கி 41,442 அத்தகை சனி வளையம் திங்கள் 182 கோடி 25 இலட்சத்து 75,228 ஆகும்.*

*சூரிய விட்டம் 8,86,000 மைல்; சொச்சம் 473 அச்சமே இல்லை; அதில் புதன் 3,119 மைல்; வெள்ளி 7,630. பாரது 7,009, 154 அம்புலி. பரிவது 2,001,170தோடு இரு மைல். நூரி வக்கிரன் 4130 மைல் நூங்கரசன் 86,000. 4 பட 400. காரி 79,000, 405 கடுமைல். கனத்த வளையம் 1,85,200 சேர 80 திங்கள் 30,4,457 ஆகும்*

**அறக்கருத்துக்கள்**

*பெற்ற தாய் தந்தையர், பெரியவர்கள், குருக்கள், கற்ற புலவர், உபதேசிமார், கல்வியைக் கற்றுத்தரும் அண்ணாவி மார், அரசர், துரைகள், பெரிய அளவில் துன்பம் வந்த பொழுது உதவி செய்தவர், இன மக்கள் போன்றவர்களிடம் வாயில் வந்தபடி எதுவும் பேசுதல் கூடாது. கண்ணால் கண்ட வற்றையும் காதால் கேட்டவற்றையும் சொல்லக்கூடாது. கலி*

*காலமான இக்காலத்தில் நன்மையைச் சொன்னாலும் தீமையாகவே வரும். தீமைகளைச் செய்து வருகின்றவர்களிடம் சரிக்குச் சரியாக எதுவும் பேசுதல் கூடாது. நல்லவர்களையும் பெரியவர்களையும் துச்சமாக எண்ணுதல் கூடாது. அல்லாதவர்களோடு சேர்தல் கூடாது. மனம் போனபடி நடக்கின்றவர்களுடனும் சிற்றின்பமாகவும் பொல்லாத பாவிகள் செல்வத்தைக் கண்டு உள்ளம் பொங்கி எரிந்து பொறாமையாகவும் இருத்தல் கூடாது. எப்பொழுதும் கோளும் புறணியும் சொல்லி வெடுக்கென்று கத்திக் கத்தித் திரியாமலே உண்மையாகக் கையாலே வாயைப் பொத்திக் கொண்டு பேசாமல் இருக்க வேண்டும். பொல்லாதவர்களுடன் சல்லாபம் செய்தாலும் பாதகக் கள்ளப் பொய்ப் போதக னாகிய பஞ்சமா பாவியோடு நீ மட்டும் பேசாமல் இருக்க வேண்டும். தாழ்வு மனத்தை நீக்க வேண்டும் (123, 131)*

இவ்வாறு வேதநாயகர் அறக்கருத்துக்களைக் கூறியுள்ளார்.

**விடுகதை**

தேவமோகினி குறி சொல்ல வந்த குறவஞ்சியிடம் சில விடுகதைகளைக் கூறி அவற்றை விடுவிக்குமாறு கூறுகிறாள். தேவமோகினி கேள்வி கேட்பது போலவும் அதற்குக் குறவஞ்சி விடை கூறுவது போலவும் இப்பகுதி அமைகிறது (77-79).

தலைவி : பெருமையுடன் கோவேறு கழுதை வாகனத்தில் வந்தது எவர் பெண்ணே?

குறவஞ்சி : வானுலகத்தின் தலைவன் இம்மானுவேல்.

தலைவி : பெருமை பெற்ற கடவுளைத் தேவதூதன் தேற்றுவது ஏன்?

குறவஞ்சி : மனிதர்கள் சாபத்தினால் தேவகோபத்தில் மூழ்கிய ஆபத்தில் புலம்பியவை.

தலைவி : அதிசயம்தானவர் என்று பெருமையிற் சிறந்தவனுக்குப் பெயர் என்ன?

குறவஞ்சி : உண்மையான தேவனும் உண்மையான

மனிதனும் ஆனதினால் பெயர் இதுவாயிற்று.

தலைவி : அழகாக வெள்ளை நிறமுடைய ஆடையை அணிந்தவர் யார்?

குறவஞ்சி : தேவ சத்திய மறைக்கு அருள் பெத்லகேம் நகருக்குத் தலைவனாகிய கிறிஸ்து.

தலைவி : கட்டழகுடைய அவனுக்கு அலங்காரத்துணி இல்லாத ஆடை ஏன்?

குறவஞ்சி : வலிமையுடைய தாவீது பெருமையுடன் மயில் தோகையைப் போட்டார்.

தலைவி : பெருமை பெற்ற மகன் சிலுவையில் சேலை இல்லாமல் நிற்பது ஏன்?

குறவஞ்சி : திருச்சித்தமதாய்ப் பரிசுத்தர்க்கு நீதியின் ஆடையைத் தர மெத்த நினைத்ததனால் சேலை இல்லாமல் நிற்கிறான்.

தலைவி : பத்து இலக்கணத்தை விட மாட்டான் பத்து இலக்கணத்தை விட்டான் ஏன்?

குறவஞ்சி : கெட்ட பன்றிக்குணப் பிசாசு அன்றைக்கு அமலனைப் பன்றிக்குள்ளேவிட மன்றாடிய காரணத்தினால்.

தலைவி : சத்தியத்தில் நிற்பவர் சத்தியற்று நிற்பது ஏன்?

குறவஞ்சி : செயல் தங்கும் உலகத்தை மூன்றுவிரற் கடையில் கொண்ட தூயவன் மூன்று ஆணியில் தொங்கிய காரணத்தினால் சத்தியற்று நிற்கிறான்.

தலைவி : ஐந்து குறிப்பிட்டவர்க்கு ஐந்து கை பட்டிருப் பது என்ன?

குறவஞ்சி : பேய்க்கு அஞ்சுவதை உடைத்து ஆறுதலை விடுத்துப் பெண்களைத் திருமணம் செய்தத னால் ஐந்து கை மட்டுமுள்ளது.

தலைவி : ஐந்தன் கூட்டத்தைப் படைக்காதவன் பஞ்சகத்

ைதப் படைத்தது ஏன்?

குறவஞ்சி : கனபரிசுத்த முத்தர்கள் ஆவி வரிசித்தகத்தனை நாளும் வணங்கி எல்லாக் காலமும் வழிபட்டு வாழ்ந்திருப்பதற்காகப் படைத்தான்.

தலைவி : அல்லேலூயா ஓசனா என்று அருளின சொற்களுக்குப் பொருள் என்ன?

குறவஞ்சி : தலைவனின் பெயர் கொண்ட தேவகுமாரனை மேவித் துதியும் என்பதாகும்.

தலைவி : வல்லவனும் அல்பா ஓ மேகா நாம் என்றது என்ன?

குறவஞ்சி : எல்லாப் பொருள்களுக்கும் தொடக்கம் முடிவு என்பது எப்பொழுதும் திரித்துவம் அறிவுத் தத்துவத்தால் என்பதாகும்.

தலைவி : ஏழு என்ற சொல்லுக்கும் மகாநாள் என்ற சொல்லுக்கும் என்ன பொருள்?

குறவஞ்சி : ஏழு என்பது குறை எண் ஆகும். மகாநாள் என்பது ஆயிரம் சென்ற ஆண்டு ஆகும்.

தலைவி : பாழ் எனும் கெட்ட பாம்பு என்று பிசாசுக்குப் பெயர் வந்தது என்ன?

குறவஞ்சி : பாம்பின் உருவம் கொண்டு ஓம்பி மனிதர்களைத் தீம்பு செய்த வினைக்குப் பெயராகும்.

தலைவி : மிருகம், வேசி என்ற சொற்கள் யாரைக் குறிக்கும்?

குறவஞ்சி : முழுவேதப் புரட்டனாகிய பாதகப் பாம்பைக் குறிக்கும்.

தலைவி : திருடன், அந்திக்கிறிஸ்து, கள்ளத்தெரிசி என்ற பெயர் எவருக்கு?

குறவஞ்சி : முன் சொல்லிய பசாசின் தப்பிதத் தலைவனுக்கு ஒப்பிடக் கோடிப் பேர் இப்படி உண்டு.

*இயேசுபிரானின் பெயர், கிறித்தவ சமயக் கொள்கைகள், இயேசுபிரானின் செயல்கள், வாழ்க்கை நிகழ்ச்சிகள் போன்றவற்றை இப்பகுதியில் ஆசிரியர் கூறுகின்றார். பாட்டுடைத் தலைவனின் பெருமையைப் போற்றுமுகத்தான் தலைவி குறவஞ்சியிடம் விடுகதையாகக் கேட்பது போல அமைத்திருக்கிறார்.*

**மகளிர் நிலை**

*பாட்டுடைத் தலைவன் கோவேறு கழுதை வாகனத்தில் ஏறி உலா வருவதைக் கண்ட பெத்லகேம் நகரில் வாழும் கன்னிப் பெண்கள் தலைவன் அழகில் ஈடுபட்டுப் பலவாறு புலம்புகின்றனர். இவற்றில் தலைவனின் அழகு, வீரம் போன்றவற்றைக் காணமுடிகின்றன.*

*உலாக் காணும் பெண்களின் முகங்களைத் தாமரை மலர்களுக்கும், முலைகளைக் கும்பத்திற்கும் வேதநாயகர் ஒப்பிடுகின்றார் (47).*

*இக்கன்னிப் பெண்கள் அறிவில் சிறந்தவர்கள். இவர்கள் தலைவனின் அழகைக் கண்டு மயங்கி விழுகின்றனர்; தங்கள் உறக்கத்தை மறந்தனர் (26). இவர்கள் நாளும் காதலுடன் தலைவன் வருவதைக் கண்டனர் (91).*

*ஏவாள், சாராள், ரேபக்காள், மைலேயாள், ராகேல், தாமார், சில்பொறாள், ராகாப்பு, தெபோறாள், நகாமி, ரூத்தபிகாய், யோசேபாள், யோப்புவின் மகள், எஸ்தர், சூசன்னாள், எலிசபெத்தம்மாள், மரியாள், கன்னி மரியாள், கிலேயோப்பை மரியாள், கத்தரீனாள், கித்தோரியாள் ஆகிய இப்பெண்கள் தலைமையில் சீயோன் மகளாகிய தேவ மோகினி வருகிறாள் (27).*

*மண்டலப் பெண்களோடு தலைவி குலாவுகிறாள் (28). எருசலை நகரில் நல்ல சொற்களைப் பேசும் பெண்களில் சிறந்தவர்கள் இருக்கின்றனர் (33). சீயோன் மலையில் கற்புள்ள பெண்கள் பலர் இருக்கின்றனர் (60). அறிவுள்ள கன்னிப் பெண்களுக்கும் தலைவி திறமை பெற்றவளாக இருக்கிறாள் (83).*

கானான் நாட்டைச் சேர்ந்த பெண் பேச்சுத் திறமை உடையவள் (80). ரேபக்காளுக்கு வேலை செய்த குறவஞ்சி அதற்காகத் தம் கைகளில் அணிவதற்காகப் பொற்சரிகையைப் பரிசாகப் பெறுகிறாள் (154). குறவஞ்சியின் நடை அன்னத்திற்கு ஒப்பிடப்படுகிறது (57)

பைபிளில் இடம்பெறும் பெண்களுள் இராகாப்பு, உரியா, எலிசபெத்தம்மாள், எலிசப்பெத், எஸ்தர், ஏவாள், கத்தரீனாள், கன்னிமரி, கித்தேரியாள், கிலேயோப்பை மரியாள், சாறாள், சிப்போறாள், சூசன்னாள், தாமார், தேப்போராள், ஈசாமி, பர்சேபாள், பில்க்காள், மரியாள், மர்த்தாள், மிகாள், மில்க்காள், மைலேயாள், யோசேபாள், ராகேல், ரூத்தபிகாள், ரூத்தாள், ரேபக்காள், வேலாபாள் ஆகியோர் குறிப்பிடப் பெறுகின்றனர். இவர்களுள் தாமார், ராகாப்பு ஆகியோரை விலைமகளாகவும் பர்சேபாளைத் திருட்டுப் பெண்ணாகவும் ஆசிரியர் கூறுகின்றார்.

**சமுதாயநிலை**

இரண்டாம் சரபோசி மன்னர் நண்பராகவும் அவர் ஆதரவிலும் இருந்த வேதநாயகர் காலத்துச் சமுதாயநிலையை இப்பனுவலில் அறியமுடிகிறது. பாட்டுடைத் தலைவராக இயேசுபிரான் திகழ்ந்தாலும் தம் காலத்து நிகழ்ச்சிகளையும் சமுதாயநிலைகளையும் ஏற்றவிடங்களில் ஆசிரியர் கூறத் தவறவில்லை

கல்வியறிவுடைய போதகர்களும், கல்வியைக் கற்றுத் தரும் அண்ணாவிமார்களும், குருக்கள் புலவர் உபதேசி போன்றவர்களும், பல மொழிகள் பேசுகின்றவர்களும் இக்காலத்தில் இருந்துள்ளனர்.[42]

தூய்மையான பரிசுத்த உள்ளம் கொண்டவர்களாக ஆங்கிலேயப் பெண்கள் உள்ளனர் (83). அரசர்களும் துரைகளும் சந்திக்கும்பொழுது நேசத்துடன் ஒருவரையொருவர் தழுவிக் கொள்ளும் வழக்கமும் காணப்படுகிறது (152). தெள்ளுதமிழ்ப் பாவலர்களுக்கு அரசர் பரிசளித்துள்ளார் (87)

42. பெத்லகேம் குறவஞ்சி, பக் 36, 104, 109, 130.

உத்தமன் போலப் பொய் வேடம் அணிந்து திருட்டுத் தனமாக ஞானியைப் போல வந்து கற்றவர்களையும் மோசம் செய்கின்றவர்களும் அக்காலத்தில் இருந்ததாகக் கூறுகின்றார் (120).

தவறு செய்தவர்கள் சபை முன் விசாரிக்கப்பட்டு அவர்களுக்கு மொட்டை அடித்தல் போன்ற தண்டனைகள் அளிக்கப்பட்டுள்ளன. செய்த தீர்ப்பை எதிர்த்தவர்கள் நாட்டை விட்டுத் துரத்தப்படுவதுண்டு (80).

அக்காலத்தில் பரத்தமைத் தொழில் சர்வ சாதாரண மாக இருந்த காரணத்தினாலேயே விறலிவிடுதூது, நொண்டி நாடகங்கள் முதலான சிற்றிலக்கியங்கள் பல்கிப் பெருகின. இயேசுபிரான் வாழ்ந்த காலத்திலும் இப்பரத்தமைத் தொழில் காணப்படுவதை அவர் கூறிய பத்துக் கட்டளைகளுள் இத்தொழிலை வன்மையாகக் கண்டித்திருப்பதிலிருந்து அறியமுடிகிறது.

> "வேசித்தனப் பாத்திரத்தைக் கையில் வைத்துக் கொண்டு வெறி எடுக்கக் குடித்தலைந்து வெளி அரங்கமாகத் தாசியிலும் கேடாக விபசாரம் செய்து சந்தியிலே போகின்றவர்களுக்குப் பந்தயப் பொருளைப் பொருந்தி, சீசீ என்று கண்டவர்கள், கேட்டவர்கள், ஏசச் சேலை சற்றும் இல்லாமல் நிருவாணமாக, ரோசமற்று ஊரார்க்குப் பிள்ளை களைப் பெற்ற பாவிகள்" (65)

என்றும்,

> "காணாத்தாலி கட்டிக் கொண்டு, பக்கிஷமில்லாமல் கொண்டவனை விட்டுப் பார்த்தவனோடே செல் கின்ற பெண்; இரவும் பகலுமாய்க் கண்ட ஒருவருக் கும் ஒன்றும் கொடுக்காதவர்களோடு ஒன்றாகத் திரிந்து வெட்கமில்லாமல் விலைமகளாக வாழ்பவள்" (102)

என்றும்,

> "மாறுபாட்டுக்காரச் சன்னிகுணம் என்று கூறுகின்ற

*மகாவேசியானவள் மட்டுத் திட்டமற்றுப் போகின்ற வர்களையும் வருகின்றவர்களையும் போக விடாமல் புறத்தினில் பற்றியே ஏறிய நாயது போல அலைந்து திரிந்து எங்கணும் கண்டவிடத்தில் எல்லாம் நின்று வேறுள செம்பு மரம் சிலை யாவற்றையும் வேசித்தனம் செய்யும் பெண்கள்" (118)*

*என்றும் அக்காலத்திலிருந்த பரத்தமைத் தொழிலை வேதநாயகர் கூறி அவற்றை முற்றிலும் அடியோடு வெறுத்து ஒதுக்குகின்றார்.*

*தீக்கை பெற்றவர்களுக்கே குறவர் குலத்தில் பெண்களை மணம் செய்து கொடுப்பதுண்டு (61).*

*வேளாளர், முதலியார், ஆரியர், பூசுரர், வேதப் பிராமணர், வள்ளுவர், பூக்காரர், பட்டுநூற்காரர், மராட்டியர், மோசம் செய்யும் கள்ளர், மறவர், சாணார், சலுப்பர், குறவர், குயவர், சக்கிலியர், பள்ளர், படையாட்சி, பாணார், சமணர், பரவர், வடுகர், பள்ளி, பறையர், பட்டாணி, வாணிகர், காணாப் புதரையர், கோலியர், கொல்லர், கம்மாளர், கல்தச்சர், கண்ணார், தட்டார், வெட்கமில்லாத விலைமகளிர், தொட்டியர், ரெட்டியர், நாவிதர் போன்ற சாதிகளைச் சேர்ந்தவர்கள் வேதநாயகர் காலத்தில் தஞ்சாவூரில் இருந்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது. மேலும் மேலான சாதியும், தாழ்வான சாதியும், வெள்ளை கறுப்பு விபரீதச் சாதியும், மாலான சைவமதக்காரச் சாதியும், மாமிசம் தின்னும் மதமற்ற சாதியும், சாலப் பெருந்தாலி, சங்குத்தாலி கட்டிச்சாதி, பொட்டுக்கட்டிச்சாதி போன்ற சாதியைச் சேர்ந்தவர்களும் இருந்துள்ளனர் (107).*

**நாடும் ஊரும்**

*பாட்டுடைத் தலைவனாக இயேசுபிரான் இருப்பதனால் அவர் பிறந்து வளர்ந்த நாடும் ஊர்களும் இப்பனுவலில் கூறப்படுகின்றன. பைபிளில் காணப்படும் பெயர்களையே ஆசிரியரும் பயன்படுத்தியுள்ளார்.*

*பெத்லகேம் நகரில் பிறந்த இயேசுபிரான் எருசலை*

மாநகரில் கோவேறு கழுதை வாகனத்தில் ஏறி உலா வருகின்றார். அந்நகரில் வாழும் மனிதர்களும் தேவர்களும் மற்றுமுள்ளோரும் உலாவைக் கண்டு களிக்கின்றனர். கானான் தேசத்தில் பிறந்த தேவமோகினி எருசலையிலுள்ள சீயோன் மலையில் வாழ்கிறாள். சீயோனின் நாட்டைச் சேர்ந்த கன்னிப் பெண்கள் எருசலை நகரில் உலாக் காண்கின்றனர்.

அச்சயதேசம், இசரேல், இத்தாலியச்சீமை, ஈந்தியதேசம், எகிப்து, எருசலை, எலியா, ஏதோம், ஓரேப்பு, கலிலேயா, கல்தெயர், காபிரியேல், கானான், சூனேம், பாலஸ்தீனத்தேசம், பிஸ்கா, பெத்லகேம், பேத்தேல், பொத்தாமியா, மேசியா நாடு, யூதேயா, லாபான் ஆகிய நாடுகளும் ஊர்களும் கூறப்படு கின்றன. இவையனைத்தும் பாட்டுடைத் தலைவரோடு தொடர்புடையனவாக இருப்பது குறிப்பிடத்தகும்.

சிங்கன் தன் நண்பனுடன் பறவைகளைக் காண்பதாகக் கூறும் பகுதியில் 109 நாடுகளைச் சேர்ந்த பறவைகள் வருவதாகக் கூறுகிறான். அந்நாடுகள் வருமாறு :

எத்தியேஸ்பியர், ஏத்தியர், சூரியா, கல்தேயம், யூதேயா, மேதியா, ஆங்கிலேயர், அராபியர், அப்பத்தோக்கியர், ரேமோரியர், பெரிசியர், சிலீசியர், ரோமையர், பாரசர், மாகோகர், கோகர், புரூசியர், ரூசியர், ஏபிரேயர், எபேசியர், தந்திரமான பிராஞ்சியர், மேசோப் பொத்தாமியர், ஏபூசியர், ஏலா மீத்தியர், இந்துஸ்தானியர், அல்மாஞ்ஞர், கொரிந்தியர், இக்கோனியர், இஸ்பாஞ்சர், கொனஸ்தாஞ்சியர், விந்தைசெறி கானானீயர், அம்மோனியர், வெஸ்தியரிஸ்தேக்கியர், இருகாசியர், பந்தமிகும் அருமேனியர், துற்கிகள், பம்பினியர், சீதோனியர், பொடுத்தீசர், உலாந்தர், சேரயீரீசர், கிரேத்தர், மோவாபியர், வாதுமலாகிகள், லத்தீனர், தானிஷர், வாகாம் அபிமேலேக்கியர், பெலிஸ்தர், கோதுமுகியர், பரதரிஸ்க் காச்சர், கோளோசேயர், சர்தேயர், ஈந்தியாத்தீவு, அங்கம், அருணம், அவந்தி, ஆந்திரம், இலாடம், யவனம், ஒட்டியம், கருசம், கலிங்கம், கன்னடம், கர்நாடம், காசம், காச்மீரம், காந்தாரம், காம்போசம், கிராமம், குருகு, குடகம், குந்தளம், குரு, குலிந்தம், கூர்ச்சரம், கேகயம், கேரளம், கொங்கணம், கொல்லம், கோசலம், சகம், சவ்வீரம், சாலவம், சிங்களம்,

சிந்து, சீனம், சூரசேனம், சோழம், சோனகம், திராவிடம், துளுவம், தெங்கணம், நிடதம், நேபாளம், பாஞ்சாலம், பப்பரம், பல்லவம், பாண்டியம், புலிந்தம், போடம், மகதம், மச்சம், மராடம், மலையாளம், மாளவம், யுகந்தரம், வங்கம், வங்காளம், விதர்ப்பம் ஆகிய நாடுகள் கூறப்படுகின்றன.

**உவமை நலம்**

'போல' எனும் பொருளிலேயே பல உவமைகள் கையாளப்படுகின்றன. ஒத்த, ஒக்கும் ஆகியவையும் பயன் படுத்தப்படுகின்றன.

பெத்லகேம் நகரில் வாழும் பெண்கள் மீன்கள் போல வருகின்றனர் (25); மோசேயின் தங்கை தானாமீரி என்பவள் மீன் போலவும் (34); தேப்போறாள் மான் போன்றும் (34) உள்ளனர். சருவேசுவரன் பாதங்கள் தாமரை போன்றுள்ளது (27). சாத்தான் சிங்கம் போலக் கர்ச்சித்து எங்கும் சுற்றித் திரிந்து தீமைகளைச் செய்கிறான் (41). சப்பாணிகள் இறைவ னருளால் மான்களைப் போலத் துள்ளி ஓடினர் (65). வான் கதிர் போலக் குருடர்களுக்குப் பார்வை தந்த தலமாகப் பெத்லகேம் திகழ்கிறது (65). பெத்லகேமின் பராபரன் மைந்தன் அனைவரையும் கருணையுடன் பார்ப்பது போலவே அத்தனைப் பறவைகளும் இத்தலத்தில்தான் முற்றுகை யிடுகின்றன (165).

மலர் போன்ற கையினை உடைய தேவமோகினி(85)யின் உடல் புடம் வைத்த பொன் போன்றது; கிளி அழகு எனும் சுபமேனியினள் (28). மலை போலப் பொன்னாலான தலை யினை உடையவள். மேகம் உலவும் காகத்தின் சாயல் போன்ற சிறந்த கொண்டையினை உடையவள். அழகிய மாடப்புறா வின் கண்கள் போன்ற பரந்த விழிகளை உடைய கெண்டை மீன் போன்றவள். தாமரைத் தண்டிலிருந்து வந்த வில்லி மலரின் வாசனை கொண்ட இதழ்களை உடையவள். குற்ற மில்லாத பொன் எனும் பட்டம் தரித்த நெற்றியினை உடையவள். வில் போன்ற புருவம் கொண்டவள். முத்துப் போன்ற பற்களை உடையவள். அன்னம் போன்ற நடையினள். தாவீது மன்னன் தந்த பொன் உருவம் போன்ற தந்தக்

கழுத்தினை உடையவள். பொன்னில் பதித்து மின்னும் தற்சீசின் இரத்தினம் போன்ற சிவந்த கைகளை உடையவள். மயக்கத்தை உண்டுபண்ணும் மான் கன்று என்று ஊன்று முந்திரிகைக் குலைக் கொங்கையாள். நினைக்கும் லில்லி மலர் சிறந்த கோதுமைப் பெருங்குவியல் போன்ற வயிற்றினள். பார்வோன் மன்னனின் இரதத்தில் பூட்டப்பட்ட குதிரைப் படை போன்ற நடையினள். பொன் போன்ற ஆதாரத் தூணின் தொடையினாள். பழமையுடைய தந்தத்தினில் நீலக்கல் பதித்த மேனியினள் (30-32).

சீயோன் பெண் துன்பப்படும் வேளையில் குறவஞ்சி தோன்றுவதைக் கூறவந்த ஆசிரியர்,

> "பல ஆண்டுகள் மகனை இழந்த யக்கோ சூசை எதிரில் வருவதைக் கண்டு அவன் எவ்வளவு மகிழ்ந்தானோ அதுபோன்று தேவமோகினி மகிழ்ச்சி அடைந்தாள்" (44)

என்கிறார். மின்னலைப் போன்ற குறவஞ்சி அன்னம் போல நடந்து வந்து ஊனுக்குள் உயிர் போலத் தலைவிக்குக் குறி சொல்கிறாள் (57, 83).

பல்வேறு கதைகளை உவமைகள் மூலம் வேதநாயகர் கூறுகின்றார். அவை வருமாறு :

ஞானச்சிங்கனுக்கு உதவியாக அவன் நண்பன் நூவன் வருவதை வேதநாயகர்,

> "கற்பனை மோசேக் காரோனைப் போலவும், கற்ற எலியாவுக்கு எலிசா போலவும், அற்புத யோசுவா காலேப்பாகவும், அந்தப் பவுலுக்குத் தீமோத்தே போலவும், பவுன் சீலாவினைச் சேர்த்தது போலும், பருனபாமற்குவைச் சேர்த்தது போலும், தல யோவானும் தம்பி யாக்கோபைப் போலவும், சத்திய வல்தெஞ்சஸ்க் கல்விக் கெஞ்சஸ்ப் போலும், கானுகுக்குத் துணை ஏராமைப் போலவும், உத்தலுத் தருக்குக் கல்வீனைப் போலவும், சிங்கனுக்குப் பாங்கனைப் போலவும் தோழனைப் போலவும்" (98-99)

வந்ததாகக் கூறுகின்றார்.

பறவைகளைச் சிங்கன் வலை வீசிப் பிடிக்கிறான் இவன் வலையில் பறவைகள் எல்லாம் வந்து சேருவதைப் பின் வருமாறு கூறுகின்றான்.

1. நீதி இல்லாத எகிப்பத்து நாட்டு நிருபன் எனும் பரவோன் மகளை மணந்து வளர்ந்து அங்கு காவலனாக இருப்பதைப் பார்க்கிலும் தீங்கைச் செய்துவரும் தன் சொந்த மக்களுடன் தீங்கு படுதல் நலமெனத் தேறியே மீதியான் தேசத்து ஆசாரியனிடம் வித்தகன் மோசேயும் வந்து சேர்ந்தது போலச் சேருது (109)

2. சற்குணமான இருதயத்தாலுமே தன்னோடிருந்த அறுநூறு பேருடன் கெட்ட குணமுடைய சவுலுக்கு அஞ்சியே தூரத்தே சென்று பெலிஸ்தரின் நாட்டில் நிற்கின்ற காத்து நகரத்தில் வந்து அங்கு நேரான மாகோகின் மகன் என்று சொல்லும் நல்ல குணத்தோங்கிய ஆசீசெனும் காத்தின் அரசனைத் தாவீது நட்புடன் சேர்ந்தது போலே சேருது (110).

3. எல்லோரும் நம் அருகினில் வாரும் என்று கிறிஸ்து ஏசு சொல்லிய சத்தத்தைக் கேட்டுமே, வல்லாமை பேசும் துருக்கர்கள் ஏழை வழக்கு அழிவுக்காரர் மாய்மாலக்காரர்கள், கல்லாத மூடர் கொலை பாதகக்காரர், காமவிகாரிகள், பொறாமைக்காரர், பொல்லாத பாவிகள், ஆயக்காரர்கள், புண்ணியன் பாதத்தை நண்ணிச் சேர்ந்தாப் போலே சேருது (110)

4 மட்டளவில்லாத புத்திகள் சொன்னாலும் உண்மையாய் அதைக் கேட்க மாட்டோம் என்று தட்டிவிட்டுத் தனக்குண்டான பங்கைத் தா என்று வாங்கியே தூரத்திலே சென்று பட்டித்தனத்தில் அலைந்து திரிந்து பரத்தையரோடு முயன்று இறுதியில் கெட்ட குமாரன் மனது திரும்பிக்

கிருபைப் பிதாவினிடம் வந்து சேர்ந்தது போலே சேருது (110)

5. தேவாராதனை கோயிற்புறத்திலே செய்யும் சமயங்கள் திட்டம் அறிந்தாலும் போனோம் இன்னும் சற்று நேரம் பொறுத்து என்று பொல்லாமையால் தங்கள் காலத்தைப் போக்கியே பாவாளரவர் பாதிப் பிரசங்கம் செய்து மூய்க்கின்ற போதிலும், ஓவாதர் ஒருத்தர் ஒருத்தராய் ஒன்றின் பிறகாய் ஒன்றாய் வந்து சேர்ந்தது போலே சேருது (110-111)

6. பராபரனின் சபையோர்கள் அலகையையும் அதன் ஆடம்பரத்தையும் ஈமைதான பவத்தையும் ஆங்கிஷ இச்சை அனைத்தும் மகிழ்ந்து விட்டுத் தள்ளி, மோனமுடன் பரிசுத்த வழியில் முழுவதும் நடந்து உண்மையாய் ஞானமதாகக் கிறிஸ்து அருளிச் செய்த இரவு உணவு என்னும் நன்மைக்குச் சேர்ந்தாற் போல் சேருது (111).

7. இராசகுமாரனை விட்டுத் தெருவினில் நாலு இடமும் இரந்து குடிக்கிற தூசி எனும் பிச்சைக் காரன் தனக்குத் துணைவன் என்று நம்பிச் சோரம் போனது போலே, ஆசை வெறி கொண்டு இறந்த மனிதரை ஆண்ட பொருள் என்று மீண்டு மனத் திடை ரோசம் இல்லாமலே வேசித்தனம் செய்யப் பாவி விக்கிரகத் தண்டை சென்றது போலே சேருது (111).

பற்பல சாதிகளைச் சேர்ந்த பறவைகள் பார்ப்பதைக் கூறுகின்ற பகுதியில் இடம்பெறும் கதை உவமைகள் வருமாறு :

1. சொல்லுக்கும் நோக்குக்கும் அறிவுக்கும் எட்டாத வள்ளல் எரிபந்தத்தினாலும் தாக்கிய அக்கினிக் கெந்தகத்தைப் பெய்து சண்டாளப் பாவிகள் தம்மை அழிக்கும் முன் நீக்கி அழிவுக்குத் தப்ப உண்மைத் தூதர் கை நீட்டிய நால்வர் கடந்து ஓடிப்போகும் பொழுது நோக்கமதாகவே

*சோதோம் நகரத்தை லோத்தின் மனைவி திரும்பிப் பார்த்தது போலே பறவைகள் பார்க்கின்றன (115).*

2. *இசராவேல் மக்கள் எகிப்பத்தை விட்டுக் காட்டிற்குச் சென்ற பின் தீகளைப் போல் கொடிய பாவத்தைச் செய்யவே தேவன் எரிந்து சினந்தவர் களைச் சாகவும் சாகக் கடிக்கவும் கொள்ளிவாய்ச் சர்ப்பத்தை விட்டுதினால் கடியுண்டவர் வேகத் துடன் மோசே உண்டாக்கித் தூக்கிய வெண்கலச் சர்ப்பத்தை நோக்கிப் பார்த்தது போலே பறவைகள் பார்க்கின்றன (116).*

3. *எட்டுத்திசையும் கொள்ளாதவன் மைந்தன் எம் ஏசு சுவாமி எழுந்தருளித் தர்மப்பெட்டிக்கு எதிரிருந்து எப்படிக் காசுகள் பெட்டியில் போடுகின்றனர் என்றறிந்திடச் சட்டத்துடன் அதில் செல்வம் உள்ளோர் எல்லாம் தங்கள் செல்வத்தின்படி மிகப் போட்டாலும் துட்டு ஒன்று போட்ட விதவையின் மேல் புகழ் சொல்லிச் சொல்லிக் கர்த்தர் சூழப் பார்த்தது போலே பறவைகள் பார்க்கின்றன (116).*

4. *பத்தி இல்லாமலே லோகச் செல்விக்கையின் பாக்கியத்தோடு சலாக்கியமாகவே, முத்துறை உந்தன் அரண்மனை வாயில் முகப்பில் கிடந்த தரித்திரவானுக்குச் சித்தம் இரங்கித் தயவு செய்யாக் கொடுந்தீயவை சூரியவானும் நரகத்தின் துன்பப்படும்பொழுது ஆபிரகாம்தனைக் காணத் தன் கண்ணை எடுத்துப் பார்த்தது போலப் பறவைகள் பார்க்கின்றன (116).*

5. *மன்னவனானவன் தன் மகன் சொந்த மண விருந்துக்கு வரச் சொல்லி ஆள் விடச் சொன்ன படிக்கு வராமல் கொடுஞ்செயல் செய்த துட்டரை அழித்து நாற்சந்திதன்னில் சுகப்பட்ட நொண்டி குருடு முதலானவர்களை அழைத்து நிறைத்தபின் செய்த மணவறைப் பந்தியிலே வந்து பாத்திபன்*

நின்று சுற்றிச் சுற்றிப் பார்த்தது போல் பறவைகள் பார்க்கின்றன (117).

6. கிறிஸ்துவைக் காண்பதற்காகச் சகேயு ஆயக்காரன் விரைந்து ஓடித துரிதமாய் அத்தி மரத்தினில் ஏறி யிருந்து கொண்டு ஆவலாய் நோக்கியது போல் பறவைகள் பார்க்கின்றன (117).

7. பிரதானாசாரியன் வீட்டிலே சீமோன் பேதுரு கர்த்தரை மூன்று தடவை மறுதலித்தாலும் அவனை மறுத்தும் விடாமல் உருக்கமாகப் பொறுமையுடன் இருந்து உத்தம தாதை தன் பொல்லாத பிள்ளைக்கும் நன்மை செய்தது போல் அருள் பரமன் திருமுகம் கொண்டு கீர்த்தியாய்ப் பேதுருவை நோக்கிப் பார்த்தது போல் பறவைகள் பார்க்கின்றன (117).

8. எலியா, பரத்துக்கு எழும்போது அங்கு அவன் ஏறுவதை எலிசா நின்று பார்த்த நலமது போல ஐஞ்ஞூற்றுவர் காணவே நாதனார் மேக சிம்மாசனத்தில் ஏறி ஒலி முழக்கத்தோடு வானவர் சேனை உசாவப் பரமண்டலத்திற்கு எழுந்து வலிமையில் போகின்ற மகத்துவத்தைக் கன வாஞ்சையால் நோக்கி நின்று அண்ணாந்து பார்த்தது போல் பறவைகள் பார்க்கின்றன (118).

'பட்சி போன சிந்து' எனும் பகுதியில் பறவைகள் சென்றதை ஆசிரியர் சில கதைகள் மூலம் உவமைப்படுத்திக் கூறுகின்றார். அவை வருமாறு :

1. ஏழு ஆண்டுகள் லேயாளுக்காகவும், ஏழு ஆண்டுகள் ராகேலுக்காகவும், ஆழிய மந்தை களுக்கு ஆறு ஆண்டுகளுமாக இருபது ஆண்டு களாக வேலாபானைச் சேவித்திருந்தும் துரோக நினைவை நினைத்தவனின் முகம், நாழிகைக்கு நாழிகை வேறுபட்டதால் யாக்கோபு லாபானை விட்டு ஓடிப்போனது போல் பறவைகள் சென்றன (140).

2. ஊரியாவைப் போரில் அனுப்பிக் கொன்று உற்றவன் மனைவியைத் தான் எடுத்துக் கொண்டு வீரியமாய்ப் பாவம் செய்ததனால் அவன் மேலே பராபரன் கோபம் கொண்டே, சூரியன் தன் வெளிச்சத்தில் சோர்ந்திடத் தோழனுக்கு அங்கு அவன் மனைவியையும் கொடுத்து ஊரையும் விட்டுத் துரத்த அபிசலோமுக்குப் பயந்து தவித்து ஓடியது போல் பறவைகள் பறந்து சென்றன (140-141).

சிங்கியைக் காணாத சிங்கன் பலவிடங்களிலும் அவளைத் தேடுகிறான். அவள் நினைவால் புலம்புகிறான் இறுதியில் அவளைக் கண்டவுடன் 'முன்பு குன்றப்பர் விடுக்கப்பட்டதுக்கு என்று அக்களிப்புக் கொண்டவர் போல் மன்றாடிக் கூத்தாடி' நிற்கிறான் (153).

நோவாவின் பேழைக்குள் இருந்த பறவைகளுள் நன்றி கெட்டவர்கள் போனது போலக் காட்டுப்புறாவும் வராமலே போய் விட்டது (119).

எத்தனை முறை அறிவு சொன்னாலும் இளக்காரம் கொண்டு மனக்கடினத்துடன், மெத்தவும் முன்பைக் காட்டிலும் கெட்ட நடத்தையுடன் வேண்டியவாறெல்லாம் பாவத்துக்கு உட்பட்டு அறிவில்லாமல் நரகத்தின் பாதையில் செல்கின்றவர்களுக்கு ஆதரவே சொல்லித் துன்பம் மிகுத்துப் பரிதாபப்பட்டுக் கருணையாய்க் குருமார்கள் பார்த்தது போலப் பறவைகள் பார்க்கின்றன (118).

செல்வமுள்ளோரையும் ஆடை கட்டியே சித்திர அணிகலம் அணிந்தவர் தம்மையும் கல்வியுள்ளோரையும் பிள்ளையுள்ளோரையும் திருட்டுத்தனமாக உடலுறவு கொள்ளும் பெண்களையும் நல்வினையோரையும் அண்ணாவி மாரையும் நல்லுறவு புகட்டும் குரு உபதேசிமாரையும் தள்ளி எறிந்து பொறாமையதாகவே சண்டாளர் வன்கண்ணாய்ப் பார்ப்பது போலவே பறவைகள் பார்க்கின்றன (118).

**இயற்கை வளம்**

பெத்லகேம் நகரில் காணப்படும் இயற்கை வளத்தை

ஆசிரியர் கூறுகின்றார். மாதுளை, கமுகு, மா, பலா, ஆத்தி, விளா ஆகிய மரங்கள் செழித்து வளர்ந்துள்ளன. சந்தன வனங்கள், பெரும் பனைகள், நந்தவனம், வன்னிமரம், அரசமரம், புன்னைமரம், தென்னைமரங்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன. வயல்களில் செந்நெல் விளைச்சல் அதிகமாகும் பன்னிருவிதமான பழங்கள் பயன்தருகின்றன. வாழை, சண்பகம், வானளாவிய முருங்கைகள், தாழை, குங்குமம், கொன்றைகள், தென்னை, கோங்கு, வேங்கை, மூங்கில், வேம்பு, மஞ்சள், இஞ்சி, கரும்பு முதலானவற்றின் வளங்கள் காணப்படுகின்றன (53-54).

கானான் தேசத்தில் பாலும் தேனும் பெருகி ஓடுகின்றன (62, 64).

**1. மலர்கள்**

பூ, மலர், புஷ்பம் என்றழைக்கப்படும் மலர்களில் தாமரை, லில்லி, ரோசா ஆகிய மலர்கள் காணப்படுகின்றன. கஞ்சம், சரோருகம், பங்கயம் என்ற பெயர்களால் தாமரை அழைக்கப்படுகிறது தேவமோகினியின் கை மலர் போன்றிருக் கிறது (85). சர்வேசுவரன் தாமரை போன்ற பாதங்களையும் (27, 88) தாமரை மலர் சிவந்த கைகளையும் உடையவன் (121). பெண்கள் தாமரை போன்ற முகங்களை உடையவர்கள் (47) தாமரைத் தண்டிலிருந்து லில்லி மலர் தோன்றுகிறது (30); லில்லி மலர் சிறந்த கோதுமைப் பெருங்குவியல் போன்ற வயிற்றினை உடையவள் தேவமோகினி (31); குற்றமில்லாத பரலோக ரோச மலர்க் கன்னிக் கற்பினாள் (32).

**2. மரங்கள்**

அத்தி, அரசு, இலவு, கமுகு, கொன்றை, கோங்கு, சண்பகம், சந்தனம், தாதகி, ஆத்தி, தாழை, தென்னை, தேங்கு, பலா, பனை, புன்னை, மாதளை, மா, முருங்கை, மூங்கில், வாழை, விளா, வேங்கை, வேம்பு ஆகிய மரங்கள் காணப்படு கின்றன. உயிர்களைத் தரும் மரமாகச் 'சீவ விருட்சம்' கூறப்படு கிறது இம்மரத்தினில் சிங்கன் ஏறிப் பறவைகள் வருவதைக் காண்கிறான் இம்மரத்தை இறைவன் ஏதன் வனத்தில்

உண்டாக்கினான்[43]

### 3. பழங்கள்

'கனி' என்பது பழங்கள் பொதுவாக அழைக்கப்படுகின்றன. வாதுமைப்பழம் என்பது பூப்பூத்து அழகாக உள்ளது என்ற குறிப்பு மட்டுமே உள்ளது (103). மற்றபடிப் பழங்கள் எதுவும் காணப்படவில்லை.

### 4. நீர்வாழ்வன

தவளை, மீன் ஆகியன மட்டும் நீரில் வாழ்கின்றவை காணப்படுகின்றன. இயேசுபிரானின் சீடர்கள் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டவர்கள். எனவே 'மீன் பிடிக்கின்றவர்கள் அறிவு பெற்றுத் தேர்ந்தது பெத்லகேம்' (65) என்றும், 'வாகான சீடர்கள் மீன் வேட்டையாடும் பொழுது எல்லா மீன்களும் வலைக்குள் வந்து விழுந்தன' (130) என்றும், 'சீடர்கள் யாவரும் மீன்திண்ணிக் கூட்டம்' (139) என்றும் வேதநாயகர் கூறுகின்றார். 'முன் மீன் பிடித்தவர்' (157) என்று இயேசுபிரானையும் கூறுகின்றார். 'மீன் வயிற்றினுள் யோனாவை உண்டு பண்ணினார்' (26, 97) என்ற கதையிலும் மீன் இடம்பெறுகிறது. தேவமோகினியின் கண்களுக்கு மீனும் (33), கெண்டை மீனும் (30) உவமையாகவும், உலாவைக் காண்பதற்கு வருகின்ற பெண்களை 'மீன்கள் போல வரும் ஞான மடவார்' (25) என்றும், 'மீன் போன்ற மோசேயின் தங்கை மானாமீரி' (34) என்றும் மீன்கள் உவமையாகக் கூறப்படுகின்றன.

### 5. ஆறு, நதி, கடல்

'யோர்தான் நதி' என்றும் 'யோர்தான் ஆறு' என்றும் கூறப்படும் ஆறு யூதேயா நாட்டில் ஓடுகிறது.

ஏதன்மலையிலிருந்து நான்கு நதிகள் பிறக்கின்றன. ஆதி முதலான பீசோன் நதியிலும், அப்பால் கீகோன் என்ற இரண்டாவது ஆற்றிலும், நாதியீத்தேக்கல் எனும் மூன்றாம்

---

43 பெத்லகேம் குறவஞ்சி, பக்.105, 113, 126

ஆற்றிலும், நாலாவது எனும் ஐபிறாத்தாற்றினும் மாதவர் போற்றிய யோர்தான் நதியிலும் வந்து தீக்கைகள் பெறுவதுண்டு. பரமசீவ ஆறாகக் கிறித்தவர்களால் கருதப்படும் இந்த ஆற்றின் கரையில் தீக்கைகள் கொடுக்கப்படும் ஸ்நாதக யோவான் இந்நதியிலிருந்து போதனை செய்கிறார்.[44]

சமுத்திரம், சிந்து, வாரி, வாரிதி என்ற பெயர்களால் அழைக்கப்படும் கடல் இயேசுபிரானின் அருள் நல்குவதற்கு உவமையாகக் கூறப்படுகிறது.[45]

**6. விலங்குகள்**

ஆடு, ஒட்டகம், கழுதை, குதிரை, நாய், பன்றி, மாடு ஆகிய வீட்டு விலங்குகளும்; ஓநாய், கரடி, சிங்கம், நரி, பாம்பு, யானை, மான், முயல் ஆகிய காட்டு விலங்குகளும் காணப்படுகின்றன

ஆட்டுக்குட்டி, கிடையாடு, கூழைக்கடா, செம்மறியாடு ஆகிய பெயர்களால் அழைக்கப்படும் ஆடு இயேசுபிரானுக்கு மிகவும் விருப்பமுள்ள விலங்காகும். இவர் தம் கைகளில் செம்மறியாட்டைத் தாங்கினார். ஆட்டுக்கூட்டத்தை மேய்த்தவர். மேய்ச்சல் உள்ள தலத்தில் ஆடுகளை மேய்க்கவும் நீரோடும் சீவ நதியினில் காட்டவும் நேராய்த் தொழுவத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கவும் செய்தவர். இவரைப் பின்பற்றி உடன் சென்ற சீடர்கள் ஆட்டுக்குட்டியைச் சமைத்து உண்பதில் பெருவிருப்பம் கொண்டவர்கள்.[46]

இயேசுபிரானுக்கு விருப்பமுடையது ஆடானபடியினால்,

> "சில்ர் ஆட்டுத் தோலை உத்தமன் போலப் போர்த்துக்
> கொண்டு கள்ளத்தனமாக ஞானியைப் போல வந்து
> கற்றவர்களையும் மோசம் செய்வதுண்டு" *(120)*

என்று வேதநாயகர் கூறுகின்றார்

44 பெத்லகேம் குறவஞ்சி, பக் 44, 66

45 மேலது, பக் 83, 88, 89, 96, 97, 110, 124, 157

46 மேலது, பக் 21, 59, 60, 80, 104, 108, 119, 138, 139

இயேசுபிரான் ஒட்டகத் தோலை ஆடையாக அணிந்துள்ளார் (12, 45). கோவேறு கழுதையை வாகனமாகக் கொண்டவர் இக்கழுதை நீச, வேசரி எனும் பெயர்களால் அழைக்கப்படுகிறது.[47]

இரதத்தில் பூட்டப்பட்ட குதிரைப் படை போன்ற நடையினை உடையவள் தேவமோகினி (31) என்பதில் குதிரை கூறப்படுகிறது

கிறித்தவர்களே நாய்களுடைய வாய்களை அடைத்தவர்கள் (72). பரத்தைத் தொழில் செய்கின்ற மகளிர் நாய் போல் அலைந்து திரிகின்றனர் (118).

கெட்ட இயல்பைக் கொண்டவர்களுக்குப் பன்றி உவமையாகக் கூறப்படுகிறது. தீமைகளைச் செய்யும் இப்பன்றிகள் முன்பு முத்துக்களைப் போட வேண்டாம் என்று வேதநாயகர் கூறுகின்றார்[48]

இயேசுபிரான் மாட்டுக்குடிலில் பிறந்த காரணத்தினால் அவரைக் கைக்குள்ளே வைப்பதற்குத் தகுந்த மருந்துண்டு என்று குறவஞ்சி தேவமோகினியிடம் கூறுகின்றாள். 'மாட்டுக் குடில்' என்று சொல்கின்ற இடங்களில் 'மாடு' இடம் பெறுகிறது[49]

ஆற்று வெள்ளத்தில் அகப்பட்ட ஒருவன் அதிலிருந்து தப்பிப்பதற்காகக் கம்பளி என நினைத்துக் கரடியைப் பிடித்த கதை எனக் கூறுமிடத்தில் கரடி காணப்படுகிறது (143)

மன்மதன் சிங்கம் போலக் கர்ச்சிக்கிறான் (41). சிங்கக் குகையினில் வைக்கப்பட்ட தானியேல் அதிலிருந்த சிங்கத்தின் வாயைச் சித்திரமாய்க் கட்டினான் என்று கூறுமிடத்தில் 'சிங்கம்' காணப்படுகிறது (38, 97)

வன்ம குணமும் திருட்டுக் குணமும் கொண்ட எரோதே என்பவன் நரியாகிப் போனான் எனுமிடத்தில் 'நரி' காணப்படுகிறது (119, 124)

47 பெத்லகேம் குறவஞ்சி, பக் 15, 17, 19, 22, 24, 25, 88, 90, 91, 92, 119

48 மேலது, பக் 29, 71, 78, 131

49 மேலது, பக் 41, 52, 80, 89

அரவு, சர்ப்பம், நாகம், விரியன் பாம்புக்குட்டி என்று அழைக்கப்படும் பாம்பு என்பதும்; மிருகம், வேசி என அழைக்கப்படுவதும் சாத்தானைக் குறிப்பனவாகும் என்பதை வேதநாயகரே கூறுகின்றார் (78, 83).

கொள்ளிப்பாம்பு, நாட்டைக் கெடுத்த பாம்பு, கண் இல்லாத பாம்பு, பெண்ணான நாகம், கொடுமை செய்யும் ஆதிப்பாம்பு, கெடுதல் செய்யும் பாம்பு, எத்தன் எனும் பாம்பு, பாவிகளான செவிட்டு விரியன்கள் என்று இதன் தன்மைகளும் செயல்களும் கூறப்படுகின்றன.[50]

கிறித்தவர்கள் பாம்புக்குத் தீர்வையிடுவர் (71). தலைவன் மீது காதல் கொண்ட தேவமோகினி பலவாறு புலம்புகிறாள் அவள் நிலையைக் கண்ட குறவஞ்சி பாம்பின் செயலால் இவ்வாறு இருப்பதாகக் கூறுகிறாள் (90). இப்பாம்பின் வலைக்குள் சிக்காமல் இருப்பதற்குச் சுவிசேட வழிக்கு வருதல் வேண்டும் என்று சிங்கன் கூறுகிறான் (136). கீலேயாத்துரூபன் என்பவன் நாகம் போன்று இருக்கிறான் (60). பாம்பின் ஆலகால நஞ்சை இயேசுபிரான் அகற்றுகின்றார் (153).

பெண்களின் நடைக்கு மான் உவமையாகக் கூறப்படுகிறது. 'மயக்கத்தை உண்டுபண்ணும் மான் கன்று என்று ஊன்று முந்திரிகைக் குலைக் கொங்கையாள்' என்று தலைவி கூறப்படுகிறாள் (31). இயேசுபிரான் அருளினால் சப்பாணிகள் மான்களைப் போலத் துள்ளி ஓடுகின்றனர் (65).

**7. பறவைகள்**

அன்றில், அன்னம், ஆந்தை, இராசாளி, உள்ளான், உறாஞ்சி, கவுதாரி, கழுகு, காடை, கிளி, குயில், குருகு, குருவி, கொக்கு, கோட்டான், கோழி, சக்கரவாகம், செம்போத்து, சேவல், நாங்கணவாச்சி, நாரை, புறா, மயில், வண்டு, வவ்வால், வானம்பாடி ஆகிய பறவைகள் கூறப்படுகின்றன.

பக்கி, பட்சி, புள், வீ எனும் பெயர்களால் பறவைகள் அழைக்கப்படுகின்றன. நோவாவின் பேழைக்குள் பறவைகள்

50. பெத்லகேம் குறவஞ்சி, பக். 17, 24, 26, 61, 83, 84, 58, 119

எல்லாம் சோடாக வந்து சேர்கின்றன. பறவைகள் வானத்தில் உயரத்தில் ஓடிப் பறக்கின்றன.

சிங்கியைக் காணாத சிங்கன் தன் நண்பனுடன் பறவைகளை வேட்டையாடிப் பிடித்து வரும் பகுதியிலேயே பல பறவைகளை வேதநாயகர் கூறுகின்றார். குறவர்கள் பறவைகளை வேட்டையாடுவதைத் தொழிலாகக் கொண்டவர்கள். எனவே ஒவ்வொரு பறவையைப் பற்றியும் இவர்கள் நன்கு தெரிந்திருப்பதை ஆசிரியர் தெளிவாகக் காட்டுவதிலிருந்து அறியமுடிகிறது. பறவைகளின் இயல்பு, குணம் போன்றவற்றை ஆசிரியர் இவர்களிடம் நன்றாகக் கேட்டறிந்து பாடியிருப்பதை அறியமுடிகிறது.

சிங்கன் வலை விரித்து அன்னம், கொக்கு, காடை, நீர்க் காக்காய், வவ்வால், குருகு, செம்போத்து, அன்றில் முதலான பறவைகளைப் பிடிக்கிறான்.

அன்னம், உள்ளான், குருகு, கொக்கு, காகம், சாதகம், வானம்பாடி, மயில், கோகிலம், செங்கால்நாரை, கேகயம், கிஞ்சுகம், அன்றில், பஞ்சவர்ணக்கிளி, கருங்குயில், குயில், காடை, ஆத்தி, மாடப்புறா ஆகிய பறவைகளிடம் தன்னை விட்டுப் பிரிந்து சென்ற சிங்கியைக் கண்டு வந்து சொல்லுமாறும் எங்காவது அவளைப் பார்த்தீர்களா என்றும் புலம்புகின்றான் (132-135)

சிங்கியின் நினைவால் வாடும் சிங்கன் தன் நிலையை மறந்து, அன்னப்புறாவுக்கு வலையை வைத்து மயிலையும், குருவிக்கு வலையை வைத்துக் குருகுவையும், சக்கரவாகத்துக்குப் பதிலாக வக்காவையும், கவுதாரிக்குப் பதிலாகக் கொக்கையும் பிடிக்கிறான் (143)

கடல் உறாஞ்சிப் பறவை, பஞ்சைக் கெருடன், பருந்து, கழுகு, வல்லூறு, கருவாட்டு வாலி, ஆந்தை, கோட்டான், வவ்வால், நாரை, கொக்கு ஆகிய பறவைகள் தீட்டுப் பறவைகளாகும் (120).

தேவமோகினி, குறவஞ்சி ஆகிய இருவரது நடைக்கு

அன்னப்பறவை உவமையாகக் கூறப்படுகிறது[51] 'அன்னமான சீயோன் சபை' (107), 'ஞானச்சுகம் தரும் அன்னப்பேடை' (144), 'சீயோன் மகள் வாங்குவாள்' (138) எனவரும் பகுதிகளில் அன்னப்பறவை இடம்பெறுகிறது.

முன்பொருநாளில் அப்பத்தைக் காகம் கொண்டு சென்று எலியாவுக்குக் கொடுத்தது (119) என்பதில் காகம் இடம் பெறுகிறது.

நன்றி கெட்டவர்கள் சென்றதற்கும், ஞானிகளுக்கும் புறா உவமையாகக் கூறப்படுகிறது.[52] இறைவனுக்குப் புறா பலியிடப் படுகிறது (138). இறைவனுக்கு மிகவும் விருப்பமான பறவை களுள் புறாவும் ஒன்றாகக் கூறப்படுகிறது (119).

யோவானுக்கு மிகவும் விருப்பமான பறவையாக வெட்டுக்கிளி கூறப்படுகிறது (120, 138).

இசராவேல் சாதிக்குக் காட்டிலே நாள்தோறும் காடைப் பறவைகள் உணவாக்கப்படுகின்றன (120).

பெண் காடை, வெட்டுக்கிளி ஆகிய பறவைகளின் கறி சுவையாக இருக்கும் (138, 120).

பறவைகளின் இயல்புகள், குணங்களை ஆசிரியர் பின்வருமாறு கூறுகின்றார்.

1. அன்னம் - ஞானச்சுகம் தரும் (144)
அட்டதிக்கெங்கும் அலைந்து திரியும் (134)

2 குயில் (கோகிலம்) - கூப்பிட்டுக் கூப்பிட்டு ஓடிப்போகும் (134)
திட்டத்தோடே தினம் கூவித் திரியும் (134)

3 வானம்பாடி (சாதகம்) - மோனம் புகழும் (108)
(மட்டற்ற) சங்கீதம் பாடும் (134)

51. பெத்லகேம் குறவஞ்சி, பக் 35, 55, 57
52. மேலது, பக் 119, 107

4 மயில் (கேகயம்) - சீரான தோகையுண்டு (144)
வட்டத்திட்டாடிய
இங்கிதம் தெரியும் (134)
தஞ்சமற்று ஏங்கியிருந்து
மயங்கும் (134)

5. செங்கால் நாரை - வஞ்சகமாய்த் தப்பி ஓடிப்
போகும் (134)

6. ஆத்தி[53] - சீப்பிட்டுச் சீப்பிட்டுச் சேர்த்த
கொண்டைக் கொண்டல்
உடையது (135)

7. நாங்கணவாச்சி - சல்லாபமாய்ப் பேசும் (108)

8. காகம் - பாடும் (120)
கதை கேட்கும் (133)

9. குருவி - ஒளிந்தோடிப் போய் விடும், விசுவாசம்
மிக்கது, ஆட்காட்டி விடும் (120)

10. கிளி - பஞ்சமா பாவி போல் பேசும் (134)
இல்லாத ஞானங்கள் பேசும் (108)
சாடையாய்ப் பேசும் (144)

11 இராசாளி - (வல்லூறு) உல்லாசமாகத் திரியும், சத்திய
மார்க்கத்தை விட்டு அசையாமல்
இருக்கும் (108)

12 காடை - ஏச்சுத் திரியும் (134)

**8. மலைகள்**

ஏதன்மலை, ஒலிவமலை, கபாலமலை, காணிமலை, சீயோன்மலை, சீனாமலை, நகமலை, பெத்லேகமலை, மோரியாமலை ஆகிய மலைகள் கூறப்படுகின்றன.

குறவஞ்சி தான் வாழும் பெத்லேகமலையின் வளத்தைப் பின்வருமாறு கூறுகிறாள் (58-61).

வானவர்கள் கூடி வந்து தோத்திரங்கள் படிப்பர்.

53 ஆத்தி என்பது மரத்தைக் குறிப்பதாக அகராதி கூறுகிறது ஆயின் வேதநாயகர் ஒரு பறவையாகக் கூறுவது ஆய்வுக்குரியது.

வண்மையுள்ள சித்தர்கள் அரிய தவங்களைச் செய்வர். ஞானமுடன் முல்லைநிலத் தலைவர் வந்து தொழுவார். நட்சத்திரச் சாஸ்திரிகள் காணிக்கைகள் தருவர். இங்கு வாழ்கின்றவர்கள் ஏழை எளியவர்களுக்குத் தான தர்மங்கள் செய்வர். ஆண்டவனார் குறவர்களை அமைத்த மலை. நீதி என்ற நால்வரமும் கொடுத்த மலை. அறிவில்லாமலும் சாகாமலும் நின்ற மலை. பரம்பொருள் குறவர்களைச் சபித்த மலை. இம்மலையே குறவர்களுக்குப் பெரிய மலை ஆபிரகாம் ஈசாக்கைப் பலி கொடுத்த மலை ஏதோமின் எல்லை மலை. பெருமையுடன் யாறோன் மரித்த மலை. ஆண்டவனார் ஒலிவமலையில் செபம் செய்தார். பெத்லேகமலைதனில் ஆண்டவனார் பொழிவுகள் நிகழ்த்தினார். கற்புள்ள கன்னிப் பெண்கள் வாழும் மலை. சுதனார் பாடுபட்டு மரித்த மலை. முன் செய்த வினையை நீக்க வந்த மலை.

சீயோன் மலையில் நிகழும் திருமணத்திற்கென்று உலகத்திலுள்ள கற்புள்ள பெண்கள் சேர்ந்தது போலப் பறவைகள் சேர்கின்றன (109). ஏதன் மலையில் ஆறுகள் உற்பத்தியாகின்றன (113).

## 9. பிற

அம்புலி, நிலா, மதி என அழைக்கப்படும் சந்திரனைத் தலைவி காலிலும், விண்மீனைத் தலையிலும் அணிந்துள்ள தோடு சூரியனை ஆடையாக உடுத்தியுள்ளாள் (77). குறவஞ்சி யின் முகம் சந்திரன் போல இருக்கிறது (150).

விடிவெள்ளி, விண், விண்ணாட்டு ஒளி, மின்னல், சித்திரச் சோலை, விண்மீன், செந்தேன், அமிர்தம், செங்கரும்பு, கற்பகம், பவளக்கொடி, பூங்காவனம் ஆகிய இயற்கைப் பொருள்களைக் கொண்டு குறவஞ்சி அழைக்கப் பெறுகிறாள் (144-145).

வானம், புவி, மழை, மேகம், சோலை, வயல், ஆற்றங்கரை, பொய்கை, தோட்டம், கேணி ஆகிய இயற்கைப் பொருள் களும் கூறப்படுகின்றன.

**ஏனையவை**

**1. ஆடைகள்**

அங்கி, ஆடை, உடை, துகில், வஸ்திரம் எனும் சொற்கள் ஆடையைக் குறிப்பனவாகவும்; சேலை, புடவை எனும் சொற்கள் புடவையைக் குறிப்பனவாகவும்; சட்டை, சொக்காய் எனும் சொற்கள் சட்டையைக் குறிப்பனவாகவும் இடம்பெறுகின்றன. சால்வை, பொற்கச்சை, வேட்டி, உத்தரீகம் ஆகிய ஆடை வகைகளும் காணப்படுகின்றன.

இயேசுபிரான் வெள்ளைநிற அங்கியை அணிந்துள்ளார் சிலுவையில் சேலையில்லாமல் நிற்கின்றார். நீதியின் ஆடையை அணிந்துள்ளார்.[54]

கிறித்தவ சமயத்தைச் சேர்ந்தவர்கள், தேவமோகினி, குறவஞ்சி போன்றோர் வெண்ணிற ஆடை அணிகின்றனர். வெள்ளைநிறத் துகில்தனைக் கொய்து உடுக்கும் கை என்று குறவஞ்சி தேவமோகினியின் கையைப் பார்த்துக் கூறுகிறாள். பொன்னாலாகிய மேற்போர்வையைத் தலைவியும், பொன்னாலாகிய கச்சையைக் குறவஞ்சி முலைகளின் மீதும் அணிந்துள்ளனர். குறி சொல்லிய குறவஞ்சிக்குத் தேவமோகினி பொன் துகிலைப் பரிசளிக்கிறாள். விலைமகளிர் சற்றும் நாணம் இல்லாமல் உடலில் சேலை சற்றும் இல்லாமல் நிருவாணமாக இருக்கின்றனர்.

**2. அணிகலன்கள்**

அணி, பணி, பூஷணம், சவடி எனும் பெயர்களால் அணிகலன்கள் குறிக்கப்படுகின்றன. நெற்றியில் கனகரத்தினச் சுட்டி, பட்டம், பொற்பட்டம் ஆகிய அணிகலன்களும்; கழுத்தில் ஆரம் (முத்துமாலை), கண்டி, பாசி, முத்தாரக்கண்டி ஆகிய அணிகலன்களும்; காதில் பணி, முத்துச்சவடி, கொந்தளவோலை ஆகிய அணிகலன்களும்; கைகளில் சங்கு, வளை, பொற்சரி ஆகிய அணிகலன்களும்; கை விரலில் சிலுவை அடையாளம் பொறித்த மோதிரமும்; கால்களில்

54 பெத்லகேம் குறவஞ்சி, பக் 77, 83, 148.

நூபுரங்களும் (சிலம்பு) அணியப்பெறுகின்றன. இவற்றைத் தேவமோகினியும், குறவஞ்சியும் அணிகின்றனர். பலருக்கும் நற்குறிகள் சொன்னதற்காக மோதிரம், இரத்தின சரப்பளி ஆகிய அணிகலன்களைக் குறவஞ்சி பரிசாகப் பெறுகிறாள்

### 3. பழமொழி

"காற்றுள்ள பொழுதே தூற்றிக்கோ. இரு கண்ணுள்ள போதே தோற்றிக்கோ. ஊற்றுள்ள போதே இறைத்துக்கோ. திருவுரை உள்ள போதே நிறைத்துக்கோ" (125) என்று சிங்கன் கூறுகிறான்.

### 4. ஓவியம்

எருசலை நகரில் ஓவியக்கூடம் உள்ளது (30). சீனாமலையில் அறைந்த இரண்டு பலகைகளில் ஓவிய எழுத்துக்கள் (31) காணப்படுகின்றன.

### 5. சொற்கள்

அக்கால வழக்கில் இருந்த பேச்சு வழக்குச் சொற்கள், அடுக்கு மொழிச் சொற்கள், வடமொழிச் சொற்கள், பிறமொழிச் சொற்கள், எதிர்ச் சொற்கள் போன்றவற்றை வேதநாயகர் பாத்திரங்களின் கூற்றாகவும் தம் கூற்றாகவும் கூறியுள்ளார்.

அந்தாலே, ஆச்சுது, ஆயி, எக்கசக்கம், ஏது, கக்கத்தில், கடன்காரன், கலியாணம், குலாவி, கொம்பி, சல்லாபம், சிலது, செப்பு, சேவித்த, சோடு, சோலி, தாவிளை, நாலு, நிற்குது, பயல், பெண்டாட்டி, போகுது, போச்சுது, முந்தி, ராத்திரி, ராப்போசனம், வேணும் முதலான பேச்சு வழக்குச் சொற்கள்[55] காணப்படுகின்றன.

அவிசாரி, உலுத்தப்பயல், களவாணி, காவாலிப்புத்தி, சக்களத்தி, சோரம், தாசி, மயிர், விபசாரம், விபசாரி, வேசி, வேசித்தனம் போன்ற சேரி வழக்குச் சொற்களும் காணப்படுகின்றன.

55. காண்க : பின்னிணைப்பு எண் 5.

*அடிமை என்பது அடுமை என்றும், பிறகு என்பது புறகு என்றும் சொற்கள் மாறி வந்துள்ளன. இவ்வாறு 54 சொற்கள் மாறி வந்துள்ளன.*[56]

*அங்கங்கு, இல்லையில்லை, கடுகடுத்து, கோடானகோடி, சுறுசுறுப்போடு, தினந்தினம் முதலான 95 சொற்கள் அடுக்கி வந்துள்ளன.*[57]

*அல்லும் பகலும் (40), அங்குமிங்கும் (149), இரவும் பகலும் (103), அந்தியும் சந்தியும் (142) ஆகிய எதிர்மொழிச் சொற்களும்; பட்டப்பகல் (40, 102, 135), அண்டபிண்டம் (149), பாடியாடி (93), ஓடியாடிப்பாடி (122) ஆகிய சொற்களும் இடம்பெற்றுள்ளன.*

*அபிஷேகித்த, கஸ்தி, சந்தோஷம், சம்பாஷணை, சாஸ்திரம், சிஷ்டி, தூஷணம், பக்கிஷம், மனுஷன், வஸ்திரம், விஷம், ஜீவன், ஸ்திரீ முதலான வடமொழிச் சொற்களும் காணப்படுகின்றன. அகிலம், ஆரோக்கியம், குமாரத்தி, சந்தோடம், சரணம், சலப்பிரவாகம், சனம், செகம், செபம், செயம், சேமம், சோதி, தவசு, துட்டர், நிசம், பட்சம், பயபத்தி, பருவதம், பாரி, பூர்த்தி, பெலம், மங்களம், மனுடர், ரட்சகர், ரூபம், லோகம், விசுவாசம் முதலான வடமொழிச் சொற்கள் தமிழ் எழுத்துக்களில் காணப்படுகின்றன.*[58]

*மம்மி (27), நெப்தூன் (37), யூரானிஸ்கு (37), இங்கிலீசு (42, 43, 152) ஆகிய பிறமொழிச் சொற்களும் காணப்படுகின்றன.*

*துரை, துரைச்சாமி, அண்ணாவி, கைக்கூலி, பிணையாளி, போக்குவரத்து, மதுபானம், மரகதப்பெட்டி, முந்திரிச் சாராயம் போன்ற சொற்களும் காணப்படுகின்றன.*

❑

*56. காண்க : பின்னிணைப்பு எண் 6.*
*57 காண்க : பின்னிணைப்பு எண் 7*
*58. காண்க : பின்னிணைப்பு எண் 8*

# அந்தாதி இலக்கியம்

## ஞான அந்தாதி

# அந்தாதி இலக்கியம்

தமிழ் இலக்கியச் சிற்றிலக்கிய வகைகளுள் எண்ணிக்கையில் முதலிடம் பெற்றுத் திகழ்வது 'அந்தாதி' இலக்கியமாகும்.

> "விருந்தே தானும்
> புதுவது கிளந்த யாப்பின் மேற்றே"[1]

என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கு,

> "புதுவது கிளந்த யாப்பின் மேற்றென்ற தென்னை யெனின் புதிதாகத் தாம் வேண்டியவற்றாற் பல செய்யுளுந் தொடர்ந்து வரச்செய்வது; அது முத் தொள்ளாயிரமும் பொய்கையார் முதலாயினார் செய்த அந்தாதிச் செய்யுளும் என உணர்க, என எழுதி அதன்பின் தொடரும் இயைபு என்னும் சொற்கு விளக்கமாக, பொருட்டொடராகவும் சொற்றொடராகவும் செய்வது இயைபு எனப்படும் எனவும், சொற்றொடர் என்பது அந்தாதி எனப்படுவது"[2]

என்று பேராசிரியர் விளக்கம் தருகிறார். பிற்காலத்தில் தனியொரு இலக்கிய வகையாகத் தோன்றிய அந்தாதி இலக்கியத்திற்குரிய விதியும் வித்தும் தொல்காப்பியத்திலேயே அமைந்திருக்கின்றன என்பதையே பேராசிரியர் உரை காட்டுகிறது.

புறநானூறு, நற்றிணை, பட்டினப்பாலை, பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, சிலப்பதிகாரம் ஆகிய இலக்கியங்களில் அந்தாதி அமைப்பில் பாடல்கள் அமைந்துள்ளன.[3] இவற்றில்

---

1 தொல்காப்பியம் பொருளதிகாரம் செய்யுளியல் 237.

2 மேற்படி நூற்பா உரை

3. புறநானூறு 62, 273; நற்றிணை 95; பட்டினப்பாலை 126-130; பதிற்றுப்பத்து 4ஆம் பத்து; ஐங்குறுநூறு 176, 177; சிலப்பதிகாரம் கானல்வரி 1-2, 2-4, 9-13, 20-23, 25-27, 34-36, 43-46

சீர், அடி, சொல் ஆகிய அந்தாதிப் போக்கு காணப்படுகிறது.

சம்பந்தர் தேவாரத்தில் 'யமகவந்தாதி'ப் பாக்கள் அமைந்துள்ளன.[4]

அந்தாதியின் இலக்கியக் கூறுகள் பல்வேறு இலக்கியங்களில் ஆங்காங்கே இடம்பெற்றிருக்கின்றன. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த காரைக்காலம்மையார் பாடிய 'அற்புதத் திருவந்தாதி' எனும் நூலே தனியொரு அந்தாதி இலக்கியமாகத் தோன்றிய சிறப்பை உடையது.

பாடல்களை மனப்பாடம் செய்யும் நிலை நிலவிய கால கட்டத்தில் ஒவ்வொரு பாடலையும் அடுத்துவரும் பாடலோடு நினைவில் கொள்வதற்கு இத்தகைய அந்தாதி அமைப்பு பெரிதும் பயன் தருகிறது. எனவேதான் இவ்அந்தாதி அமைப்பில் எண்ணற்ற சிற்றிலக்கியங்கள் தோன்றின போலும்!

அந்தம் + ஆதி = அந்தாதி ஆகும். அந்தம் என்பது முடிவு, ஆதி என்பது முதல். முடிவை முதலாகப் பெற்று அமைவது அந்தாதி எனப்படும்.

> "ஒரு நூலின் ஒவ்வொரு செய்யுளிலும் உள்ள இறுதி எழுத்து, அசை, சீர், அடி இவற்றுள் ஒன்று அதற்கு அடுத்த செய்யுளின் முதலாக வருமாறு அமைத்துப் பாடி, இறுதிப்பாடலின் இறுதியும், முதற்பாடலின் முதலும் ஒன்றாக இணையும்படி மண்டலித்து மாலை போலத் தொடுத்து முடிப்பதும், ஒரு செய்யுளின் முன்னாயின் ஈற்றிலுள்ள எழுத்து, அசை, சீர் இவற்றிலொன்று வருமடியின் முதற்கண் வருதலும், முன்னடியேனும் முன்னடியின் பெரும்பான்மை யேனும் வருமடி முதற்கண் வரும்படி அமைத்துப் பாடுவதும் அந்தாதிக்கு இலக்கணமாகும்"[5]

என்பர்.

---

4. சம்பந்தர் தேவாரம் 3.113, 3.114, 3.115, 3.116
5. பி. கலியபெருமாள், அந்தாதி இலக்கியங்கள், ப. 15.

"Poem in which the last letter, syllable or foot of the last line of one stanza is identical with the first letter, syllable or foot of the succeeding stanza, the sequence being kept on between the last and the first stanza of the poem as well"

என்று தமிழ்ப் பேரகராதி கூறும்[6]

இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்து வீரியம், சுவாமிநாதம், யாப்பருங்கலக்காரிகை, யாப்பருங்கல விருத்தி, தண்டியலங்காரம், பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், பிரபந்த மரபியல், சிதம்பரப் பாட்டியல் போன்ற நூல்களில் அந்தாதிக்குரிய இலக்கணங் களைக் காணமுடிகின்றன. இந்நூல்கள் கூறுகின்ற விளக்கங் களைக் கொண்டு பின்வரும் முடிவுக்கு வரமுடிகிறது.

வெண்பா அல்லது கலித்துறையில் வேண்டிய பொருளில் எப்பொருள் மேலும் 100 பாடல்களால் வருமாறு பாடப்பெறுவது; எண்ணிக்கை, பா, பாவகை ஆகியவற்றின் அடிப்படையிலும் இறைவன், இறைவி, அடியார், ஆசிரியர், பாட்டுடைத்தலைவன் ஆகியவற்றின் அடிப்படையிலும் அந்தாதி இலக்கியங்கள் விளங்குகின்றன.

பதிற்றந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி, நூற்றந்தாதி ஆகியவை எண்ணிக்கை அடிப்படையிலும்; வெண்பா, கலித்துறை ஆகியவை பா அடிப்படையிலும்; யமகம், கலி, ஒலி, திரிபு, நிரோட்டகம் ஆகியவை பாவகை அடிப்படை யிலும்; சிவபெருமான் அந்தாதி போன்றவை இறைவன் பெயரிலும், அபிராமி அந்தாதி போன்றவை இறைவி பெயரிலும், இராமாநுச நூற்றந்தாதி போன்றவை அடியார் பெயரிலும், குமரேசன் அந்தாதி போன்றவை ஆசிரியர் பெயரிலும், புல்லையந்தாதி போன்றவை பாடுடைத்தலைவன் எழுந்தருளியுள்ள ஊரின் பெயரிலும் அமைந்தவையாகும்.

பொதுவாக அந்தாதி இலக்கியத்தில் 100 பாடல்கள்

6 Tamil Lexicon, Volume I, University of Madras, Madras, 1982, p. 82.

அமையவேண்டுமென்பது வழக்கமாக இருப்பினும் சிலவற்றில் 30, 87, 96, 101, 108 போன்ற எண்ணிக்கையிலும் பாடல்கள் அமைந்திருப்பதைக் காணமுடிகின்றன. இத்தனைப் பாடல்கள்தான் பாடவேண்டுமென்ற வரையறை தேவை யில்லை என்பதையே இவை காட்டுகின்றன.

கி.பி. 5ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 9ஆம் நூற்றாண்டு வரை தமிழில் ஏராளமான சமய இலக்கியங்கள் தோன்றி யுள்ளன. இக்காலகட்டத்திலேயே அந்தாதி இலக்கியப் போக்கு பல்கிப் பெருகியது. நாயன்மார்களும், ஆழ்வார்களும் இறைவன்மீது தலங்கள்தோறும் சென்று பத்திமைப் பாக்களைப் பாடுவதற்கு அந்தாதி யாப்பு மிகவும் உறுதுணை யாக இருந்துள்ளன. பிற்காலத்தில் தமிழகத்தில் பரவிய கிறித்தவ, இசுலாமிய சமயங்களிலும் அந்தாதிப் போக்கில் பல இலக்கியங்கள் தோன்றின.[7]

தஞ்சாவூர் மராட்டிய மன்னர்கள் போற்றி வளர்த்த தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் அந்தாதியும் ஒன்றாகும். இவ்வகையில் ஒரேயொரு நூல் மட்டுமே கிடைத்துள்ளது. தஞ்சாவூர் மராட்டிய மன்னர் இரண்டாம் சரபோசி மன்னரின் (1798-1832) அவைக்களப் புலவராக விளங்கிய வேதநாயகர் இயேசுநாதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடிய பல பனுவல்களில் 'ஞான அந்தாதி'யும் ஒன்று. கிறித்தவ சமய இலக்கியமாகத் திகழும் இந்நூலை இவ்வியல் ஆராய்கிறது.

7. காண்க : பின்னிணைப்பு எண் 9

# ஞான அந்தாதி

*வேதநாயகரால் 1796இல் பாடப்பெற்ற இந்நூல் 1938இல் அச்சு வடிவில் வந்தது. அதன் பின்னர் 1964இல் இதன் இரண்டாம் பதிப்பு வெளியானது.*

*வேதநாயகர் இயேசுபிரானைத் தலைவனாகக் கொண்டு அந்தாதி அமைப்பில் 1796இல் பாடியதை,*

**"செப்பரிதான பரனார் மனுவவதாரஞ் செய்த**
**வெர்ப்பமதான *பதினேழுநூறு முயர்ந்த தொண்ணூ***
***றப்பரமாறு* நளவருடத்தி னருணிறைந்த**
**துப்பரவான *பரனினந்தாதியைச்* சொன்னதுவே" (4)**

*என்று அவரே கூறுகின்றார். ஏறத்தாழ அவர் இவ்வுலக வாழ்வை விட்டுச் சென்ற பின்னரே அச்சு வடிவில் இந்நூல் (1938இல்) வெளிவந்தது.[8] அதன் பின்னர்க் கிறித்தவ இலக்கியச் சங்கத்தினர் வேதநாயகர் எழுதிய சில சிற்றிலக்கிய நூல் களுடன் இதனையும் சேர்த்து 1964இல் வெளியிட்டனர்.[9]*

*திருமறையில் இடம்பெற்றுள்ள இசரவேல் நாட்டை ஆண்டு வந்த தாவீது மன்னனின் புதல்வன் 'ஞானவான்' என்று போற்றப்பட்ட சாலமோன் பாடிய 'உன்னதப்பாட்டை' முதனூலாகக் கொண்டு வேதநாயகர் ஞான அந்தாதியை இயற்றியுள்ளார். இதனை,*

**"ஞானமண வாளனின்மே னாயகிகொண் டாள்காதல்**
**வானமண வாளன்ம கிழவே யானதனை**
**வுன்னதகீ தத்துரையா யோதினன் நூறின்கவிக்குக்**
**கன்னிமகன் பாதமலர் காப்பு"**

*எனவரும் காப்புச் செய்யுள் புலப்படுத்துகிறது.*

*ஞான மணவாளன் எனவும் வான மணவாளன் எனவும் குறிப்பிடப்படும் கிறித்து இந்நூலின் பாட்டுடைத் தலைவ*

---

8. *காண்லர் பிரஸ், சென்னை, 1938.*
9 *கிறித்தவ இலக்கியச் சங்கம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1964.*

ராவார். 'நாயகி' என்று சொல்லப்படுவது திருச்சபையாகும். 'உன்னதகீதம்' என்பது சாலமனின் காவியமாகும். இக்காவியத்திற்கு ஓர் உரை போல அமைந்தது இவ்வந்தாதியாகும் இதனை 'இறைவன் அருளினால் ஞான சலோமோன் அமைத்த புராணம் எனும் சித்திர உன்னதகீத சுலோகத்தைச் சொல்லுவேன்' (3) என்று வேதநாயகர் கூறுகிறார்.

## யாப்பு

காப்பினை வெண்பாவிலும் நூலினைக் கலித்துறையிலும் ஆசிரியர் பாடியுள்ளார். 'ஆதித்தன்' எனும் மங்கலச் சொல்லால் தொடங்கி இறுதிப் பாடலில் 'ஆதியையே' என்று மண்டலித்து முடியுமாறு பாடியுள்ளார்.

## நூலமைப்பு

வெண்பாவில் அமைந்த காப்புச் செய்யுளில் முதனூலைப் பற்றிக் கூறிய வேதநாயகர், கலித்துறையில் 101 பாடல்களைப் பாடுகின்றார். இதில் தாம் நூலைப் பாடுவதற்கு இயேசுபிரானின் அருளை முதல் இரு பாடல்களில் வேண்டுகின்றார். மூன்றாவது பாடலில் ஞானசலோமோன் பாடிய காவியத்தைச் சொல்லி நான்காவது பாடலில் நூலைப் பாடிய ஆண்டைக் குறிப்பிடுகின்றார் ஐந்தாவது பாடலில் நூலைப் பாடிய தம்மைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்.

"சொன்னவன் றெட்சணதாம்பிர வன்னித்துறைகொ ணெல்வேற்,
றென்னவன் றேவசகாயசிகாமணி சேர்கங்கைகுல,
மன்னவன்மைந்த னெனும்வேத நாயகன் வண்மைபெற்று,
முன்னவனின் னருட்கொண்டே யென்னாவின் மொழிந்தனனே"

(5)

ஆறாவது பாடலிலிருந்தே நூல் தொடங்கப்பெறுகிறது.

அகஞ்சார் அருளியல் மரபில் அமைந்துள்ள இந்நூல்,

"மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையிலுள்ள அன்புத் தொடர்பினை, கண்களால் அன்றிக் கருத்தாலும், மனத்தாலும் உணரப்படுகின்ற உள்ளத் தொடர்பினைத் தஞ்சை வேதநாயகர் இப்படியோர் எழுத்

தோவியமாக்கி வழங்கியிருக்கிறார்"

என்று பொன்னு. ஆ. சத்தியசாட்சி கூறுகின்றார்.[10]

எனவே இந்நூலின் தலைவன் - தலைவி நிலையில், இறைவனுக்கும் ஆன்மாவிற்கும் இடையேயுள்ள அன்புப் பிணைப்பை, ஆன்ம உறவைக் கூறுவதாக அமைந்திருப்பதைக் காணமுடிகின்றன.

பரம்பொருள் ஆன்மா உறவினைத் தலைவன் - தலைவி (காதலன், காதலி) உறவுநிலையாகக் கொண்டு அகப்பொருள் சுவை பொங்கித் ததும்பக் காதலோவியமாகக் காட்டும் மரபினைத் தேவாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் போன்ற பத்திமைப் பனுவல்களில் காண முடிகின்றன.

திருமறையின் புதிய ஏற்பாட்டின் பல பகுதிகளில் இயேசுபிரானைத் தலைவனாகவும் திருச்சபையைத் தலைவி யாகவும் பாவித்துப் பாடியதைக் காணமுடிகின்றன.

> "அன்பினால் இறைவனை அடையத் துடிக்கும் ஆன்மாவானது, தன்னைப் பெண்ணாகப் பாவித்து இறைவனைத் தன் தலைவனாகப் பாவித்து அன்பு செலுத்துகிறது. ஆண் - பெண் என்ற உணர்வு உயிர் பற்றியதே. அருளாளர்கள் அருளிய பாக்களில், இறைவனைக் கூடுவதிலுள்ள உயிர்த்துடிப்பினை யே காணமுடிகிறது"

என்ற கூற்றிற்கேற்ப[11] வேதநாயகரும் தாம் பாடிய 'ஞான அந்தாதி'யில் இயேசுபிரானைத் தலைவனாகவும், திருச் சபையைத் தலைவியாகவும் பாவித்துப் பாடியுள்ளார்.

இப்பனுவலில் இடம்பெறும் நிகழ்ச்சிகள் அனைத்திலும் துன்ப உணர்வு இழையோடுவதைக் காணமுடிகிறது.

---

10. பொன்னு ஆ. சத்தியசாட்சி, தஞ்சை வேதநாயகர் தமிழ் விருந்து, கிறித்தவக்கலை - தொடர்பு நிலையம், சென்னை, 1975, பக். 57-58.
11. ம.சா அறிவுடைநம்பி, திருநாவுக்கரசர் தேவாரத்தில் காணப்படும் இலக்கியக் கொள்கைகள், கருமணி பதிப்பகம், மதுரை, 1986, ப. 90.

உணர்ச்சியின் எல்லையில் நின்று, ஒருவரையொருவர் அடையத் துடித்து நிற்கும் காதலர்களின் உள்ளத்தில் ஏக்கம், தவிப்பு, அச்சம், காதல் நிறைவேறுமா என்ற ஐயம் ஆகியன ஒரேயடியாகக் குடிபுகுந்து வேதனையைத் தருகின்றது. வேதநாயகர் இந்நூலின் காதலர்கள் கொள்ளும் அன்பில் வேதனை மிக்க அதேநேரத்தில் துன்பம் நிறைந்த அன்பை (Frustrating love, Suffering love) வெளிப்படுத்துகின்றார்.

> "தன் தலைவனைக் காணாத தனிமைத் துயரினைத் தாங்கிக் கொள்ள முடியாமல், அவன் மூட்டிய பக்தி எனும் ஆசைத்தீயினை அணைக்கவும் முடியாமல், தன் வெட்கத்தையும் வெளியில் எறிந்துவிட்டுத் தெரு வெலாம் ஓடித் தன் நிலையைச் சொல்லித் தலைவனைத் தேடுகிறாள்"[12]

எனவேதான் இந்நூலைச் சத்தியசாட்சி 'தலைவியின் துயர்நிலைத்தமிழ்' என்று கூறுகின்றார் போலும்!

### நூல் நுதலிய பொருள்

தலைவனும் தலைவியும் இன்புற்று வாழ்கின்றனர். தலைவி அன்புச் சொற்களால் தலைவனின் உள்ளத்தை நிரப்புகின்றாள். தலைவன் காதல் மொழி பேசி அவளை மகிழ்விக்கிறான். இன்பம் வளர்கின்றது. ஒருநாள் தலைவி அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தபொழுது தலைவன் 'அவளை எழுப்பாதீர்' என்று தோழியர்களுக்குக் கட்டளை யிட்டுவிட்டுக் கிச்சிலிப்பழத் தோட்டத்தின் வழியாக நடந்து மல்லிகைத் தோட்டத்தில் உலாவுவதற்குச் செல்கின்றான். சென்றவன் உலாவை முடித்துக் கொண்டு மீண்டு வந்து கதவைத் தட்டுகிறான். உலகம் அலகை சடலம் ஆகிய மூவருடன் நட்பாயிருந்த தலைவி உடனே சென்று கதவைத் திறக்கவில்லை. மெல்லவே சென்று திறக்கின்றாள். ஆனால் தலைவன் அங்கே இல்லை.

தலைவனைக் காணாத தலைவி அவனை ஊரெல்லாம்

12 பொன்னு. ஆ. சத்தியசாட்சி, முகா.நூல், ப. 55

தேடுகின்றாள். தம் தோழிகளை அழைத்துத் தன் துயர் நிலையை எடுத்துக் கூறுகிறாள் தலைவனைப்பற்றியும், அவனது பெருமைகளையும், குணநலன்களையும் எடுத்துக் கூறுகிறாள். அவனைத் தேடித் தன்னுடன் சேர்த்து வைக்குமாறு புலம்புகிறாள் தலைவி படும் துயர்நிலையைக் கண்ட அவள் தோழியர் தலைவனைத் தேடிச் செல்கின்றனர். இறுதியில் தலைவனைக் கண்டு அவனிடம் தலைவியின் துயர்நிலையை எடுத்துக் கூறுகின்றனர். கேட்ட தலைவன் மீண்டும் தலைவியை நாடி வருகின்றான். தலைவியைக் கண்டு அன்பு மொழிகளை மழையாய்ப் பொழிகிறான். தன் அன்புக்கரங்களை நீட்டி அவளை அணைக்கிறான். தலைவனின் அன்புப் பெருக்கையும் அவன் செயலையும் கண்ட தலைவி செய்வதறியாது செயலற்று நின்றுவிடுகிறாள். உலகம் அலகை சடலம் ஆகிய மூன்று தீயதோழர்களுடன் உறவாடிய தன்னை மன்னித்தருளி எதுவுமே நிகழாததைப் போல இப்படி அன்பை அள்ளிக் கொட்டும் தலைவனின் பேரன்பின் திறத்தினை எண்ணியெண்ணி 'என் நாயகன்' என்று சொல்லி அவன் திருவடிகளே அடைக்கலம் என்று விழுந்து விடுகின்றான்.

## பாட்டுடைத் தலைவன்

இந்நூலின் பாட்டுடைத் தலைவன் இயேசுபெருமானாவார். ஆதி, இம்மானுவேல், உத்தமன், ஏசுக்கிறிஸ்து, ஏசுநாதர், ஐயன், சுத்தன், சுதன், ஞானப்பிரகாசன், தற்பரன், தயாபரன், பரன், பாத்திபன், பராபரன், மணவாளன், மேசியா, மேய்ப்பன், மரியாவின் மைந்தன், வான மணவாளன், வேதநாயகன், வேதாந்த நாயகன் எனும் பெயர்களால் அழைக்கப் பெறுகின்றான்.[13]

தலைவியின் கூற்றில் இடம்பெறும் பாக்களில் தலைவனின் பெருமைகள், இயல்புகள், தன்மைகள் போன்றவற்றைக் காணமுடிகின்றன.

13 ஞான அந்தாதி, பாடல் எண்கள் : 26, 35; 36, 31, 48, 34, 54; 9, 28, 37; 23, 24; 43, 58; 4, 37, 41, 59, 66, 97, 98; 20, 21, 48; 41, 59, 90; 13, 51; 36, 11, 39, காப்பு, 59; 45, 99, 100.

*சுதன் மேல் காதல் மயக்கம் கொண்ட தலைவி உத்தம மேய்ப்பனாகத் திகழும் அவனைக் காணாமையினால் ஊரெங்கும் தேடி அலைகின்றாள் தன் தோழியிடம், 'நாயகன் மேல் கொண்ட ஆசையினால் தான் துயரமுறுவதாகக் கூறி மணவாளனைக் கண்டால் சொல்லடி' என்கிறாள் தோழிகள் தலைவனைப் பற்றிக் கேட்கின்றனர் அப்பொழுது அவள் பின்வருமாறு கூறுகிறாள்.*

*"ஒப்பொன்றில்லாத பராபரன் மைந்தன்; தப்பொன்றில் லாதவன்; சத்தியவாசன்;*

**'சடமிலன் றங்கைதமரிலன் றாய்தந்தை தாரமிலன்**
**விடமிலன் பொய்யிலன் மன்னார்களீலை விகாரமிலன்**
**படமிலன் பஞ்சபொறியிலன் பாவப்பகையுமிலன்**
**இடமில னூரிலன் பேரிலனெங்கு மிருப்பவனே'**

*எல்லாவற்றையும் அறிந்து ஏழை மனத்திலும் இருப்பவன்; அன்பின் அதிசயமாய் இங்கும் இருப்பவன்; இருதயத் துள்ளும் எல்லா உயிர்களிடத்திலும் இருப்பவன்; ஆறுவகைச் சாத்திரங்களையும் கடந்து நிற்பவன்; என்றைக்கும் அழிவில் லாதவன்; ஞானநெறியினன்; சத்தியத்திற்குக் கட்டுப் பட்டவன்; சொன்ன சொல் தவறாதவன்; இரக்கமுள்ளவன்.*

*அவனுக்கு வானம், சந்திரன், சூரியஒளி, விண்மீன், அழகு, புயல், மலை, கடல் போன்ற எதனையும் ஒப்பிட்டுக் கூறவியலாது; நீதிமான்; தன்வயத்தனாதல், தூயஉடம்பின னாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினின்று நீங்கல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை ஆகிய எட்டுக் குணங்களை உடையவன்; பத்து நெறிகளை உடையவன்; அனைத்திற்கும் முதல்வன்; முடிவில்லாதவன்; உலகத்தை ஓரடியால் அளந்துவிடும் ஆற்றலுடையவன்; தொன் மறையோன்; பாவத்தை நீக்குபவன்; கேடுகளை நீக்குபவன்; விண்ணிலுள்ளவர்கள் தொழ ஆகாசம் மீது எழும் ஆசன்; எனக்குப் பிரியமானவன்; காட்சிக்கு எளிமையான வன்; என்றென்றும் இருப்பவன்; பரமானந்தன்; ஞானத்தின் தலைவன்.*

*தூய வெண்மையும் செம்மையுமானவன்; தலையில் கரிய மயிர் சுருள் சுருளாக அசையும் பொன்மயமானவன்; அனைத்திற்கும் அகரமாகவும் ஔகாரமாகவும் இருப்பவன்" (18-28).*

*மேலும் தலைவி, தலைவனைப் பற்றிக் கூறுவது வருமாறு:*

*வானவன்; தேவர்களின் தலைவன்; வானில் தோன்றிய விண்மீன்களைத் தன் செங்கரங்களில் ஏந்தியவன்; ஏழு குத்து விளக்குகளின் நடுவினிலே உலா வருகின்றவன்; மனிதர்களுடைய பாவங்களைப் போக்குவதற்காகத் தானே இறப்பைத் தழுவியவன்; இறந்த பிறகு மீண்டும் உயிருடன் எழுந்து வந்து வாகை சூடியவன்; தெய்வகுமாரன்; பரிசுத்தன்; தான் பாவத்தின்மீதும் இறப்பின் மீதும் அடைந்த வெற்றியை யாவர்க்கும் உரிமையாக்கும் வண்மையாளன்; அழியாமலிருப்பவன்; பெரிய தவத்தினால் உண்மையும் சத்தியமான நற்சாட்சியன்; உன்னதத்தால் அருகிலுள்ளவன்; பல படைப்புகளுக்கு முதல்வனாகிய வாமனன்; பொன் தன்மையுள்ளோர்களுக்கு அருள் செய்திடும் ஞானதயாபரன்.*

*அவன் பெயர் ஏசு கிறித்து என்பதாகும். மேலும் வானவன், குரு, மன்னன், முன்னவன், மேசியா, இம்மானுவேல், பின்னவன், பரன், சுதன், ஞானமகுணன் என்றிவ்வாறு அவனுக்குப் பல பெயர்கள் உண்டு. தொண்ணூறு கோடி நாவுகளால் பல்லாயிரம் ஆண்டுகளாகப் புகழ்ந்து கொண்டிருந்தாலும் அவனுடைய புகழைச் சொல்லி முடித்தல் அரிதாகும்.*

*அவனுடைய அழகையும் உருவத்தையும் நடையையும் உடையையும் அவர் செய்த அற்புதத்தையும் அவருடைய நட்பையும் சொல்வது அரிதான செயலாகும். அரிதான அந்த நாயகன் வெண்மை நிறங்கொண்ட ஆடை அணிந்து, தங்க விரிவான மார்பினில் பொன்னாலாகிய கச்சை கட்டி, வெண் பஞ்சினிலும் பெரிதான வெண்மை பொருந்திய உரோமத்தின் பேரொளியோன் மரியாளின் மைந்தன் எனப் பெயர் கொண்டதும் வலிமைதான். அவருடைய வார்த்தையும் வலிமை கொண்டதாகும். கடல் வாயினை அடைத்ததும்,*

விண்மீன்கள் பறந்ததும் வான்முகில் எழுந்ததும் அவனுடைய வல்லமையினால் நிகழ்ந்தவையாகும் (32-40)

அனைத்தையும் கேட்ட தோழியர் தலைவியிடம் அவனைப் பிரிந்தது எப்படி என்று கேட்கின்றனர். இவ்வாறு கேட்கும்பொழுது தோழியர் கூற்றிலும் தலைவனின் பெருமைகள் காணப்படுகின்றன அவை வருமாறு :

> "சொல்வதற்கு அரிய தலைவன், நேயன், வித்தகன், வளம் பெரிதான மெய்ஞானி, வல்லவன், தனம் பெரிதான பரலோகம் மேவும் தயாபரன், இளம்பிறை அணிந்த மாதேவன், புகழே உடையவன், வேதாந்த நாயகன். புண்ணியன், அகிலாண்ட கோடி அகிலம் எல்லாம் போற்றி வணங்கும் ஏக சக்கரவர்த்தி, தொல்மறைச் சூத்திரன்" (43, 45, 47)

போன்ற பெருமைகளைக் கொண்ட இத்தலைவனை விட்டுப் பிரிந்தது அதிசயமாகும் என்று கூறுகின்றார்.

தலைவியின் துயரநிலையைக் கண்ட தோழியர் தலைவனைத் தேடிக் கண்டு பிடித்து விடுகின்றனர். அவனிடம் தலைவி கொண்ட காதலைக் கூறும்பொழுது,

> "கர்த்தனே, பரனே, பரத்தின் ஒளியே, பராபரனின் வலதுகரனே, மெய்ஞானியே, நாதாந்தனே, வேத நாயகனே, புரவலனே" (58, 59)

என்று விளித்துத் தலைவிக்கு அருள வேண்டுகின்றனர்.

தோழியர்கள் தலைவனைக் கண்டு தலைவியின் நிலையைக் கூறுகின்ற இடத்தில், சிலுவையில் இயேசுபிரான் அறையப்பட்டபொழுது அவரது வலப்பக்கத்தில் இருந்த திருடனுக்கு அன்பு செய்த செயலையும், மகதலை நாட்டுக் கணிகைப் பெண்மரியாளுக்கு அருள் செய்த செயலையும், 'அவனை அறியேன்' என்று ஊரார் முன்னிலையில் மறுதலித்துப் பழித்த மலையப்பனுக்கு இரங்கிய செயலையும், உயிருடன் எழுந்து வாகை சூடிய பெருமையை நினையாமல் ஐயம் கொண்ட தோமையனுக்குப் பரிவு காட்டிய செயலையும் (63) கூறித் தலைவி எந்தவிதமான குற்றம் செய்திருந்தாலும்

அவளைப் பொறுத்தருளல் வேண்டும் என்கின்றனர்.

மேலும் சொல்லிலும், நாற்றிசையிலும், வீட்டிலும், வெளியிலும், உயர்ந்த மேட்டினிலும், காட்டினிலும், வானத்திலும், கவிஞர்கள் பாடும் பாட்டினிலும் இருப்பவன் இத்தலைவன்தான் என்றும் கூறுகின்றனர் (64).

தோழிகள் கூறியதைக் கேட்ட பொறுமையில் உயர்ந்த சர்வேசுரன் மைந்தனாகிய தலைவன் 'இந்தக்கணமே வருகிறேன்' (67) என்று கூறுகிறான்

தலைவனும் தலைவியும் மீண்டும் கூடுகின்றனர். இந்நிலையில், "பரப்பிரமதேசிகனே! நித்திய சீவனே!" (92) எனத் தலைவி தலைவனை அழைத்து "உன் பாதத்தில் அடைக்கலம் என்று சரணடைந்தவர் யாவரையும் அடைக்கல மாக ஏற்றுக் காத்தருள்வதைப் போல, அறிவில்லாமல் இருந்த என்னையும் காத்தருளினாய்" (93) என்கிறாள்.

**தலைவியின் துயர்நிலையும் பேரின்பக் காதலும்**

சீயோனின் குமாரத்தி, அபரஞ்சி, சவுந்தரி, நாயகி, மாது, வஞ்சி, வல்லி ஆகிய பெயர்களால் அழைக்கப்பெறும் இந் நூலின் தலைவி தலைவனைப் பிரிந்து துயர் உறும் நிலையே அதிகமாகக் காணப்படுகிறது.[14] திருச்சபைக்கு உருவகமாக இத்தலைவியை வேதநாயகர் படைத்துள்ளார்.

வண்டுகள் மொய்க்கும் கூந்தலினை உடைய தலைவி ஞானமுதல்வி எனவும், தேவநாயகி எனவும் புகழப்படுகிறாள். இவள் நவமணி மாலைகள் அணிந்து, முத்தாரம் பூண்டு, உயர்ந்த வெண்ணிறப் பட்டை உடுத்து, கரிய குழலில் அரும்புகளைச் செருகிக் கொள்கிறாள். மல்லிகை, முல்லை, சிவந்தி, குவளை, புன்னை, சண்பகம், ரோசா, மருக்கொழுந்து போன்றவற்றை அணிந்து கொண்டு தலைவனைத் தேடிப் புறப்படுகிறாள். அவனைக் காணப்பெறாமல் காமத்தின் மிகுதியினால் மோகம் கொண்டாள். முத்தி பெறுவதற்குத்

14 ஞான அந்தாதி, பா 58, 60, 85; 30, 80; 76; 7, 46, 70, 72; 65, 66, 84, 90; 46; 70

தாகம் கொண்டாள். பின் காம விளையாட்டினால் போகம் கொண்டாள் புலம்புகின்றாள்.

சிலம்பு அணிந்த பாதங்கள் கணீர் என்று ஒலித்தது; பாடக ஓசை கலீர் என்று ஒலித்தது தலைவனைக் காணாமல் வாடினாள்; நின்று புலம்பினாள்; தலைவனை ஊரெங்கும் தேடி இளைத்தாள்; உத்தம மேய்ப்பனைத் தேடி இருதயத்தில் களைத்தாள்; சீவதண்ணீரை மூங்கிலால் குழைத்தாள்; மணம் கமழும் சந்தனம் சாந்து சவ்வாது மஞ்சள் போன்றவற்றைத் தன்னுடம்பில் பூசி மயங்கினாள்; கண்ணிமைகள் மூட மறுத்து விட்டன; உடல் மெலிந்து முயங்கினாள்; 'நித்திரை செய்யலை' என்று கூறித் தோழியர் வியப்பும் வருத்தமும் அடைகின்றனர் (7-12)

தலைவனைக் காணாத தலைவி, தன் தோழியர்களிடம்,

> "திறமை பெற்ற நாயகன் மேல் கொண்ட ஆசையினால் துயரமுறுகிறேன். வெகுநாள் வரையாய் என் தவக்கேள்வன் எனும் ஏசுநாதன் என்னை விட்டுப் பிரிந்தான். அன்றுதொட்டு இன்றுவரை எனக்கு உறவு இல்லை, ஆதரவு ஒன்றுமில்லை, பேதையாகிய என்மேல் அன்பு செய்கின்றவர் இல்லை, யாரும் எனக்குத் துணை இல்லை, என் தலைவன் ஒருவன் தான் இருந்தான். அவனும் என்னைவிட்டுப் பிரிந்து சென்று விட்டான். அவரைப் பிரிந்த நாள் முதல் இன்றுவரை உணவும் இல்லை, உறக்கமும் இல்லை, நான் இனி என் செய்வேன்?" (14-16)

என்று புலம்புகின்றாள். இதைக்கேட்ட தோழிகள் தலைவனின் பெயர், அடையாளம் போன்றவற்றையும் தலைவனை விட்டுப் பிரிந்த நிகழ்ச்சியையும் கேட்டறி கின்றனர்.

தோகையரே! என விளித்த தலைவி, தலைவன் தன்மீது கொண்ட பேரின்பக் காதலையும் இருவரும் காதலினால் கட்டுண்டு கிடந்த நிலையையும் பின்வருமாறு கூறுகிறாள்.

"என் மணவாளன் அன்பினைச் சொல்வது அரிதாகும்.

அதனை மறத்தல் முடியாது. கோடி ஆண்டு மகிழ்ச்சி ஒரு நாழிகைக்கு ஒப்பு எனவும் நாடியவர் எனக்கு அன்பு செய்தார். அவரது நற்கரங்களினால் எனை அணைத்து ஆற்றியிருந்தார். கையால் அவர் வித்தை புரிந்த விதங்களைச் சொன்னால் காமத்தால் மனம் திகைக்கும். காமமயக்கத்தால் என் முகத்தோடு முகம் வைத்து முத்தமிட்டுத் தோள்மீது கை போட்டு உலவி முயன்றார். காமத்தால் என்னை அணைத்துத் தழுவிய ஆனந்தத்தை என்னென்று சொல்வேன்? அவனுடன் சேர்ந்து களித்திருந்தேன். அவன்மீது பேரின்பக் காதல் கொண்டேன். இவ்வாறு மகிழ்ச்சியுடன் இருந்த பொழுது, ஐயோ! நான் ஒரு குற்றம் செய்து விட்டேன். உலகம் அலகை சடலம் ஆகிய மூன்று திருடர்களுடன் நட்பாயிருந்து விட்டேன். அதனாலே யே என் மணவாளன் என்னை விட்டுப் பிரிந்து எங்கோ சென்று விட்டான்" (51-56).

தோழியர்கள் தலைவனைத் தேடிக் கண்டுபிடித்து அவனுடன் பேசி இருவரையும் ஒன்று சேர்த்து வைக்கின்றனர்.

அரசனின் மகளான பூங்குழலாள் பொன் பட்டாடை, பல பொன்னினாலான அணிகலன்களை அணிந்து தன்னை அலங்காரம் செய்து கொள்கிறாள். உயர்ந்த சித்திரமாம் பெண் ஆடைகளோடு அவள் கொண்ட மகிமைகளால் சேர்ந்து கன்னிப் பெண்கள் புடைசூழ வருகின்றாள். தலைவியைக் கண்ட தலைவன்,

"ஒப்பில்லாத நாயகியே! உயர் சோபனமே! வல்லபமே! மதியே! இரதியே! மயிலே! ஏமமயலே! இல்லறமே! நல்லறமே! தவமே! விதமே! இதமே! நல்லனமே! இனமே! மனமே! நலமே! நயமே! அதிக அழகானவளே! தலைவியே! வெற்றியே! அதிசயமே! சிலையே! கலை சேரும் இருதயமே! அரும்பொருளே! தயவே! தெளிவான தங்கமயமே! கவடில்லாத மனமே! புறாவினமே! மங்கையே! உனக்கு இணை இலையே! தாமரையே! ஓங்கிய சந்திரனே!

*உத்தமியே! சவுந்தரியே! பூங்குழலியே! மாங்குயிலே! தார்குழலே! முகிலே! கயலே! இளம் சந்திரனே! தாரகையே! மறையே! பொறையே! திகழ் தாமரையே! முலைக்குன்றே! எருசலை நகரின் வளமே! துரைப் பெண்ணே! சீயோனின் புதல்வியே! புகழணங்கே! விண்ணுலகத்துச் செல்வியே! கலையணங்கே! மறை மேவிய மின்னணங்கே! கிளியே! நறும் தேன் மொழியே! நன்று எனும் உத்தமியே! கற்பினால் எழும் நாயகமே!"*

*என்று கூறியதோடு,*

*"ஓ! தோழியரே! இதோ என் ஆருயிர்த்தலைவி! இவள் என்னைத் தேடி அலைந்து களைத்திருக்கிறாள். இவளை இளைப்பாற விடுங்கள். இவளைத் துயில் கொள்ள விடுங்கள். துயிலைக் கலைக்காமலிருங்கள்!"*

*என்று கூறிய தலைவனின் அன்புப்பெருக்கைக் கண்டு செயலற்று நின்று விட்டாள்.*

**"ஆணையென்றே கணவனோதும் வாய்மையமுர்த மொழி வாணுதல் கேட்டு வென்னாயக னென்று மனமகிழ்ந்தாள்" (90)**

*என்று தலைவியின் வியப்பையும் விம்மிதத்தையும் இரண்டே வரிகளில் வேதநாயகர் சொல்லி விடுகின்றார்*

*"குலதெய்வமே! என் குரு தெய்வமே! என்னுடைய குற்றங்களை எல்லாம் போக்குவாய்! தெய்வமே! என் கவலையை மாற்றக் கருதுவாய். எல்லாவற்றையும் நல்குகின்ற தெய்வமே! உன்னுடைய பாதகமலங்களைப் பிடித்தேன். என்னைத் தள்ளிவிடாதே. வேதனே! உன்னையன்றிப் பின் எனக்கு வேறு துணையுமுண்டோ? எளிதாக நினைத்து என்னைக் கைவிட்டு விடாதே!" (95-96)*

*என்று தலைவனைப் பார்த்துத் தலைவி கூறி அவன் திருவடிகளே சரணம் என்று விழுந்து விடுகின்றாள்*

**ஏனையோர்**

**தோழிகள்**

கன்னி, கோதை, சகி, சினேகிதி, தோழி, நங்கை, பூவை என்று தோழியர் அழைக்கப்பெறுகின்றனர் தலைவனைப் பிரிந்து வாடும் தலைவிக்கு ஆறுதல் மொழிகளைக் கூறுகின்றனர் பிரிந்து சென்ற தலைவனைத் தேடிக் கண்டு பிடித்து அவனிடம் தலைவி படும் துயரநிலைகளைக் கூறி இறுதியில் இருவரையும் ஒன்று சேர்த்து வைக்கின்றனர்

முத்தே. பவள இரஞ்சிதமே, மின் கொடியே, குயிலே எனத் தலைவி தோழியர்களை அழைத்து, "என் நாயகனின் மேல் கொண்ட ஆசையினால் துயரமுறுகிறேன். என் மேல் அன்பு இல்லையோ? உங்கள் மனம் என்ன கல் மனமோ? இரும்போ?" என்று கூறியதைக் கேட்ட தோழிகள், "மங்கையே! அவர் பெயர் என்ன? சாயல் என்ன? அடையாளம் என்ன? அதைச் சொல்லிவிடு" என்கின்றனர். அதற்குத் தலைவி மூச்சுவிடாமல் தலைவனின் பெருமைகளைச் சொல்லிக் கொண்டே போகிறாள். நேயமிக்க தோழியர்கள் அவள் கூறும் மொழிகளைக் கேட்டு வியப்புற்று மூக்கின் மேல் விரல் வைத்து நின்று விட்டனர். நின்றவர்கள் அவளை மீண்டும் வினவுகின்றனர்.

"காரிகையே! சொல்வதற்கு அரிய உன்னுடைய தலைவனை, எந்த வகையால் நீ அவரை விட்டுப் பிரிந்தாய்? இது என்ன மதி! சின்ன மதி! நீ அவரை விட்டுப் பிரிந்த வேறு தோழருடன் பலவகையால் கூடியலைந்தனையோ? என்ன பாவம் செய்தாய்? அவற்றை ஒழிக்காமல் மறைக்காமல் சொல்வாய் மகளே! எத்தனை வாய்மை பெற்றாய். புகழே உடைய அவனை உன்னுடைய கைகளினால் தழுவுதலை விட்டு ஒழிந்தாய். குற்றமே புரிந்து புலம்புவது ஏனோ? இளங்கொடியே!

மயக்கத்தைத் தரும் கோகிலமே! கைவளை அணிந்த வஞ்சியே! உன் தலைவனைச் சதி செய்து நீ பிரிந்தாய் அவருக்கும் உன்மேல் மனக்குறை இருந்திருக்குமோ? நன்றாக நினைத்துப் பார்த்துச் சொல்வாய்" என்று கூறுகின்றனர்

தலைவியும் தலைவனைப் பிரிந்த நிகழ்ச்சியைக் கூறி இறுதியில் தோழியரிடம் எந்தன் கவலையைத் தீர்க்க வேண்டும் என்கிறாள். மேலும் "நட்பினால் வெப்பத்தால் உடம்பில் நோய் கொண்டேன் என்று விண்ணவர்க்கு ஒப்புடன் ஓதி மறுசெய்தி வந்து இங்கு உகந்துரைப்பாய் தப்பில்லை என்று உரை சாற்றுகை என் தலையில் வைத்தே என்று ஆணையும் வாங்கி விடுகிறாள்."

அதன்பின்னர்த் தோழியர்கள் விமலனைத் தேடித் கண்டு பிடிக்கின்றனர். அவனிடம்,

> "கர்த்தனே! சீயோனின் பெண் உன்மேல் காதல் கொண்டாள். தயாபரனே! சிறிதேனும் அவள்மீது அன்பு வைத்திட வேண்டும். தேசிகனே! சீயோன் பெண் உன்மேல் சிந்தை வைத்தாள். ஒருகண மாகிலும் உன் நினைவின்றிப் பின் ஒன்றுமில்லாதவ ளாவாள். உன்மேல் அளவுக்கு அதிகமாக அன்பு வைத்தாள். உன்னை நெஞ்சினில் வைத்தாள். தன் நினைவினில் வைத்தாள். ஆசை வைத்தாள். உன்மீது வைத்த காதலினால் தன்னைப் பெற்ற தாய் தந்தை மற்றும் சுற்றத்தார் மீது வைத்த பாசத்தை மறந்தாள். தன் வீட்டையும் மறந்தாள். அவள் இறந்து கொண்டிருக்கிறாள். உன்னுடைய செழுங்காட்சி ஒன்றுதான் அவளுக்கு உயிர் கொடுக்கும். அந்தப் பைங்கிளி உந்தனுக்கு ஏலாத குற்றத்தைச் செய்திருந் தால் அவளைப் பொறுத்தருள வேண்டும். உடம்பில் உன்னை அழுத்தித் தவம் செய்ததனால் முலைகள் சரிந்துவிட்டன. கொற்றவனே! நீ அவளுக்கு இரக்கம் காட்ட வேண்டும். உன் வலப்பக்கத்தில் இருந்த திருடனுக்கும், மகதலநாட்டு மரியாளுக்கும், மலையப்ப னுக்கும், தோமையற்கும், சின்னப்பனுக்கும் அன்பு செய்தனையே! சிறந்த தவமுடைய இவளுக்கும் அன்பு செய்ய வேண்டும். உன்னைத் தவிர வேறு யாரும் இவளுக்குத் துணை செய்ய மாட்டார்கள். இம்மாது படும் துயரத்தைப் பரிதவிப்பைத் தீர்த்தருள்வாய்"

என்று தோழிகள் கூறியனவற்றைக் கேட்ட தலைவன்

மனமிரங்கி 'இந்தக்கணமே வருகிறேன்' என்று தலைவியிடம் கூறுங்கள் என்கின்றான்

அதன்படித் தோழிகள் வந்து தலைவியிடம் சொல்லி, அவிழ்ந்து கிடந்த அவள் கூந்தலை வாரிப்பின்னி வளைத்துச் செருகிப் பூ முடிக்கின்றனர்.

**தாவீது**

தாவீது சிம்மாசனப் பாத்திபனே (20), தாவீது அரசன் திறவுகோல் தானும் உடையோன் (34) என்னுமிடங்களில் தாவீது மன்னனைப் பற்றி ஆசிரியர் குறிப்பிடுகின்றார்

**சாலமோன்**

தாவீது இறைவன் அருளினால் புத்திரன் ஞானசலோமோன் அமைத்த புராணம் எனும் சித்திர உன்னதகீத சுலோகத்தைச் சொல்லுவேன் (3) என்றும் 'நற்சலமோன் சமுக்காளம்' (81) என்றும் சாலமோனைப் பற்றிக் கூறுகின்றார்.

**பிறர்**

மகதலை நாட்டுக் கணிகைப் பெண் மரியாளையும் (63), ஊரார் முன்னிலையில் இயேசுபிரானை மறுதலித்துப் பழித்த மலையப்பனையும் (63), இயேசுபிரான்மீது ஐயம் கொண்ட தோமையனையும் (63), சின்னப்பனையும் (63) வேதநாயகர் கூறுகின்றார்.

**கிறித்தவ சமயம் தொடர்பானவை**

கிறித்தவ சமயம் தொடர்பானவற்றை ஆசிரியர் ஏற்றவிடங்களில் எடுத்துரைப்பதைக் காணமுடிகின்றன

தலைவனாகிய கணவன் வேதத்தின் ஒருபகுதி போலத் தலைவியாகிய மனைவியிடம் செழித்திருந்தான் (91).

வேதநாயகர் இந்தப் பூவுலகத்தில் வாழ்கின்றவர்களுக்கு இயேசுபிரானின் மேன்மையை வேதத்தின் ஒருபகுதியைப் பாவினில் சொல்லி விவரிப்பதற்குத் தனக்கு ஞானத்தையும் நாவையும் தந்தருள வேண்டுகின்றார் (98).

உத்தம மேய்ப்பனைத் தேடிக் களைத்த தலைவி சீவ தண்ணீரை நாடி மூங்கிலில் குழைக்கிறாள் (11).

இயேசுபிரானைக் கூறுகின்றபெழுழுது சத்தியத்தின் வாக்கியன் (23), சத்திய நீதியன் (25), சத்தியமான நற்சாட்சியன் (35) என்கின்றார்.

கிறித்தவ சமயத்திற்குரியதான செபம் (23), தூதர் (25), பரலோகம் (43), பரமண்டலம் (23), பாவம் (32, 44), வேதம் (32), பேரின்பக்காதல் (56, 65), மறை (83), அடைக்கலம் (92, 93), எருசலை (83, 89), வெள்ளாட்டு மந்தை (73), வெள்ளாட்டுக் குட்டி (75) போன்றவற்றையும் ஏற்றவிடங்களில் வேதநாயகர் கூறுகின்றார்.

**இசை**

இசை தொடர்பான சில குறிப்புகள் இடம்பெறுகின்றன. சாலமனின் காவியத்தை உன்னதகீதம் (காப்பு) என்றும் உன்னதகீத சுலோகம் (3) என்றும் உயர்கீதம் (85) என்றும் கூறிய வேதநாயகர் உண்மையாகக் கவி பாடுவதாகவும் குறிப்பிடுகின்றார்.

கவிஞர்கள் பாடும் பாட்டிலெல்லாம் இயேசுபிரான் இருக்கின்றார் (64).

வேதத்தின் ஒருபகுதியைப் பாட்டினில் சொல்லி விவரிப்பதற்கு இயேசுபிரான் அருள் நல்கியதாக ஆசிரியர் கூறுகின்றார் (98, 99).

**ஓவியம்**

சாலமோனின் காவியத்தைச் சித்திரத்திற்கு ஆசிரியர் ஒப்பிட்டுக் கூறுகின்றார் (3). உயர்ந்த சித்திரமாம் தையல் (87) என்று தலைவி அழைக்கப் பெறுகிறாள். தலைவி தோழியைச் 'சித்திரமே' என அழைக்கிறாள் (13).

**ஆடைகள்**

ஆடை, கலை எனும் சொற்களால் ஆடை அழைக்கப் படுகிறது. தலைவன் வெண்மை நிறங்கொண்ட ஆடையை

அணிந்ததோடு பொன்னாலாகிய கச்சையைத் தம் பரந்த மார்பினில் கட்டியுள்ளான் (39). உயர்ந்த வெண்பூட்டாடை (7), மஞ்சள்நிறமுள்ள ஆடை (11), பொன்னாலாகிய ஆடை (87) ஆகியவற்றைத் தலைவி அணிகின்றாள்.

**ஆபரணங்கள்**

அணி, பூடணம் என அழைக்கப்படும் ஆபரணங்கள் சில காணப்படுகின்றன. நவமணி, முத்தாரம், சிலம்பு, சிறு சதங்கை, பாடகம் (காலில் அணிதல்), இரத்தினம், தொடி (கைவளை), மணியாரங்கள் போன்றவற்றைத் தலைவி அணிகின்றாள். மேலும் தம் உடலிலெல்லாம் நீலக்கல்லையும் பதித்திருக் கிறார் (30). தன் தோழியை முத்தே, பவளமே (13) என்று அழைக்கின்றாள்.

**உடலுறுப்புக்கள்**

தலை, நெற்றி, கண், முடி, மார்பு, முகம், உடம்பு, நாக்கு, கை, விரல், பாதம், இருதயம், கன்னம், தொடை, மூக்கு, தோள், வயிறு, வாய், இடை, நாசி, இதழ், கழுத்து, தொண்டை, தொப்புள், நெஞ்சம், மனம், உரோமம் ஆகிய உடலுறுப்புக்கள் காணப்படுகின்றன.

தலையைச் சிரம் என்றும், நெற்றியை நுதல் என்றும், கண்ணை நேத்திரம் என்றும், பெண்ணின் மார்பைத் தனம், கொங்கை என்றும், உடம்பை அங்கம், தேகம் என்றும், கையைக் கரம் என்றும், பாதத்தைத் தாள், கழல் என்றும் அழைப்பதைக் காணமுடிகின்றன.

தலைவியின் தலைமீது கை வைத்துச் சத்தியம் செய்யப் படுகிறது (57). தலைவனை விளிப்பதற்குக் கண்களும், தலைவனின் விரிந்த மார்பும் (39), தலைவன் விண்மீன்களைக் கைகளில் ஏந்தியும் (32, 34) இருக்கின்றான். தலைவியின் தனங்கள் வருத்தத்தைத் தருகின்றன (42). தலைவனின் உடம்பெல்லாம் வெள்ளைப்பூண்டின் மணம் கமழ்கிறது (29).

**நிறங்கள்**

கருமை, வெண்மை, சிவப்பு, மஞ்சள் ஆகிய நிறங்கள்

பயன்படுத்தப்படுகின்றன[15]

**எண்கள்**

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, எட்டு, ஒன்பது, பத்து, நூறு, ஆயிரம், கோடி ஆகிய எண்கள் காணப் படுகின்றன

ஓரடியால் உலகை அளந்தவன் (26) என்றும், எட்டுக் குணங்களைக் கொண்டவன் (26) என்றும், ஆறு சாத்திரங் களையும் கடந்து நின்றவன் (21) என்றும், பஞ்சபொறி இலன் (19) என்றும், நாற்றிசையிலும் இருப்பவன் (64) என்றும் தலைவன் கூறப்படுகின்றான் கன்னம், கை, தொடை, பாதம், முலை ஆகிய உடலுறுப்புக்களைக் கூறுகின்றபொழுது இரண்டு எனும் எண்ணையும் சேர்த்துக் கூறுவதைக் காண முடிகின்றன

**இயற்கைப் பொருள்கள்**

மல்லிகை, முல்லை, சிவந்தி, குவளை, புன்னை, சண்பகம், ரோசா, மருக்கொழுந்து ஆகிய மலர்களைத் தலைவி அணிந்துள்ளாள் மேலும் தாமரை, லில்லி ஆகிய மலர்களும் காணப்படுகின்றன

குயில், காகம், புறா, மாடப்புறா, அன்னம், கூகை, கிளி, மயில் ஆகிய பறவைகளும்;

இளம் பெண் யானை, குதிரை, மான் ஆகிய விலங்கு களும்;

மாதளை, கிச்சிலிப்பழம் ஆகிய பழங்களும்;

மூங்கில், பனை ஆகிய மரங்களும் காணப்படுகின்றன

கோகிலம் எனும் குயில் மயக்கத்தைத் தரும் (46) என்கின்றார். தோழியைக் குயிலே[16] என்றும் தலைவியை அன்னம், கிளி, மயில் ஆகிய பறவைகளாலும்[17] இளம்பிடி (46),

15 ஞான அந்தாதி, பா 11, 28, 39, 75

16 மேலது, பா 14, 15, 81

17 மேலது, பா 46, 71 80, 61, 62, 88; 71

மான் (72) ஆகிய விலங்குகளாலும் அழைக்கப் பெறுவதைக் காணமுடிகின்றன.

திங்கள், சந்திரன், பிறை, மதி எனச் சந்திரனும்;[18] சூரியன், கதிரோன் எனச் சூரியனும்;[19] உடு, கணம், தாரகை என்று விண்மீனும்.[20] முகில், மேகம் என்று மேகமும்;[21] ஆகாசம், ககனம், வான் என்று வானமும்;[22] சிகரம், மேடு, குவடு என்று மலையும்;[23] சாகரம், வாருதி என்று கடலும்[24] அழைக்கப்படு கின்றன.

**நறுமணப் பொருள்கள்**

தலைவி சந்தனம், கலவைச் சந்தனமாகிய சாந்து, சவ்வாது ஆகிய நறுமணப் பொருள்களை அணிந்து கொள்கிறாள் (11, 84).

**வீட்டு உபயோகப் பொருள்கள்**

விளக்கு (13, 32), கதவு (34), திறவுகோல் (34), வெற்றிலை (77), தேன் (78), பால் (78), பானம் (79), கோதுமை (79), தூண் (80, 84), சமுக்காளம் (81), தூபம் (84), தூள் (84), புகை (84), வெள்ளிப்பொட்டு (86), வெள்ளைப்பூண்டு (29, 84) ஆகிய வீட்டு உபயோகப் பொருள்களும் காணப்படுகின்றன.

**உவமைநலம்**

போல, ஒப்பு ஆகிய உவம உருபுகள் காணப்படுகின்றன தலைவனின் நிறம் காகம் போன்றும் (29), கண்கள் புறாக்களின் கண்கள் போன்றும் (29), பாதம் மலருக்கும் ஒப்பிடப்படு கின்றன. அக்கினிக் கொழுந்தான சுவாலையின் பேரொலி தலைவனின் இரு திருப்பாதங்களுக்கு ஒத்திருந்தது (33).

18 ஞான அந்தாதி, பா 17, 24, 43, 71, 74, 76, 83
19. மேலது, பா. 24, 25, 32.
20. மேலது, பா. 32, 34, 40, 24, 83.
21. மேலது, பா 28, 40, 83, 27, 29
22. மேலது, பா. 27, 64, 32, 33.
23. மேலது, பா. 24, 29, 64, 83
24. மேலது, பா, 24, 25, 40

தலைவியின் நெற்றிக்குப் பிறையும் (74), முலைகளுக்குக் குட்டி மான்கள் (78), முந்திரிகைக்கனி (79); குன்று (83) ஆகியவையும், முகத்திற்குச் சந்திரனும் (76); தோழியின் கைகளுக்கு மூங்கிலும் (42) உவமையாகக் கூறப்படுகின்றன

**சொற்கள்**

அடியே, ஆனதையா, இன்னமும், உகுப்பாதிருக்க, ஏதாகிலும், அஞ்சு, கேளடி, சேதி, தாங்கல், தின்கும், பண்ணாதடி, பேர், விரசு, வாறேன் போன்ற பேச்சு வழக்குச் சொற்களும்,[25]

அரூபி, அதிசயம், அகிலம், கரம், குமார்த்தி, சடம், சிம்மாசனம், சிரம், சந்தோஷம், செயம், சோபனம், தாரம், நேத்திரம், நிஷ்க்களம், புஸ்ப்பம், புத்து, ப்ராணாதி, மார்க்கம், ரூபம், லாகிரி, லீலை, லோகம், வஸ்திரம், விரகம், வஸ்து போன்ற வடமொழிச் சொற்களும்,[26]

கணீர் (10), கலீர் (10) என்ற ஒலிக்குறிப்புச் சொற்களும்,

அரிதரிதே (38), இன்பமின்பம் (36), என்றென்றும் (27), பற்பல (101), விட்டுவிட்டேன் (56) ஆகிய அடுக்கு மொழிச் சொற்களும்,

இடறும் பகையும் (50), ஒழியாய் மறையாய் (44), நடையு முடையும் (38), முகத்தோடு முகம் (53) ஆகிய சொற்களும் காணப்படுகின்றன

அன்னம் என்பது அனம் என்றும், உருண்டை என்பது உண்டை என்றும், காலமுடிவின் என்பது காலமுகிவின் என்றும், தொடை என்பது துடை என்றும், பாதம் என்பது பதம் என்றும், விண்ணோர் என்பது விணோர் என்றும் பல சொற்கள் மாறி வந்துள்ளதையும் காணமுடிகின்றன[27]

❑

25 காண்க : பின்னிணைப்பு எண் 10
26 காண்க : பின்னிணைப்பு எண் 11
27 காண்க : பின்னிணைப்பு எண் 12

# மாலை இலக்கியம்

செபமாலை

# மாலை இலக்கியம்

தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் மாலை என்பது மொன்று. தொல்காப்பியச் சொல்லதிகார உரியியலில் 'மாலை இயல்பே'[1] என்று தொல்காப்பியர் கூறுகின்றார். இதிலிருந்து இயல்பாகப் பாடப்பெறுவது மாலையாகும் என்பதை அறியமுடிகிறது

சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் துன்பமாலை, வஞ்சினமாலை என்று இரு காதைகளை மதுரைக் காண்டத்தில் கூறுகின்றார். கோவலன் கொலையுண்ட செய்தியைக் கேட்ட கண்ணகி அடைந்த துயரநிலையைத் 'துன்பமாலை' கூறுகிறது.

> "கற்புக்கரசிகள் பிறந்த ஊரில் பிறந்தேன்; யானும் ஒரு கற்புக்கரசி என்பது உண்மையானால், அரசை அழிப்ப தோடு மதுரையையும் அழிப்பேன்"

என்று தேவி முன் கண்ணகி வஞ்சினம் கூறித் தம் இடமுலை யைக் கையால் திருகிச் சுற்றி எறிந்து மதுரை மாநகரைத் தீக்கிரையாக்கிய நிகழ்ச்சிகளை 'வஞ்சினமாலை' கூறுகிறது.[2]

கி.பி. 2ஆம் நூற்றாண்டில் தனிக் காதையாக இடம்பெற்ற மாலை கி.பி 4-5ஆம் நூற்றாண்டில் தோன்றிய காரைக்கா லம்மையாரால் தனியொரு இலக்கிய வகையாக வளர்ச்சி அடைந்தது. இருபது பாடல்களைக் கொண்டு அமைந்த 'திருவிரட்டை மணிமாலை' என்ற பனுவலைக் கொண்டு பத்துப் பாடல்களால் மாலை இலக்கியம் அமையப்பெற்றதை அறியமுடிகிறது.[3]

கி.பி. 7ஆம் நூற்றாண்டில் தோன்றிய திருநாவுக்கரசர்

---

1 தொல்காப்பியம் சொல்லதிகாரம், உரியியல், நூ 15.

2 இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், மதுரைக் காண்டம், காதைகள் 18, 21

3 காரைக்காலம்மையார், திருவிரட்டை மணிமாலை

'திரு அங்கமாலை' என்ற பதிகத்தில் 12 பாடல்களைப் பாடியுள்ளார்[4] இதில் தலை, கண்கள், செவிகள், மூக்கு, வாய், நெஞ்சு, கைகள், உடம்பு, கால்கள் ஆகிய உடலுறுப்புக்களைக் கொண்டு சிவபிரானை வணங்குதலும், அப்பெருமானின் புகழைக் கேட்டலும், உரைத்தலும், நினைத்தலும், பூக்கள் தூவி அருச்சித்தலும், திருக்கோயிலை வலம் வருதலும் ஆகிய செயல்களைச் செய்தல் வேண்டும் என்பதைச் சாதாரிப் பண்ணில் பாடியுள்ளார்.

கி.பி. 9ஆம் நூற்றாண்டில் தோன்றிய மாணிக்கவாசகர்,[5] கபிலதேவநாயனார்,[6] தொண்டரடிப்பொடியாழ்வார்,[7] குலசேகராழ்வார்[8] ஆகியோர் விநாயகர், சிவபிரான், திருமால் ஆகியோர்மீது மாலை பாடியுள்ளனர்

கி.பி. 9-10ஆம் நூற்றாண்டில் தோன்றிய நம்பியாண்டார் நம்பி,[9] திருவெண்காட்டடிகள்[10] ஆகியோர் தனிச் சிற்றிலக்கியங்களாக இறைவன், அடியார்களைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு பாடியுள்ளனர். 11, 20, 40 போன்ற எண்ணிக்கையில் இப்பாக்கள் அமைகின்றன.

அதன்பின்னர்த் தனித்தொரு சிற்றிலக்கிய வகையாக இம் மாலை இலக்கியம் வளர்ச்சி அடைந்திருப்பதைக் காண முடிகின்றது[11]

சிற்றிலக்கிய வளர்ச்சி குறித்து ஆராய்ந்த மு. சண்முகம் பிள்ளை,

"தொண்ணூற்றாறு வகையாகப் பகுத்த பிரபந்தப்

4. திருநாவுக்கரசர் தேவாரம், 49
5. மாணிக்கவாசகர், திருவாசகம், ஆனந்தமாலை
6. கபிலதேவ நாயனார், சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை, மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை
7 தொண்டரடிப்பொடியாழ்வார், திருமாலை.
8 குலசேகராழ்வார், முகுந்தமாலை
9. நம்பியாண்டார் நம்பி, ஆளுடையபிள்ளையார் திருஉலாமாலை, திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை, திருநாவுக்கரசர் திருஏகாதசமாலை.
10 திருவெண்காட்டடிகள், கோயில் நான்மணிமாலை
11 காண்க : பின்னிணைப்பு எண் 13 மாலை இலக்கியங்களின் பட்டியல்

பாகுபாட்டிலும் தெய்வம் பற்றியவை மிகுதியேயாம். சிறப்பாக, 'மாலை' என முடிவுறும் பிரபந்தங்களுள் பலவும் தெய்வப் பாமாலைகளேயாம். அங்கமாலை, இணைமணிமாலை, இரட்டை மணிமாலை, உற்பவ மாலை, காப்பு மாலை, நவமணி மாலை, நான்மணி மாலை, மணிமாலை, மும்மணிமாலை, வருக்கமாலை முதலியன தெய்வப் பாமாலைகளே"[12]

என்று மாலை குறித்து விளக்குவது இவண் குறிப்பிடத்தக்கது. மேலும்,

" 'மாலை' என்னும் சிறுநூல் ஒரு பொருளைக் குறித்துப் பல செய்யுள்களால் கூறுவதாகும். இது பலவகைப் படும். பொதுவாக மாலை என்று வழங்கப்பெறும் பிரபந்தத்தின் பொருளை ஆராயும்போது பூக்களால் தொடுக்கப்பெறும் மாலையை நாம் நினைவில் இருத்திக் கொள்ள வேண்டும். ஒரேவிதமான பூக்களைக் கொண்டும் மாலை தொடுக்கலாம். பல நிறங்கொண்ட பல்வேறு பூக்களையும் தழைகளையும் கொண்டும் மாலை தொடுக்கலாம். அதேபோன்று ஒரே பொருளை முன்னிட்டு, அப்பொருளைப் பற்றிய பல்வேறு அம்சங்களைக் குறித்து, ஒரேவகைப் பாவைக் கொண்டும் இந்நூலைப் பாடலாம். பல்வேறு பாக்களைக் கொண்டும் பாவினங்களைக் கொண்டும் பாடலாம். மாலைவகைச் சிறு நூல்கள் சொல்லழகும், பொருளழகும் மிக்கு விளங்கும்"[13]

என்று 'மாலை'க்குரிய பெயர்க்காரணத்தைக் கலைக் களஞ்சியம் கூறுகிறது.

மாலை இலக்கியத்தின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு ச. வே. சுப்பிரமணியன்,

"வரிசையாக மலர்கள் மட்டுமின்றிப் பாவும் தொடுக்கப் பட்ட நிலையில் பூமாலை போன்று பாமாலையும்

12. மு சண்முகம்பிள்ளை, சிற்றிலக்கிய வளர்ச்சி, ப. 110
13 கலைக்களஞ்சியம், தொகுதி 8, ப. 251.

உருவாயிற்று. ஏதேனும் ஒருபொருள் பற்றிப் பல பாடல்கள் தொடர்ந்து அமைந்தபோது அவற்றிற்கு மாலை என்று பொதுப்பெயர் வழங்கப்பட்டது. பல பாடல்களின் தொகுதி கோவை எனச் சுட்டப்பட்ட பொதுநிலை இங்கு மாலையிலும் அமைகின்றது. பாட்டியல்கள் பொருள், யாப்பு, அமைப்பு, எண்ணிக்கை போன்ற பல அடிப்படையில் அமைந்த மாலை பலவற்றைத் தருகின்றன. பொருளாலும், வடிவாலும் வேறுபடுமிவை 'மாலை' என்ற பெயர் நிலையால் ஒருகூறு ஒப்புமை காட்டி நிற்கின்றன. பல செய்யுட்கள் தொடர்ந்து வரல் காரணமாகவும், பல அடிகள் தொடர்ந்து வருவதாலும், மலர்ப் பெயரால் அமைந்ததாலும், தொடர்ச்சி போன்றவற்றாலும் மாலைப் பெயர் இவற்றில் பொருந்துகிறது"[14]

என்று மாலை இலக்கியத்தின் பெயர்ப் பொருத்தத்தைக் குறிப்பிடுகின்றார்.

"தொடையல் வாசிகை இதழிகை கோதை
படலை அலங்கல் கத்திகை பிணையல்
அணியல் சுருக்கை தொடலை தாமம்
தொங்கல் தெரியல் கண்ணி தார்சூட்டு
மஞ்சரி ஒலியல் இலம்பகம் மாலை"[15]

என்று திவாகர நிகண்டும்,

"இரவுந் தொடுத்த தொடையலு மந்தியும்
வரன்முறை யொழுக்கமு மியல்பு மாலை"[16]

என்று பிங்கல நிகண்டும்,

"மாலை பொன்னிற் பூவின்மணியிற் சொல்லாற் றொடுத்த
மாலை யந்திப் பொழுதிரவோ டொழுங்கியல்பு மாமே"[17]

---

14 ச.வே. சுப்பிரமணியன், தமிழ் இலக்கிய வகையும் வடிவமும், ப. 518
15 திவாகர முனிவர், சேந்தன் திவாகரம், ப. 98
16 பிங்கல முனிவர், பிங்கல நிகண்டு, ப. 479
17 முத்துசுவாமி பிள்ளை, நாநார்த்த தீபிகை, ப. 527

என்று நாநார்த்த தீபிகையும் மாலைக்குரிய இலக்கணத்தைக் கூறுகின்றன.

இதுவரை வளர்ந்து வந்துள்ள மாலை இலக்கியத்தை,

1. ஒருவர் இயற்றிய மாலைகள்
2. ஈற்றடியால் பெயர் பெறும் மாலைகள்
3. அடியவர்களைக் குறித்து எழுந்த மாலைகள்
4 பொதுவகை மாலைகள்

என்ற நான்கு பிரிவுகளில் அடங்குவதைக் காணமுடிகின்றது.

தொடக்க காலத்தில் தெய்வங்களையும், அடியார்களையும் பாடுபொருளாகக் கொண்டு விளங்கிய இவ்விலக்கியம் பிற்காலத்தில் அரசியலையும், சமுதாயத் தலைவர்களையும் பாடுபொருளாகக் கொண்டு அமைந்துள்ளதையும் இதற்குரிய பாடல் எண்ணிக்கைக்கும் வரையறை எதுவும் இல்லை என்பதையும் காணமுடிகின்றது.

தஞ்சை மராட்டியர் வளர்த்த சிற்றிலக்கிய வகைகளுள் வேதநாயக சாஸ்திரியார் செபமாலை, பராபரன்மாலை ஆகிய இரு நூல்களைப் பாடியுள்ளார்.

## செபமாலை

வேண்டுதல் இலக்கியம் முதன்முதலில் கிறித்தவர் களிடையே அழகிய ஆங்கிலப் பாடல்களாக மலர்ந்திருந்தது. அவற்றைக் கொச்சை நடையில் மொழி பெயர்த்து ஆங்கில இசை அமைப்புகளாக வைத்துத் திருச்சபையில் பயன்படுத்தத் தொடங்கி விட்டார்கள். இது பெரிதும் திருந்தாத, பொருந்தாத இலக்கியமாக இருந்து வந்தது; எனவே இந்திய நாட்டில் கிறித்தவ வழிபாட்டுத் துறையில் வரலாற்றில் முதன்முதலாக வழிபாட்டு இலக்கியத்தை வேதநாயகர் 'ஜெபமாலை' என்ற பெயரில் அமைத்துக் காட்டுகின்றார்

வேதநாயக சாஸ்திரியார் ஐரோப்பியருடைய உன்னதமான பாடல்களாகிய வழிபாட்டுப் புத்தகத்திற்கு

ஒப்பாகச் 'செபமாலை'யை மிகுந்த கருத்தோடும் விருப்பத்தோடும் 1810ஆம் ஆண்டு முதல் 1855ஆம் ஆண்டு முடிய 45 ஆண்டுகளாக எண்ணி இந்நூலைப் படைத்துள்ளார்.[18] ஆயின் செபமாலையிலுள்ள 'பரமானுபூதி' என்ற பதிகத்தில் இடம்பெற்றுள்ள 54 பாக்களையும் 1803ஆம் ஆண்டு ஒரே நாளில் பாடியதாக ஆசிரியரே கூறுகின்றார். இக்கருத்தை,

> **"சதமேபதி னெட்டொடு முச்சமையத்**
> **திதமேவிய ஆணியின் ஏழ்தினமே**
> **பதமேவு நெலைப்பதி யான்மேற்**
> **சிதமேஅனு பூதிதெரித் தனனே" (22. 54)**

என்ற பாடல் மூலம் அறியமுடிகிறது.

எனவே இதை வைத்து நோக்கும்போது 1803ஆம் ஆண்டு முதலே இந்நூலைப் படைத்துள்ளதை அறியமுடிகிறது. சி. வி. சவரிமுத்து அடிகளார் இந்நூலுக்கு உரை எழுதித் திறனாய்வு செய்து பதிப்பித்துள்ளார்.[19] இந்நூலை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு அமைகிறது.

**நூல் எழுதிய நோக்கம்**

வேதநாயகர் வாழ்ந்த காலத்தில் (1772 - 1864) தமிழகத்தில் கிறித்தவ சீர்திருத்தச் சபைகள், செர்மானியத் திருத்தொண்டர்களின் பொறுப்பில் இருந்து வந்தன. இதனால் இறை வழிபாடுகளில் ஐரோப்பிய மொழிகளில் உள்ள பாடல்களே பாடப்பட்டு வந்தன. மேலும் மார்டின் லூதரது போதகத்தை அடிப்படையாகக் கொண்டு பெப்ரீசியசு (Fabricius) ஐயர் செர்மானிய மொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப் பெற்ற ஞானப்பாட்டுக்களும் வழக்கில் இருந்தன. இவற்றை யெல்லாம் தரவுகளாகக் கொண்டு வேதநாயகர் ஒரு திங்களில் உள்ள முப்பத்தொரு நாளுக்கும் நாளொன்றுக்கு ஒன்று வீதம்

18 வே. சேம். வேதநாயக சாஸ்திரியார் (ப.ஆ.), வேதநாயக சாஸ்திரியார் பாடிய ஜெபமாலை, தஞ்சாவூர், 1974.

19 சி வி. சவரிமுத்து அடிகளார் (உ.ஆ.), வேதநாயக சாஸ்திரியார் பாடியருளிய ஜெபமாலை மூலமும் விரிவுரையும் திறனாய்வும், கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், சென்னை, 1987.

காலை, மாலை வழிபாடுகளில் பயன்படுவதற்கு ஒரு செபநூல் தேவை என்பதை உணர்ந்தார். இதை அவர் தாமே எழுதிய முகவுரையில் பின்வருமாறு கூறுகின்றார்.

> "ஐரோப்பியருடைய (Book of common Prayer) தேவாராதனைத் திட்டங்களைக் காட்டும் ஜெபப் பிரமாணத்துக்கு ஒப்பாக இதை வாசிக்கிற கிறிஸ்துவின் அவயவங்களாகிய உங்கள் தேசாசாரத்தின்படி யாதொரு தேவாராதனைத் திட்டம் இருக்க வேண்டுமென்று சிந்தித்து வேதநாயக சாஸ்திரி மிகுந்த கருத்தோடும் பிரயாசத்தோடும் 1810ஆம் ஆண்டு முதல் 1855ஆம் ஆண்டு மட்டுஞ் சென்ற 45 வருடக்காலத்தில் வருடாந்தரங் கொஞ்சம் இந்த ஜெபமாலையை உண்டு பண்ணினான்"

கூட்டு வழிபாடுகளில் பாடவேண்டிய செபமாலைப் பாடல்கள் குறித்து கு. அருணாசலக் கவுண்டர்,

> "ஜெபத்தால் படிப்படியாக நமது லௌகீக கஷ்டங்களைப் போக்கிக் கொள்ளலாம் அல்லது கஷ்டத்தைப் பொருட்படுத்தாத நிலைக்கு நம் மனோபாவத்தை உயர்த்திக் கொள்ளலாம். அலைகிற மனசை ஒருமுகப் படுத்தலாம். நம்முடைய பாவங்கள் இன்ப துன்பங்கள் பயங்கரங்கள் எல்லாம் ஓயாமல் மாறிமாறி வந்து நம் மனசை அலைக்கழித்துக் கொண்டேதான் இருக்கின்றன. அப்படி இன்றி, நம் மனசானது இறைவனிடமே ஒன்றி, அவனிடமே கலந்து கொள்வதுதான் பேரானந்தம். இந்த நிலையை ஜெபத்தால்தான் அடையலாம். இதற்கு இறைவ்னுடைய குணநலன்களை விதந்தோதும் அவன் நாமங்களை ஜெபித்து அவனையே தியானித்துக் கொண்டிருக்க வேண்டும். இதற்கு உதவுவதுதான் ஜெபமாலை"[20]

என்று கூறுவதும் இவண் குறிப்பிடத்தகும்.

---

20. கு. அருணாசலக் கவுண்டர், 'ஜெபமாலை - ஓர் அறிமுகம்', ப. xix.

**'செபமாலை' - விளக்கம்**

'செபி' எனும் வடசொல்லுக்கு 'மந்திரம் சொல்லு' என்பது பொருள். செபித்தல் என்பது மீண்டும் மீண்டும் மந்திரத்தைச் சொல்லுதல் என்பதாகும். தென்னகத்தில் கிறித்தவ சமயம் பரவத் தொடங்கிய காலத்தில் கத்தோலிக்கர்கள் தங்கள் கைகளில் மீண்டும் மீண்டும் செபம் சொல்லுதலை எண்ணுவதற்காக மாலையை வைத்திருந்தனர். அம் மாலையைச் 'செபமாலை' என்றனர் மந்திரம் வேண்டுதலைக் குறித்த செபம் என்ற சொல் காலப்போக்கில் இறை வேண்டுதலைக் குறிக்கத் தொடங்கியது. இறை வேண்டுதலில் பல துறைகள் உண்டு. இறைவனைப் போற்றுதல், இறைவன் திருப் பெயரை வாழ்த்துதல், இறைவன் ஆற்றிய நன்மைகளுக்காக நன்றி கூறுதல், பிழை நினைந்து கழிவிரக்கம் கொள்ளுதல், மன்னிப்பு வேண்டுதல், மன்னிப்புப் பெற்று மகிழ்தல், இறைவன் திருக்காப்பை வேண்டுதல், ஆற்றல்தர வேண்டுதல், வழிநடத்த வேண்டுதல், மங்கல வாழ்த்துப் பாடுதல் முதலிய துறைகள் உண்டு. ஆகவே இறை வேண்டுதல் இலக்கியம் என்பது மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எபிரேய மொழியில் மொட்டு நிலையிலிருந்து, கிறித்துவுக்குப் பின்னர் இலத்தின், கிரேக்க மொழிகளில் மேலும் வளர்ந்து, மலர்ந்த நிலையடைந்து இடைக்காலத்தில் வேண்டுதல் துறையானது, பல முறைமைகளுடன் சிறந்து அமைந்த கனியாகிப் பயன்பட்டு வருகின்றது. இதனை ஆங்கிலத்தில் 'ஆர்டர் ஆப் சர்வீஸ்' (Order of Service) என்று சொல்லுவர்.

**நூலமைப்பு**

கூட்டு வழிபாடுகளில் பாடவேண்டிய செபமாலை நூல் இரண்டு பகுதிகளாக அமைந்துள்ளது.

**முதற்பகுதி**

பிதா, குமாரன், பரிசுத்தஆவி என்ற திரியேக பரமனின் தன்மைகளையும், சிறப்புக்களையும், அவர் உலகைப் பாவத்தி லிருந்து விடுவிக்க எடுத்துக் கொண்ட முயற்சிகளையும், மனித வாழ்வின் பல்வேறு சூழ்நிலைகளில் பயன்படுத்துதற்குரிய

தோத்திரப் பாடல்களையும் நல்லுரைகளையும் கட்டளைக் கலிப்பா, விருத்தம், ஆசிரிய விருத்தம், வெண்பா ஆகிய பாவினங்களைக் கொண்டு நாளொன்றுக்கு ஒரு பாடலாக மாதம் முழுவதற்கும் பாட ஏற்றவாறு முப்பத்தொரு பாடல் களைக் கொண்டதாகக் காணப்படுகிறது. காப்பு, வருகைப் பதிகம், செபமாலை ஆகிய அனைத்தும் சேர்ந்து 465 பாக்களைக் கொண்டுள்ளது.

**இரண்டாம் பகுதி**

இதில் பன்னிரண்டிலக்கத் தோத்திரம் முதல் திருச்சபை யூஞ்சல் ஈறாகப் பத்துத் தலைப்புகளில் 145 பாக்கள் உள்ளன.

இசையுடன் பாடுவதற்கேற்ற முறையில் பல்லவி, சரணங்களைக் கொண்டும் திருப்புகழ்ச் சந்த மெட்டுகளிலும் பாடல்கள் அமைந்துள்ளன.

**யாப்பு**

வெண்பா, கட்டளைக் கலிப்பா, விருத்தம், ஆசிரிய விருத்தம், கழிநெடில் ஆகிய யாப்பில் பாடல்கள் அமைந்துள்ளன.

**பாடல்களின் அமைப்பு**

பாடல்களின் இறுதி அடிகள் அல்லது சொற்கள் அப்பதிகத்தின் அனைத்துப் பாடல்களிலும் இடம்பெறுமாறு வேதநாயகர் பாடியுள்ளார்.[21] சரணம், போற்றி, நாயகனே, கும்பிடுகிறேன், தோத்திரிக்கிறேன், ஓம் நமோ, நமோ நமோ போன்ற சொற்கள் பாடல்களில் பலமுறை மீண்டும் மீண்டும் வரும் நிலையில் அமைந்துள்ளன. சில சொற்கள், பாடல் களுக்குப் பொருள் காண்பது கடினமாக இருப்பனவற்றுக்கு ஆசிரியரே குறிப்புகளையும், விளக்கங்களையும் உரைநடையில் அந்தந்தப் பாடல்கள் முடிந்தபின்னர் எழுதியிருக்கின்றார்.[22]

'தேவசுபாவமகிமை' என்ற பதிகத்தில் எட்டுச் சோடி

---

21 காண்க : பின்னிணைப்பு எண் 14

22. காண்க : பின்னிணைப்பு எண்கள் 6:11, 12; 7:1-11; 15; 17; 22; 23:10, 11; 31:1-10.

அடிகள் கொண்ட பாடல்கள் அமைந்துள்ளன. இவற்றுள் இரண்டடிகளும் ஒரே சொல்லைக் கொண்டனவாயினும், முதலடிச் சொல்லின் பொருள் அடுத்த அடியின் சொற் பொருளுடன் வேறுபட்டிருக்கிறது. புணரியல் இலக்கண விதிப்படிச் சொற்களைப் பிரித்துப் பொருள் காண்பது கடினமாக இருப்பதனால் ஆசிரியரே பொருள் காட்டி யுள்ளார். அதேபோன்று 'சமுதாய விண்ணப்பம்' என்ற பதிகத்தின் இறுதியில் 'கவனிப்பு' என்று குறிப்பு எழுதி விளக்குகிறார்.

> "இலிற்றானியாகிய சமுதாய விண்ணப்பம் பன்மையிற் சொல்லப்பட்டாலும் ஜெபமாலை ஒழுங்கின்படி ஒருமையாக்கிற்று.
>
> இலிற்றானி திருத்துவத்தின் முன்னிலைக்கிருக்கப் பாவின் முடிவாகிய மகுடத்தைப்பற்றி இயேசுவின் முன்னிலைக்குப் பாடப்பட்டது.
>
> 1817 - ஃ ஆடி மீ தரங்கன்பாடியில் சீட்டுக்கவித் தருக்கத்தாலுண்டான கலாதியில் இரயப்ப நாட்டையர் குமாரன் தானியேல் பிள்ளை எல்லாரிலும் விசேஷித்த பத்தி வைராக்கியத்தைக் கொண்டிருந்த தரும சிந்தனை யைப் பற்றி அவருக்கு மத். 26. 13 வசனப்பிரகாரம் எழுதின உடன்படிக்கைப்படி இதின் அந்தம் 17 - பாட்டில் அவர் பெயரை நாட்டிற்று"

என்ற உரைநடை அமைப்பு பதிகத்தின் இறுதிப்பகுதிக்குப் பொருள் விளக்கம் தருகிறது.

தலைவி - தலைவன் இருவருக்கும் இடையில் நிகழும் உரையாடல் போன்ற அமைப்பில்,

> **"வேதா,பர லோக விலாசசபை**
> **நாதா,உனை மெய்யென நம்பினநான்**
> **சூதா,கவடா, சொன்ன தத்தனையும்**
> **கோதா,நிசமா, சொல் குணாகரனே"** **(22.22)**

என்ற பாடல் அமைந்துள்ளது.

வேதநாயகர் தம்மை ஆத்துமப் பெண்ணாகவும் இயேசு கிறிஸ்துவைத் தலைவனாகவும் கொண்டு 'ஆத்துமப்பெண் நிந்தாஸ்துதி' என்ற பதிகத்தில் 15 பாக்களை அகப்பொருள் அமைப்பில் பாடியிருக்கின்றார்.

**பாட்டுடைத்தலைவன்**

இந்நூலின் பாட்டுடைத்தலைவன் இயேசு பிரானாவார். ஏசு, இயேசு, மேசியா எனும் பல பெயர்களால் இவர் அழைக்கப் பெறுகிறார். வேதநாயகர் சில பாக்களில் இயேசுவைக் குறிக்கப் பல பெயர்களை அடுக்கிக் கொண்டே செல்வதையும் காணமுடிகின்றது. இந்நூலில் இடம்பெறும் இயேசுவின் பெயர்களைப் பின்வருமாறு வகைப்படுத்திக் கூறலாம்.[23] அவை :

1 'இறைவன்' என அழைத்தல் (கடவுள் வாழ்த்து 7,22.25,22.59)

2. 'தலைவன்' என அழைத்தல் (18.3, 22.1)

3. தாம் செய்த அற்புதச் செயல்களால் அழைத்தல் (கடவுள் வாழ்த்து 3,7; 2.4,10; 5.1; 11.1,2; 12 8; 14 6)

4. ஊர்ப்பெயரால் அழைத்தல் (22.30)

5. உடலுறுப்பால் அழைத்தல் (11 6; 12.5; 23.10)

6. தாம் பிறந்த குலத்தினால் அழைத்தல் (கடவுள் வாழ்த்து 5; 2 2,3; 20.1; 23.7)

7. தம்முடைய வாகனத்தினால் அழைத்தல் (4.7)

8. தாம் பிறந்த இடத்தினால் அழைத்தல் (5.3; 11.2)

9. வடிவத்தால் அழைத்தல் (22.1)

10. பொதுவாக அழைத்தல் (14.1,2,11; 22.6,8,9,12, 24,30, 31,33, 34,38,39,41; 23.9,10; 24.14)

என்பனவாகும்.

---

23 காண்க : பின்னிணைப்பு எண் 15

**பெற்றோர்**

சூசையப்பர், மரியம்மையின் மகனாகத் தோன்றியவர் இயேசு. வேதநாயகர் இரண்டிடங்களில் மட்டுமே சூசையப்பரைக் கூறுகின்றார். ஆயின் அன்னை மரியாளைப் பற்றிப் பல பாக்களில் போற்றிக் கூறுகின்றார்.

'தாவீது ராச குலத்தவரான யோசேப்பு' (23.2,8) என்று சூசையப்பரைக் கூறுகின்றார்.

*அன்னை மரியாள் (4.2)*
*கொற்றவனைப் பெற்றவள் (2.2)*
*கன்னி மரி (10.6, 27.9, 31.7)*
*தாயாங் கன்னி மரியாள் (12.3)*
*முதல்வி (23.3)*
*மரிமங்கை (23.4)*
*கன்னியாஸ்திரி (25.4,9)*

என்பன மரியம்மையைக் குறித்துவரும் சொற்களும் தொடர்களும் ஆகும்.[24]

> "கரிய தலைமயிர் கொண்டவள் (11.8), அழகிய கண் கொண்டவள் (23.1), திருமணத்துக்கு நியமிக்கப் பட்டவள் (23.2), அறிவின் மிக்கவள் (23.3), அரிவையர்க்குள் உயர் வளம் படைத்தவள் (23.3), அழகிய சூசையப்பருக்காக நியமிக்கப்பட்டவள் (23.5), அழகுள்ள வேல் போன்ற கருங்கண்ணுடையவள் (23.5), யூதர்குல ராசகன்னி (23.6), மைக்கண்ணுடையவள் (23.7)"

என்று மரியம்மையைக் கூறுவதையும் காணமுடிகின்றது.

**குலம்**

யூதர் குலத்தில் தோன்றியவர் இயேசு பிரானாவார் இதனை,

24. காண்க : பின்னிணைப்பு எண் 16.

யூதர் குலத்துதித்த தாவீது அரசன் வழிவந்தவர் (2.2)
தாவீதரசனின் கோத்திரத்தில் வந்தவன் (20.1)
தாவீதின் குலத்தரசர் (23.7)

எனும் பாடல் வரிகளில் வேதநாயகர் கூறுகின்றார்.

**பிறப்பும் வளர்ப்பும்**

'கிறிஸ்து பிறப்பின் பேரிலே சந்த விருத்தம்', 'கிறிஸ்துவின் சரித்திராதிந்தம்', 'திருவிளையாட்டூஞ்சல்', 'சிலுவைத் தியானம்', 'பாவ விமோசனம்' ஆகிய பதிகங்களில் இயேசு பிரானின் வாழ்க்கை வரலாற்றை விரிவாகவும் ஏனைய பாக்களில் சிலவிடங்களிலும் வேதநாயகர் கூறிச் செல்கின்றார். அவர் 'செபமாலை'யில் கூறியவற்றை இப்பகுதி ஆராய்கிறது.

கலிலேயா நாட்டில் உள்ளதோர் அழகிய கண்ணுள்ள மரியின் வயிற்றில் தேவனாக இருந்தவன் மனிதனாகப் பிறந்தார். கடல் சூழ்ந்த உலகம் யாவற்றையும் ஆறு நாட்களில் படைத்து, ஆதாம் ஏவாளை உருவாக்கி, சீவமரக்கனியை அருந்துங்கள், தீய மரக்கனியைப் புசியாதீர்கள் என்று கடவுள் இட்ட கட்டளையை மீறின அவர்களை வனத்தைவிட்டு விரட்டியதோடு, அக்குற்றவாளிகளுக்குப் பிணையாளி யாவேன் என்று சொல்லியே மனித உருவெடுத்தார் (23.1)

தாவீதின் அரசகுலத்தில் தோன்றிய சூசையப்பர்க்கு மனைவியாக நியமிக்கப்பட்ட மரியம்மைக்குத் தேவ தூதர் களில் ஒருவன் வந்து,

> "கன்னியர்க்குள் ஆசி பெற்ற மகராசியே! நீ ஓர் குமாரனைப் பெறுவாய்; நீ அவர்க்கு 'இயேசு' என்று திருப்பெயர் இடுவாய்; அவர் பரப்பிரமனுடைய நேய தற்சொரூபம் உள்ள மகன் எனப்படுவார்; அவர் இசரவேலர்க்கு ஒளிமிகுந்த அரசனாக, தீமையற்ற தாவீதின் திருவோலக்கத்தில் வீற்றிருந்து நல்லரசு நடாத்துவார், அவ் அரசு அழியாதிருக்கும்; இது உனக்கு நல்ல சீராயிருக்கும்"

என்று காபிரியேல் தூதன் வாழ்த்தினார். இதைக் கேட்ட

மரியம்மையோ, 'எனக்குரிய அன்புக் கணவன் இல்லையே, இது எப்படி நிகழும்' என்றாள். 'மேன்மை தங்கிய பராபரனின் அருளால் நடக்கும்' என்றான் காபிரியேல். இதன்படிக் கன்னிமரி கருவுற்றார் (23.2,3).

> "யோசேப்பே! தாவீதின் மைந்தனே! கன்னிமரி கருவுற்றதைக் கண்டு மலைக்காதே! உன் நெஞ்சில் உண்டான சந்தேகத்தை ஒழித்துவிடு; இம்மங்கையின் வழியே ஒரு சந்ததி வரும்; பின்னே அவர் பெயரைச் சொல்லி உலகம் அவரைத் தொழவேண்டும் என்று விளம்பரம் செய்வாய்; அவர் கிருபை பொங்கி மக்கள் பாவம் நீக்கி, பரமண்டலம் விளங்கப் பயன் தந்து காப்பார்"

என்று யோசேப்புக்குக் காபிரியேல் சொல்லியது (23.4).

குடிக்கணக்கு எழுத மக்கள் அனைவரும் தம்தம் பிறந்த நாட்டுக்குச் செல்லவேண்டுமென்று அகுஸ்துராயன் இட்ட கட்டளைக்கிணங்க யோசேப்பைக் கூட்டிக்கொண்டு பெத்தலேமுக்கு மரியம்மையுடன் வந்தார். பல ஆடு, மாடுகள் அடையும் குடிலில் மரி இயேசுவைப் பெற்றெடுத்தார் (23.6). நீ பிறந்த அந்த நாளில், உன் சொந்த ஊர் பெத்லகேமில் உனக்கோர் மடத்திலும் இடமில்லை. அயலானின் மாட்டுக் கொட்டிலில் பிறந்தாய். வறுமை காரணமாக உன் பெற்றோர் உன்னைப் புல்லணையில் கிடத்தினரன்றோ? கந்தைத் துணியால் உன்னை மூடினர் (25.2). தம் குழந்தையைப் புல் வேய்ந்த வீட்டில் வைக்கோல் கொண்டு போர்த்தினார் (13.4). பிறந்த அன்று வானத்தில் தோன்றிய விண்மீனைக் கண்டு மூன்று சாஸ்திரிகள் இயேசுவைத் தேடினர் (13.2). பிறந்த அன்றைய நாளில் ஆயர்கள் நல்ல தயிரும் பாலும் கொணர்ந்து திருவாயில் அன்பால் வணங்கினர் (11.7). மாட்டிடையர் தொழும்போது வானதூதர்கள் வானில் வீணைகளை ஒலித்து நேர்புகழ் பாடி வந்தனர். விண்ணுலகும் மண்ணுலகும் இணைந்தன. அடுத்து, மூன்று அரசர்கள் வெவ்வேறு நாடு களில் இருந்தவர்கள் ஒன்றுகூடிப் பெத்தலையில் பிறந்தவரைக் கண்டு விலையுயர்ந்த காணிக்கைகளைப் பிறந்த பாலகன்

பாதத்தில் வைத்துத் தொழுதனர் (23.6).

தொட்டிலில் தூங்காமல் அழும் குழந்தையை அன்னை மரி பின்வருமாறு தாலாட்டுப் பாடுகின்றாள் :

**"நித்திரைக்கெனத் தாயராட்டியும்**
**நீ அழுங்குரலே மிகுப்பதென்ன?**
**எத்தக்கு நீ கூவிவாடினும்**
**ஏழை மாதிடம் ஏதேது உண்டுதான்**
**பெத்தலேமினில் உற்ற பேரவர்**
**பெருமைகண்டு உனக்கருமை செய்யவே**
**மெத்தவந் துயில்விழி கொள்ளப்பனே**
**வேதநாயகா, வேதநாயகா" (13.5)**

அல்லல்பட்டு, ஆற்றாது, கண்ணீர் விட்டுச் சொல்லிய சொற்கள் நெஞ்சை நைந்துருகச் செய்கின்றன. இவர்களுக்கு மாறாக, ஏரோதே அரசன், இயேசுக் குழந்தையைக் கொல்ல வேண்டுமென்று திட்டமிட்டான் (23.6).

ஏரோது அரசன், 'யூதரின் அரசன் இயேசு' என்று ஞானிகள் கூறியதைக் கேட்டுப் பயந்து அக்குழந்தையைக் கொல்ல வழி தேடிக்கொண்டிருந்தான். ஏரோதேயின் மனத்தை அறிந்த கடவுள், ஒரு தேவதூதனை யோசேப்பிடம் அனுப்பிக் குழந்தையை எகிப்துக்குக் கொண்டு போகக் கட்டளையிட்டார். இதையறிந்து யோசேப்பு உடனடியாகத் தம் மனைவியுடன் குழந்தையை எடுத்து நடந்து எகிப்துக்குச் சென்று மகனை ஒளித்து வைத்துக் காப்பாற்றினார் (23.8).

இதன்பின்னர் இயேசு பிரான் வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில் நிகழ்ந்த செயல்களை வேதநாயகர் பல பாடல்களில் கூறுவதைக் காண முடிகின்றன.

பன்னிரண்டு சீடர்களில் ஒருவனான பாவி யூதாசு ஆசாரியர், மூப்பர், மக்கள் கூட்டத்துடன் மின்னுகின்ற கத்தி போன்ற ஆயுதங்களுடனும் தடிகளுடனும் திரண்டெழுந்து வந்தான். இயேசுவினிடத்தில் வந்து அவரை முத்தம் செய்து 30 வெள்ளிக்காசுக்கு ஆசைப்பட்டு அவரை ஒப்புவித்தான்.

அவரது இருகரங்களையும் கயிற்றால் பிணித்து அன்னா, காய்பா, யூதர் சங்கம் முன் நிறுத்தினர். அங்கு ஓரிரவு முழுவதும் அவரை வாரால் அடித்தனர் (10.9, 24.5).

இயேசுவைப் பிடித்தவர்கள் அவரைப் பிரதான ஆசாரியனாகிய காய்பாவினிடத்தில் கொண்டு சென்றனர். ஒருவன் இயேசுவின் கன்னத்தில் அறைந்தான். காய்பாவும், மூப்பரும், சங்கத்தார் யாவரும் இயேசுவைக் கொல்வதற்குப் பொய்ச்சாட்சி தேடினர். இரண்டு பொய்ச்சாட்சிகள் வந்து,

> "தேவனுடைய ஆலயத்தை இடித்துப் போடவும், மூன்று
> நாளைக்குள்ளே அதைக் கட்டவும் என்னாலே ஆகும்
> என்று இவன் சொன்னான்"

என்றனர். இயேசுவோ எதுவும் பேசாமல் மவுனமாயிருந்தார். அப்பொழுது, பிரதான ஆசாரியன் அவரை நோக்கி, நீ 'சோதியின் குமாரனோ' என்று கேட்டான். அதற்கு இயேசு, 'நான் அவர்தான் திரும்பவும் மேக சிம்மாசனத்தில் எழுந்து திருநடு இடவரல் காண்பீர்கள்' என்று சொன்னார். அப்பொழுது பிரதான ஆசாரியன் தன் ஆடைகளைக் கிழித்துக் கொண்டு கொடுஞ்சினத்துடன் 'இவன் சாக விதி, அவன் தேவதூஷணன்' என்றார் (24.7).

மறுநாள் காலையில் அரண்மனையின் முற்றத்தில் பேதுரு குளிர் காய்ந்து கொண்டிருந்தான். அப்பொழுது, ஒருத்தி அவனிடத்தில் வந்து, நீயும் நசரேத்தூர் இயேசு வோடுகூட இருந்தவன்; அவன் சீடன் தானே என்றுரைத்தாள். அப்பொழுது அவன், நான் அவன் இல்லை. நீ சொல்வது எனக்குத் தெரியாது என்று எல்லோருக்கும் 'முன்பாக மறுதலித்தான். அவன், வாசல் மண்டபத்திற்குச் சென்ற பொழுது வேறொருத்தி அவனைக் கண்டு, இவனும் நசரேய னாகிய இயேசுவோடே கூட இருந்தான் என்று அங்கே இருந்தவர்களுக்குச் சொன்னாள். அவனோ, அந்த மனிதனை நான் அறியேன் என்று ஆணையிட்டு, மறுபடியும் மறுதலித் தான். சற்று நேரத்திற்குப் பின்பு அங்கே நின்றவர்கள் பேதுருவினிடத்தில் வந்து, மெய்யாகவே நீயும் அவர்களில் ஒருவன்; உன் பேச்சு உன்னை வெளிப்படுத்துகிறது என்றனர்.

அப்பொழுது அவன், அந்த மனிதனை அறியேன் என்று சொல்லிச் சபிக்கவும் சத்தியம் பண்ணவும் தொடங்கினான். இவ்வாறு அவன் மூன்றுமுறை மறுதலித்த உடனே சேவல் கூவிற்று. அப்பொழுது பேதுரு, சேவல் கூவுவதற்கு முன்னே நீ என்னை மூன்று முறை மறுதலிப்பாய் என்று இயேசு தன்னிடத்தில் சொன்ன வசனத்தை நினைத்துக் கொண்டு, வெளியே சென்று, மனம் கசந்து அழுதான் (24.6).

முதல்வனைப் பிலாத்துவினிடத்துக் கொலை செய்வதற்கு ஒப்புக் கொடுத்ததைக் கேட்ட, அவரைக் காட்டிக் கொடுத்த மூடனாகிய யூதாசு, மிகவும் மனம் வருந்தினான். தான் பெற்ற முப்பது வெள்ளிக்காசினைப் பிரதான ஆசாரியரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் திரும்பக் கொண்டு வந்து, குற்றமில்லாத முதல்வனை நான் காட்டிக் கொடுத்ததனால் பாவம் செய்தேன் என்றான். அதற்கு அவர்கள், எங்களுக்கென்ன, அது உன்பாடு என்றனர். அப்பொழுது, அவன் அந்த வெள்ளிக்காசைத் தேவாலயத்தில் எறிந்துவிட்டு, புறப்பட்டுப்போய், நாண்டு கொண்டு செத்தான். பிரதான ஆசாரியர் அந்த வெள்ளிக்காசை எடுத்துச் செத்த அந்நியரை அடக்கம் செய்வதற்குக் குயவனுடைய நிலத்தை அதனாலே கொண்டார்கள். கர்த்தர் எனக்குக் கற்பித்தபடிக் குயவனுடைய நிலத்திற்காக அதைக் கொடுத்தார்கள் என்று எரேமியா தீர்க்கதரிசியாய் உரைக்கப்பட்டது அப்பொழுது நிறைவேறிற்று (24.9).

ஒரு பாடலில் (24.27) இயேசு பிரானின் வரலாற்று நிகழ்ச்சிகளைத் தொகுத்துத் தருவதையும் காணமுடிகிறது. அவை வருமாறு :

> சிலுவையில் மரித்து அடக்கம் செய்யப்பட்டு மூன்றாம் நாள் எழுந்தார். இப்பூவுலகில் நாற்பது நாட்கள் இருந்து சீடருக்குப் பத்துவிசை காட்சியருளினார். இவர்களுக்கு வேத நூல்களின் உட்பொருளை விளக்கிப் பல புதுமைகளையும் காட்டினார். பரமண்டலத்திற்குச் சென்று திருத்தந்தையாரின் வலப்பக்கத்தில் திருஓலக்க மண்டபத்தில் வெற்றி வீரராக வீற்றிருந்தார். பத்தாம் நாள் பெந்தெகொஸ்தே என்று தமது பரிசுத்தாவி

யானவரைச் சீடர் மேலுறப் பொழித்து, கடையுகத்தில் திரும்ப வந்து மக்களுக்குக் கடைசி நியாயத் தீர்வை அளிப்பார்.

### கிறிஸ்து பட்ட பாடுகள்

இயேசுநாதர் தேவனாகக் கரலோகத்தில் இருந்தவர் இப்பூவுலகில் மனிதனாக அவதரித்ததிலிருந்து அவரது பாடுகள் தொடங்கி வருகின்றன. 'கிறிஸ்து பட்ட பாடுகளின் பேரில் தேவாரம்' (16) என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ள 17 பாக்களிலும் இயேசு பிரானின் பாடுகளை வேதநாயகர் கூறிச் செல்கின்றார்.

விருத்தசேதனம், திருமுழுக்கு, சோதனை, துன்பம், 33 ஆண்டுகளின் வறுமை, உபவாசம், அன்பு ஆகிய இவற்றை யெல்லாம் நோக்கி 'இரங்குவாய் யேசுநாதா' என்கிறார்.

அழகிய ஒலிவமலைக் காட்டில் உடம்பிலிருந்து வேர்வை சிந்தும் அளவிற்குப் பல துயரங்களை அனுபவித்தவர். முப்பது வெள்ளிக் காசுகளுக்காக ஆசைப் பட்டு யூதாசு என்பான் எதிரிகளிடம் ஒப்புவித்து அதனால் அடைந்த துயரங்கள்தான் எத்தனை எத்தனை? வஞ்சகனான அன்னா, குரு காய்பா முன் கொண்டு போய் நிறுத்திக் கன்னத்தின்மீது அறைந்து, பொய்ச்சாட்சிகளினால் துன்பம் கண்டாய். பிலாத்துவின் முன்னிலையிலும் நீ பட்ட பாடுகள் சொல்லி முடியாது. உடையை மாற்றி வாரினால் அடித்தனர். தடியால் தாக்கினர். கொடிய செயல்களைச் செய்த பரபா சோடு உன்னையும் கொண்டு போய் நிறுத்தினர். சிலுவையை உன் தோள் மேல் சுமத்தினர். ஊர் மக்களும், மகளிரும் அழுது நின்றனர்.

### திருவிளையாட்டூஞ்சல்

'திருவிளையாட்டூஞ்சல்' (27) எனும் பதிகத்தில் இடம்பெற்றுள்ள 11 பாடல்களிலும் இயேசு பிரானின் வரலாற்று நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன. இப்பதிகத்தில் காணப்படும் இயேசு பிரானின் வரலாறு வருமாறு :

தாவீதின் மைந்தர்; உலகிலுள்ள எல்லாப் பொருள்

களையும் ஆறு நாட்களில் அமைத்தவர்; ஆதாம், ஏவாள் என்ற இரு மானிடரைச் செய்து மாசற்ற அழகிய தோப்பில் வாழ்ந்து, மாறாத சீமரக்கனியைத் தின்று உறுதிபெற வைத்த கடவுள் கருணையை அறியாமல், அவர் கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் போன பாவிகள் பேய்வசப்பட்டவர்கள் அழிந்து போகாது காக்கப்பட வேண்டும் என்பதற்காக உலகில் ஊன் உடல் எடுத்து வந்தவர்; பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்த சவுல், தாவீது என்பவர்களைக் கொண்டு பலவித அட்டகாசங்கள் செய்தபின் இஸ்ரவேலின் அரசர்களாக்கி, அவர்கள் குலத்தில் மாட்டுக் கொட்டிலில் பெத்தலேகமில் பிறந்து வானவரும் பூவுலகோரும் வணங்க வந்த தெளிவு மிகுந்தவர்; கன்னிமரி வயிற்றில் பரிசுத்தாவியால் தோன்றி, பொந்தி பிலாத்துவிடம் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு மாண்டு அடக்கம் செய்யப்பட்டு உயிர்த்து என்றென்றும் மகிழ்ந்திருப்பவர்.

**இறைவன்**

கடவுளைப் பற்றிய கருத்துக்களை மனிதன் பல வழிகளில் அறிந்து கொள்கின்றான். பொதுவாகச் சமயம் சார்ந்தோர் அச்சமயத்தில் திருமறையை மையமாகக் கொண்டு கருத்துக்களை வளர்க்க முற்படுகின்றனர். இந்து சமயம் பகவத்கீதையையும், இசுலாமிய சமயம் திருக்குரானையும், கிறித்தவ சமயம் திருமறையையும் சான்றாகக் கொண்டுள்ளது. எனவே வேதநாயகரும் கடவுளின் தன்மையைத் தன்னுடைய நூல்களில் பலவிதமாகச் சித்திரித்துள்ளார். திருமறையைச் சான்றாகக் கொண்டே தன்னுடைய இறையியலைக் கட்டி எழுப்புகின்றார். இருந்தாலும் பிற சமய மக்கள் தங்கள் இறைவனுக்குச் சிறப்பாக இட்டு வழங்கிய பெயர்களையும் எடுத்தாண்டுள்ளார். தூய யோவான் 'வார்த்தை' என்ற சொல்லை எவ்வளவு துணிவாகத் தம்முடைய நற்செய்தி நூலில் கையாண்டுள்ளாரோ அதைப்போலவே இவரும் செபமாலை நூலில்,

> "அகில புவனங்க ளெல்லாம் அமைத்தார் வந்தார்
> ஆதியிலே யிருந்த வார்த்தையுமே வந்தார்" (1)

என்று கிறித்துவின் வருகைப் பதிகத்தில் கூறியுள்ளார்.

**ஆதியும் அந்தமும் இல்லாதவன்**

எல்லாச் சமய நூல்களிலும் கடவுள் 'கடந்து நிற்பவன்' என்று கூறுகின்றனவே தவிரக் கடவுளின் தோற்றம் பற்றி எழுதவில்லை. வேதாகமத்தில் இறைவன், 'ஆதியும் அந்தமுமாய் இருக்கிறேன் என்று திருவுளம் பற்றுகிறார்', 'பூமி உண்டாகும் முன்னும் ஆதி முதற்கொண்டு அனாதியாய் நான் அபிஷேகம் பண்ணப்பட்டேன்' என்றும் குறிப்பிடுகின்றார். இதனையே வேதநாயகரும் தம் நூலில் இறைவனைப் பற்றிக் கடவுள் வணக்கத்தில் குறிப்பிடும்பொழுது,

> "ஆதியு மந்தமு மில்லாய் சரணம்
> அதுமுன் னதுமுன் அதுமுன் சரணம்
> அல்பா ஓமே காவே சரணம்" (1)

என்று புகழ்ந்து பாடுகின்றார். மேலும்,

> "தேக சொரூபம் அல்லானே
> செனன மரணம் இல்லானே"

> "அனாதியாய்ச் சரீரமில்லானாய்"

என்று குறிப்பிடுகின்றார்.

**பரமண்டலம்**

வேதாகமத்தில் பரமண்டலத்தைப் பற்றிப் பல விளக்கங்களைக் காணமுடிகின்றது.

> "பரலோகமாகிய உமது வாசஸ்தலம்"

என்றும்,

> "நமது தேவன் பரத்தில் இருக்கின்றார்"

என்றும், இயேசு பெருமான் தம் சீடர்களுக்குச் செபம் செய்யக் கற்றுக் கொடுக்கும்போது 'பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே' என்று தொடங்குகிறார். இக்கருத்தை வேதநா .கர்,

"பாத்திரமாக்கிக் கொண்டோனைத் தோத்திரிக்க – உயர்
பரமண்டலாதிபனைத் தோத்திரிக்கின்றேன்"

என்கின்றார்.

எனவே பரமண்டலம் இறைவனின் இருப்பிடமாக உள்ளது என்பதை அறியமுடிகிறது. அதுவே அடியவர்கள் இறுதியில் சேருமிடம். அங்கு எப்போதும் ஆனந்தம் நிலவும் என்னும் கருத்து இருக்கின்றது. எல்லாச் சமயமும் இக்கருத்தை உள்ளடக்கியதாகவே காணப்படுகிறது.

**தேவாலயம்**

வேதாகமத்தில், இஸ்ரவேல் மக்கள் கடவுள் ஆலயத்தில் இருக்கின்றார் என்று நம்பினர். 'கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று' என்ற வசனத்தின் மூலம் இதை அறியமுடிகிறது. இக்கருத்தை வேதநாயகரும்,

"திரித்துவத்தில் ஒன்றானே
தேவாலயத்தில் நின்றானே"

என்று குறிப்பிட்டுள்ளார். இறைவன் தேவாலயத்தில் மட்டும் தான் இருக்கின்றார் என்ற எண்ணம் நம் அறியாமையைக் காட்டுகின்றது. வேதாகமம் இதைவிட ஒரு சிறந்த ஆலயத்தைப் பற்றிக் கூறுகின்றது. தூய பவுல் 'ஜீவனுள்ள கடவுளின் ஆலயம் நாமே' என்றும் கூறுகின்றார். இவற்றிலிருந்து உலகத்தில் மனிதர்களால் கட்டப்படும் ஆலயங்களை விடச் சிறப்பு மனிதனாகிய ஆலயம் தூய்மை அடைவதாகும். இதுவே இறைவன் தங்கச் சிறந்த இடமாகும்.

**எங்குமிருத்தல்**

இறைவன் பரமண்டலத்தில் இருப்பவர், ஆலயத்தில் இருப்பவர், உள்ளத்தில் இருப்பவர் என்று கூறிவந்த வேதநாயகர், 'கிறித்து வருகைப் பதிகத்'தில் எங்கும் இருக்கின்றார் என்கின்றார்.

**தூய ஆவியானவர்**

இறைவன் தன் செயலாற்றலைக் கிறித்துவின் மூலமாக

ஒரு குறிப்பிட்ட காலத்தில் நடத்தி வந்தார். இப்போது தூயாவியானவர் மூலமாகச் செயலாற்றிக் கொண்டிருக் கின்றார் என்று திருமறையில் 'மனுமக்கள் யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்' என்ற வசனத்தின் மூலம் அறிய முடிகிறது. இதனையே வேதநாயகர்,

**"பக்தியோர்களின் தேற்றரவாளனார்"**

என்று தூயாவியானவரைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். தேற்றரவாளன் என்பது தூயாவியானவரையே குறிக்கும்.

### இறைவன் திருப்பெயர்கள்

வேதாகமத்தில் கடவுளுக்குப் பல பெயர்கள் இருப்பதைக் காணமுடிகின்றன. அந்தப் பெயர்கள் : யகோவா, பிதா, சுவாமி, சருவேசுவரன், இம்மானுவேல், தயாபரன், தேவன் முதலியவைகளாகும். செபமாலையில் இறைவனை இத்தகைய பெயர்களால் பாடிப் புகழ்ந்துள்ளார்.

**"சேத்திரத் தொ*ரே யோவா*வைத் தோத்தரிக்கின்றேன்"**

**"நேத்திரக் கிருபையானை நித்திய *பிதா*வை"**

**"*சுவாமி* யேசுக்கிறிஸ்துவே"**

**"தன்னிகரில்லாத *சருவேசன்* வந்தார்"**

**"*இம்மானுவேல்* அரசேவந்தார்"**

**"தானாக நின்ற *தயாபரனார்* வந்தார்"**

**"தம்மையன்றித் *தேவனி*ல்லாச் சாமிவந்தார்"**

என்பன சான்றுகளாகும்.

வேதநாயகர் 'சிவன்' என்று சைவ சமயத்தில் வணங்கும் கடவுளரின் பெயரையும், தாயுமானவர் சிவபெருமானைப் 'பராபரன்' என்று கூறுகின்ற பெயரையும், இசுலாமியர் தங்கள் இறைவனை 'அல்லா' என்று கூறுகின்ற பெயரையும் எடுத்தாண்டிருப்பதைக் காணமுடிகின்றது.

### செயல்கள்

கடவுள் உலகையும், மனிதனையும், விலங்குகளையும்,

மரம் செடி கொடிகளையும், சந்திரன் சூரியன் விண்மீன்கள் கடல் கடலில் வாழும் உயிரினங்கள் போன்ற எல்லாவற்றையும் படைத்தவன். இவற்றை வேதநாயகர் 'திருச்செயல்' என்னும் பதிகத்தில் பாடியுள்ளார். இதில் அடங்கியுள்ள பாடல்கள் அனைத்தும் வேதாகமத்தின் கருத்துக்களைப் பெரிதும் பின்பற்றியுள்ளது. இறைவன் ஒன்றுமில்லாமையிலிருந்து உலகை உருவாக்கினார். வேதாகமத்தில் உள்ள ஆதியாகமத்தில்,

"பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது
ஆழத்தில் மேல் இருள் இருந்தது. தேவ ஆவியானவர்
ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்"

என்றும் ஆறு நாட்களில் எல்லாவற்றையும் படைத்தார் என்றும் காணப்படுகிறது. இதை வேதநாயகர்,

**"அறுதினத்தில் சகல வஸ்தும் அமைத்த நாதன்"**

என்கின்றார்.

**நூலாசிரியர்**

வேதநாயகன், கவி வேதநாயகன், வேதநாயகன் ஓதிய பாடல், வேதநாயகன் பாட்டு, வேதநாயகன் பாடல் என்று தம்மைப் பற்றிப் பல பாடல்களில் கூறுகின்றார். மேலும் 'பாவலன் நெல்லை வேதநாயகன்' (28.25), 'நெல்லைத் தமிழ் வேதநாயகன் பா' (30.11) என்று தாம் பிறந்த ஊரான திருநெல்வேலியையும் தம் பெயரோடு சேர்த்துக் கூறுவதையும் காணமுடிகின்றது. சில பாக்களில்,

**'திருநெல்வேலியன்பாவே' (7.10)**

**'நெல்லைப்பதியான்' (22.54)**

என்று கூறுவதையும் காணமுடிகின்றது.

'திருநெல்வேலித் தேவசகாயன் சேய்' (கடவுள் வாழ்த்து 11) எனத் தம்மைக் கடவுள் வாழ்த்துப் பாடல்களில் ஒன்றில் அறிமுகப்படுத்திக் கொண்டவர் 'என்னை அன்னையின் கருப்பத்தில் உருவாக்கிப் பலப்படுத்தி வந்தவன்' (22.34) என்று

தம்மைப் பெற்ற தாய் தந்தையரை மறவாமல் போற்றுகின்றார்.

அதேபோன்று தம்மை வளர்த்து உலகம் போற்று மளவிற்கு உருவாக்கிய குருநாதர் ஸ்வார்ட்ஸ் ஐயரையும் மறவாமல் போற்றுவதையும் காணமுடிகிறது. கம்பருக்குச் சடையப்ப வள்ளல் வாய்த்தாற் போன்று தமக்கு ஸ்வார்ட்ஸ் ஐயர் வாய்த்ததனால்

> "திருநெல்வேலியில் சிவபக்தனாயிருந்தவர் உரோமன் சுத்தோலிக்கத் திருச்சபையைச் சார்ந்து, தேவசகாயம் பிள்ளைக்கு மகனாகப் பிறந்து, ஸ்வார்ட்ஸ் ஐயரால் தஞ்சாவூருக்குக்கொண்டு வரப்பட்டு, 1803ஆம் ஆண்டு ஆனித் திங்களில் 'செபமாலை' என்ற மாலை பாடித் தம்மைத் தடுத்தாண்ட ஏசு பிரானின் திருவடி களுக்குப் பாதகாணிக்கையாகப் படைத்தேன்" (26.11)

என்கிறார்.

'பரமானுபூதி' எனும்பதிகத்தில் இடம்பெற்றுள்ள 54 பாக்களையும் ஒரேநாளில் பாடி முடித்ததாகக் கூறுகின்ற இப்பதிகத்தின் இறுதிப் பாடலில் பாடிய ஆண்டு, மாதம், நாள் ஆகியவற்றையும்

> "சதமேபதி னெட்டொடு முச்சமையத்
> திதமேவிய ஆனியின் ஏழ்தினமே
> பதமேவு நெலைப்பதி யான்மேற்
> சிதமேஅனு பூதிதெரித் தனனே" (22.54)

எனும் பாடலில் கூறுகின்றார் (1803ஆம் ஆண்டு ஆனி மீ 7 உ).

ஒரு பாடலில் (25.15) தமக்கு வந்த ஏழுவகைத் துன்பங்களைக் கூறி, அனைத்திற்கும் இறைவனே காரணம் எனவும் கூறுகின்றார். அவை வருமாறு :

1. வேதநாயகன் மேல் வாமனைத் தூண்டி விட்டு வேடிக்கைகள் பார்த்தாய்.
2. மிக்கேலுமுத்து என்பவனின் வீட்டுப் பெண்களைக் கொண்டு என்னைத் துன்புறுத்தி வாதித்தாய்.

3. சாதிச் சச்சரவைக் கிளப்பிவிட்டுப் பலவித சங்கடங்களை விளைவித்தாய்.
4. சற்குணராயிருந்த பாக்கியநாதன் சதி செய்வதற்கு உடனாளியா யிருந்தாய்.
5. போதுமான அளவு என்னைப் பகைத்த அடைக்கலத் தையரோடு ஏற்பட்ட போராட்டத்தை அதிகரிக்கச் செய்தாய்.
6. புண்ணியவானே! வேடதாரியே! எத்தனை யோவித வேடம் போடுவாய், ஆடுவாய்.
7. இவ்வாறெல்லாம் என்னைப் பாடுபடுத்திக் கோபம் ஆறினபின் என்னை எழுப்பி, என் ஆபத்தெல்லாவற்றையும் தீர்த்து முடித்தாய்.

தம்மைக் காணாமல் போன ஆடு (11.1) என்றும், தம்மைப் பாவி (14.2,3,4; 22.50) என்றும் கூறுகின்றார்.

> "நல்வழி காட்டும் திருமறையின்படி செல்லாமல், மனம் போன போக்கில் சென்று பொல்லான் எனக் கோலம் கொண்டால், என் பக்கம் நற்குணம் உண்டு என்று என்னோடு உறவாடுபவர் யார்?" (13.6)

என்று கேள்வி கேட்டவர்,

> "சூதான மங்கையர் மனம் என்னோடு வாதாடினதை எப்போது தொலைத்தருள்வாய்?" (22.35).

என்று இறைவனிடம் கேட்கின்றார்.

> "என்னை அடர்ந்த வினை ஒன்றோ? என்னை நெருங்கிய துயர் ஒன்றோ? இவை பலப்பலவாயின; இவை தொலைந்து வீழ்வது என்றோ? நான் உன் வீரக்கழல் களில் விழுந்து பணிவது என்றோ?" (11.7)

> "நான் துன்பத்தால் மயங்கும்பொழுது அன்றோ உன்னைச் சரணடைகின்றேன்" (11.9)

"கடிபட்ட (நாய் போன்ற) பேய் சினந்து, கபடமாகத்

*தினந்தோறும் இடுகின்ற வலைக்குள் நான் பிடிபட்டு என் உயிர் கெட்டுப் போனால் ஊர் மக்கள் உன்னை வசை பேசி ஏசார்களோ?" (12.4)*

*"நாய் நச்சின வாழ்வை ஒத்தே நான் இதுகாறும் இருந்து வந்தேன்" (22.32)*

*என்றிவ்வாறு தன் நிலையைப் பற்றிக் கூறுகின்றார்.*

*"உன்னை அல்லால் எனக்கு வீடு ஏது? நல்வாழ்வு ஏது? இனத்தவர் சலுகையால் வரும் வீறு ஏது? என்னை உன் கிருபையால் வளர்க்கா விட்டால் எனக்கு சடு ஏது? (11.2); நீதான் என்னுடைய சலுகை, என் இன்பம், சகலமும் நீதான் (11.3); நீயே கதி, மதி, வழி, விழி எல்லாமும் நீதான்" (12.3)*

*என்று இறைவனே கதி என்கின்றார்.*

*"ஒப்பற்ற திருஇராப்போசனத்தை நான் உண்டு குடிக்க ஒத்தாசை செய்யும் உறவினரே! சொன்ன சொல் தப்பாத திருமறையை யான் படிக்கச் செய்த தற்சோதி யானவரே! மயக்கத்தால் வெறித்த என்னை இப்போது அருள்செய்து எனக்குதவுவாய்! (11.4)*

*என் வினை அறுபட்டோட இனிப்பாக வந்தருள் செய் (11.5)*

*என் பெற்றோர்க்கு உயிர்தந்து ஆதரித்த அருளின் தேவனே! சத்திய குருவே! என் பந்துக்களால் எனக்கு வரும் மனக்கவலை மிஞ்சிப் போகாமல் இரக்கத்தோடு என்னைப் பண்பாய் நடத்தி உன் தாமரைப் பாதத்திலேயே இருக்க வைத்து, மிக்க அன்புடன் நிலையாக வந்து என்னை ஆண்டருள்க ! (11.6)*

*மலை போன்ற கருணையாளனே! மகத்துவ பரனே! கவி வேதநாயகன் பாடிய பாடல்களில் நேரடிகள் தவறாது கலையாது வந்துள்ளன. அவனை மலைக்க வைக்காது, அவனுக்கு நீடிய வாழ்வை அருள்வாய்! (11.11)*

*எனக்கு நற்சீரும் கதியும் நற்செயல்களும் பொற்கிரீடமும் தந்து, உன் பெயர் தந்து, எனது கலி வஞ்சகம் பிணியும் பல குறைகளையும் தவிர்ப்பாயாக ! (12.1)*

*தங்களை அலங்கரித்துத் திகழும் பருவ மங்கையர்களை மனத்தில் வைத்து, அவர்கள் பூசிக்கொண்ட சாயம் வெளுத்துப் போகும் என்பதை அறியாது அது நிசம் என்று நான் மயக்கம் கொள்ளாமல் இருக்க உன் அருள் கூரையா! (12.5)*

*ஏசுநாத சுவாமியே! எட்டுத் திசைகளிலும் நான் செய்த என் பாவத்தையும் பொறுத்திரங்க வேண்டுமென்று உமது பிதாவிடம் எனக்காகப் பரிந்து பேசியருளும்! (14.7)*

*தயாபரனே! என் தாயின் கருப்பத்திலிருந்தே என் சென்மப் பாவத்தைக் களைவாய்! உலக வாழ்க்கையில் என்னைப் பிணிக்கும் பெரும் பாவம் என்னை அணுகாது காத்தருள்வாய்! பிசாசுகளால் வரும் பாவத்தை அறுத்து, என்னை மயக்கும் கன்னிப் பெண்களால் வரும் பாவத்தையும் நீக்கி அருள்வாய்! (23.6)*

*ஒன்றான மெய்ப்பொருளான ஞான உபதேசிகனே! எனக்கு நல்ல தந்தையும் நான் நம்பிய நாதனும் உன்னை அணையும் என் குலதெய்வமும் நீ! என் ஆன்மதாகத்தை அகற்றி எனக்கு இரங்கி அருள்க ! (23.53)*

என்றிவ்வாறு வேதநாயகர் இறைவனிடம் தமக்கு அருள் செய்ய வேண்டுகின்றார். ஒருபாடலில் (12.10)

> *"செல்வம், நிலம், புகழ், கொடு; தனியேனாகிய நான் படும் பல பாடுகளினால் வாடுகிறேன்; என் கேட்டைத் தவிர்; நான் உன் புகழ் பாடும் தமிழ் நாவும் கொடு"*

என்று வேண்டி நிற்பதையும் காணமுடிகிறது.

> *"பொன்னை நாடும் ஆசை, பொருளை நாடும் ஆசை, பூமி தேடும் ஆசை, சீமை தேடும் ஆசை, கன்னி மாதர் ஆசை, காமலீலை ஆசை, ஐம்புலன்களின் கணக்கில்*

லாத ஆசை, முன்னும் ஆடு மாடு வீடு வாசல் ஆசை, தந்தை தாய் ஆசை, மக்கள் சுற்றம் ஆசை, என்னை எண்ணும் ஆசை" (14.5)

ஆகிய ஆசைகளை எல்லாம் நீக்க இறைவனிடம் வேண்டி நிற்பதையும் காணமுடிகிறது.

இறைவனிடம் பலவாறு வேண்டி நின்றவர் ஓரிடத்தில்

"உன்னை எனக்கு வளம், நலம், உறுதி எல்லாம் கிடைத்தன" (11.10)

என்றும் கூறிச் செல்கின்றார்.

'ஏழு மன்றாட்டுகள் அடங்கிய செய்யுள்' எனுந் தலைப்பில் அமைந்துள்ள பாடலில் (14.10),

1. உலக வாழ்வு முழுவதையும் மறுதலித்து வெறுக்கவும்
2. மேல் வீட்டு ஆசையால் மூவாசையை ஒறுக்கவும்
3. ஒரே சத்தியத்தில் உறுதியோடு நிலைத்திருக்கவும்
4. உயிர் போகுமட்டும் உண்மையோடு நன்மையாய் நடக்கவும்
5. வந்த துன்பங்களைப் பொறுமையோடு சகிக்கவும்
6 நல்ல வழியில் ஊன்றி விண்ணில் ஏறி வாழவும்
7. செபத்தின் ஆவியை நெஞ்சிலே அளிக்கவும்

என்று தமக்காக இறைவனிடம் வேண்டுகின்றார் வேதநாயகர். இவை அனைவருக்கும் பயன் நல்கும் விதத்தில் அமைந்திருக்கின்றன.

கடவுள் வாழ்த்தில்,

"எனது வினைகளை நீக்கி, வேதனைகளையும் நோவு களையும் போக்கி, சமய சஞ்சீவியாய் வந்து விண்ணுலக வாழ்வை எனக்கருள்க. மண்ணுலக வாழ்வையும் பகுத்துப் பகிர்ந்து கொடுத்து என்னை ஆண்டருள்க. மரணம் வருமட்டும் காத்து, மறுமையில் என்னை உன் பக்கம் வைத்துக் கொள்" (10)

என்று வேண்டுகின்றார்.

**சுவார்ச்சையர்**

தம் குருநாதர் சுவார்ச்சையரைப் பற்றி இரண்டு இடங்களில் வேதநாயகர் போற்றிக் கூறுகின்றார்.

**"தெருளார்ந்த சுவார்ச்சையர் தஞ்சையில் சபைகளைச்**
**சேர்த்தது யாருடைய சித்தம்?" (26.11)**

எனும் பாடலில் ஆன்றமைந்த கொள்கைச் சான்றோர் சுவார்ச்சையர் தஞ்சைக்கு வந்து கிறிஸ்தவ சபைகளை எல்லாம் வல்ல இறைவன் கருணையினால் சேர்த்தார் என்கின்றார். மேலும், திருநெல்வேலியில் சிவபக்தனாயிருந்த வேதநாயகர் உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையைச் சார்ந்து, தேவசகாயம் பிள்ளைக்கு மகனாகப் பிறந்து, சுவார்ச்சையரால் தஞ்சைக்குக் கொண்டு வரப்பட்டுச் 'செபமாலை' பாடிய தாகவும் குறிப்பிடுகின்றார்.

எல்பி ஆபறோ ஐயர் 1829இல் வேதநாயகரையும் பல தமிழ்க் கிறித்தவர்களையும் சரியாகப் புரிந்து கொள்ளாமல் அவர்களைத் திருச்சபைக்குப் புறம்பாக்கிச் சில கொடுமை களைச் செய்தார். அப்பொழுது,

**"சங்கை போர்ந் திலங்கு தஞ்சைச் சுவார்ச்சையர் சபைகள் நாங்கள்**
**மங்கியே துயரத்தாலே வாடினோம் இரக்கங் காணோம்" (17.10)**

என்று புலம்புகின்றார். சுவார்ச்சையர் இறந்து 36 ஆண்டு களுக்குப் பின்னர் வேதநாயகர் தம் குருவை நினைந்து பாடி யிருப்பதைக் காணமுடிகிறது.

**ஏனையோர்**

ஆதாம், ஏவாள், இசறாவேல், மதலேனா மரியாள், இம்மானுவேல், சீமோன், சிம்சோன், மத்தேயு, சகேயு, பேதுரு, அந்திரேயா, யூதாசு, தாவீது, காபிரியேல், யோசேப்பு, எரோதை, அப்போஸ்தலர், யாக்கோபு, யோவான், அன்னா, காய்பா, எரேமியா, பரபாசு, எலியா, மோசே, லாசர், ஆபிரகாம் ஆகியோரைப் பற்றி வேதநாயகர் கூறிச் செல்கின்றார்.

ஆதி மானிடர்கள் என்று ஆதாம், ஏவாளைக் குறிப்பிடுகின்றார் (16.17, 24.1). ஆதாம், ஏவாள் மனத்தில் பாவத்தை விளைவித்து அவர்களை மயக்கி அவர்கள் பறித்து நுகர்ந்த பழத்தின் நஞ்சினால் ஏற்பட்ட இருளைப் போக்க, நம்மை உயர்ந்த பதத்தில் இருக்க வைக்க வேண்டும் என்று நெடிய சிலுவை மரத்தில் உயிர்விட்ட, ஒப்பாருமிக்காரும் இல்லாதவன் என்று இயேசு நாதரைக் கூறுகின்றார் (29.2).

உலகத் தோற்றத்தில் ஆதாம், ஏவாள் செய்த பாதகம் எல்லாம் நீங்க வேண்டும் என்ற திருவுள்ளம் கொண்டு நிறைந்த இருளில் பல மாடுகள் அடையும் குடிசையில் கிருபையாக வந்து புகுந்தார் இயேசு நாதர் (23.6)

'ஆதியில் ஏவாள் செய்த பாவத்தை அகற்ற வந்த தந்தை' (14.11) என்றும்; 'ஏவாள் என்ற மாது உண்ட பாதகம் அறுந்து போகப் பெத்லகேமில் பிறந்தார்' (4.2) என்றும்; "பண்டைக் காலத்தில் ஏவாள் பறித்துத் தின்ற கனியால் விளைந்த தீவினைக்கு ஈடாய்ப் பாடுபட்டு ஒரு சிலுவை மரத்தில் தொங்கி மரித்தாய்" (4.5) என்றும் இயேசு நாதர் பற்றிக் கூறுகின்றபொழுது ஆதாம், ஏவாள் ஆகியோரைப் பற்றிக் கூறுகின்றார்.

காபிரியேல் தேவதூதனாகவும் (23.2, 3), ஏரோதே அரசனாகவும் (23.6, 25.3) கூறப்படுகின்றனர். மகதலேனா மரியாள், சீமோன், பேதுரு, சகேயு, மத்தேயு, அந்திரேயா, யூதாசு போன்றோர் இயேசு பிரானின் சீடர்களாகவும் தொண்டர்களாகவும் கூறப்படுகின்றனர். இவர்களில் சிலர் மீன் பிடிக்கும் தொழிலைச் செய்தவர்களாவர்.

மகதலேனா மரியாள் இயேசு பிரானின் திருவடிக்கு நறுமணத் தைலம் பூசினாள் (22.23); சீமோன் வீட்டில் லாசருவை இயேசு பிரான் உயிரோடு எழுப்பினார் (22.11); சிம்சோன் பலவானாகவும், போர்க்களத்தில் சிறந்த வீரனாகவும் கூறப்படுகின்றான் (22.19); சுங்கச் சாவடித் த்லைவனான மத்தேயு ஆயத்துறையில் வஞ்சக இலாபம் கொண்டவன் (22.44, 30.4); பேதுருவும் அந்திரேயாவும் எழுத்தறிவில்லாதவர்கள் (22.45); யூதாசு என்போன் காசு ஆசை கொண்டவன், மூடன், கொடியவன் (22.46, 24.9); பரபாசு என்போன் கொலைகாரன், துஷ்டன் (24.13).

**மகளிர் நிலை**

வேதநாயகர் வாழ்ந்த காலத்தில் இருந்த மகளிர் நிலையைச் சில பாடல்களிலும், இயேசு பிரான் வாழ்வோடு தொடர்புடைய நிகழ்ச்சிகளில் இடம்பெற்ற சில பெண்களைப் பற்றிச் சில பாடல்களிலும் இருப்பதைக் காணமுடிகின்றன.

பெண்களில் பரத்தையர்களைப் பற்றியே வேதநாயகர் கூறுவதைக் காணமுடிகின்றன. இப்பெண்கள் தங்களை அலங்கரித்துக் கொள்வர்; முகத்தில் சாயம் பூசிக் கொள்வர் (12.5); மை தீட்டிய கண்களைக் கொண்டு இளைஞரை மிரட்டுவர் (18.7); நறுமணம் கமழும் குழல்களைக் கொண்ட இவர்கள் கலவியை அணுகி, உடல் முற்றிலும் கெட்டுப் போகுமாறு இளமை நலம் கெட்டுப் பிணியுண்டாக்கும் நரகபாதாளத்தில் வீழும் உறுதி கொண்டவர்கள் (18.8).

**"மானார்கல விக்குள் மடிந்தென்னுயிர்**
**போனாலென்ன புண்ணியம் எய்தும் உனக்கு?" (22.30)**

என்று இயேசு பிரானிடம் கூறித் தன்னைப் பெண் ஆசையி லிருந்து விடுவிக்கும்படி மன்றாடுகின்றார்.

மானார் (22.30), மெல்லியர் (16.12), மங்கையர் (12.5, 18.7, 22.15), குழலிகள் (18.8), மாதரார் (18.11), மாதர் (22.5), மடந்தையர் (22.9), பெண் (24.17) என்று பெண்களைப் பற்றிக் கூறுகின்றார். தாசிகளின் குலத்தைச் 'சூளைக்குலம்' (22.5) என்கின்றார்.

**அணிநலன்**

*'இகழ்தல் போலப் புகழ்தல்' என்பது ஓர் அணி இலக்கணம். இதனை வடமொழியில் 'நிந்தாஸ்துதி' என்பர். இத்தகு பல பாடல்களை வேதநாயகர் அளித்துள்ளார்.*

"அப்பனோ தச்சன்; தாயரோ எளிய கன்
னியாஸ்தரி, சமுத்திரத்(து) அணுகி
அடர்ந்து மீன்பிடிக்கும் வலையர் உள்சீடர்,
ஆய மத்தேயு உனக்(கு) அடுத்தோன்,

ஒப்பியே வெட்டுக் கிளியோடு தேனை
உண்டொரு ஆரணியமே கிடந்தங்கு
ஒட்டகத் தோலை உடுத்தவர் இருடி,
உன்தன்முன் தூதனாய் வந்தோன்,

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
இறைவனே யேசு நாயகனே" (25.4)

*எனும் இப்பாடலில் இறைவனை இகழ்வது போல அவரது தாழ்மையான தன்மையினைப் பாடிப் புகழ்கின்றார்.*

**உவமையணி**

*மைதீட்டிய மாதரைக் கண்ட என் மனம் 'உலை மெழுகென நின்று தவிப்பது' (18.7) உனக்குத் தெரிய வில்லையா? என்று வேதநாயகர் இறைவனிடம் கேட்கின்றார்.*

"நாளைக்கென நல்கிய ஈகை இடர்
வேளைக்குஉத வாதுஅது மெய் அதுபோல்" (22.25)

*எனும் பாடலில் தாசிகளின் குலத்தைக் கூறுகின்றபொழுது உவமையைக் கையாண்டுள்ளதைக் காணமுடிகிறது.*

*நீர்க்குமிழி எவ்வாறு பொய்யானதோ அதுபோன்று செல்வத்தால் வரும் செருக்கும் மெய்யாக விரும்பினாலும் விழுந்து விடும் என்பதை,*

"பொய்யான புனல் குமிளிப் பவுசை
மெய்யாக விரும்பி விழப் படுமோ?" (22.27)

என்று கூறுகின்றார்.

பெண்களுடைய கண்களுக்கு மானையும் (22.30), மரியம்மையின் கண்களுக்கு வேலையும் (23.5) உவமையாகக் கூறுவதையும் காணமுடிகின்றன.

**உருவகவணி**

"பாலை விடுத்தடர் சோலை வளத்திடை
பாரமலைக்குவடே"

என்ற பாடல் வரியில் வேதநாயகர் உருவகத்தைக் கையாண்ட முறையைக் காணமுடிகிறது. பாலை போன்ற பாவநிலத்தை விடுத்துச் சோலை போன்ற மோட்ச நிலத்தை மனிதன் அடைதல் வேண்டும். பாவத்தைப் பாலை நிலத்திற்கும் மோட்சத்தைச் சோலைக்கும் ஒப்புநோக்கிக் கூறியுள்ளார்.

**முரண்தொடை அணி**

முரண்தொடை என்பது ஆங்கிலத்தில் Oxymoron எனக் கூறப்படும். அதாவது ஒன்றுக்கொன்று மாறுபடும் நிலையில் இருப்பது முரண்தொடையாகும். இதையும் வேதநாயகர் சில பாடல்களில் கையாண்டுள்ளார்.

"துக்கத்தில் ஆறுதல் என்வாழ்வில் களிப்புநீ
துன்பத்தில் எனது இன்பம்நீ" (6.8)

எனத் தொடங்கும் பாடலில்,

துக்கத்தில் என் ஆறுதல்
துன்பத்தில் எனதின்பம்
படுகுறையில் ஐசுவரியம்
கசப்பினில் அமுது
தாழ்வில் வாழ்வு
பெலயீனத்தில் என் பெலன்
மெலிவில் வலிவு

என்று கூறுகின்றார். இதேபோன்று,

"தேவனான நீ மனுடனாகினை
திறமையான நீ சிறுமையாகினை

ஆவியான நீ சீவியாகினை
அருவமான நீ உருவமாகினை
பாவியாகினை தாழ்விலாத நீ
பாடதாகினை ஆடதாகவே
வீவிலாத நீ சாவுமாகினை
வேதநாயகா வேதநாயகா" (13.1)

எனும் பாடலில் தேவன் - மனிதன், திறமை - சிறுமை, ஆவி - சீவி, அருவம் - உருவம், மாசில்லாதவன் - பாவி, ஆடு - பாடு, வீவிலாதவன் - சாவு என்று ஏழு முரண்பட்ட தொடர்களை வேதநாயகர் கையாண்டுள்ளார்.

## இரட்டுற மொழிதல்

சொல் அல்லது சொற்றொடரை இருபொருள்படக் கூறுகின்ற அமைப்பே இரட்டுற மொழிதல் ஆகும். ஒரே சொல்லைக் கொண்ட இரண்டு அடிகளில் முதலடிச் சொல்லின் பொருள் அடுத்த அடியின் சொற்பொருள் வேறுபட்டு இருக்கும். இவற்றைப் புணரியல் இலக்கண விதிப்படிப் பிரித்துப் பொருள் காணல் வேண்டும். 'தேவ சுபாவமகிமை' என்ற பதிகத்தை (7) வேதநாயகர் இந்த அமைப்பில் பாடியிருக்கின்றார். பொருள் காண்பது கடினம் என்றறிந்து அவரே பொருளையும் காட்டியுள்ளார்.

"பொன்னாட்டவர்கள் வணாங்கானே
பொன்னாட்டவர்கள் வணாங்கானே" (7.1)

எனத் தொடங்கும் முதல் பாடலில் எட்டு இரட்டை அடிகள் அமைந்துள்ளன. இந்த அமைப்பிலேயே இப்பதிகத்தின் ஏனைய பாடல்களும் அமைந்துள்ளன.

'வான நாட்டவர்களால் வணங்கப் பட்டவனே' என்பது முதல் அடிக்குரிய பொருள்; 'பொன்னில் நாட்டம் உடையவர்களால் வணங்கப்படாதவனே' என்பது இரண்டாம் அடிக்குரிய பொருளாகும். இதே பாடலில் அமைந்துள்ள ஏனைய அடிகளுக்குரிய பொருள் வருமாறு :

பூமிக்கான வாதவனே - பூமிக்கான ஆதவனே, சூரியனே;

அழகு மிகுந்தவா, தவத்தோனே. தன்னாட்டியத்தா வீதருளே - தன் என்னும் நாட்டியம் ஆடும் தாவீதின் அருளே; தன் மனையாட்டியாகிய திருச்சபைக்குப் பிதாவே, தாவீதுக்கு அளித்த அருளை எனக்கு அருளும். தாவானவர்க்குச் சாந்தானே - தாவு : புகலிடம், சாந்து : வாசனைச் சாந்து. உன்னைப் புகலிடமாகக் கொண்டவர்க்கு வாசனையானவன்; தாவு : கேடு. கெட்டுப் போனவர்க்குச் சாந்தமானவனே. உன்னாட்டளவைக்கரியானே - கரியான் : அரியவன். கரி : சாட்சி. உன்னிய செயலளவுக்கு அரிதானவன்; உன் ஆடுகளுக்கு நாட்காட்சி, அன்றாடகச் சாட்சி ஆனவன். ஊழிக்கால முதியானே - முடிவுக் காலத்தில் முதியவனே; பகையை இக்காலத்தில் உதிக்கச் செய்யாதவன். என்னாட்டு இயக்கம் தாரானே - என் நாட்டியக்கூத்து இயக்கமாகிய நாட்டியச் சொற்பொழிவில் வீசும் மாலையே; எந்நாளும் மயக்கம் தராதவனே.

வலிமையும் பெருமையும் உடைய மகா மாதென்ற சீயோன் குமாரத்தியின் கற்பமே, வலிய பொல்லாங்காம் ஏவாளின் பாவமே; மலையாத அலையாத மகா தங்கமே, மல்லை போல் ஆசையான ஐயா, பெருமை தங்கிய அழகே; செல்வமரமே கண்ணானவனே, கிட்டிச் செல்லத் தராது இருக்கானே; செவ்வையான துரையே தானானவனே, செப்பிய பத்தும் கட்டளைகளுக்குக் காரணமானவனே; சொற்பொருளின் அழகனே, தகப்பனே, புகழ் வாக்குத் தத்தம் கொடுத்துள்ள ஐயரே; மரண வேளையில் நல்மரணம் தாரும், நம் தலைவனே, வறியவர்க்கு அன்பனே! (7.2)

எல்லோரும் வணங்கும் உடம்பில்லாதவனே, எல்லா உயிர்க்கும் தலைவனே; எல்லோருக்கும் இரங்குபவனே, உலகத்தை அன்பாய்ப் படைத்த சிற்பியே; நினைவுக்கு அப்பாலுள்ள தயவின் கடலே, தினமும் அருள்மொழி பெய்யும் மழையே; நெஞ்சு மகிழத் தரும் நிறைவே, கவலையில்லாப் பற்றுக் கோடில்லாத கடவுளே; எதிர்ந்த பகைவரோடு வழக்காடுவோரே, முழுவதும் பக்தருக்குச் சீடனே; அவதார நிலைக்கு முன்னுள்ள மகிமையே, முந்திரிப்பழ ரசத்தின் நறுமணமே! (7.3)

*ஒற்றுமையோர்க்கு உரிமையான ஒளியின் காலனே; ஒன்றான காரணமான ஆசையே, உயர்வற உயர்ந்த மேலவனே! (7.4)*

*மெய்யான மகா வேதத்துக்குப் பகையாதவனே, வீணான வார்த்தைக்குப் பகையானவனே; மேசியாவைத் தந்தவரே, எழுந்தருளும், மரணம் வரும் சமயத்திலே; பொய் மனுடரின் கோளைக் கண்டாயே, அழகிய பாதம் பெறக் குணமான கண்ணைத் தாவேன்; சீனாய் மலைக்குத் தலைவனே, படைத் தலைவனே, உன் நற்சீரை என்னில் பதியும்! (7.9)*

*யாவர்க்கும் இரக்கமாயிருக்கிற தெய்வ குருவே, அலையாதவர்கள் இரக்கத்தில் கண் வடிவே; அகலாத நிலைமையே கடவுளே, கடலே கல்வியே மனத்தின் நிலையே; பாடலைப் பிரியப்பட்டாயே, துன்பத்தைப் பிரிந்திருக் கின்றாயே; அழகுக்கழகே ஐசுவரியமே, இரு கண்மணியே, நிலைத்த பெருமையே! (7.10)*

**ஓசை நயம்**

*அகரவரிசையில் அமைந்துள்ள 'அகப்பற்று' எனும் பகுதியில்,*

> "ஆதாம் விழுந்த வினையால் உலர்ந்த அகிலம் புரந்தருளவே
> தீதே அகன்ற மறுவாய் எழுந்து திருவாசகங்கள் சொலியே
> வேதாளம் அஞ்ச நரகம் கலங்க வெகு பாடடைந் திகலெலாம்
> வாதாடி வென்ற குருவேசுநாதர் வரவேணும் என்றன் அகமே"
>
> **(10.2)**

*என்ற பாடலில் ஓசையோடு கூடிப் பொருளும் இயைந்து ஒலிக்கின்றது. இறைவனைப் பாடுவதையே தன் வாழ்க்கையின் குறிக்கோளாகக். கொண்ட இவர் 'வேதநாயகன் பாட்டன்' என்றே இறைவனைக் குறிப்பிடுகின்றார். 'பாட்டன்' என்ற சொல் பாடப்படுகிறவன், பாட்டுக்குரியவன் என்று பொருள் படுவதோடு 'பாடுபடுகின்றவன்' என்றும் பொருள்படுவதைக் கருதிட வேண்டும் என்று நினைத்துச் செபமாலையில்,*

> "பாட்டைப் பிரியப்பட்டாயே
> பாட்டைப் பி'யப்பட்டாயே" (7.10)

என்று பாடுகிறார். கிறித்து, வேதநாயகரின் பாட்டிலே பிரியப்பட்டு விட்டாராம். இவருடைய பாடல்களை அவர் கேட்பதனால் அவருடைய பாடுகளிலிருந்து சிறிது நேரமாவது அவருக்குப் பிரிந்திருக்க முடிகிறதாம்.

**வண்ணப்பாக்கள்**

செபமாலையில் வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம், இடையின வண்ணம், நெடுஞ்சீர் வண்ணம், குறுஞ்சீர் வண்ணம் ஆகிய வண்ணங்களில் வேதநாயகர் பாடியிருக்கின்றார்.

"அடக்கமும் ஒடுக்கமும் அகற்றிடு துடுக்கரை
அடுத்தவர் மனத்தி னிசைவாய்
நடக்கினு மிடக்கொடு கடுத்துரை திடிக்கிட
ரவிற்றுவர் பகைக் கெளையுமாள்"

எனும் பாடலில் வல்லின எழுத்துகள் மிகுதியாக வந்துள்ளன.

"திங்களுடு செஞ்சுடரிலங்கு புவியங்கொன்று
சிந்தையி லடர்ந்த வினைகண்
மங்கும் வழியெங்குமிலை என்றறி வுணர்ந்து கழல்"

எனும் பாடலில் மெல்லின எழுத்துக்கள் மிகுந்து வந்துள்ளன.

"மலையை அணுவாக்குவாய் அணுவை மலையாக்கு
வாய் வான்வில்லை உண்டாக்குவாய்
மாறாது கிரகங்கள் ஆதித்தனைச் சுற்றி"

எனும் பாடலில் இடையின எழுத்துக்கள் மிகுதியாக வந்துள்ளன.

"நாயானது நற்றிய வாழ்வினை யொத்
தேயானது மிகுந்தது போதுமுனின்
மாயாத மெய்வாழ் வருளல்ல வெனில்
நீயாயினும் வாழி நித்தியமே"

எனும் பாடலில் நெடுஞ்சீர் அமைந்துள்ளது.

"விழுந்த வரை யிகழ்ந்தது தழ லெழுந்து தர

கழுந்த வரை விளம்பா வண்ணஞ்
செழுந்தயவு பொருந்தவருள் சொரிந்து தர
ரடைந்த வினைதீர்த்த தீடேற்றது
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . பரம வாழ்வே"

எனும் பாடலில் குறுஞ்சீர் பயின்று வந்து குறுஞ்சீர் வண்ண மாயிற்று.

**எண்மாலை**

ஒன்று, இரண்டு முதலிய என் வரிசையில் பன்னிரண்டு எண்கள் வரை, ஒன்று என்பதை வைத்து ஒன்றாம் பாடலமையும். இதுபோன்றே பன்னிரண்டு வரை வேதநாயகர் பாடிய பாடலுக்குப் 'பன்னிரண்டிலக்கத் தோத்திரம்' என்று பெயரிட்டுள்ளார். இப்பாடலில் ஒருவழியான் ஒருமறையான் என்று தொடங்கி ஒவ்வோர் இலக்கத்திற்கும் பாக்களை அமைத்துப் 'பன்னிரு கற்றூண்களையோர்' என்று பன்னிரண் டிலக்கத் தோத்திரத்தை முடிக்கிறார்.

"மூன்று தினத்துலகமைத்து
மூவராய் ஆபிரகா முன்நிற் றோன்றி
மூன்றுநாள் தாய் தகப்பன் தேடவிட்டு
மூன்று தரம் முழங்காலின்று
மூன்றுமுறை மறுத்தவனை
மூன்றுமுறை வழுத்தி
மூன்றாம் நாளுய்த்து
மூன்று மொன்றதான திரியகேனை
முத்தமிழால் மொழிகுவேனே"

என்று பாடியுள்ளார்.

**நிலையாமை**

நிலையாமைக் கருத்துக்களையும் வேதநாயகர் பாடி யிருப்பதைக் காணமுடிகின்றன.

"நிலையாத மாகொடிய அநியாய வாழ்வதனை
நிசமாக நாடி நிதமே

துலையாத பாவவழி தனில் ஓடி வாடியுடல்
சுடுதீயில் வீழ்வது இயல்போ?" (11.11)

என்று கூறியதோடு,

"ஒவ்வொருநாளும் தோன்றி மறையும் கனாவைப் போன்ற வாழ்வையே உறுதியானதென்று மடையனாகிய நான் நினைக்கின்றேன்" (12.11)

என்கின்றார்.

**இசை**

இசையுடன் பாக்களைப் பாடுகின்ற முறையில் அமைந்துள்ள இந்நூலில் எக்காளம் (கட. வா. 7, 24.28,27.5), சங்கீதம் (கட. வா.11), சங்கீர்த்தனங்கள் (2.11), கீதா (5.2), சந்தம் (5.3), வீணையொலி (23.6) போன்ற இசையுடன் தொடர்புடைய சொற்கள், கருவிகள் இடம்பெற்றுள்ளதைக் காண முடிகின்றன. 'தேவ மகத்துவம்' (5) எனும் பதிகத்தின் இறுதிப் பாடல் பல்லவி, அனுபல்லவி, சரணங்கள் என்ற அமைப்பில் பூரிகல்யாணி இராகத்தில் ஆதி தாளத்தில் பாடவேண்டுமென்று வேதநாயகர் கூறியிருக்கின்றார்.

**சாதிச் சிக்கல்**

தஞ்சை மாவட்டத்தில் கி.பி. 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கிறிஸ்தவச் சபைகளில் சாதிச் சிக்கல் ஏற்பட்டது. மேல் சாதி, கீழ் சாதி என்ற பிரிவினைப் போராட்டத்தில் சுவார்ச்சையருக்குப் பின்வந்த கோலேப்பையர் முதலானோர் கீழ் சாதியினரைச் சார்ந்து ஏனைய சாதியினரை ஒடுக்கினர். இச்சிக்கலில் வேதநாயகர் சிக்கிப் பல துன்பங்களை அடைந்தார். இவற்றை 'உபவாச நாட்களின் தேவாரம்' எனும் பதிகத்தில் (17) இயேசு பிராணிடம் முறையிட்டுப் புலம்புகின்றார்.

"திருக்கருணைப் பிரானே! திவ்விய பிதாவின் மைந்தனே! கருணைக் கடலே! குருசினில் எழுந்த கோவே! அண்ணலே! குருக்களும் பகைவர்களானார்கள்; கோயிலும் வேறதாயிற்று. பல இடுக்கண்

*களைச் சந்தித்து உடைந்தோம். மெத்தவும் துயரப் பட்டோம். கவலை அடைந்தோம். உனக்கே நாங்கள் அடைக்கலம். அப்பனே! எங்களைக் கைவிட்டு விடாதே. ஆபத்து பெருகியது. ஐயா! நாங்கள் கூறுவது உனக்குக் கேட்கவில்லையா? கப்பலில் தூங்கி விட்டாயோ? எப்பொழுது எழுந்திருப்பாய்? இரவும் பகலுமாகக் கவலை கொண்டு அடியார்கள் அனைவரும் பாடுகள் மிகவும் பட்டு விட்டோம். எங்கள் சங்கையை இழந்தோம். சாதியினால் அல்லலுறு கின்றோம். உன்னை விட்டு நாங்கள் எங்கே போவோம்? பின்னொரு மீட்பன் உண்டோ? பெற்றவன் நீயோ? அன்றி வேறோ? நாங்கள் கடூரமாய்த் துரத்தப்பட்டோம். நாங்கள் பட்ட பாடு களை எண்ணியும் முடியாதையா. காட்டிலே சிதறிப் போனோம். கடூரமாய் அடிக்கப்பட்டோம். கேட்டு உருகினவர் இல்லை, கேள்வி கேட்பாருமில்லை.*

**"பாட்டினுக் குயர்ந்த தேவே பாவிகள் பட்டபாடு
ஏட்டினும் அடங்காதையா" (17.9)**

*நாங்கள் அனைவரும் தஞ்சைச் சுவார்ச்சையர் சபை யைச் சேர்ந்தவர்கள்.*

**"வல்லமையிலையோ எங்கள் வறுமைகண் டறிந்திலையோ
அல்லது மனதில்லாயோ அடியர்மேல் அன்பில்லாயோ
கல்லறைக் கிடமுமற்றுக் காட்டினுக் ககற்றப்பட்டோம்
இல்லையோ இரக்கமையா எம்மையாள் ஏசுநாதா" (17.6)**

*என்று கூறி இறுதியில்,*

**"ஆதரவருளி யெங்கள் ஆபத்தை நீக்கி மேலும்
சாதியின் இடறலின்றிச் சபையெலாந் தழைக்கச் செய்து
வேதநாய கன்பாட்டெங்கள் விண்ணப்பங்களைக் கேட்டன்பாய்
ஏதமே பொறுத் தெந்நாளும் எம்மையாள் ஏசுநாதா" (17.11)**

*என்று வேண்டி நிற்கின்றனர்.*

### இந்து சமயப் பழக்க வழக்கங்களை மறுத்தல்

*வேதநாயகர் திருநெல்வேலியில் சைவ வேளாளர்*

குடும்பத்தில் இந்து சமயத்தில் பிறந்தார். பின்புதான் கிறித்தவ சமயத்திற்கு மதமாறினார். 'வீண்பத்திநாசம்' எனும் பதிகத்தில் (20) இந்து சமயத்தையும், சமயக் கொள்கை களையும், பழக்க வழக்கங்களையும் மிகவும் கடுமையாகச் சாடி மறுத்துரைக்கின்றார்.

'எந்தையே! ஏசு நாயகனே!' என விளித்து, கல், செம்பு, வெள்ளி, பொன், களிமண், இரும்பு, உருக்கு, பஞ்சலோகம், வைரம் பாய்ந்த மரம் முதலிய பொருள்களில் செய்யப்பட்ட சிலை, வடிவம், படம் முதலியவற்றைக் கனவிலும் நினைக்க மாட்டேன். நான் உனக்கு அடிமை என்கின்றார்.

உடல், கை, கால், மூக்கு, தொண்டை முதலிய உறுப்புக்கள் இருந்தாலும் சிலைகள் எல்லாம் செத்த பிணம் போன்றவை. புல் தெய்வம் என்றால் மாடு அதை உண்ணுதற்கு இயலுமோ? அல்லது போற்றி வணங்கிய மாடு தெய்வ மானால் புலையன் எப்படி அதைப் புசிப்பான்? மாட்டின் சாணம் தெய்வம் ஆனால் அடுப்பினில் எரிக்க முடியுமா? அதைச் சாம்பலாக்க அக்கினிக்கு வலிமை உள்ளதா? வலிமை பெற்ற அக்கினியும் தெய்வமானால் மழையினால் அது அழிந்து போகாதோ? வருணனும் தெய்வமானால் அதிலே வாய் கை கால் கழுவவும் படுமோ? கல்வி கற்றறிந்த நல்லவர் இதனைக் கண்டு அறியார்களோ?

அரி, சிவன், பரமன், ஐங்கரன், ஆறுமுகன், சதாசிவன், மயேசுரன், ஐயனார், வீரபத்திரன், இருளன், அனுமந்தன், கால சங்காரன், மாடன், கருப்பணன், இடும்பன், புத்தன், காத்தவராயன், பொம்மன், தொட்டியச் சின்னன், சக்கதேவி, பொன்னி, அங்காளி, கங்காணி, பெரிய மாகாளி, ரணபத்திர காளி, பேச்சி, சாமுண்டி, உத்தண்டி, பில்லிவாய்க்குறளி, பிடாரி, காட்டேரி, மாரி, வராகி, துர்க்கை போன்ற பற்பல தெய்வங்களைப் 'பேய்கள்' என்கின்றார்.

கள், சாராயம் போன்றவற்றைப் படைத்து, ஆடு, மாடு, சேவல் போன்றவைகளைப் பலி கொடுத்து, மீன் வகைகளைப் பொரித்து, பிள்ளையாருக்கேற்ற தோசை, வடை, பிட்டு, அதிரசம், கொழுக்கட்டை, அவல், பொரி உருண்டை,

பணியாரம், எள், பயறு, கிழங்குகள், பழங்கள், பச்சரிசி, தேங்காய், எண்ணெய், நெய், பால், தயிர் போன்றவற்றைப் படைத்து வழிபடுவதைச் சாடுகின்றார்.

திருமாலின் பத்து அவதாரங்களைப் பின்வருமாறு பழித்துரைக்கின்றார்.

"குஞ்சினைத் திருடும் பருந்து அதோ கருடன்,
குலைக்கும் நாய் வயிரவன் ஊர்தி,
குரங்கதோ அனுமான் பன்றியும் மீனும்
கூர்மமும் விஷ்ணு வடிவம்,
துஞ்சிடக் கடிக்கும் பாம்பதோ நாக
சுவாமி, விக்கிரேசுரன் யானை
தோகையும் அனமும் காகமுங் கிளியும்
தூக்கிய தேவர் வாகனங்கள்,
அஞ்சியே வளையிற் புகும் பெருச்சாளி
யானையைத் தூக்குமோ, ஐயோ!
ஆல்இலை பதினாறாயிரம் பெண்கள்
அணைந்தவன்தனை எடுப்பதுவோ!
வெஞ்சினமாடு நந்தி கேசுரனோ
விபூதியும் அதினுடசாணி,
வீழ்இழவு எனவே தோணினேன் இதெல்லாம்
வேதனே, யேசுநாயகனே" (20.4)

கடவுளின் பெயரால் குறி சொல்லுதல், கோடங்கி அடித்தல், சோதிடம் சொல்லுதல், சாதகம் எழுதி நாள் கணித்தல், இராசி பலன் பார்த்தல், பல்லி பலன் முதலான பழக்க வழக்கங்களையும் நம்பிக்கைகளையும் வன்மையாகச் சாடுகின்றார்.

மேலும் காவடி எடுத்தல், தீ மிதித்தல், மொட்டை அடித்தல், உருண்டு கோயிலை வலம் வருதல் (அங்கப் பிரதட்சணம்), விரதமிருத்தல், நோன்பிருத்தல் போன்றவற்றையும் சாடுகின்றார்.

பிறந்த நாள் முதல் இறக்கும் வரையில் பிராமணர்

சொல்லிய பொய்யை அன்புடன் கேட்டுச் 'சுவாமி' என்று அவரை அழைத்து, அவர் கூறுகின்ற முறைப்படிச் செய்யப் படுகின்ற அனைத்துச் சடங்குகளையும் மறுக்கின்றார். மேலும் கோயில்கள், சத்திரங்கள், சாவடிகள் போன்ற அனைத்து இடங்களிலும் இவர்களே முதன்மையாய் இருந்து மக்களை ஏமாற்றி வருவதாகக் கூறுகின்றார் (26.12).

இப்பதிகத்தின் இறுதிப் பாடலில் 'நாயகனே' என்று இயேசு பிரானை 24 முறைப் புகழ்ந்து போற்றி முடிக்கின்றார்.

**ஏனைய இலக்கியங்களை ஆளுதல்**

வேதநாயகர் தமிழுக்கு முற்றிலும் புதியனவாக அமைந்த திருமறைச் செய்திகளையும் வழிபாட்டு மரபுகளையும் எளிய தமிழில் எடுத்துக் காட்டுகின்றார். திருக்குறள், சிலப்பதிகாரம், தேவாரம், திருவாசகம் போன்ற தமிழ் இலக்கியங்களில் தோய்ந்த வேதநாயகர் அந்நூல்களின் கருத்துக்களையும் இந்நூலில் ஏற்றவிடங்களில் எடுத்தாண்டுள்ளார்.

**திருக்குறள்**

'அகரமுதல'[25] எனும் திருக்குறளிலுள்ள 'ஆதிபகவன்' என்பதை 'ஆதிமுதலே' (10.1) என்றும்; 'நெருநல் உளனொருவன்'[26] என்பதன் கருத்தைத் 'தந்தைதாய் இறந்தனர்' (14.8) என்ற பாடலிலும்; 'தனக்குவமை யில்லாதான்'[27] எனும் திருக்குறளின் கருத்தை 'அடிமையென வேடம்' (18.6) என்ற பாடலிலும் வேதநாயகர் கூறியுள்ளார்.

**சிலப்பதிகாரம்**

சிலப்பதிகாரக் கானல்வரியில் உள்ள, 'திரைவிரிதரு துறையே' எனும் முரிவரிப் பாட்டின்[28] ஓசையின்பத்தை வேதநாயகர்,

> "அதி நவ நிறையொளிவே அமரர்கள் தொழு வொளிவே
> கதி நவ மிகுமொளிவே கதிர்படு திருவொளிவே

25. திருக்குறள் 1.
26. மேலது 336.
27. மேலது 7.
28. சிலப்பதிகாரம், கானல்வரி 15.

மதி நவ மலையொளிவே மறையதி சயவொளிவே
ததி நவ மருமொளிவே சரண்மலரடி தொழுதேன்"

எனப் பாடுகின்றார்.

**தேவாரம்**

வேதநாயகர் '**தேவாரம்**' என்று தலைப்பிட்டே காப்புச் செய்யுளை அமைக்கின்றார். மேலும் 'கிறிஸ்து பட்ட பாடுகளின் பேரில் **தேவாரம்**' (16), 'உபவாச நாட்களின் **தேவாரம்**' (17) எனும் தலைப்புகளில் பாடல்களைப் பாடியிருக்கின்றார். தவிர இந்நூலில் அமைந்துள்ள பதிகங்களில் பெரும்பாலும் 11 பாடல்கள் இருப்பதையும் காணமுடிகின்றன.

சம்பந்தர் தேவாரத்தில் 'திருவெண்காடு' எனும் பதிகத்தில்,

'தண்பொழில்சூழ் சண்பையர்கோன் றமிழ்ஞான சம்பந்தன்'[29]

என்று தன் பெயரைப் பாடலின் தொடக்கத்தில் பாடுவதைப் போன்று,

"*வேதநாயகன்* மேல் வாமனை யெடுத்து
விட்டு வேடிக்கைகள் பார்த்தாய்
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
எழில்பெறு சீயோன் மகள் மணவாளா
இறைவனே யேசு நாயகனே" (17.11)

என்று பாடியுள்ளார்.

தேவாரத்தில் சம்பந்தர் பதிகந்தோறும் இறுதிப்பாடலில் தம் பெயரை முத்திரையாகப் பதித்திருப்பதைப் போன்று வேதநாயகரும்,

"சாதி யாவையுந் தான்புரந் தாளவே
மாது மரியாளிடம் வந்தவா

29. திருஞானசம்பந்தர் தேவாரம் 2.48.11.

*வேத நாயகன் பாடலை மேவிய*
ஏதமற்ற இறைக் கிறிஸ் தேசுவே" (8.11)

*என்று பாடியுள்ளார்.*

*அப்பரடிகள்,*

"அப்பனீ யம்மைநீ யையனும்நீ
யன்புடைய மாமனு மாமியுநீ
ஒப்புடைய மாதரு மொண்பொருளுநீ
யொருகுலமுஞ் சுற்றமு மோரூருநீ
துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்றுவாய்நீ
துணையா யென்னெஞ்சந் துறப்பிப்பாய்நீ
இப்பொன்னீ யிம்மணிநீ யிம்முத்துநீ
யிறைவனீ யேறூர்ந்த செல்வனீயே"[30]

*என்று தம் தாய், தந்தை, ஆசிரியர், மாமன், மாமி, பெண் பொருள், சுற்றம் ஆகிய அனைத்தும் இறைவனே என்று போற்றிப் பரவுகின்றார்.*

*வேதநாயகர் 'கிறிஸ்துவின் தாழ்மை' என்ற பதிகத்தில்,*

"அருமையாளன் நீ உரிமைநாதன் நீ
அருளுசெல்வம் நீ அதிகவாழ்வு நீ
பெருமைஞானி நீ கருணைநண்பன் நீ
பெற்றதாயும் நீ உற்றதந்தை(யும்) நீ
தருமமந்திர குருவுமாகி நீ
தருணமானபோ துதவுதோழன் நீ
விரிவுசத்திய வேதம் யாவும் நீ
வேதநாயகா, வேதநாயகா" (13.9)

*என்று பாடுகின்றார். இதில் வேதநாயகர் தனக்கருளும் நாதனும், உரிமை நாதனும், தோழனும், தாயும், தந்தையும், கருணையும் ஏசுநாதரே என்று பாடுகின்றார்.*

---

*30. திருநாவுக்கரசர் தேவாரம் 6.65.1.*

**திருவாசகம்**

*மாணிக்கவாசகர் பாடியருளிய திருவாசகப் பாக்கள் பலவற்றை வேதநாயகர் செபமாலையில் பலவிடங்களில் எடுத்தாண்டுள்ளார்.*

*மணிவாசகர்,*

**"சோதியே சுடரே சூழொளி விளக்கே**
**சுரிகுழற் பணைமுலை மடந்தை**
**பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்**
**பங்கயத் தயனும் மால் அறியா**
**நீதியே செல்வத் திருப்பெருந் துறையி**
**னிறைமலர்க் குர்ந்தமே வியசீ**
**ராதியே யடியே னாதரித் தழைத்தா**
**லதெந்துவே யென்றரு ளாயே"[31]**

*என்று பாடியதை வேதநாயகர்,*

**"சோதியே சுடரே மிக்க துய்ய துப்பரவே சுத்த**
**நீதியே நெறியே அன்பர் நெஞ்சகத் துறைந்த வாழ்வே**
**ஓதியே உயர்வே உண்மைக்குண்மையே ஊழிஊழிக்கு**
**ஆதியே பரிசுத்தாவி அர்ச்சய தேவ தேவே" (9.6)**

*என்று பாடியுள்ளார்.*

*இறைவன் தம்மைக் காவாவிட்டால் அவனுக்கே பழி சாரும் என்ற கருத்தில் மணிவாசகர்,*

**"ஏசா நிற்ப ரென்னையுனக்**
**கடியா னென்று பிறரெல்லாம்**
**பேசா நிற்ப ரியான்றானும்**
**பேணா நிற்பே னின்னருளே"[32]**

*என்கின்றார். இப்பாடலை ஊன்றிப் படித்த வேதநாயகர்,*

---

*31. திருவாசகம், அருட்பத்து 1*

*32 மேலது, கோயில் மூத்த திருப்பதிகம் 6.*

> "உன் தலையில் முள்முடி வைத்து முகம் வாடவே கணுக்கள் கொண்ட மூங்கில் தடியால் அடிப் பட்டவரே! சருவேசுரனே!

என்றழைத்து, நாள்தோறும் தாம் படும் துயரங்களைக் களையாமல் இருந்தால் அதனால் வரும் பழி உம்மையே சாரும் என்ற கருத்தில்,

> **"கடிபட்டபேய் கறுவித்தினம் கவடத்திடும் வலைக்குள்நான்**
> **பிடிபட்டு எனின்உயிர் கெட்டிடில் பேசார்களோ ஏசார்களோ?"**
>
> **(12.4)**

என்று பாடுகின்றார்.

> **"யாவர்க்கு மேலா மளவிலாச் சீருடையான்**
> **யாவர்க்குங் கீழா மடியேனை – யாவரும்**
> **பெற்றறியா வின்பத்துள் வைத்தாய்க்கென் னெம்பெருமான்**
> **மற்றறியேன் செய்யும் வகை"[33]**

எனும் பாடலில் மணிவாசகர் கூறிய கருத்தை வேதநாயகர் 'பரம நவஎருசலம்' எனத் தொடங்கும் பாடலில் (18.3),

> "தமது குருதேவன் யாவர்க்கும் மேலானவர், அவர் பரமநவ எருசலேமுக்கு அதிபதி"

என்றும்,

> "தம்மைப் புது மனிதனாக்கி அடிமையாகக் கொள்க"

என்றும்,

> "இத்தகு பெருங்கருணைக்குத் தான் செய்யும் கைம்மாறு யாது? தன் உயிர் போகுமளவும் இறைவனை நினைவு அறிவுடன் பணிகுவன்"

என்றும் கூறுகின்றார்.

மணிவாசகர், 'நீத்தல்விண்ணப்பத்'தில் பாடல்தோறும்

---

33. திருவாசகம், திருவெண்பா 8.

*'விட்டிடுதி கண்டாய்', 'விடுதி கண்டாய்' என்று கூறுவதை வேதநாயகர் 'பரமானுபூதி'யில்,*

"பொல்லான்என வேபுற மென்னைவிடல்" (22.3)

"மெய்யாய் அவளை யாதும் விடாமல்" (22.15)

*என்று கூறுகின்றார்.*

*மணிவாசகர் 'திருப்பொன்னூசல்' எனும் பதிகத்தில் 'பொன்னூசல் ஆடாமோ' என்று பெண்களைப் பொன்னூசல் ஆடுவோம் வாருங்கள் என்றழைக்கின்றார். இப் பதிகத்தின் அமைப்பிலேயே வேதநாயகர் 'திருவிளையாட்டூஞ்சல்' என்றதோர் பதிகத்தைப் (27) பாடியிருக்கின்றார்.*

*'தாவீதின் மைந்தனைச் சீயோன் திருமகளோடு சேர்ந்து ஊஞ்சல் ஆட வருக' என்று இப்பதிகத்தின் 11 பாடல்களின் ஈற்றடிகளிலும்,*

"செங்கையருள் தவிதுமைந்தா! ஆடீரூஞ்சல்
தேவ திருச்சபை மகளோடு ஆடீரூஞ்சல்"

*என்று முடித்திருப்பதைக் காணமுடிகிறது.*

**நம்மாழ்வார் திருமொழி**

*நம்மாழ்வார்,*

"தேனும் பாலும் கன்னலும்
அமுது மாகித் தித்தித்துஎன்
ஊனி லுயிரி லுணர்வினில்
நின்ற வொன்றை யுணர்ந்தேனே"[34]

*எனும் பாடலின் தாக்கம் 'மதுரமே யின்பமேவா' (9.8) எனும் பாடலில் வேதநாயகர் கூறுகின்றார்.*

**தாயுமானவர் பாடல்கள்**

*தாயுமானவர் இறைவனைப் 'பராபரன்' என்று*

34. நம்மாழ்வார் திருவாய்மொழி 8.8.4

குறிப்பிடுவார். 'பராபரக்கண்ணி' என்ற தலைப்பில் பல கண்ணிகளைப் பாடியுள்ளார். ஆயின் வேதநாயகர் 'பராபரன்' என்ற சொல்லைப் பல பாக்களில் கையாண்டுள்ளார். தாயுமானவர், வேதநாயகர் பாடல்களில் காணப்படும் ஒற்றுமைகளைப் பின்வரும் அட்டவணை மூலம் காட்டுவது பொருந்தும்.

| வ.எ. | தாயுமானவர் | வேதநாயகர் |
|---|---|---|
| 1 | ஆகாரபுவனம் இன்ப ஆகார மாக அவ்வனே ஒருமொழி யால் தேகாதி உலகமெங்கும் கலந்து தானே திகழ் அனந்த ஆனந்தமயத் தெய்வக் குன்றே | அகில புவனங்க ளெல்லாம் அமைத்தார் ஆதியிலே இருந்த வார்த்தையுமே சகர சராசரங்க ளெல்லாம் தந்தார் |
| 2 | யோகானுபூதி பெற்ற அன்பர் ஆவிக்குறு துணையே | பத்தருக்குப் பதநான்கும் பகுப்பார் (கட.3) |
| 3 | அளவைக் கெட்டாத் தனந் தளிச் சின்மாத்திரமாய், மேல்கீழ் காட்டாச் சதசத்தாய் ஆதிஅந்தம் எனும் எழுவர் ஈறற்று ஓங்கி | ஆராலும் அளவிடக் கூடாதார் (கட. 5) எட்டியும் எட்டாத பரம்பொருள் (கட. 8) |
| 4 | வேதக சின்மாத்திரமாய் எம்மனோர்க்கும் வெளியாக வந்த ஒன்றே, விமல வாழ்வே | வெட்ட வெளியாயிருக்கும் விமலன் (கட. 8) |
| 5 | காண்டல் . . . . பூண்ட அளவைகள் மனவாக்காதி யெல்லாம் பொருந்தாமல் அகம் புறமும் புணர்க்கையாகி | எல்லார்க்கும் பட்டளவில்லாத ஒரே வஸ்து (கட. 8,9,10) |
| 6 | மான் காட்டி மானை ஈர்க்கும் கொள்கை யென அருள் மௌன குருவாய் வந்து | நூதன புராதன நூரல் ஆசான் வந்தார் வென்றி தரும்ஞான போதகனார் வந்தார் வேதாந்த சித்தாந்த விநோதன் வந்தார் |

| | | |
|---|---|---|
| 7 | ஆதார ஆதேயம் முழதுநீ<br>யாதலால் அகில மீதெனை<br>ஆட்டி ஆடல் கண்டவனுநீ<br>ஆடுகின்றவனுநீ அருளுநீ<br>மௌன ஞான தாதாவும் நீ<br>பெற்ற தாய்தந்தை தாமுநீ<br>தமருநீ யாவுநீ காண்<br>(சச்சிதானந்தசிவம் 10) | அருமையானவன் நீ உரிமை<br>நாதன் நீ அருளுசெல்வம் நீ<br>அதிகவாழ்வு நீ பெருமைஞானி<br>நீ கருணைநண்பன் நீ பெற்ற<br>தாயும் நீ உற்ற தந்தை நீ தரும<br>மந்திர குருவுமாகி நீ தருண<br>மான போதுதவு தேழன் நீ<br>விரிவு சத்திய வேதம் யாவும் நீ<br>வேதநாயகா, வேதநாயகா<br>(13.9) |
| 8 | ஆரிருந்தென்? ஆர்போய்என்?<br>ஆரமு தாம் நின்னருளின்<br>சீரிருந்தால் உய்வேன் சிவமே,<br>பராபரமே (பராபரக்கண்ணி 120) | ஆரிருந்து மாவதென் தா<br>யிருந்து மாவதென் ஆனை<br>சேனையோடு கூடும் வாழ்<br>விருந்து மாவதென் பாரிருந்து<br>மாவதென் ஊரிருந்து மாவ<br>தென் பாவியாவி போகுநேரம்<br>ஈது வந்துதவுமோ? வேரிருந்த<br>மூலநாடி ஊடழிந்து வீழ்ந்துமே<br>மேனியெங்கும் ரோகமுண்டு<br>வேதனிட்ட தீர்வைபால்<br>ஏரிருந்த ஜீவனாவி கூடுவிட்டு<br>நீங்குமுன் ஏகனுரைக்க<br>வேணும் யேசுநாத சுவாமியே<br>(14.9) |

**திருப்புகழ்**

அருணகிரிநாதர்,

'பரவ வருமதில் அருணையில் ஒருவிசை வரவேணும்'

என்பதை வேதநாயகர்,

'மறியேறி மே ! குருவேசுநாதர் வரவேணும் என்றன் அகமே' (10.1)

என்கின்றார்.

"நாதவிந்து கலாதீ நமோ நமோ"

*என்று கூறுவதை வேதநாயகர்,*

"ஆகமங்கள் புகழ்வேதா நமோ நமோ
வாகு தங்கு குருநாதா நமோ நமோ"

*என்கின்றார். மேலும் 'ஓம் பிரணவம் - இருக்கிறோம்' (3), 'தேவ மகத்துவம்' (5) ஆகிய பதிகங்களின் பாடல்தோறும் 'நமோ நமோ' என்று கூறுவதைக் காணமுடிகின்றன*

**பப்ரீசியசு பாடல்கள்**

*செர்மன் மொழியிலிருந்து தமிழாக்கம் செய்த பப்ரீசியசு ஐயரின் பாடல்களைப் பயின்ற வேதநாயகர் தம் பனுவலில் பல இடங்களில் எடுத்தாண்டுள்ளார். அவை வருமாறு :*

| வ.எ. | பப்ரீசியசு | வேதநாயகர் |
|---|---|---|
| | பாடல் : 138 | |
| 1 | படையில் நீர் சேனாபதி (14) | பொரும் படைக் காயுதம் (6.7) |
| 2 | நீர் வானத்தப்பம் (7) | வானத்தின் அப்பம் (6.7) |
| 3 | நீர் நான் புசித்துத் தங்குகிற அரண்மனையும் வீடும் (10) | புராதன மன்னா தங்கி வாழ் பொன் அரண்மனை (6.7) |
| 4 | நீர் என்னை ஜோடிக்கும் உடை (9) | என்னைச் சோடிக்கும் உடை (6.7) |
| 5 | நீர் ஜீவ ஊற்று (8) | சீவபுட்கரம் (6.7) |
| 6 | கருங்கடலில் நீர்வழி காண்பிக்கும் சமுக்கா, எழும்புங் கொந்தளிப்பில் நீர்என் நங்கூரம் (14) | கருங்கடலில் வழிதோற்றிய சமுக்கா, மரக்கலமெழ நடத்தும் சுக்கான், கடற்கொந்தளிப்பில் நங்கூரம், சலப் பிரவாகத்தில் அக்கரை செல் வங்கம் (6.7) |
| 7 | ஆரோக்கியம் நற்சீரும் (8) | அரும்பிணிக் கவிழ்தம் (6.7) |
| 8 | நீர் ராவில்என் நட்சத்திரம் (15) | இராவில் நட்சத்திரம் (6.7) |

| | | |
|---|---|---|
| 9 | இருளில் என் தீவர்த்தி (15) | இருளதில் பகவத்தி (தீவட்டி) (6.3) |
| 10 | நீர் ஜீவனின் விருட்சம் (16) | அரிய சீவனின் விருட்சம் (மரம்) (6.7) |
| 11 | நீர் செல்வம் பொழியும் பூங்காவனம் சுகந்தருங் கனியும் (16) | செல்வப் பூங்காவனம் |
| 12 | குளிர்ந்த பூஞ்செடியும் (16) | குளிர்ந்த பூஞ்செடி |
| 13 | நீர் துக்கத்தில் என் ஆறுதல், நீர் வாழ்வில் என் களிப்பு, நீர் வேலையில் என் அலுவல், பகலில் என் சிந்திப்பு, நீர் ராவில் என் அடைக்கலம், நீர் துக்கத்தில் என் சொப்பனம் | துக்கத்தில் ஆறுதல், என் வாழ்வில் களிப்புநீ, துன்பத்தி லென் இன்பம்நீ தொறுவும் வேலையில் அலுவல் பகலில் என் சிந்திப்பு, தூக்கத்திலென் சொப்பனம் ராவில்என் பக்கத்தில் அடைக்கலம் (6.8) |
| 14 | குறைவில் என் ஐச்வரியம் என் தாழ்வில் உன் உயர்த்தி கசப்பிலே என் மதுரம் நான் தொய்ந்தால் மீண்டும் என் பலக்க நீர் என் சத்தி (15) | படுகுறைவில் ஐசுவரியம், கசப்பினில் அமுது, பல தாழ்வில் எனது வாழ்வு பல வீனத்தில் என் பெலன், தொய்வுற்று மெலிவதனில் எனது வலிமை (6.8) |
| 15 | ஓர் ஆட்டுக்குட்டி மீட்டுதல் உண்டாக்க இங்கே வந்து பூலோகத் தாரின் பாவங்கள் அனைத்தையுஞ் சுமந்து இளைப்பையும் தவிப்பையும் அடைந்து எந்த நோவுக்கும் உபாதிக்கும் அடிக்கும் கீழாகி, தூஷணத்தையும் திட்டான சாவைக் கூடவும் | ஆடுபட்ட அருங் கொலையாக வே பாடுபட்டுப் பருங் குருசான தில் கேடு கெட்ட வருங் கிருபை பெற ஈடுபட்டு இறந்த கிறிஸ் தேசுவே (8.6) |

| | |
|---|---|
| சாதாய் அனுபவிக்கும் (44)<br><br>பாவத்தைச் சுமந்த தேவ<br>ஆட்டுக்குட்டி<br>அடியார் மேல் இரங்கும்<br>நீர் சமாதானந் தாரும் (47)<br><br>மாசற்ற ஆட்டுக்குட்டி<br>நீர் சிலுவையில் தொங்கி<br>கடன் யாவும் செலுத்தி<br>இரக்கத்தாலே போய்கி<br>பொல்லாப்பைச் சாதால் வென்றீர்<br>பொல்லாருக்காகச் சென்றீர்<br>அடியார்மேல் இரங்கும் (48) | |

**பைபிள் கதைகள்**

*பைபிளில் இடம்பெற்றுள்ளவற்றுள் சில கதைகளை இப் பனுவலில் வேதநாயகர் எடுத்தாண்டுள்ளார். அவை வருமாறு :*

**கானாவில் நடந்த திருமணம்**

*கலிலேயாவிலுள்ள கானா ஊரில் நடந்த திருமணத்தில் வந்திருந்த விருந்தினர்களுக்குத் திராட்சை ரசம் குறைவு பட்டது. இயேசுவின் தாய் அவர்களுக்குத் திராட்சை ரசம் இல்லை என்றாள். அதற்கு இயேசு ஆறு கற்சாடிகளில் தண்ணீரை நிரப்புமாறு கூறினார். அத்தண்ணீரை அனைவருக்கும் எடுத்துக் கொடுக்கச் சொன்னார். அத்தண்ணீர் திராட்சை ரசமாய் மாறியது.*[35] *இதனை வேதநாயகர்,*

"முந்திரியின் ரசம் அளியென்ற போதருள் விண்டவா" (12.2)

*என்று கூறியுள்ளார்.*

---

*35 யோவான் 2:1-11*

**காற்றும் கடலும் கீழ்ப்படிதல்**

*தம் சீடர்களுடன் இயேசு பிரான் படகில் ஏறிக் கடலின் மறுகரைக்குச் சென்றார். அப்பொழுது பலத்த சுழல் காற்று வீசியது. படகு ஓடுகையில் இயேசு நித்திரையாயிருந்தார் சுழல் காற்றையும் கடலின் கொந்தளிப்பையும் கண்டு பயந்து போன சீடர்கள் அவரை எழுப்பி, ஆண்டவரே! எங்களைக் காப்பாற்றும் என்றனர். அதற்கு அவர், 'அற்ப விசுவாசிகளே! ஏன் பயப்படுகிறீர்கள்?' என்று சொல்லி, எழுந்து காற்றையும் கடலையும் அதட்டினார். உடனே காற்று நின்று போய் மிகுந்த அமைதல் உண்டாயிற்று. இதைக் கண்ட சீடர்கள் ஆச்சரியப்பட்டு, 'இவர் எப்படிப்பட்டவரோ, காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே' என்றனர்.[36] இதனை வேதநாயகர் திருப்புகழ்ச் சந்தத்தில்,*

"அலைகடலது பொங்கி உரத்தெழ
அதிரொலிபட விண்டு மடித்திட
அடிகளுட சங்க மரக்கலம் – அதின்மீது

நிலைதவறி நடுங்கி அரற்றிட
நிசமெனவுமு றங்கி விழித்தெதிர்
நிழலியினொடு சிந்தை அதட்டிய – பரதேவே" (18.7)

*என்று அமைத்துப் பாடியுள்ளார். மற்றோரிடத்தில் இதே நிகழ்ச்சியை,*

"சிந்தூடெழு நன்சீடர்முன் தென்பாக வந்த அன்பானவா" (12.8)

*என்று கூறுவதையும் காணமுடிகிறது.*

**சமாரியப் பெண்ணிடம் நீர் கேட்டல்**

*இயேசு பிரான் பாவம் செய்த சமாரியகுலப் பெண்ணிடமிருந்து தாம் குடிப்பதற்காகத் தண்ணீர் தா என்று கேட்டதைக்,*

"கூபம்படு நீர்தந்திடக் குலமங்கைமுன் மொழிகின்றவா" (12.9)

36 *மத்தேயு 8:23-27, மாற்கு 4:35-41, லூக்கா 8:22-24*

*எனக் கூறுகின்றார்.*[37]

**பாவியான பெண் மன்னிக்கப்படுதல்**

*பல பாவங்களைச் செய்த பெண்ணொருத்தி இயேசு பிரானின் பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து, தன் தலைமுடியினால் துடைத்து, அவருடைய பாதங்களை முத்தஞ் செய்து, பாதங்களில் பரிமள தைலத்தைப் பூசினாள் இதனால் அவள் செய்த அனேக பாவங்கள் மன்னிக்கப் பட்டன.*[38] *சீமோன் எனப்பட்ட பரிசேயன் வீட்டில் நடந்த இந்நிகழ்ச்சியை வேதநாயகர்,*

**"பாதமானது பற்றி அன்பொடு**
**பாவையாள் திருசத்தியங் கொடு**
**பாசமாய் மணம் இட்டெழும்பிய – சுருளாலே**

**காதலோடு துவட்ட அங்கு அவன்**
**காமியாய் முன்இழைத்த நிந்தைகள்**
**காடதோட உரைத்த சம்பன – பரதேவே" (18.11)**

*என்று 'மனவாஞ்சை' எனும் பதிகத்தில் கூறுகின்றார். இதே நிகழ்ச்சியைப் 'பரமானுபூதி' எனும் பதிகத்தில்,*

**"மையார் குழல் மங்கையரின் பணியால்**
**மெய்யாய் அவளை யாதும் விடாமல் உனை**
**ஐயா, பணி யக்கிருபையாய் உதவி**
**செய்யாய்திரி லோக சிகாமணியே!" (22.15)**

*என்று கூறுவதையும் காணமுடிகின்றன.*

*"அழகிய மஞ்சனமிட்டு மை தீட்டிய தலைமுடியுள்ள பெண் தைலமும் முத்தமும் இட்ட நற்பணியால், மெய்யாகவே அவளை விட்டு விடாமல், அவள் உன்னைப் பணிந்து உனக்குத் திருப்பணி செய்யக் கிருபையாய் உதவி செய்தாய். ஐயா! திரிலோக*

---

*37. யோவான் 4*
*38. லூக்கா 7:36-50*

சிகாமணியே! அதுபோல எனக்கும் உதவி
செய்வாயாக"

என்று இறைவனிடம் வேதநாயகர் வேண்டுவதாக இப்பாடல் அமைகிறது.

**பன்னிரண்டாண்டு நோயுற்ற பெண் நலமடைதல்**

பன்னிரண்டு ஆண்டுகள் பெரும் பாடுற்ற பெண் ஒருத்தி, இயேசு பிரானின் ஆடையின் ஓரத்தைத் தொட்டு நோயிலிருந்து நலம் பெற்றாள்[39] எனும் நிகழ்ச்சியை, 'ஆரோக்கிய சந்த வெண்பா' எனும் பதிகத்தில்,

"ஆறு இரண்டாட்டுப் பெரும்பாடு ஆடஅவட்கு ஆரோக்கியம் செய்யு
மாறு திரள்தோள் தாக்கிய கிறிஸ்து வள்ளலே" (30.6)

என்று வேதநாயகர் கூறுகின்றார்.

**காணாமற் போன ஆடு**

நூறு ஆடுகளை உடைய ஒருவன் அவற்றில் ஒன்று காணாமல் போனால், 99 ஆடுகளையும் விட்டுவிட்டுக் காணாமல் போன ஓராட்டைத் தேடித் திரிந்து கண்டுபிடிக்க முயன்றான் எனும் கதையை[40] வேதநாயகர்,

"நூறாட்டை விட்டு ஒன்றை நோக்கிச் சுமந்து வந்த
மாறாத் தயை கிறிஸ்து வள்ளலே" (30.7)

என்கின்றார்.

**பேய் பிடித்தவரைப் போக்கியது**

பேய் பிடித்த இருவர் பிரேதக் கல்லறைகளிலிருந்து புறப்பட்டு அவ்வழியில் செல்கின்றவர்களுக்குப் பலவிதமான தொல்லைகளைக் கொடுத்து வந்தனர். அந்த வழியில் இயேசு பிரான் வந்தார். அவர்கள் இருவரும் அவரை நோக்கி,

39. மத்தேயு 9 : 18-22
40 லூக்கா 15 : 1-7

"இயேசுவே! தேவகுமாரனே! எங்களுக்கும் உமக்கும் என்ன? காலம் வருமுன்னே எங்களை வேதனைப் படுத்த இங்கே வந்தீரோ? . . . . . நீர் எங்களைத் துரத்துவீரானால், நாங்கள் அந்தப் பன்றிக் கூட்டத்தில் போகும்படி உத்தரவு கொடும்"

என்று அவரை வேண்டிக் கொண்டனர்.[41] இந்நிகழ்ச்சியை,

**"பன்றிகளைக் கொல்லப்**
**பசாசை விட்டுப் பேயனுக்கு**
**மன்றில் வளம்செய் கிறிஸ்து வள்ளலே" (30.9)**

என்று கூறுகின்றார்.

**தொழுநோயை நலமாக்கியது**

இயேசு பிரான் ஒரு கிராமத்திற்குச் சென்றபோது தொழுநோய் பீடித்த பத்துப் பேர் அவருக்கு எதிராக வந்து, 'இயேசுவே! எங்களுக்கு இரங்கும்' என்றனர். அவர் அவர்களைப் பார்த்து, 'நீங்கள் போய் ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள்' என்றார். அதன்படி அவர்கள் செல்கையில் தொழுநோய் அவர்களை விட்டு நீங்கியது. அவர்களில் ஒருவன் மட்டும் மிகவும் மகிழ்ச்சியடைந்து இயேசுவினுடைய பாதத்தருகே முகம் குப்புற விழுந்து வணங்கினான். அப்பொழுது இயேசு, பத்துப் பேரில் மற்ற ஒன்பது பேர் எங்கே? எனக் கேட்டார்.[42] இந் நிகழ்ச்சியை,

**"ஒன்பது பேர் நன்றியற்றோர்,**
**ஒரோ ஒருத்தனோ உவந்தோன்;**
**அன்பு அதுவோ என்று ஓதுங் கிறிஸ்து வள்ளலே" (30.10)**

என்கின்றார்.

**ஏனையவை**

பேதுரு மறுதலித்தமை (16.6), பரபாசு (16.10), சீமோன் (16.12), யோனா (18.7), மத்தேயுவைச் சீடனாக்கியது (30.4),

41. மத்தேயு 8 : 28-34.
42. லூக்கா 17 : 11-19.

*சிலுவையில் இயேசு மரித்த பின்பு அவரது விலாவிலிருந்து செந்நீரும் தண்ணீரும் வந்தது (30.8) போன்றவற்றை வேதநாயகர் கூறியுள்ளார்*

**சொற்கள்**

*இப் பனுவலில் கிறித்தவ சமயத்திற்கே உரிய சொற்கள், அடுக்கு மொழிச் சொற்கள், பேச்சு வழக்குச் சொற்கள், வடமொழிச் சொற்கள் போன்றவற்றைக் காணமுடிகின்றன*

*ஆலயம், கல்லறை, தேவாலயம், பரமண்டலம் போன்ற 36 கிறித்தவ சமயம் தொடர்பான சொற்களும்;*[43]

*அடுக்கடுக்காக, பாடிப்பாடி, விதம் விதம் முதலான 53 அடுக்கு மொழிச் சொற்களும்;*[44]

*அவதி, ராவில், உசுப்பி, ராத்திரி, சிலது முதலான 60 பேச்சு வழக்குச் சொற்களும்;*[45]

*அங்கப் பிரதட்சணம், இஸ்திரி, இரட்சிப்பு, ஐசுவரியம், பாரிசம், விருத்த சேதனம் முதலான வடமொழிச் சொற்களும்*[46] *இப் பனுவலில் இடம் பெற்றுள்ளன.*

*நீதிமன்றத்தைக் 'களரி' (24.8) என்றும், இரவுக் காவலை 'உக்களம்' (24.26) என்றும், இனாம் என்பதை 'உம்பிளிக்கை' (27.4) என்றும் வேதநாயகர் கூறுவதையும் காணமுடிகின்றன.*

---

*43 காண்க : பின்னிணைப்பு எண் 17.*

*44 காண்க : பின்னிணைப்பு எண் 18.*

*45 காண்க : பின்னிணைப்பு எண் 19.*

*46 காண்க : பின்னிணைப்பு எண் 20*

# நூலோதி

# (BIBLIOGRAPHY)

# நூலோதி
# (BIBLIOGRAPHY)

அறிவுடைநம்பி, ம. சா., திருநாவுக்கரசர் தேவாரத்தில் காணப்படும் இலக்கியக் கொள்கைகள், கருமணி பதிப்பகம், மதுரை, 1986.

அறிவுடைநம்பி, ம. சா., 'ஞானவுலாவில் வேதநாயகர்', இ.ப.த.ம. கருத்தரங்க ஆய்வுக்கோவை தொகுதி 1, புதுச்சேரி, 1997, பக். 69 – 73.

அறிவுடைநம்பி, ம. சா., 'ஸ்வார்ட்சும் அவர்தம் மாணவர்களும்', International Study Seminar on Christian Frederick Schwartz (1726 - 1798), The School of Philosophy, Tamil University, Thanjavur and Lutheran Heritage Archives, Chennai, 26 - 28 February 1998.

இராசு, செ., 'சரபோசியும் வேதநாயக சாஸ்திரி யாரும்', சரபோசி மன்னரின் 212ஆம் பிறந்தநாள் விழாக் கருத்தரங்கக் கட்டுரை, சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர், 24–09–1989.

இராமசாமிப் புலவர், சு. அ. (கு. ஆ.), பதினொராந் திருமுறை, கழக வெளியீடு, சென்னை, 1971.

ஏசுதாசன், ப. ச., இரட்சணிய யாத்திரிகத்தில் கிறித்தவக் கோட்பாடுகள், சுதா பதிப்பகம், திருச்சி, 1981.

ஏசுதாசன், ப. ச., தமிழ்க் கிறித்தவ இலக்கியத்தில் சைவ வைணவ இலக்கியத் தாக்கம், சுதா பதிப்பகம், திருச்சி, 1991.

கலியபெருமாள், பி., அந்தாதி இலக்கியங்கள்.

கனக சபாபதி பிள்ளை, எஸ். (பதிப்பு), தொல்காப்பியம் பொருளதிகாரம் பேராசிரியம், சாது அச்சுக்கூடம், சென்னை, 1935.

குமரகுருபரன் பிள்ளை, டி. எம். (ப.ஆ.), பதினோராந் திருமுறை, ஸ்ரீ குமரகுருபரன் சங்கம், ஸ்ரீவைகுண்டம், 1963.

கோவிந்தராச முதலியார், கா. ர. (உ.ஆ.), பன்னிரு பாட்டியல், கழக வெளியீடு, சென்னை, 1970.

சண்முகம் பிள்ளை, மு., சிற்றிலக்கிய வளர்ச்சி, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.

சண்முகம் பிள்ளை, மு., தமிழ் – தமிழ் அகரமுதலி, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1991.

சதாசிவ செட்டியார், கயப்பாக்கம் (ப.ஆ.), திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய தேவாரத் திருப்பதிகங்கள், கழக வெளியீடு, சென்னை, இரண்டாம் பதிப்பு 1973.

சதாசிவ செட்டியார், கயப்பாக்கம் (ப. ஆ.), திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய தேவாரத் திருப்பதிகங்கள், கழக வெளியீடு, சென்னை, இரண்டாம் பதிப்பு 1973.

சத்திய சாட்சி, பொன்னு ஆ., தஞ்சை வேதநாயகர் தமிழ் விருந்து, கிறிஸ்தவக் கலை–தொடர்பு நிலையம், சென்னை, 1975.

சவரிமுத்து, சி. வி. (உ. ஆ.), வேதநாயக சாஸ்திரியாரின் ஜெபமாலை விரிவுரையும் திறனாய்வும், கிறிஸ்தவ இலக்கியக் கழகம், சென்னை, 1987.

சாம்பசிவன், ச. (உ. ஆ.), வள்ளுவர் தெள்ளுரை, மதுரைத் திருவள்ளுவர் கழகம், மதுரை, 1970.

சாமிநாதையர், உ. வே. (ப. ஆ.), சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும், கபீர் அச்சுக்கூடம், சென்னை, எட்டாம் பதிப்பு 1968.

சுப்பிரமணிய பிள்ளை, கா., இலக்கிய வரலாறு இரண்டாம் பாகம், ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை, ஐந்தாம் பதிப்பு 1958.

சுப்பிரமணியன், ச. வே., தமிழ் இலக்கிய வகையும் வடிவமும், தமிழ் நிலையம், சென்னை.

செயராமன், ந. வீ., சிற்றிலக்கியச் செல்வம், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், இரண்டாம் பதிப்பு 1979.

தாயுமானவர், திருப்பாடல்கள், கழக வெளியீடு, சென்னை, 1975.

திவாகர முனிவர், சேந்தன் திவாகரம், கழக வெளியீடு, சென்னை, மறுபதிப்பு 1958.

துரைசாமி, ஔவை சு. (உ. ஆ.), பதிற்றுப்பத்து, கழக வெளியீடு, சென்னை, மறுபதிப்பு 1973.

துரைசாமி, ஔவை சு. (உ. ஆ.), புறநானூறு இரு பகுதிகள், கழக வெளியீடு, சென்னை, மறுபதிப்பு 1971, 1962.

தேவநேசன், தா. வி., தஞ்சை வேதநாயக சாஸ்திரியார், கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், சென்னை, இரண்டாம் பதிப்பு 1956.

தொல்காப்பியர், தொல்காப்பியம் பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, கழக வெளியீடு, சென்னை, இரண்டாம் பதிப்பு 1974.

நோவா ஞானாதிக்கம் சாஸ்திரி, வி., தஞ்சாவூர் சுவிசேட கவிராய வேதநாயக சாஸ்திரியார், ஆர். ஜே. பிரிண்டர்ஸ், தஞ்சாவூர், திருத்திய பதிப்பு 1987.

பாலசுந்தரம் பிள்ளை, தி. சு. (கு. ஆ.), தொல்காப்பியம் முழுவதும், கழக வெளியீடு, சென்னை, இரண்டாம் பதிப்பு 1954.

பாலசுப்பிரமணியன், சி., தமிழ் இலக்கிய வரலாறு, நறுமலர்ப் பதிப்பகம், சென்னை, 1997.

பிங்கல முனிவர், பிங்கல நிகண்டு, ரிப்பன் அச்சியந்திரசாலை, மதராஸ், 1917.

பொய்கையார் முதலிய சங்கத்துச் சான்றோர், பன்னிரு பாட்டியல், தமிழ்ச் சங்க முத்திராசாலை, மதுரை, 1904.

மாணிக்கவாசக சுவாமிகள், திருவாசகம் திருக்கோவையார், தருமபுர ஆதீனம், தருமபுரம், 1966.

முத்துசுவாமி பிள்ளை, நாநார்த்த தீபிகை.

ராஜம், எஸ். (ப. ஆ.), ஐங்குறுநூறு, மர்ரே அண்டு கம்பெனி, சென்னை, 1957.

ராஜம், எஸ். (ப. ஆ.), நற்றிணை, மர்ரே அண்டு கம்பெனி, சென்னை, 1957.

ராஜம், எஸ். (ப. ஆ.), பட்டினப்பாலை, மர்ரே அண்டு கம்பெனி, சென்னை, 1957.

வரதராசன், மு., தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அக்காதெமி, புதுடெல்லி, 1974.

வேங்கடசாமி, மயிலை சீனி., கிறிஸ்தவமும் தமிழும், கழக வெளியீடு, சென்னை, மறுபதிப்பு 1980.

வேங்கடசாமி ரெட்டியார், கி. (ப. ஆ.), ஆழ்வார்கள் அருளிச்செய்த நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், திருவேங்கடத்தான் திருமன்றம், சென்னை, 1973.

வேதநாயக சாஸ்திரியார், வே. சேம். (ப. ஆ.), வேதநாயக சாஸ்திரியார் பாடிய ஜெபமாலை, தஞ்சாவூர், 1974.

வேதநாயக சாஸ்திரியார்,ஞான அந்தாதி, காண்லர் பிரஸ், சென்னை, 1938.

வேதநாயக சாஸ்திரியார்,ஞான அந்தாதி, கிறித்தவ இலக்கியச் சங்கம், சென்னை, இரண்டாம் பதிப்பு 1964.

வேதநாயக சாஸ்திரியார்,ஞானவுலா, The Religious Tract and Book Society, Vepery, Madras, 1885.

வேதநாயக சாஸ்திரியார்,ஞானவுலா, கிறித்தவ இலக்கியச் சங்கம், சென்னை, இரண்டாம் பதிப்பு 1964.

வேதநாயக சாஸ்திரியார்,பெத்லகேம் குறவஞ்சி, கிறித்தவ இலக்கியச் சங்கம், சென்னை, இரண்டாம் பதிப்பு 1964.

வையாபுரிப்பிள்ளை, எஸ். (ப. ஆ.), சங்க இலக்கியம் இரு பகுதிகள், பாரி நிலையம், சென்னை, 1957.

ஜான் சாமுவேல், ஜி., 'வேதநாயக சாஸ்திரியார்', தமிழ் இலக்கியக் கொள்கை தொகுதி 2, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1977.

ஜான் துரை, ஆ. 'சரபோசியும் வேதநாயக சாஸ்திரியும்', சரபோசியின் பன்முகமாட்சி, மாமன்னர் சரபோசியின் 221ஆம் பிறந்தநாள் விழாக் கருத்தரங்கம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 25-09-1997.

-------------, கலைக்களஞ்சியம் தொகுதி 8, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை.

-------------, பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் அடங்கிய பரிசுத்த வேதாகமம், (எபிரேயு கிரேக்கு என்னும் மூலபாஷைகளிலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது), இந்திய வேதாகமச் சங்கம், பெங்களூர், ஆண்டு இல்லை.

-------------, Tamil Lexicon, Volume I, University of Madras, Madras, 1982.

சுவடிகள்

கணபதி தோத்திரம், படி எடுக்கப்பெற்ற தொகுதி எண் 1090 டி. 1003, சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

பரமானந்தயோகி சரித்திரம், சுவடி எண் 540, சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

# பின்னிணைப்புகள்

**பின்னிணைப்பு எண் 1**

## ஞானவுலாவில் பேச்சு வழக்குச் சொற்கள்

*(எண்கள் கண்ணியைக் குறிக்கும்)*

அதுகள் 545
உக்கிராணம் 540
எசமான் 138
எண்ணிக்கோ 595
ஏழுதரம் 499
ஏனோதானோ 521
ஒதினேன் 343
கடன்பட்டோன் 539
கண்டபடி 428
கத்தி நின்று கூப்பிடும் 521
கூசாது 323
கூசாமல் 25
கூடப்பிறந்தவர் 560
கூட்டாளி 560
கூவி 440
கையும் களவுமாய் 526
சண்டாளன் 519
சிலது 645
சீமானே 527
சுத்தம் பண்ண 251
சுபாவம் 317
சும்மா 316
செப்பி 388, 548
செப்புதல் 340
சொந்தம் 585
சோரம் 501
சோலி 222
தயை 40, 41
தெண்டனிட்டு 14
நல்வாக்கு 41
நாலு 400
நிசம் 591
நிதம் 560
நொந்து 448
நோவு 426
பஞ்சை 643
பண்ணாதே 613
பண்ணி 550
பண்ணும் 496
பாடை 639
பாதகர் 519
பிசகாது 486
பிந்தி 541
பிராக்கு 603
பிரியம் 430
பூந்து 401
மெத்தனம் 536
வயித்தியன் 518
வரப்பண்ணலையோ 496
வாகாய் 475
விபசாரி 523
வேசி 331
வேசித்தனம் 502
வேண்டிக்கோ 613

செகம் 65
செபம் 496
செனனம் 69
செனிக்க 388
சொரூபம் 56, 126
சொற்பனம் 223
சொஸ்தம் 226
சோதி 277
தமஸ்கு 472
தவசு 350
தாதா 505
தாபித்தது 472
(தாபித்தாயே 515)
தாஷ்டீகம் 13, 56
தீக்கிஷம் 190
துரை 59
தெரிசனம் 271
(தெரிசித்தல் 185)
நேத்திரம் 85
பக்கிஷ 171
பட்சம் 482
பந்தனை 559
பரிதபிக்க 528
பரியாரி 520
பவுசு 572
பாக்கியவான் 332
பாரி 488
பாரிசம் 485
பாஷா 127
பிரசங்கம் 515
பிரதாபித்து 385
பிரபலம் 573
பிரயாசை 534
புத்தி 43
(புத்திமதி 479)
புருஷன் 527
(புருடன் 399)
பூதலம் 425
பூதியம் 381
பூருவோத்தரம் 145
பெந்து 573
பெலன் 518
பெலிஸ்தர் 296
பெல்தேஷா 338
பொக்கிஷம் 149, 196, 362
பொஸ்தகம் 149, 196, 362
மணவாளன் 41, 137
மணவாளி 351
மணாளி 357
மத்திஸ்தன் 116, 520
மனுஷன் 129
(மனுடன் 547)
மாபாவங்கள் 512
மாய்மாலம் 527
மார்க்கம் 512
மிஸ்தேவான் 471
மோக்கிஷம் 169, 190
ரட்சிக்க 279
(ரட்சிப்பு 10)
ராச்சியம் 75
ரூபவதி 344
ரூபி 185
ரோசப்புஷ்பம் 204
வங்கிஷம் 132

*பின்னிணைப்பு எண் 2*

## ஞானவுலாவில் வடமொழிச் சொற்கள்

*(எண்கள் கண்ணியைக் குறிக்கும்)*

அசனம் (உணவு) 517
அத்தன் 529
அநித்தியம் 555
அபிஷேகன் 108
*அப்போஸ்தலர்* 341
அஸ்திவாரம் 129
ஆங்கிஷம் 140
ஆசனம் 31
ஆஸ்தி 135, 445, 561
இச்சை 251
இட்டம் 554, 579
இஷ்டம் 147
*இஸ்ராவேல்* 505
*எஸ்தர்* 468
*ஏசு கிறிஸ்து* 34, 35, 36
(*கிறிஸ்து* 112, 257, 368, 369, 370)
கடாச்சி 505 (கடாட்சி 505)
கத்தர் 334, 370 (கத்தன் 99, 137, 283) (*கர்த்தர் 329*)
கரம் 92
கருணாசமுத்திரம் 612
கலியாணம் 533 (கல்யாணம் 124)
கன்னியாஸ்திரி 409
கன்னியாஸ்திரிகள் 354
கஸ்தி 468, 619
கிருபா கடாட்சம் 63
கிருபை 314, 457, 579
கிறிஸ்தவர்கள் 81, 369
கும்பு (கூட்டம்) 517
குஷ்டரோகம் 635
கெடி (குகை) 467
கோஸ்திரம் 182
சக்கரவர்த்தி 333
சஞ்சரித்து 547
சபித்தல் 336
சமர் 488
சமஸ்த 13
சமுத்திரம் 173
சம்பத்து 572
சரீரம் 369
சருவ சங்காரம் 406
சலப்பிரவாகம் 426
சலம் 105
சல்லி 623
சற்பிணை 333
சனம் 573
*சாஸ்திரம்* 13, 182, 562
சாஸ்திரி 211, 288
சிங்காசனம் 563
சிம்மாசனம் 563
சிரம் 85
சிஷ்டி 136, 380
சிஷ்டிகள் 147, 555
(சிட்டிகனே 578)
*சீவசுவாசம்* 390
*சீவன்* 111, 117, 610

வசனித்தாய் 499
வர்த்தித்தல் 425
வஸ்திரம் 124
வஸ்து 129, 249, 255, 303
வாசம் 547
வாச்சியம் 311
வாசஸ்தலம் 148, 361
வானஸ்பபி 207
விசுவாசம் 138, 162
விசுவாசிகள் 350
விருட்சம் 476
விவாகம் 452
விஸ்தரிக்க 514
விஸ்தலமிஸ்திரீ 129
விஸ்திரீ 521
வெண்குட்டம் 485
ஸ்திரி 344, 379, 405
ஸ்நாதக 416

பின்னிணைப்பு எண் 3

## பெத்லகேம் குறவஞ்சியில் இடம் பெற்றோர்

*(எண்கள் பக்க எண்களைக் குறிக்கும்)*

அசனாத்து 35
அபிசலோம் 141, 152
அபிமேலேக் 155
அப்சலோமின் 35
அனங்கன் 28
அஸ்கலோன் 75
ஆசாப்பு 97
ஆதாம் 39, 113, 126
ஆபிரகாம் 59, 62, 64, 66, 115, 116, 148
ஆபிராம் 22
ஆபேல் 25, 148
ஆமோன் 79
ஆரோன் 103
இசரவேல் 89
இசராவேல் 72, 75, 84, 110, 112, 114, 116
இசராவேலர் 44, 152
இசறாவேல் 36, 62, 64, 68
இசறாவேலர் 8
இசரேல் 23, 26, 30, 39, 66, 74
இம்மானுவேல் 12, 26, 150
இராகாப்பு 27, 35, 148
இஸ்காரியோத் 141
ஈசாக்கு 25, 59, 66, 109, 116, 148, 152
உரியா 35
ஊரியா 140
எப்பிராம் 35
எரிகோ 35
எருசலேமியர் 13
எலிசபெத்தம்மாள் 27
எலிசப்பெத் 36
எலிசா 60, 98, 103, 104, 118

எலியா 26, 97, 98, 103, 118, 119, 130
எலியாசு 81, 82, 97
எலியேசர் 115
எஸ்தர் 27, 33, 35, 79
ஏசபேல் 103
ஏசபேலெத் 155
ஏசா 120, 152
ஏசாவி 109
ஏசையா 82
ஏதோம் 152
ஏர்மோன் 59
ஏவாள் 27, 34, 113, 126, 151
ஓசையா மல்கியா 82
ஓலப்பர் 35
கத்தரீனாள் 27
கன்னிமரி 26, 27, 52, 74
கன்னி மரியாள் 47, 62
கன்னியாஸ்திரீ 17
கற்பெஸ்தர் சூசன்னாள் 27
காமலோ 36
காலேப் 98
கித்தேரியாள் 27
கிலேயோப்பை மரியாள் 27
கோராபீன் 72
கோலோப்பையர் 2
சகரியா 36
சயித்தான் 24
சலமோன் 23, 26, 30, 57, 64, 72
சால்மோன் 32, 123
சாலோமோன் 27
சவுல் 23, 35, 60, 95, 110, 136, 152
சாமுவேல் 26, 82, 89, 148, 152
சார(ற)ாள் 27, 34, 148, 155
சாலேம் 37
சிப்போறாள் 27, 35
சிமியோன் 24, 64, 74
சீசேரா 35
சீமசோன் 25, 103
(சிம்சோன் 148)
சீமோன் 67, 136
சீயோன் 25, 27, 30, 77, 107
சுவார்ச்சையர் 2
சூசன் 80, 135
சூசன்னாள் 27
சூசை 24, 36, 44, 89
சேரபீமு 72
தவிதிராசன் 8, 34
தவிது மைந்தன் 84
த(ா)வீது 17, 19, 23, 27, 31, 35, 40, 60, 62, 64, 66, 72, 77, 82, 85, 86, 89, 94, 95, 97, 110, 127, 141; 148, 152
தாமார் 79
தானாமீரி 34
தானியேல் 81, 82, 89, 97
தீமோத்தே 98
தெபோறாள் 27, 34
தேப்போராள் 79
தேமாசு 141
தேவசகாயன் 2
தோமையர் 148
நகாமி 27
நாசரேத்து 64
நேபுகாத்நேசர் 81

நோவா 108, 112, 143
நோவாவு 82
பரவோன் 112
பர்சேபாள் 35
பவுல் 98, 99, 152
ப(ா)பிலோன் *84*
பார்வோன் 81, 89, 102
பில்க்காள் 34
பெலிஸ்தர் 110
பென்யமீன் 152
பேத்துவேல் 116
மரியாள் 20, 24, 27, 47, 62
மர்த்தாள் 27
மனாசே 35
மனுவேல் 19, 80
மானுவேல் 89, 123
மார்க் கெ ரேமி 38
மிகாள் 35
மில்க்காள் 116
மேசியா 64, 82
மேசோப் 109
மேரி பாவை 59
*மைலேயாள் 27*
மோசெசு 35
மோசேசு 59, 62, 71, 82
மோசே 23, 25, 34, 44, 59, 85, 96, 98, 102, 109
மோசை 74, 89
யாகேல் 35
*யாக்கோபு 34, 60, 64, 66, 67, 81, 109, 140, 151, 152*
யக்கோபு 99, 120, 127, 148, 151
யக்கோப்பி 75, 81
யாறே(ா)ன் 23, 155
யூதமுப்பர் 141
யூதர் 12, 22, 23, 56, 67, 75, 99, 100, 140
யூதா 36, 67, 68, 79
யூதாசு 7, 34, 141, 152
யூதித்து 35, 58
யேசேக்கியேல் 82
யொசேபாள் 27
யொவான் 12, 13, 15, 120
யோவான் 21, 64, 67, 99
யோசபாத் 38
யோசு 6
யோசுவன் 37
யோசுவா 98
யோசே 67
யோசேபாள் 27
யோசேப்(பு) 25, 35, 37, 39, 74, 148, 152
யோபு 26
யோப்பு 27, 142
யோர்தான் 64
யோனத்தான் 152
ரட்சகன் 61
ராகாப் 27, 79
ராகேல் 27, 34, 79, 140, 151
ரூத்தபிகாய் 27
ரூத்தாள் 35
ரூபன் 60
ரூபேன் 127
ரேபக்காள் 27, 34, 109, 116

ரேபெக்காள் 154
லாபான் 151
லிபனோான் 32
லிபன் 60
லேயாள் 27, 34, 140
லோத்து 34, 115
வாட்டிவன் 23
வேதநாயகன் 2
வேலாபாள் 140

## பின்னிணைப்பு எண் 4

### கலைச்சொற்கள் : கிறித்தவ சமயம்

*(எண்கள் பக்க எண்களைக் குறிக்கும்)*


| | |
|---|---|
| அல்லேலூயா | 78 |
| ஆசீர்வதித்தான் | 26 |
| ஆத்துமம் (ஆன்மா) | 24 |
| ஆராதனை | 13 |
| ஜயாவி (பராபரனுடைய ஆவி) | 3 |
| ஓசனா (வெற்றி) | 48, 78 |
| கர்த்தனின் சபை | 57 |
| கன்னியாஸ்திரீ | 90 |
| கேருபின் (வான் தூதர்) | 13 |
| சத்தியசபை | 33, 44, 58 |
| சத்தியபோதம் | 33 |
| சத்திய மறை | 13, 55, 57, 69 |
| சத்திய மார்க்கம் | 108 |
| சத்திய வேதம் | 30, 52, 54, 63, 70, 96, 97 |
| சத்தியம் | 73 |
| சம்மனசு (தேவ தூதன்) | 77, 113 |
| சிலுவை | 6, 58, 71, 77, 80, 85, 89, 92 |
| சிலுவைக்கொடி | 33, 49 |
| சீவ விளக்கு | 123 |
| சுவிசேடசபை | 3, 27, 58, 93 |
| சுவிசேட ஞானவலை | 93 |
| சுவிசேட நெறி | 13 |

| | |
|---|---|
| சுவிசேட போதகர் | 12 |
| சுவிசேட மறைஞானம் | 12 |
| சுவிசேடமெனும் பொத்தகம் | 146 |
| சுவிசேடம் | 2, 18, 28, 61, 69, 70, 71, 84, 97, 105, 126, 129, 136 |
| சுவிசேட வலை | 126 |
| செப பொஸ்தகம் | 129 |
| செபமாலை | 1, 32, 49, 71, 86, 92, 98, 123 |
| செபவீடு | 124 |
| ஞான சங்கீதம் | 63 |
| ஞான சுவிசேடம் | 137 |
| ஞானத் தீட்சை | 13, 22 |
| ஞானத்தாபரணப்பெட்டி | 33 |
| ஞானாபரணப்பெட்டி | 92, 130 |
| ஞான ஸ்நானம் | 107, 113 |
| திரித்துவம் | 69, 78 |
| திருச்சபை | 109, 136 |
| திருச்சன்னதி | 111 |
| திருவசனம் | 71 |
| தீட்சை | 12, 24, 61, 67, 70, 74, 96, 114 |
| தூதர் | 124 |
| தேவகிருபை | 124 |
| தேவ திருச்சபை | 98 |
| தேவபக்தி | 123 |
| தேவ வசனம் | 108, 124, 137, 142 |
| தேவாராதனை | 21, 110 |
| தேவாலையம் | 139 |
| தோத்திரம் | 86, 87, 95 |
| நீச வாகனம் | 48 |
| நோவாவின் பேழை | 119 |
| பரமண்டல மந்திரம் | 137 |
| பரமண்டலம் | 67, 70, 96, 99, 118 |

| | |
|---|---|
| பரலோகம் | 32, 99, 104 |
| பரிசுத்த குலம் | 66 |
| பரிசுத்த சபை | 94 |
| பரிசுத்த மொழி | 58 |
| பரிசுத்தம் | 14, 70, 84 |
| பரிசுத்தரூபி | 8 |
| பரிசுத்தர் | 49 |
| பரிசுத்த வழி | 111 |
| பரிசுத்தாவி | 1, 90 |
| பரிசேயர் | 22, 73 |
| பழையேற்பாடு | 85 |
| பழையேற்பாட்டாகமம் | 129 |
| பழைய வேதம் | 2 |
| பாதரட்சை | 15, 67 |
| பாவ சங்கீர்த்தனம் | 96 |
| பாவி | 73 |
| பிதா | 67 |
| பிரார்த்தனை | 129 |
| புத்தேற்பாடு | 105 |
| போதகர் | 36 |
| மலைப் பிரசங்கம் | 60 |
| மன்றாட்டு | 6 |
| மாட்டுக் கொட்டில் | 20 |
| மெஞ்ஞான ஸ்நானம் | 46, 141 |
| மோகன வேதம் | 48 |
| மோட்சவழி | 87 |
| மோட்சவீடு | 150 |
| மோட்சம் | 32, 66 |
| வார்த்தைப்பாடு | 62, 75, 111 |
| விசுவாச மந்திரம் | 84 |
| விசுவாசம் | 14, 55, 84, 96, 97, 111, 144, 148 |
